# மதுரைத் தமிழ்ச்சங்கத் தொகுப்பு

## *ஐந்தாம் பாகம்*

# இலக்கண நூல்கள்

இதில் அடியிற்கண்ட நூல்கள் அடங்கியுள்ளன.

1. ***சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)***

— ஆய்வாளர்: கி. இராமானுச ஐயங்கார்

2. ***பொருட்டொகை நிகண்டு***

—ஆய்வாளர்: சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்

3. ***பன்னிருபாட்டியல்***

—ஆய்வாளர்: மு. இராகவையங்கார்

4. ***உவமான சங்கிரகம்***

—ஆய்வாளர்: சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்

5. ***அநுமான விளக்கம்***

—ஆய்வாளர்: திருநாராயண அய்யங்கார்

*

வெளியீடு:

மதுரைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ச்சங்கத் தெரு :: மதுரை-1.

உரிமை பெற்றது] [விலை ரூ. 3—00

ஸ்ரீ:

# சிதம்பரப்பாட்டியல்

[உரையுடன்]

இரண்டாம் பதிப்பு.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்
"செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியர்
திரு. கி. இராமாநுஜையங்காரால்
பரிசோதிக்கப் பெற்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM
MADURAI UNIVERSITY LIBRARY
22 AUG 1968
MADURAI.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—உக.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,
மதுரை.

1932.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

ஸ்ரீ:

# இப்புத்தகத்திலடங்கியவை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | இரண்டாம்பதிப்பின் முகவுரை ... ... | I |
| 2. | முதற்பதிப்பின் முகவுரை ... ... ... | IV |
| 3. | சிதம்பரப்பாட்டியல் ... ... .... | க—எக |
| | க. உறுப்பியலுரை ... ... | க—கசு |
| | உ. செய்யுளியலுரை ... ... | கஎ—சஉ |
| | ங. ஒழிபியலுரை ... ... | சஉ—ருஉ |
| | ச. பொருத்தவியல் ... ... | ருங—ருரு |
| | ரு. மரபியல் ... ... ... | ருசு—எக |
| 4. | சிதம்பரப்பாட்டியற்செய்யுண் முதற்குறிப்பு ... | எஉ |
| 5. | இலக்கண மேற்கோண் முதற்குறிப்பு... ... | எங |
| 6. | உதாரணச்செய்யுண் முதற்குறிப்பு ... ... | எச |
| 7. | பிழையுந் திருத்தமும் ... ... ... | எரு |

ஸ்ரீ:

# இரண்டாம் பதிப்பின் முகவுரை.

பாட்டியல் என்பது தனிநிலையும் தொடர்நிலையுமான செய்யுளிலக்கணங்களை விளக்கிக் கூறும் நூல்விசேடமாகும். தனிநிலைச் செய்யுளிலக்கணங் கூறுவனவற்றைச் செய்யுளியல் என்றும், தொடர்நிலைச் செய்யுளிலக்கணங் கூறுவனவற்றைப் பாட்டியல் எனவும் வழங்குவதும் உண்டு. தனிநிலைச்செய்யுளிலக்கணங் கூறுவன யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலியனவாம். தொடர்நிலைச்செய்யுளிலக்கணங் கூறுவன பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல் முதலியனவாம். இம்முறையில் இச்சிதம்பரப்பாட்டியல், தனிநிலையும் தொடர்நிலையுமான செய்யுளிலக்கணங் கூறுவதாம். இது, அகத்தியர் கூறிய பாட்டியலின் வழிவந்ததென்பது "பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும் பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவன் யானே" என்னும் பாயிரத்தால் விளங்கும். இதனுள், உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல்களாற் றனிநிலைச் செய்யுளிலக்கணமும், பொருத்தவியல், மரபியல்களாற் றொடர்நிலைச் செய்யுளிலக்கணமும் இனிது விளக்கிக்கூறப்பட்டுள்ளன. இதனையியற்றினார் பெயர் முதலிய விவரம் முதற்பதிப்பின் முகவுரையால் விளங்கும். இந்நூற்பகுதிகளுள் தனிநிலைச்செய்யுளிலக்கணங் கூறும் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்பவற்றுக்குமட்டும் செவ்வியதோர் உரை காணப்படுகிறது. அவ்வுரை யாப்பருங்கலவிருத்தி, இலக்கணவிளக்கச் செய்யுளியலுரை என்பவற்றை யடியொற்றியெழுதப் பட்டதாகத்தெரிகிறது. உதாரணச்செய்யுள்களும் அவ்விருநூலுள்ளும் எடுத்தாளப்பட்டனவாகவே காணப்படுகின்றன. இவ்வுரை யியற்றியவர் பெயர் முதலிய விவரமொன்றும் புலப்படவில்லை.

இந்நூற் சுவடிகளுள் இச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் இப்போதுள்ளவை மூன்று. அவை 355, 369, 167 என்ற இலக்க

மிடப்பட்டனவாம். அவற்றுள் (1) 355-ம் ஏடு மூலமட்டும் எழுதப்பட்டது. இதனிறுதியில் சிதம்பரப்பாட்டியலுரைச்சூத்திரம் என்ற தலைப்பின்கீழ்ச் சிலசெய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இந்நூலுரையி லெடுத்தாண்ட உதாரணச்செய்யுட்களின் முதற்குறிப்புக்கள் கூறப்பட்டுள்ளனவென்று தெரிகிறது. இச்செய்யுள்கள் முழுதுங் காணப்படவில்லை. உள்ளன சிலவும் படித்தற்கரியனவாய்ச் சிதைந்துள்ளன. (2) 369-ம் ஏடு உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் என்பவற்றுக்குமட்டும் உரை வரையப்பட்டதாய் இப்பதிப்புக்கு ஆதாரமாயுள்ளது. (3) 167-ம் ஏட்டில் முதலில் மூலம் முழுதும் வரையப்பட்டுப் பின் சிலசெய்யுட்குக் குறிப்புரையும், சிலவற்றுக் குதாரணமும், 369-ம் ஏட்டிலுள்ளவற்றை ஒத்தும் வேறுபட்டும் ஒருவரையறையின்றியும் தொடர்பின்றியும் பொருத்தவியல் முடிய எழுதப்பட்டுள்ளன.

இந்நூல் இற்றைக்குச் சற்றேறத்தாழ இருபத்தொரு வருடங்களுக்குமுன், அப்பொழுது செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்த ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்காரவர்களால் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப்பட்டது. அம்முதற்பதிப்புப்பிரதிகள் முழுதும் செலவாய் விட்டமையாலும், சென்னைச் சருவகலாசங்கத்தார் இதனைத் தமிழ்வித்வான்பரீக்ஷைக்குப் பாடமாகத் தெரிந்தெடுத்திருத்தலாலும் இது, இதுபொழுது இரண்டாமுறை பதிக்கப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பில், யான் செந்தமிழ்த்தொகுதி 29ல் (பகுதி 9, 11ல்) வெளியிட்ட திருத்தங்களும், ஒழிபியலிறுதிமூன்றுசெய்யுட்கும் மேலே காட்டிய 369-ம் ஏட்டுச்சுவடியிற்கண்ட வுரையும், சிதம்பரப்பாட்டியற் செய்யுண்முதற்குறிப்பும், இலக்கணமேற்கோண்முதற்குறிப்பும், உதாரணமுதற்குறிப்பும் ஆங்காங்கு உரிய இடங்களிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பின் சச-ம் பக்கத்துத் தனிசீர்சிதைபாவழிக் குற்றிகரம் அலகிடப்படுதற்கும், ருக-ம் பக்கத்து ழகரவொற் றாசெதுகைக்கும் உதாரணம் காட்டப்படவில்லை. முதற்பதிப்புப்பிரதியிலும் ஏட்டிலும்

அவை காணப்படவில்லை; ஏடெழுதியோரால் அவை தவறிவிடப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆயினும், யாப்பருங்கல விருத்தியிலும் இலக்கணவிளக்கச் செய்யுளியலிலும்,

"வந்துநீ சேரி னுயிர்வாழும் வாராக்கான்
முந்தியாய் பெய்த வளைகழலு—முந்தியாங்
கோளானே கண்டனங் கொல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு" எனவும்,

"அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை—யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று"

எனவும் முறையே அவற்றுக் குதாரணமாகக் காட்டப்பட்ட செய்யுள்களை உரிய இடங்களில் எழுதிச் சேர்த்துப் படித்துக்கோடல் பொருத்தமுடைத்தாம்.

இப்பதிப்பிற் சிற்றறிவினனாகிய என்னால் நேர்ந்த பிழைகளைப் பொறுத்துத் திருத்தியளிக்குமாறு அறிஞரை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

திரு. கி. இராமநுஜையங்கார்,

செந்தமிழ்ப் பத்திராசிரியர்,

மதுரைத்தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# முதற்பதிப்பின் முகவுரை.

பாட்டியல் என்பது, யாப்பமைதிபற்றிய இலக்கணங்கள் பலவற்றை உணர்த்தும் நூல்விசேடமாகும். நச்சினார்க்கினியர் 'பரணாதுபாட்டியல்' (தொல். சொல். 81) என்று குறிப்பிடுதலால் சங்கத்தார்காலத்தே இத் தகைய நூல் பயின்றுவந்தமை தெரியலாகும். இவ்விலக்கணநூல்களிற் பழமையானதாக இப்போது கிடைத்திருப்பது, நூற்பாவகவலில் முன்னோரியற்றிய பன்னிருபாட்டியல் என்பது. இஃதன்றி வெண்பா கலித்துறை விருத்த முதலாக வெவ்வேறு பாக்களில் இயற்றப்பட்ட பாட்டியல்களும் வழங்குகின்றன. இவற்றுள் ஒன்று இச்சிதம்பரப் பாட்டியலும்; இது நாற்பத்தேழு எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்த முடையதாய், உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் பொருத்தவியல் மா பியல் என ஐந்தியல் கொண்டுள்ளது. "பாடு முறைமைக்கும் பன்னு தமிழ்தெளிந்து-சூடும் பனுவற்குச் சொற்பொருள்கள்-நாடுதற்கும்"— இந்நூல் பேருதவியாவது. இனிய வாக்கில் தெளிவாக விஷயங்களை எடுத்துவிளக்குதலால், பிற்காலத்துக் கவிஞரெல்லாரானும் இந்நூல் பெரிதும் போற்றப்படுவது.

இந்நூலாசிரியர் பரஞ்சோதியார் என்பார். இவர், சிதம்பர புராணம்*, மதுரையுலா என்ற நூல்களியற்றியவர் என்பதும், பௌராணிகராகிய திருமலைநாதர் என்பவர்க்குப் புத்திரரென்பதும், மெய்கண்டதேவர் சந்தானத்தினராய்க் கச்சியிலிருந்தவரும், தம் மாசிரியருமாகிய ஞானப்பிரகாச முனிவர் ஆணைப்படி இந்நூலை அவர் பாடினரென்பதும் இதன் பாயிரப் பாடல்களாற் புலப்படுகின்றன. சிதம்பரபுராணப் பாயிரச்செய்யுளொன்றில் "சகற்கீரேழுநூறுடன்முப்பஃ தியைந்தவாண் டெல்லை" எனவருந் தொடரால், சகாப்தம் 1430 (கி. பி. 1518)ல் அப்புராணம் இவரால் இயற்றப்பட்டதென்பது தெரியலாம். இந்நூற்கியற்றப்பட்டவுரை, யாப்பிலக்கணங்களைத் தெளிவுறுத்தி இனியநடையில் அமைந்துள்ளது. இதனைச் செய்தவர், நூலாசிரியர்தாமோ, அன்றிப் பிறரோ அறியேம். இவ்வுரை, ஒழிபியல் இறுதி மூன்று பாடற்கும் பொருத்தவியல் மாபியல் முழுமைக்கும் கிடைக்கவில்லை. இத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலைப் பிரதிகள் மூன்றும், சங்கத்துச் சைவநூற் பரிசோதகர் ஸ்ரீமத். சேற்றூர். ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் அளித்த பிரதி யொன்றும் இந்நூற் பரிசோதனைக்கு உதவின. இப்பதிப்பிலுள்ள 'குற்றங்களைந்து குறைபெய்துவாசித்தல்-கற்றறிந்தமாந்தர் கட'னாகும்.

மு. இராகவையங்கார்.

---

* இந்நூல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மாணாக்கருள் ஒருவர்செய்த உரையுடன் அச்சிடப்பட்டுளது. இதனாசிரியர் பெயர் அப்பதிப்பில் தெரிந்து குறிக்கப்படவில்லை.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

உ

# சிதம்பரப்பாட்டியல்

## மூலமும் உரையும்.

காப்பு.

நினைத்தவர்க்கு மன்றி நினைக்குமவர் தம்மை
நினைப்பவர்க்கு முத்தி நிரம்பும்— அனைத்துமாம்
ஆரணத்து முன்னவனு மம்பிகையும் பெற்றமத
வாரணத்தின் பாதமலர்.

பாயிரம்.

பாடலாஞ் செந்தமிழைப் பாடி யானருளைக்
கூடலா மின்பநலங் கொள்ளலாம்—பேடனுய்
நாட்டியசீர்ப் பாவினங்க ளுடுஞ் சிதம்பரப்
பாட்டியலைக் கற்ருர் பயன்.

பாடு முறைமைக்கும் பன்னு தமிழ்தெளிந்து
சூடும் பனுவற்குச் சொற்பொருள்க—ளுடுதற்கும்
எண்ணிலராய் நின்ருரு மிந்நூல் வினவினரேற்
கண்ணிலான் காட்சியது காண்.

பூமன்னு பொழில்வெண்ணை மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞான ப்ராகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன வவனருளா லவன்றன்
பதம்பாவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலு
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரிபு ராணத்
திருமலைநா யகனருளின் றேசுபூண் டோனே.

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் றமிழாற்
சிதம்பர புராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்றவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் ருன்.

# நூல்.

## க-வது உறுப்பியல்.

க. பூமேவு திசைமுகனுஞ் செங்கணெடு மாலும்
புத்தேளிர் கணங்களுமா தவத்தோரும் போற்றத்
தேமேவு குழலுமையாள் கண்டுவப்ப மன்றிற்
றிருநடஞ்செய் பேரொளியைச் சிந்தைதனில் வைத்துக்
காமேவு கிளியென்னக் கொழுஞ் செழுந்தே னென்னக்
கடலமுத மென்னமிளிர் கனித்துவர்வாய் மாதே
பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவன் யானே.

உ. யாப்புவிதி யெழுத்தசைசீர் பந்தமடி தொடைபா
வினமிவையிற் குறினெடிலொற் றுயிர்மெயுயி ராய்தம்
கோப்புடைக்குற் றுகரங்குற் றிகரமையௌ காரக்
குறுக்கமே வல்லினமெல் லினமொடிடை யினமே
நீப்பரிய வுயிரளபொற் றளபசையி னெழுத்தாம்
நெடில்குறில்க டனித்துமொற்றை யடுத்தும்வரி னேராம்
சாய்ப்பரிய குறிலிணைகள் குறினெடில்க டனித்துந்
தமதுடனொற் றடுத்தும்வரி னிரையசையு மாமே.

'பூமேவு...பகர்ந்திடுவன்யான்' என்றது தற்சிறப்பு: "வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிர மாம்." என்றாராகலின்.

'யாப்பு விதி......எழுத்தாம்' என்றது, யாப்பினதுவிதி எழுத்து முதல் எட்டாம் என்றவாறு. அவற்றுள்; எழுத்தாவன:—குறிலெனவும் நெடிலென வும் மெய்யெனவும் உயிர்மெய்யெனவும் உயிரெனவும் ஆய்தமெனவும் குற்றிய லுகரமெனவும் குற்றியலிகரமெனவும் ஐகாரக்குறுக்கமெனவும் ஔகாரக்குறுக்க மெனவும் வல்லினமெனவும் மெல்லினமெனவும் இடையினமெனவும் உயிரள பெடையெனவும் ஒற்றளபெடை யெனவும் வரும். இவற்றுள், குறிலாவன:— அ இ உ எ ஒ என ஐந்தாம்; நெடிலாவன:—ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என ஏழாம்; மெய்யாவன:—க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன எனப் பதினெட் டாம். உயிர்மெய்யாவன:—இவற்றின்மேல் உயிர் ஏறியவை; க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ என வரும். இப்படியே, பதினெட்டொற் றின்மேலும் பன்னீருயிரும் ஏற, இருநூற்றொருபத்தாறெழுத்தாம். உயிராவன:— அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ எனப் பன்னிரண்

டாம். ஆய்தமாவன:—எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு என வரும். குற்றியலுகரமாவன:—நாகு காசு காடு காது காபு காறு என நெடிற்கீழும், நாக்கு காச்சு காட்டு காத்து காப்பு காற்று என நெடிலொற்றின்கீழும், வரகு முரசு முருடு மருது துரபு கவறு எனக் குறிலிணைக்கீழும், அரக்கு பொரிச்சு தெருட்டு குருத்து பொருப்பு சிரற்று எனக் குறிலிணையொற்றின்கீழும், அசோகு பலாசு மலாடு கொடாது புதாபு விராறு எனக் குறிநெடிற்கீழும், தமாக்கு தடாச்சு பனாட்டு கெடாத்து புதாப்பு விராற்று எனக் குறிநெடிலொற்றின் கீழும், கக்கு கச்சு கட்டு கத்து கப்பு கற்று எனக் குற்றொற்றின்கீழும் குற்றிய லுகரம் வந்தவாறு கண்டுகொள்க. இனி, குற்றியலிகரம் வருமாறு:—நாகியாது காசியாது காடியாது காதியாது காபியாது காறியாது எனவும் பிறவு மேற்கூறிய வாறும், கேண்மியா சென்மியா எனவும் வரும். பிறவும் வருவன இவ்வா றொட்டிக்கொள்க. இனி, ஐகாரக்குறுக்கமாவன:—ஐப்பசி மைப்புறம்; மடையன் உடைவாள்; குவளை தவளை தினை பனை என மூவிடத்தும் முறையே குறுகிவந்தன. இனி, ஔகாரக்குறுக்கமாவன:—மௌனம் மௌவி கௌவை என முதற்கட் குறுகினவாறு. வல்லினமாவன:—க ச ட த ப ற. மெல்லினமாவன:—ங ஞ ண ந ம ன. இடையினமாவன:—ய ர ல வ ழ ள. இனி, உயிரளபெடையாவன:—வாஅகை ஈஇகை ஊஉகம் ஏஎரி தைஇயல் ஓஒதை ஔஉவியம் என முதனிலையளபெடை வந்தவாறு. பதாஅகை செலீஇயர் உலூஉகம் பரேஎரி வளைஇய விரோஒதம் மனௌஉகம் என இடைநிலையளபெடை வந்தவாறு. குராஅ குரீஇ குழூஉ எனேஎ விளைஇ அரோஒ அனௌஉ என இறுதிநிலையளபெடை வந்தவாறு. ஒற்றளபெடை வருமாறு:— மங்ங்கலம் மஞ்ஞ்சு மண்ண்ணு பந்ந்து அம்ம்பு மின்ன்னு தெவ்வ்வர் வெய்ய்யர் செல்ல்க கொள்ள்கை எஃஃகு எனக் குறிற்கீழும், அரங்ங்கம் முரஞ்ஞ்சு முரண்ண்டு பருந்ந்து அரும்ம்பு முரன்ன்று குரவ்வ்வை அரய்ய்யர் குரல்ல்கள் திரள்ள்கள் வரஃஃகு எனக் குறிலிணைக்கீழும், அளபெடை வந்தவாறு. பொன்ன் "மடங்ங் (கலந்த") என இறுதிநிலையளபெடை வந்தவாறு.

இவற்றுக்குப் பிரசூத்திரம்:—

"யாப்பும், பாட்டுந் தூக்குந் தொடர்புஞ் செய்யுளை
நோக்கிற் றென்பர் நுணங்கி யோரே."

"எழுதப் படுதலி னெழுத்தே யவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே யசையியைந்து
சீர்கொள நிற்றலிற் சீரே சீரிரண்டு
தட்டு நிற்றலிற் றளையே யத்தளை
யடுத்து நடத்தலி னடியே யடியிரண்டு
தொடுத்துமுத லாயிற் றொடையே யத்தொடை

பாவி நடத்தலிற் பாவே பாவொத்
தினமாய் நடத்த லினமெனப் படுமே''

''பந்தந் தளையின் பாற்பெய ராகும்''

''அஇ உஎ ஒக்குறி லைந்தே''

''ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்''

''ககர முதல னகர விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப''

''மெய்யுடம் புறுப்பொற் றிவைதா மொருபொருள்
செய்யு மென்று செப்பினர் புலவர்''

''உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
யம்மூ வாறு முயிரோ டுயிர்ப்ப
விருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே''

''அகர முதல ஔகார விறுவாய்ப்
பன்னிரண் டெழுத்து முயிரென மொழிப''

''குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே''

''அஃகேன மாய்தந் தனிநிலை புள்ளி
யொற்றிப் பால வைந்து மிதற்கே''

''நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப''

''எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்று வரூஉம் வல்லா றூர்ந்தே''

''வல்லெழுத் தாறு டெழுவகை யிடத்து
முகர மரையாம் யகரமோ டியையி
னிகரமுங் குறுகு மென்மனர் புலவர்''

''யகரம் வரக்குற ளுத்திரி யிகரமு
மசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய''

''தற்சுட் டளபொழி யைம்மூ வழியு
நையு மௌவு முதலற் றாகும்''

''இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடி
லளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே''

''ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை யாகும்''

"ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே"

"மாத்திரை வகையாற் றளை தம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்"

"கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"

"உன்னல் காலே யூன்ற லரையே
முருக்கல் முக்கால் விடுத்த லொன்றே"

"மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையெளக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னய்த மாத்திரை"

எனவரும். பிறவுமன்ன.

"நெடில்குறில்க டனித்துமொற்றை யடுத்தும்வரி னேராம் சாய்ப்பரிய குறிலிணைகள் குறினெடில்க டனித்துந், தமதுடனொற் றடுத்தும்வரி னிரை யசையு மாமே" என்றது நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்துத் தனியேவரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்துவரினும் குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம்; குறில் இணைந்துவரினும் குறினெடில் இணைந்துவரி னும், குறிலிணை ஒற்றடுத்து வரினும் குறினெடில் ஒற்றடுத்துவரினும் நிரை யசையாம் என்றவாறு. ஆ - என நெட்டெழுத்துத் தனியேவந்த நேரசை. ழி - எனக் குற்றெழுத்துத் தனியேவந்த நேரசை. செல் - எனக்குற்றெழுத்து ஒற்றடுத்துவந்த நேரசை. போர் - என நெட்டெழுத்து ஒற்றடுத்துவந்த நேரசை. சின : எனக் குறில் இரண்டிணைந்துவந்த நிரையசை. ததை - எனக் குறினெடில் இணைந்துவந்த நிரையசை. எழில் - எனக் குறிலிணை ஒற் றடுத்துவந்த நிரையசை. சுலாம் - எனக் குறினெடில் ஒற்றடுத்துவந்த நிரை யசை. இவற்றுக்கு உதாரணம்:—

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே."

எனவரும். இதில் நேர்நிரை கண்டுகொள்க. "அசையும்" என்ற உம்மையால், நேர்பசை நிரைபசை என்னும் இரண்டுங்கூட்டி அசை நான்கென்பாருமுளர். ()

௩. நிரலியற்சீர் நேர்நேர்தே மாநிரைநேர் புளிமா
நிரைநிரையே கருவிளமே நேர்நிரைகூ விளம்பின்
வருநேர்காய் வெள்ளைநிரை வரிற்கனிவஞ் சிச்சீர்
மற்றுநேர் நிரைவரிற்றண் ணிழல்நேர்நேர் தண்பூப்
பரவுநிரை நேர்நறும்பூ நிரைநிரைவந் தக்காற்
பகருநறு நிழலாமீ ரெட்டிவைநா லசைச்சீர்
விரவுவஞ்சி நாண்மலரோ ரசைச்சீரீ ரசைச்சீர்
மேவியபோற் றளைதமக்கு விளங்கிமரு விடுமே.

"நிரலியற்சீர்...........நேர்நிரை கூவிளம்" என்றது, இந்த ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியச்சீர் என்றவாறு. நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை எனவும், தேமா புளிமா கருவிளம் கூவிளம் எனவும் வரும். "பின்வரும் நேர் காய் வெள்ளை" என்றது, அவை நிரலேநிற்க, பின்னேவரும் நேர், நேர் நேர்நேர் : தேமாங்காய் : பிறவுமன்ன ; இவை நாலும் வெண்சீர் என்றவாறு. "நிரைவரிற் கனி வஞ்சிச்சீர்" என்றது, இப்படியே பின்னே நிரை நாலும் வந்தால் நேர்நேர்நிரை ; தேமாங்கனி ; பிறவுமன்ன ; இவை நாலும் வஞ்சிச் சீர் என்றவாறு. 'மற்றும் நேர்நிரைவரில்...பகருநறுநிழல்' என்றது, அவ்வாறு பின்னே நேர்நிரைவந்தால் நேர்நேர்நேர்நிரை : தேமாந் தண்ணிழல் : பிறவு மன்ன. அப்படிப் பின்னே நேர்நேர்வந்தால் நேர்நேர்நேர்நேர்: தேமாந்தண்பூ: பிறவுமன்ன. பின்னே நிரைநேர் வந்தால் நேர்நேர் நிரைநேர்: தேமாநறும்பூ: பிறவுமன்ன. பின்முன் நிரைநிரை வந்தால் நேர்நேர் நிரைநிரை: தேமாநறு நிழல்: பிறவுமன்ன. இவை பதினாறு பொதுச்சீரும் வஞ்சி. "நாண்மல ரோ ரசைச்சீர்" என்றது, நாள் எனவும் மலரெனவும் வரு மிவையிரண்டும் ஓ ரசைச்சீர் என்றவாறு. ஆகச் சீர் முப்பது. இந்த ஓரசைச்சீருக்குத் தளை ஆசிரியச்சீருக் குரைத்த தளையெனக் கொள்க. 'நிரல்' என்பதனையும் பின் னென்பதனையும் எல்லாவற்றிற்கும் தீபமாக ஒட்டிக்கொள்க. "இயற்சீ ராசிரி யச்சீ ரகவற், சீரென மொழிப சிறந்தசி னோரே." வாய்பாடு:—நேர்நேர் தேமா, நிரைநேர் புளிமா, நிரைநிரை கருவிளம், நேர்நிரை கூவிளம்: இவை ஆசிரியச்சீர். நேர்நேர்நேர் தேமாங்காய், நிரைநேர்நேர் புளிமாங்காய், நிரை நிரைநேர் கருவிளங்காய், நேர்நிரைநேர் கூவிளங்காய்: இவை வெண்சீர். நேர் நேர்நிரை தேமாங்கனி, நிரைநேர்நிரை புளிமாங்கனி நிரைநிரைநிரை கரு விளங்கனி, நேர்நிரைநிரை கூவிளங்கனி: இவை வஞ்சிச்சீர். நேர்நேர்நேர்நிரை தேமாந்தண்ணிழல், நிரைநேர்நேர்நிரை, புளிமாந்தண்ணிழல், நிரைநிரை நேர்நிரை கருவிளந்தண்ணிழல், நேர்நிரைநேர்நிரை கூவிளந்தண்ணிழல் என வும்; நேர்நேர்நேர்நேர் தேமாந்தண்பூ, நிரைநேர்நேர்நேர் புளிமாந்தண்பூ,

நிரைநிரைநேர்நேர் கருவிளந்தண்பூ, நேர்நிரைநேர்நேர் கூவிளந்தண்பூ எனவும்; நேர்நேர்நிரைநேர் தேமாநறும்பூ, நிரைநேர்நிரைநேர் புளிமாநறும்பூ, நிரைநிரைநிரைநேர் கருவிளநறும்பூ, நேர்நிரைநிரைநேர் கூவிளநறும்பூ எனவும்; நேர்நேர்நிரைநிரை தேமாநறுநிழல், நிரைநேர்நிரைநிரை புளிமாநறுநிழல், நிரைநிரைநிரைநிரை கருவிளநறுநிழல், நேர்நிரைநிரைநிரை கூவிளநறுநிழல் எனவும் வரும்: இவை பொதுச்சீர். நாண் மலர் என்பன ஓரசைச்சீர். இவற்றிற்கு உதாரணம்:—

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

இவ்வாசிரியப்பாவினுள் நான்காசிரியவுரிச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க.

"பொன்னா மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கென்னே
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும்."

இவ்வெண்பாவினுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

"சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்சூழ்வன பொழிலெல்லாம்
எனவாங்கு:
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."

இவ்வஞ்சிப்பாவினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

"அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணையிலைசக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடை நீழல்

வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமெதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந், தருணெறி நடாத்தியவாதிதன்
திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே".

இக் குறளடி வஞ்சிப்பாவினுள் பொதுச்சீர் பதினாறும் அடிதோறும் வந்தவாறு கண்டுகொள்க.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"

இவ்வெண்பாவினுள் 'இலர்' என நிரையசைச்சீராயினவாறு கண்டுகொள்க.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இவ்வெண்பாவினுள் 'நீர்' என நேரசைச்சீராயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. இனி, ஓரசைச்சீருக்குத் தளைவருமாறு:—

"உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற வென்பவே"

இம் மூச்சீரடி வஞ்சிவிருத்தத்துள் 'மழை' 'செய்' என்னும் அசைச்சீர்கள் இயற்சீரேபோலக்கொண்டு, வருஞ்சீர் முதலசையோடொன்றுமலும் ஒன்றியும் வந்தமையால், முறையே இயற்சீர்வெண்டளையும் ஆசிரியத்தளையுமாயின.

௪. மருவுவிள முன்னர்நிரை நிரையொன்று சிரிய
மாமுன்னேர் வரினேரொன் றாசிரியத் தளையாம்
விரவியகாய் முன்னர்நேர் வெண்சீர்வெண் டளையா
மீட்டுங்காய் முன்னர்நிரை* கலித்தளையா மின்னே

* "மேவுகலித் தளையாம்" எனவும் பாடம்.

கருது கனி முன்னர்நே ரொன்றூத வஞ்சி
கனிமுனிரை யொன்றியவஞ் சித்தளையா மாமுன்
னிரையும்விள முன்னேரு மியற்சீர்வெண் டளை யாம்
நிழல்கனியாம் பூக்காயா நிகழ்பொதுச்சீர்த் தளைக்கே.

என்பது சூத்திரம்.—விளமென நிற்ப நிரையெனவருவது நிரையொன்றாசிரியத் தளை; மாவெனநிற்ப நேரென வருவது நேரொன்றாசிரியத்தளை; காயெனநிற்ப நேரெனவருவது வெண்சீர்வெண்டளை; காயெனநிற்ப நிரையென வருவது கலித்தளை; கனியென நிற்ப நேரெனவருவது ஒன்றாதவஞ்சித்தளை; கனியெனநிற்ப நிரையெனவருவது ஒன்றிய வஞ்சித்தளை; மாவெனநிற்ப நிரையெனவருவதும் விளமெனநிற்ப நேரெனவருவதும் இயற்சீர்வெண்டளை; தண்ணிழற்சீருக்கும் நறுநிழற்சீருக்கும் கனிச்சீருக் குரைத்தாங்குத் தளைகொள்க; தண்பூச்சீருக்கும் நறும்பூச்சீருக்கும் காய்ச்சீருக்கு உரைத்த தளையே கொள்க. இவற்றுக் குதாரணம்:—

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்றவாறே."

இது நிரையொன்றாசிரியத்தளையும் நேரொன்றாசிரியத்தளையும் வந்த செய்யுள். "பொன்னாரமார்பின்"—இது வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண் டளையும்வந்த செய்யுள். "செல்வப்போர்க் கதக்கண்ணன்"—இது கலித்தளை யான்வந்த செய்யுள். "சுறமறிவன துறையெல்லாம்"—இஃது ஒன்றியவஞ்சித் தளையும் ஒன்றாதவஞ்சித்தளையும் வந்த செய்யுள். நாலசைப் பொதுச்சீருக்குத் தளை முன்னர்க்காட்டிய 'அங்கண்வானத்து' என்னும் வஞ்சிப்பாவினுட் கண்டு கொள்க. (ச)

ரு. நிகழிருசீர் குறளடிமூச் சீர்சிந்து நாற்சீர்
நேரொடளவடியைஞ்சீர் நெடிலடியா ருதி
திகழ்தருசீர் கழிநெடில்வெள் ளடியிரண்டு மூன்று
சிரியம்வஞ்சி மூன்றுகலி நான்கிழிபு பெருமை
யகல்பொருண்மட் டெழுத்தசைசீ ரடியந்த மாதி
யாமந்தா தித்தொடையே யடிமுழுது மொருசொற்
புகல்வதிரட் டைத்தொடையா மோனைமுத லாகப்
புகன்றதொடை புகலாது புகல்வதுசெந் தொடையே.

"நிகழிருசீர்...............அகல்பொருண்மட்டு"—என்பதற்கு உதாரணம் வருமாறு:—

"நிரைத்த சாவிகை—நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே—விரைக்கொண் மாலையாய்"

இஃது அடிதோறும் இருசீராதலால், குறளடியான் வந்த செய்யுள்.

"இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றாக் கத்தினே
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினய்"

இஃது அடிதோறும் முச்சீராதலால், சிந்தடியான்வந்த செய்யுள்.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே"

இஃது அடிதோறும் நாற்சீராதலால் அளவடியான்வந்த செய்யுள்.

"வென்றான் வினையின் றொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னெழி யாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்."

இஃது அடிதோறும் ஐஞ்சீராதலால் நெடிலடியான் வந்த செய்யுள்.

"இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்ந் தினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக்*குழம்புக டிகழ்ந்தெழ நடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு பொருதல தவியாதே"

இஃது அறுசீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"தணிகொண் டலர்ந்த நறுவேங்கை யோடு கமழ்கின்ற காந்த ளிதழா
லணிகொண் டலர்ந்த வனமாலை சூடி யகிலாவி குஞ்சி கமழ

* "குழம்புதொண்டெதிர்ந்தெழ" என்றும் பாடம்.

மணிகுண் டலங்க ளிருபாலும் வந்து வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு வருவா னிதென்கொ றுணிவே.',

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"மூவடிவி னுவிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலகு *மூடி முளைவயிர நாறித்
தூவடிவி னுவிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டாற்
சேவடிக டாமரையின் சேயிதழ்க டீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலன்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே"

இஃது எண்சீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாரையை
யிலங்கு மாழியின் விலங்கியோள்
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
றடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே"

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத வென்று நின்று தாழ
அங்க பூர்வ மாதி யாய வாதி நூலி னீதி யோது மாதி யாய
செங்கண் மாலை † காலை சென்று சேர்நர் சேர்வர் சோதி சேர்ந்த சித்திதானே"

இது பதின்சீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள். பிறவும் வந்துழிக் கண்டுகொள்க.

---

*"மூடியெழின் முளைவயிர நாற்றி" என்றும் பாடம்.

†"மாலை காலை சேர்நர் சேர்வர்" என்றும் பாடம்.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமைவந்தவாறு.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"செல்வப் போர்" இது நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலராருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்—நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே"

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு. பிறவு மன்ன.

இனி, "எழுத்தசைசீர் .........செந்தொடையே" என்பதற் குதாரணம். அந்தாதித்தொடை வருமாறு:—

"உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தோளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தரஃ தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இது நான்கந்தாதித் தொடையும் வந்த செய்யுள். இனி இரட்டைத் தொடை செந்தொடைகள் வருமாறு:—

"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்"

இஃது ஓரடிமுழுதும் வந்தமொழியே வந்தமையால் இரட்டைத்தொடை.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

இது மோனைமுதலாகிய தொடையின்றிவந்தமையாற் செந்தொடை; பிறவு மன்ன. (௯)

கூ. தொடையெழுவா யெழுத்தொன்றின் மோனையியை பிறுதி
சொல்லிரண்டா மெழுத்தொன்றி னெதுகைபொருண் [மொழிக
ளுடன்முரணின் முரணளபு வருதலடி யளவே
யுயரிருசீ ரிணைதலிணை முதலொடுமூன் றுஞ்சீர்
அடைபொழிப்பு நடுவிருசீ ரகறலொரூஉ வடியி
னடர்தருமுச் சீர்கூழை முதலயற்சீர் நீங்கல்
கெடலருமேற் கதுவாயே யீற்றயற்சீர் நீங்கல்
கீழ்க்கதுவாய் சீர்முழுதுங் கிடைத்திடின்முற் றுமே.

"தொடையெழுவாய் எழுத்து ஒன்றின் மோனை"-என்றது, அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத்தொடை. "இயைபு இறுதி" என்றது, அடிதோறும் இறுதி யெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது அடியியைபுத் தொடை. "சொல்லிரண்டாம் எழுத்தொன்றின் எதுகை" என்றது அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது அடியெதுகைத் தொடை. "பொருண் மொழிக ளுடன் முரணின் முரண்" என்றது, பொருளானே யாயினும் சொல்லானே யாயினும் அடிதோறும் முதன்மொழிக்கண் மறுதலைப் படத் தொடுப்பது அடிமுரண்டொடை. "அளபு வருதல் அடியளவே" என்றது, அடிதோறும் முதன்மொழிக்கண் அளபுவரத் தொடுப்பது, அடியளபெடைத்தொடை. "உயரிருசீரிணைதலிணை....................சீர்முழுதுங் கிடைத்திடின் முற்றுமே" என்றது, முன்சொன்ன மோனை இயைபு எதுகை முரண் அளபு என்னும் இவ்வைந்தினும் இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று என்னும் இவை எழுங் கூட்டி உறழ முப்பத்தைந்து தொடையாம்; எ-று. வரலாறு:—இணைமோனைத்தொடை, பொழிப்புமோனைத் தொடை, ஒரூஉமோனைத்தொடை, கூழைமோனைத்தொடை, மேற்கதுவாய் மோனைத்தொடை, கீழ்க்கதுவாய்மோனைத்தொடை, முற்றுமோனைத்தொடை எனவும், இவ்வாறே இயைபு எதுகை முதலியவற்றோடு ஒட்டியும் ஆகத் தொடை முப்பத்தைந்தாமாறு கண்டுகொள்க.

"மாவும் புள்ளும் வதிவயிற் படா
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையின்
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே."

இஃது அடிதோறும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் அடிமோனைத்தொடை.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளிக் கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே."

இஃது அடிதோறும் இறுதியெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால், அடியியைபுத்தொடை.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே."

இஃது அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையால் அடியெதுகைத்தொடை.

"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கின்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே."

இஃது அடிதோறும் முதற்சீர் மறுதலைப்படத் தொடுத்தமையால் அடிமுரண்டொடை.

"ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரைகொண் டீஉளைப் பள்ளியுட்
டோஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுதால்
ஓஒ வுழக்குந் துயர்."

இஃது அடிதோறும் அளபெடுத் தொன்றிவரத்தொடுத்தமையால் அடியளபெடைத்தொடை.

இனி இணைமோனை முதலாகிய தொடை வருமாறு.

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
அரிற்குரற் கிண்கிணி யாற்றுஞ் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுத லரிவை
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே."

இதனுள் இணைமோனை முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தவளம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
அதனால்
இவ்வயின் இவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே."

இதனுள் இணையியைபு முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய
மயிலேய் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவுதொலைத் தனவே."

இதனுள் இணையெதுகை முதலாய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"சீறடிப் பேரக லல்கு லொல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகு வடந்தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணு
மிருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தனை மூனியா
தென்று மின்னணம் ஆகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே."

இதனுள் இணைமுரண் முதலான எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சேஎர்ஓர் பாஅல்
மீஇ ஞஅர்ந் துகளுஞ் சீஇர்
எஎ ரூஅ நீஇ ணீஇர்
ஊரன் செய்த கேண்மை
யாய்வளைத் தோளிக் கலாா னவே."

இதனுள் இணையளபெடைத்தொடைமுதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. (தொடை முற்றும்.) (சு)

உறுப்பியல் முற்றும்.

## உ-வது செய்யுளியல்.

எ. ஆர்வெண்பா வகவல்கலி வஞ்சிப்பா நான்கி
னளவடிவெண் பாச்செப்ப லிசைமுச்சீ ரந்தங்
கூர்காசு பிறப்புநாண் மலர்முடிவீ ரடிவெண்
குறள் குறள்வெண் பாவிரண்டா யோராசீ ராசு
நேருகினுந் தனிச்சொற்பெற் றுென்றிரண்டு விகற்பம்
நேரிசைவெண் பாத்தனிச்சொ லின்றியடி நான்காய்ப்
பார்விகற்ப மொன்றுபல வின்னிசைவெண் பாவப்
படியடியீ ராறுவரும் பஃறொடைவெண்பாவே.

என்பது சூத்திரம். "ஆர் வெண்பா வகவல்கலி வஞ்சிப்பா நான்கின்" எ—து வெண்பா, அகவற்பா; கலிப்பா, வஞ்சிப்பா எனப் பா நான்காம். ஆறென்னும் விதப்பினு லினமாவன:—தாழிசை, துறை, விருத்தம் எனவரும். அவை யாவன:—வெண்பா, வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் எனவும்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் எனவும்' கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் எனவும்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் எனவும் வரும். இவற்றிற் குதாரணம் முன்னர்க்காட்டுதும். "அளவடி வெண்பாச் செப்பலிசை முச்சீ ரந்தங் கூர் காசு பிறப்பு நாண் மலர் முடிவு" எ - து நான்கு பாவினுள் வெண்பா வாவது, அளவடியுஞ் செப்பலோசையும் முடிவிலடி முச்சீருங் காசு பிறப்பு நாண் மலரென்னும் முச்சீருள் முடிவிற்சீரும் பெற்று வருமென்பது—வெண்பாக் களுக்குப் பொதுவிலக்கணம். "ஈரடிவெண்குறள்" என்பது, இரண்டடியாய் வருவது குறள்வெண்பாவாம். "குறள்வெண்பா இரண்டா யோராசு மீராசு நேருகினுந் தனிச்சொற்பெற் றுென்றிரண்டு விகற்பம் நேரிசை வெண்பா" எ - து குறள்வெண்பா இரண்டா யோராசுபெற்று மீராசுபெற்றும், உம்மையா லோராசு மீராசும் பெறுதுமாய், எடுத்த எதுகைக் கேற்ற தனிச்சொற்பெற்று ஒருவிகற்பமாகியு மிருவிகற்பமாகியும் வருவன நேரிசைவெண்பா; "தனிச் சொலின்றி அடி நான்காய்ப் பார் விகற்பமொன்று பல இன்னிசைவெண்பா" என்பது, தனிச்சொல்லின்றி நாலடியா யொருவிகற்பமும் பல விகற்பமுமாகி வருவன இன்னிசைவெண்பா. "அப்படி அடியீராறு வரும் பஃறொடை வெண்பா" என்பது இன்னிசைவெண்பாப்போலப் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பமும் பலவிகற்பமும் பெற்று ஐந்தடிமுதலாகப் பன்னிரண்டடியளவும் வருவன பஃறொடைவெண்பா. எ - று. இவற்றிற் குதாரணம்:—

"பொன்னார் மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கென்னே
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலூடன் பேரே வரும்."

இஃது அளவடியானுஞ் செப்பலோசையானும் வந்தமையால் வெண்பா.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத் தோளிக் கூடலு மணங்கே
யரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே."

இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்தமையால் ஆசிரியப்பா.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி;

இது தரவு.

அடிதாங்கு மளவன்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே;

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, (தனிச்சொல்.)

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுநரல்லர் மனைவயிற்

பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே"

இது சுரிதகம். இஃது தளவடியானுந் துள்ளலோசையானும் வந்தமையாற் கலிப்பா.

"சுறமறிவன துறையெல்லா
மிறவீன்பன வில்லெல்லா
மீன்றிரிவன கிடங்கெல்லாந்
தேன்றாழ்வன பொழிலெல்லா
மெனவாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."

எனவும்,

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
யென்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தொகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப் பெரிதும்
கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே."

எனவும், இவை, குறளடி சிந்தடியானுந் தூங்கலோசையானும் வந்தமையால் வஞ்சிப்பா.—எனவரும்.

இனி வெண்பாவுக்கு வரலாறு :—

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரியவரை வயிரங் கொண்டு."

இது காசென முடிந்தது.

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

இது பிறப்பென முடிந்தது.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

இது நாளென முடிந்தது.

"பொன்னார மார்பில்.........வரும்" இது மலரெனமுடிந்தது.

அடைவே காசு பிறப்பு நாண் மலரெனவும் ஈற்றடிமூச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க.

இனி 'பாலொடுதேன்' எனவும், 'உருவுகண்டெள்ளாமை' எனவும், ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்தமையாற் குறள்வெண்பா.

"தடமண்டு தாமரையின் றாதா டலவ
னிடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்"

எனவும்,

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் சொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு"

எனவும், இவை இரண்டு குறள்வெண்பா நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச் சொல்லா லடிநிரம்பி இரண்டு விகற்பத்தானு மொருவிகற்பத்தானும் வந்தமை யால் இருகுறள் நேரிசைவெண்பா.

"கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்று மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்"

எனவும்,

"வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ"

எனவும், ஓரசையானும் ஈரசையானும் ஆசிட்டு இருவிகற்பத்தானும் ஒருவிகற் பத்தானும் வந்த இருகுறணேரிசைவெண்பா வந்தவாறு கண்டுகொள்க. இனி:-

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

இது, நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி யொருவிகற்பத்தால் வந்த இன் னிசைவெண்பா.

"இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்."

இஃ தடிதோறும் ஒரூஉத்தொடைவிரவிப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா.

"இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றம்."

இஃ திருவிகற்பத்தால் வந்த வின்னிசைவெண்பா. பிறவுமன்ன.

"சேற்றுக் கானீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்போற்
றேற்றந் தொழில்வடிவு தம்முட் டமொற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியர் கண்."

இஃது ஐந்தடியான்வந்த ஒரு விகற்பப் பஃறொடைவெண்பா.

"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவி
லென்னொடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ணல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்."

இஃது ஆறடியான்வந்த பல விகற்பப் பஃறொடைவெண்பா.

"வையக மெல்லாம் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்."

இது பலவிகற்பத்தான்வந்த எழடிப் பஃறொடைவெண்பா. (க)

அ. பலவடியா யளவிலவா யொரூஉவெதுகை யிரண்டாம்
பாதங்க டொறும் பெறினும் வெள்ளடிகுன் றுவாங்
கலிவெண்பா நேரிசையின் னிசைபோன்மூன் றடியேற்
கருதப்பேர் சிந்தியலொப் பீரடிசெந் துறையீற்
றிலகடிகுன் றுதல்குறட்டா ழிசையடிமூன் றுய்ச்சிந்
தீற்றடியா யிறல்வெண்டா ழிசையடிமூன் றீரேழ்
குலவடியந் தங்குறையும் வெண்டுறைநான் கடியுங்
கொண்டடிக டொறுந்தனிச்சொற் பாவல்வெளி விருத்தம்.

"பலவடியாய் அளவிலவாய்" எ-து பலவடிகளாலும் பஃறொடை வெண்பா முதலான வெண்பாக்கள்போல அடிவரையறுத்துச் சொல்லாமல் அளவிலாத அடிகளையுடைத்தாய்; "ஒரூஉவெதுகை யிரண்டாம்பாதங்கடொறும் பெறினும்" எ-து இரண்டாமடிகடோறும் தனிச்சொல்லாகிய ஒரூஉவெதுகையைப் பெறினும். "பெறினும்" என்பதனுல் ஒரூஉவெதுகை பெறுமலுமாம்; "வெள்ளடி குன்றுவாங் கலிவெண்பா" எ-து வெள்ளடிக்குச் சொன்ன இலக்கணங்களிற் குறையாமல் வருவது கலிவெண்பா: "நேரிசை யின்னிசைபோன் மூன்றடியேற்கருதப் பேர் சிந்தியல்" எ – து—நேரிசைவெண்பாப்போலத் தனிச்சொற்பெற்றும் இன்னிசை வெண்பாப் போலத் தனிச்சொலின்றியும், மூன்றடியாய் வருமாயின் அவ்வப்பெயராலே நேரிசைச்சிந்தியல் வெண்பா வென்றும், இன்னிசைச்சிந்தியல்வெண்பா வென்றும் கொள்க. "பெயர் கருது" என்பதனுல், அவைபோல ஒரு விகற்பமும் பல விகற்பமும் கொள்க. "ஒப்பீரடி செந்துறை" எ-து—இரண்டடியும் தம்முள் ஒத்துவருவது வெண்செந்துறை; "ஈற்றிலகடி குன்றுதல் குறட்டாழிசை" எ-து—பலசீரா யீற்றடி குறைந்து வருவது குறட்டாழிசை; (இவ் விரண்டுங் குறட்பாவினம்.) "அடிமூன்றுய்ச் சிந்தீற்றடியாய் இறல் வெண்டாழிசை" எ-து—மூன்றடியாய் முடிவிலடி முச்சீராய் முடிவது வெண்டாழிசை. "அடிமூன் றீரேழ் குலவடி அந்தங்குறையும் வெண்டுறை" எ-து—மூன்றடி முதலாய் எழடியீறாய் முடிவிலடி குறைந்துவருவது வெண்டுறை. "நான் கடியுங்கொண் டடிகடொறுந் தனிச்சொல் பாவல் வெளிவிருத்தம்" எ-து— நான்கடியு மூன்றடியும்பெற்று அடிதோறு மிறுதியொருசொல் தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம். எ-று. உம்மையான் மூன்றடியுங் கொள்ளப்பெற்றது. உதாரணம்:—

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா

என்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்று ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்."

என்னும் பாட்டும் மடல்போல்வன பிறவுந் தனிச்சொல்லின்றிவந்த கலி வெண்பா.

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்."

என்னும் பாட்டுமுதலாயினபோல்வன பிறவுந் தனிச்சொற்பெற்று வந்த கலி வெண்பா.

"நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றோரான்
பாலைநல் வாயின் மகள்"

எனவும்,

"அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு."

எனவும், இவை, மூன்றடியால் நேரிசைவெண்பாப்போல் இரண்டாமடியி னிறுதி தனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும்வந்தமை யால் நேரிசைச்சிந்தியல்வெண்பா.

"நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி."

எனவும்,

"சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

எனவும், இவை, மூன்றடியால் இன்னிசைவெண்பாப்போலத் தனிச்சொல் லின்றி ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்தமையால் இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

"முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த ளெடுப்பீன்ற போயினர்
திண்டேர் வரவுரைக்குங் கார்"

இதுவும் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

எனவும்,

"கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே."

எனவும் இவை, ஒழுகியவோசையும் விழுமியபொருளும் பெற்று, இரண்டடியுந் தம்முளொத்து வந்தமையாற் குறள்வெண்செந்துறை.

"நண்ணுவார்வினை நையநாடொறு நற்றவர்க்கர சாயஞானநற்
கண்ணினனடியே யடைவார்கள் கற்றவரே."

எனவும்,

"நீலமாகடல் நீடுவார்திரை நின்றபோற் பொங்கிப் பொன்று மாங்கவை
காலம்பல் காலஞ்சென்றபின் செல்வர் யாக்கை கழிதலுமே."

எனவும், இவை, பலசீரா யீற்றடிகுறைந் திரண்டடியாய் வந்தமையாற் குறட்டாழிசை. (உரைத்தவிரண்டுங் குறட்பாவினமே.)

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்."

இது, மூன்றடியா யீற்றடி முச்சீராய்ப் பிறதளைவிரவி வெண்பாப்போல முடிந்தமையால் வெண்டாழிசை.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉ
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்."

இது,நான்கடியா யீற்றடியிரண்டுஞ் சீர்குறைந்துவந்தவொலிவெண்டுறை.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்றா—ரொருசாரார்."

எனவும்,

கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா—லென்செய்கோயான்
வண்டுவரிபாட வார்தளவம் பூத்தனவா—லென்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யியைந்தகவி யேங்கினவா—லென்செய்கோயான்?

எனவும், அடிதோறும், நாற்சீராய் நான்கடியாலு மூன்றடியாலும் வந்து அடி தோறு மிறுதியிலே யொருசொல்லே தனிச்சொல்லாக வந்தமையால் வெளி விருத்தம். (உ)

௩. பரவகவ லகவலிசை யளவடியீற் றயலிற்
பாதமுச்சீர் நேரிசையெவ் வடியுமள வொத்த
லருநிலைமண் டிலமிடைச்சீர் குன்றலிணைக் குறளா
மாதிநடு வந்தமுறி னடிமறிமண் டிலவா
சிரியமூன் றடியொத்த றாழிசைநான் கடியாய்ச்
சீரிடையிற் குறைதலிடை மடக்கலீற் றயலின்
மருவடிநை வது துறைநான் கடியொத்தா றாதி
வளர்சீர்கள் பலவருத லாசிரிய விருத்தம்.

என்பது சூத்திரம்:— "பரவகவ........நேரிசை" என்பது, அகவலோசையு மளவடியு முடைத்தாய் ஈற்றயலடி முச்சீராய்வருவது நேரிசையாசிரியப்பா; "எவ்வடியு மளவொத்த லருநிலை மண்டிலம்" எ-து, எல்லாவடியுந் தம்மு ளொத்துமுடிவது நிலைமண்டிலவாசிரியப்பா; "இடைச்சீர்குன்ற லிணைக்குறளாம்" எ—து, இடையிடையே இருசீரடியானும் முச்சீரடியானும் வருவது இணைக்குறளாசிரியப்பா; "ஆதி நடு வந்தமுறி னடிமறி மண்டில வாசிரியம்" எ-து, எல்லாவடியும் முதனடு விறுதியாக உச்சரித்தாலும் பொருள் ஒத்து முடிவது அடிமறி மண்டில வாசிரியப்பாவாம்; "மூன்றடியொத்தல் தாழிசை" எ-து, மூன்றடியுந் தம்முளொத்து வருவது ஆசிரியத்தாழிசை; "நான்கடியாய்ச்சீ ரிடைகுறைத லிடை மடக்க லீற்றயலின் மருவடி நைவது துறை" எ-து, நான்கடியா யிடையிடை சீர்குறைந்து மிடைமடக்கியு மீற்றயலடி குறைந்தும் வருவது ஆசிரியத்துறை; "நான்கடி யொத் தாறாதி வளர்சீர்கள் பலவருத லாசிரியவிருத்தம்" எ-து, நான்கடியுந் தம்முளொத்து அடிதோறும் அறுசீர்முதலான சீரையுடைத்தாய்வருவது ஆசிரியவிருத்தம். எ-று. இவற்றிற்கு உதாரணம்:—

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
யரிக்குரற் கிண்கிணி யார்க்குஞ் சீறடி
யம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி

யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோ
ளவிர்மதி யனைய திருநுத லரிவை
யயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.''

இஃ தீற்றயலடி மூச்சீரான் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா.

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர் தவச் சிறிது காமமோ பெரிதே''

இஃது அளவடியாய் எல்லாவடியுந் தம்முள் ஒத்து வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா.

''நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே''

*''சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே

*உரையாசிரியர், இதனைப் பதினேழடி யாசிரியமெனக் கொண்டு இதனுள் ''ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் மூச்சீரான் வந்தன; மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாகிய நான்கடியும் பதினாலாமடியும் ஐஞ்சீரான் வந்தன; இரண்டாமடியும் பதினொன்றாமடியும் ஆறுசீரான் வந்தன; ஏனைய நான்குசீரான் வந்தன; இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று'' என்றார் (தொல். செய்யுளியல். ''வெண்டளை விரவியும்'' என்பதனுரை). நச்சினார்க்கினியர் ''இதனுள் ''நாரந் தாறுந் தன்கையால்'' எனவும் ''அருநிறத் தியங்கிய வேலே'' எனவும் தனித்துவந்தன; ''பெரியகட் பெறினே'' என்பது சொற்சீரடி. இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வரும் என்பர் பின்பு நூல்செய்த ஆசிரியர்'' [யாப்பருங்கல விருத்திகாரர்] என்றனர் (தொல். செய். ''இடையும் வரையார்'' என்பதனுரை.)

நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவருமன்னே
யருந்தலை யிரும்பாண ரகன் மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவைசோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்று வீழ்ந்தன்றவ
னருநிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.''

இவை இடையடிக ளொருசீரு மிருசீருங் குறைந்துவந்தமையா லிணைக்குற ளாசிரியப்பா.

"சூல் பம்பிய சிறுகான் யாறே
சூர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவா லாறே."

இஃது எல்லாவடியும், முதனடுவிறுதியாக, உச்சரித்து, அடிமறிமண்டில மாமாறு கண்டுகொள்க.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

இவை மூன்றடியா யொருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையால் ஆசிரியத்தாழிசை.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பானமதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணனின் னிறைகழ றொழுதனம்"

இது தனியேவந்த ஆசிரியத்தாழிசை.

கொன்றூர்ந் தமைந்த குருமுகத் தெழினிறக் குருதிக்
கோட்டின விருந்தாட் பெருங்கைக்
குன்றுமென வன்றுமெனக் குழூஉ நின்றன
கொடுந்தொழில் வேழம்

வென்றூர்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத்
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தா
ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி

சென்றூர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறும்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப்
புகையாநின்றன புலிமானேற்றை

என்றும் இவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை
விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை
யிதுவென்னெனவது நோனார்காவிர
விடைக்களவுளமது கற்றோரதுகற்பன்றே.

இது நான்கடியாய் முதலடியும் மூன்றாமடியும் பதினான்குசீராய் ஏனையடி யிரண்டும் பதினாறுசீராய் இடையிடை குறைந்துவந்த வாசிரியத்துறை.

"இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்."

இது நான்கடியா யிடையிடைகுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

"கரைபொரு கான்யாற்றங் கல்லதர்எம்முள்ளி வருதிராயி
னரையிருள் யாமத் தடுபுலி யேறஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ."

இது நான்கடியா யீற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

"இறைக்கு மஞ்சிறைப் பறவைகள்"—இஃ தறுசீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம்.

"கணிகொண்டலர்ந்த" இஃ தெழுசீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரிய விருத்தம்.

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்"—இஃது ஒன்பதின்சீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரியவிருத்தம்.

"கொங்கு தங்கு கோதை யோதி மாதரோடு"—இது பதின்சீர்க் கழிநெடி லடியான் வந்த ஆசிரியவிருத்தம். (ரு)

கO. ஆசிலிசை துள்ளலள வடிகலிப்பாத் தரவொன்
றடைவிற்று ழிசைமூன்றுந் தனிச்சொல்சுரி தகமா
மாசிலநே ரிசையொத்தா ழிசைக்கலிப்பா வளவே
மன்சிந்து குறளடித்தா ழிசைப்பின்பு வருமே
லேசிலம்போ தரங்கவொத்தாழிசைக்கலிப்பா விவற்றே
டிடையார கம்வரில்வண் ணகவொத்தா ழிசையே
பேசியவெண் பாவியைந்து சிந்தடியீற் றடியாய்ப்
பிறதளைதன் றளையோசை பெறுவதுவெண் கலிப்பா.

"ஆசிலிசை துள்ளலளவடி கலிப்பா" எ-து, துள்ளலோசையினையு மள வடியினையு முடையது கலிப்பா; "தரவொன்றடைவிற் றுழிசைமூன்றுந் தனிச்சொல் சுரிதகமா மாசில நேரிசையொத்தாழிசைக்கலிப்பா" எ-து, தர வொன்றும் தாழிசை மூன்றுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமாய் வருவது நே ரிசையொத்தாழிசைக் கலிப்பா; "அளவே மன்சிந்து குறளடித்தாழிசைப் பின்பு வருமேல் ஏசில் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா" எ-து. முன் போலத் தரவுந் தாழிசையும், பின்பு நாற்சீரடியானு முச்சீரடியானும் இருசீ ரடியானும் வந்த அம்போதரங்கமு முடைத்தாய்த் தனிச்சொல்லுஞ் சுரிதக மும் பெற்று வருவது அம்போதரங்கவொத் தாழிசைக் கலிப்பா: "இவற்றே டிடை அராகம் வரில் வண்ணகவொத் தாழிசையே" எ-து, இந்த அம்போ தரங்க வுறுப்பையுமுடைத்தாய்த் தாழிசைக்கு மம்போதரங்கத்துக்கு மிடையே அராக வுறுப்பைப் பெற்றுவருவது வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. "பேசியவெண்பா வியைந்து சிந்தடி யீற்றடியாய்ப் பிறதளை தன்றளை யோசை பெறுவது வெண்கலிப்பா" எ-து, வெண்பாவி னடைத்தா யீற்றடி சிந்தடி யாய்த் தன்றளையாகிய கலித்தளையையும் பிறதளையையும் பெற்றுக் கலி யோசையினையுடைத்தாய் வருவது வெண்கலிப்பா எ-று. இவற்றிற் குதாரணம்:—

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ; இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே;

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நலமிலரே ;

சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே என்பவால்
புலம்படைந்த நலந்தொலையப் போவரோ பொருளிலரே ;
இவைமூன்றுந் தாழிசை.

எனவாங்கு, (தனிச்சொல்.)

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே" இது சுரிதகம்.

இது, தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்று மிரண்டடியாய்த் தனிச்சொற்பெற்று மூன்றடியாசிரியச் சுரிதகத்தா லிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புனல் இழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய் ; இது தரவு.

முரைசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறப்புண் டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ ;

கலியொலி வியனுலகங் கடந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்த்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதா வெதிர்கலங்கிச்
சேணுயர் நெடுவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ ;

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவி லிறுத்ததுநின் னிகலாமோ;
[இவைமூன்றுந் தாழிசை].

இலங்கொளி மரகத வெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம் ;

விரியிணிர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை ; இவை பேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை ;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை ;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை ;
வலிமிகு சகட மாற்றிய வடியினை ; இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ ; புணர்மருதம் பிளந்தோய் நீஇ ;
நீரகல மளந்தோய் நீஇ ! நிழறிகழும் படையோய் நீஇ ;
இவை இடையெண்.

ஊழி நீஇ ; உலகு நீஇ ; உருவு நீஇ ; அருவு நீஇ ;
ஆழி நீஇ ; அருளு நீஇ ; அறமு நீஇ ; மறமு நீஇ ;
இவை சிற்றெண்.

எனவாங்கு,—தனிச்சொல்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
றொன்றுமுதிர் கடலுலக முழுதுட
னொன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.''—இது சுரிதகம்.

இஃது எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டவை குறைந்து முச்சீரடி நான்கும் இருசீரடி யெட்டுமாய்வந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா. எட்டும் பதினாறுமென்பன குறையாமல் வந்தவாறு, யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க.

''விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி லெரிகுஞ்சிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து மூன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள் ; இது தரவு.

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் காவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
வணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ ;

அன்பினா லமுதளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்

பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாக்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ;

பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ளருளுநின் றகுதியுந் தகுதியோ; இவைமூன்றுந் தாழிசை.

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென வரிவன பொழில்;
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி;
தீதுறு திறமறு கெனநனி துணையொடு சினமொடு பிணைவன துறை;
மூதுறு மொலிகலி துரைதரு திரையொடு கழிதொழிடர் புடையது கடல்;

இவை நான்கும் அராகம்.

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனு
விடுங்கழி யிராவருதல் வேண்டாமென் றுரைத்திலமோ;
கருநிறத் தெறுழ்வலிக் காம்பெரி துடைமையா
விருணிறத் தொருகான விராவார லென்றிலமோ;

இவை நாற்சீரடியிரண்டம்போதரங்கம்.

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே;
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே;
அரற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைச்சே;
நயப்பொடு கழிந்தன்று னனவினும் நன்னுதற்கே;

இவை நாற்சீரோரடி நான்கம்போதரங்கம்.

அத்திறத்தா லசைந்தன தோள்; அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்த முகம்; பொன்னிறத்தாற் போர்த்த முலை;
அழலினு லசைந்த நகை; அணியினு லொசிந்த திடை;
குழலினு லவிர்ந்த முடி; குறையினுற் கோடிற்று நிறை;

இவை முச்சீரோரடி எட்டம்போதரங்கம்.

உட்கொண்ட தகைத்தொருபால்; உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்ட றளித்தொருபால்; கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉந் தகைத்தொருபால்; படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்; இளிவந்த வெழிற்றொருபால்;
மெலிவுறூஉந் தகைத்தொருபால்; விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்; பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்; கட்படாத் துயரொருபால்;
எதிலர்ச்சென் றணைந்தொருபால்; இயனணிற் செறிவொருபால்;

இவை இருசீரோரடிப்பதினாறம்போதரங்கம்,

எனவாங்கு, தனிச்சொல்,

இன்னதிவ் வழக்க மித்திற மிவணல
மென்னவு மூன்றாட் டொன்று யாகிக்
கலந்தவ ணிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநம் புணர்ச்சி தானே'' இது சுரிதகம்.

இது, தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமென்னும் ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

''வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையால்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசான் மிகுகுணத்துத் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.''

இது, கலித்தளைதட்டுக் கலியோசை தழுவிவந்தமையால் வெண்கலிப்பா.

''ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
றூர்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.''

இஃது ஆசிரியநிரையசைத் தளையான்வந்த வெண்கலிப்பா. (௪)

௧௧. பெறுதரவு தாவிணையே சிலபலதா ழிசையாற்
பிறழ்விலவு மயங்கினவு மப்பெயர்க்கொச் சகமாம்
இறுதிநீண் டளவொத்தல் பலவடிதா ழிசையே
யெழிலைஞ்சி ரடிநான்கு கலித்துறைநே ரடிநான்
குறுதல்கலி விருத்தமிசை தூங்கலடி குறள்சிந்
தொடுதனிச்சொற் பெற்றகவ லிறும்வஞ்சி யிருசீ
ரறையடிநான் கொருமூன்று தாழிசையாங் கவற்றொன்
றூர்துறைமுச் சீரடிநான் காம்வஞ்சி விருத்தம்.

என்பது சூத்திரம். "பெறுதாவு தரவிணையே.........கொச்சகமாம்" எ-து, தர வொன்றே வந்தால் தரவுகொச்சகக் கலிப்பா எனவும், தர விரண்டாய் வந்தால் தரவிணைக்கொச்சகக் கலிப்பா எனவும், சிலதாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், பலதாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும் பலவடியும் மயங்கிவந்தால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும் பெயராம். "இறுதிநீண்......தாழிசையே" எ-து, பலவடியாய் எல்லா வடியுந் தம்மு ளளவொத்து ஈற்றடி நீண்டுவருவது கலித்தாழிசை. "எழில் ஐஞ்சீர்.........கலித்துறை" எ-து, ஐஞ்சீரால்வரும் நாலடியையுடையது கலித்துறை. "நேரடிநான் குறுதல் கலிவிருத்தம்" எ-து, நாற்சீர் நாலடியாய் வருவது கலிவிருத்தம். (இனி, வஞ்சிப்பாவுக்கு வரலாறு;) "இசை தூங்க லடி...... அகவலிறும் வஞ்சி" எ-து, தூங்கலோசையினையுடைத்தாய், இருசீரடியினையும் முச்சீரடியினையு முடைத்தாய்த் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது வஞ்சிப்பா. ('குறள்சிந்தொடு' என்னும் விதப்பினால், குறளடிவஞ்சிப்பாவென்றும் சிந்தடிவஞ்சிப்பாவென்றும் பெயருடன் வழங்கும் என்க.) "இருசீர் அறையடி......தாழிசை" எ-து இருசீர் நாலடியாய் ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருவது வஞ்சித்தாழிசை. "ஆங்கவற் றொன்றாற் றுறை" எ-து அந்தத் தாழிசை யொன்று தனியே வருவது வஞ்சித்துறை. "முச்சீரடி நான்காம் வஞ்சிவிருத்தம்" எ-து, முச்சீர் நாலடியாய் வருவது வஞ்சிவிருத்தம்' எ-று. இவற்றுக்கு முறையே உதாரணம் வருமாறு;—

"செல்வப்போர்க்கதக் கண்ணன்......மருமம்பாய்ந்தொளித்ததே." இது, சுரிதகமில்லாத தரவுகொச்சகக்கலிப்பா.

"குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையுறாஉ மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனந் தோன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு,
ஆனொடு புல்லிய பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

இது தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவு கொச்சகக்கலிப்பா.

"வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறுமடைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே; இது தரவு.
எனவாங்கு, தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே; இது தாவு.

அதனால், தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொளிஃ தெண்ணிய வாறே''—சுரிதகம்.

இஃது, இடையிடை தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா. இனிச் சுரிதகமில்லாததூஉம் வந்தவழிக் கண்டுகொள்க

''பரூஉத் தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே; இது தாவு.

ஆங்கொருசார்,

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்,

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே;

அதாஅன்று, [இவை மூன்றுந் தாழிசை.

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
இன்புக ழொருவன் செம்பூட் சேஎய்
யென் றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.'' இது சுரிதகம்.

இஃது, இடையிடையே தனிச்சொற்பெற்று, நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தன்றளையான் வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

"தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையி னிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ; இது தாவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேற்
றளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ;

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ;

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ;

நாம்பிரியே மினியென்று நன்னுதலைப் பிரிவாயே
லோம்பிரியே மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ;

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியஞான்
றன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ;

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபாவிப்
பல்பகலுந் தலையளித்த பனிமொழியும் பழுதாமோ;

இவையாறுந் தாழிசை.

எனவாங்கு, தனிச்சொல்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
அதனால், விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே." இது சுரிதகம்.

இது, நான்கடித்தரவும் ஈரடித்தாழிசையாறும் தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமுமாய் வந்தமையாற் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்ன
மிரைநயந் திறைகூரு மேமஞ்சா றுறைவகேள்;

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பெயர்ந்தோடு மேமஞ்சா றுறைவகேள்;

இவையிரண்டுந் தாவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோ
டொடிநெகிழ்ந்த தோள்கண்டும் துறவலனே என்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோ
டெண்பனிக ணுகக்கண்டுந் திரியலனே யென்றியால்;

நீர்பூத்த நிரையிதழ்க்கண் ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;

கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்;

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

இவை யாறுந் தாழிசை.

அதனால், தனிச்சொல்.

அடும்பம விறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடவிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி ரவிர்சுட ரிலங்கொளி மறைதொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்; இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுஞ் செறிப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

தாங்காது கழலுமென் றகைவளையுஞ் செறிப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

மறவாத வன்பினேன் மனநிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்;

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
யேதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;

இவையாறுந் தாழிசை.

எனவாங்கு, தனிச்சொல்.

பகைபோன் றதுதுறை, பரிவா யினகுறி
நகையிழந் ததுமுக, மனிநா ணுற்றுளந்
தகையிழந் ததுதோ, டலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய், பொறையாகின் றென்னுயிர்.

இவை இருசீரோரடியெட்டம்போதரங்கம்.

அதனால், தனிச்சொல்.

இனையது நிலையா லினையது பொழுதா
னினையல் வாழி தோழி துனிவாற்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே."

இது, தரவிரண்டுந் தாழிசையாறும் தனிச்சொல்லும் அராகம் நான்கும் பெயர்த்து மாறு தாழிசையும் தனிச்சொல்லும் எட்டம்போதரங்கவுறுப்பும் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்று நான்சடியாய் ஈற்றுக்கலிக்கோதப்பட்ட ஆறு றுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இனி யாசிரியத்தினொடும் வெண்பாவினொடும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வருமாறு:—

"காமர் கடம்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனொ டொழுகலா
னீணுக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணுக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே;

அவனுந்தான், ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக னாடன் மகன்;
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்விழா வரைமிசைத் தேன்றொடா

கொல்லை குரல்வாங்கி யீனு மலைவாழ்ந
ரல்ல புரிந்தொழுக லான்;

காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

என்வாங்கு,

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;

அவருந், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;

நல்லாய், நன்னு டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ;
விண்டோய்கன் னாடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;
மைதவழ் வெற்பன் மணவணி காணமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ;
என்னைமன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்;
நெய்த லிதழுண்கண் நின்கண்ணா கென்கண்மன்;

எனவாங்கு,

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக

வேய்புரை மென்றோட் பசலேயு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா மூடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே."

இஃது, ஆசிரியத்தினேடும் வெண்பாவினேடும்வந்த மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

"கொய்தினே காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;
ஆய்தினே காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;
மென்றினே காத்து மிகுபூங் கமழ்கானற்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;"

இவை யிரண்டடியா யீற்றடி மிக்கு ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையாற் கலித்தாழிசை.

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழா அல்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழாலாய்க் குறுவியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்."

இஃதீற்றடி மிக்கு ஏனையடி மூன்று மொத்துவந்த கலித்தாழிசை.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலேமகள் காணவே காணவே."

இஃது ஈற்றடிமிக்கு இரண்டாம் அடி குறைந்து முதலடியும் மூன்றும் அடியு மொத்துவந்த கலித்தாழிசை.

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே"

எனவும், "வென்றான் வினேயின்" எனவும், இவை ஐஞ்சீர் நான்கடியுாய் வந்தமையாற் கலித்துறை.

"வேய்தலே நீடிய வெள்ளி விலங்கலி
னய்தலி னெஞ்சுட ராழியி னன்றமர்

வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்''

எனவும், ''தேம்பழுத் தினியநீர் மூன்றும்'' எனவும், நாற்சீரடியால்வந்தமை யாற் கலிவிருத்தம்.

இனி வஞ்சிப்பாவுக்கு வரலாறு:—

''பூந்தாமரைப் போதலமரத்......''

இது நாளுமென்னுந் தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா.

''கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
யெயினடுவ ணினிதிருந் தெல்லார்க்கும்
பயில்படுவினை பத்தியினாற் செப்பியோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.''

இது, ''புணையென'' என்னுந் தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தா லிற்ற சிந்தடிவஞ்சிப்பா.

''தொன்னலத்தின்'' என்பது, ''பெரிதும்'' என்னுந் தனிச்சொற்பெற் றது. இதுவுமது.

''மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தோர்க்கே
நடக்குமென் மனனேகாண்;''

''பேடையை யிரும்போத்து
வேடையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தோர்க்கே
யோடுமென் மனனேகாண்;''

''இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கு
மருஞ்சுர மிறந்தோர்க்கே
விரும்புமென் மனனேகாண்.''

இவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையால் வஞ்சித்தாழிசை,

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

என்பதும், "திரைத்தசாலிகை" என்பதும், இருசீர்நான்கடியாய்வந்த வஞ்சித்துறை.

"சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே"

என்பதும், "இருநுவேற்றுமையின்மையால்" என்பதும், மூச்சீர் நான்கடியாய்வந்த வஞ்சிவிருத்தம். (கு)

வஞ்சியின மூற்றும்.

செய்யுளியல் முற்றும்.

---

## ரு-வது ஒழிபியல்.

கஉ. ஆந்தளைசீர் கெடிலிகர வுகரத்தேய் வொற்று
மாமலகு பெறுவளவை யௌக்குறுமை குறிலா
மெய்ந்தவுயி ரோரளபு மீரளபு மாகி
யீரசையா மூவசையா மொற்றளபு குறினேர்
சேர்ந்தசையா மொற்றிலையே லொற்றுமொற் றளவாஞ்
செறிவிலீ ரொற்றுமூ வொற்றுமொரொற் றுமுன்
சார்ந்தகுறில் விட்டிசைக்கி னேராம்வெண் பாவெண்
டளையலது மயங்காது மயங்கிடுமெப் பாவும்.

என்பது சூத்திரம். "ஆந்தளைசீர்கெடிலிகரவுகரத்தேய்வொற்றுமாம்" என்பது, தளையுஞ் சீருங் கெடவந்தவிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஒற்றும்; உம்மையால் ஒற்றல்லாமலுமாம்; "தளைசீர்கெடி" லென்பதனை முதனிலைத்தீபமாக்கிக்கொள்க; மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். "அலகுபெறுவளவு" எ - து, உயிரளபெடை ஒரோவிடங்களிலே நீக்கப்படும். "ஐ ஔக் குறுமை குறிலாம்" எ - து, ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும் குற்றெழுத்தாம்; "மெய்ந்தவுயி ரோரளபு மீரளபுமாகி யீரசையா மூவசையாம்" எ - து, உயிரளபெடையானது, ஓரளபெழுந்தால் ஈரசையாம்; ஈரளபெழுந்தால் மூவசையாம்; "செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபும், ஐயப்பா டின்றி யணையுமாம்-மைதீ ரொற், றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு, குன்றுமே லொற்றளபு

புங் கொள்'' என மாபுராணமுடையாரும், ''வெண்பா முதல யாப்பெவற் றினுக்கு, மோரள பார்த்துஞ் சந்தஞ் சிதைந்திடி, னீரளபேற்றுத லிசை நிறைக் கியல்பே'' என அவிநயனாரும் ஈரளபுகொண்டாரென்க. ''ஒற் றளபு குறிலோர் சேர்ந்தசையாம்'' எ-து, ஒற் றளபெழுந்தாற் குற்றெழுத்தாம்; அன்றி முன்னின்றவெழுத்துடனேகூடி நிரையசையாய்நில்லாது குற்றெழுத் தின்மாத்திரையைப்பெற்று, நேரசையாகவேநிற்கும்; ''ஒற்றிலையே லொற்று மொற்றளபாம்'' எ-து, ஒற்றில்லாதவிடத்து ஒற்று உண்டாக்கலாம்; அந்த வொற்றிலு மமைதிபிறவாதபோது தோற்றினவொற்றையே யளபாக்கலாம்; 'மைதீரொற் றின்றியும் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு - குன்றுமே லொற்றளபுங் கொள்' என்பதனுட் கண்டுகொள்க. 'செறிவி லீரொற்று மூவொற்று மோரொற்றும்' எ-து, அங்ஙியமாய் ஈரொற்றுவந்தாலும், மூவொற்றுவந்தாலு மோரொற்றாகவே நிற்கும். ''ஈரொற் றுயினு மூவொற் றுயினு,மோரொற் றியல வென்மனார்புலவர்'' என்னுமிதனுட் காண்க. ''முன் சார்ந்த குறில் விட்டிசைக்கில் நோரம்'' எ-து, ஆதியிலேவிட்டிசைத்துக் குற் றெழுத்து வந்தால் நேரசையாம்; ''வெண்பா வெண்டளையலதுமயங்காது மயங் கிடுமெப்பாவும்'' எ-து, வெண்பாவுக்கு வெண்டளையொழிந்து வேற்றுத்தளை வாராது; மற்ற மூன்றுபாக்களுக்கும் எல்லாத்தளையு மயங்கியும் வழங்கும். இவை யாப்பருங்கலத்துட் காண்க. எ-று.

'ஆந்தளைசீ' ரென்னும் விதப்பினால் ('விதப்புக் கிளவி வேண்டி யது விளக்கும்' என்பதினும்) குற்றியலிகரம் ஆரியம் போல வீரெழுத் தோரெழுத்தென்னவருதலா லொற்றென்றார். அன்றிக் குற்றியலுக ரத்தை யொற்றென்ற தென்னையோவெனின், முன்னம் அசையினாலென் றார்; அவற்றுள் நேர்பசையும் நிரைபசையும் சீரன்றேவென்னிற் சீரன்று. குற்றியலுகரம் ஒற்றியல்பாதலாற் குற்றியலுகரத்தை நீக்கில் ஓரசையாம்; அஃதெற்றுக்கோவெனில் வெண்பா முடிவு ஓரசையாகிய நாண்மலர்போலக் காசு பிறப்பு—உகரமின்றி முடியாது; அஃதெங் ஙனேயென்னில், உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந் தேர்க்—கச்சாணி யன்னா ருடைத்து'' என்பதன்றி, 'உடைத்த்' என்னில் ஆகாது. அருளு, புல்லுவென்னும் முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலக் கொள்க. என்னை? ''இருவகை யுகரமோ டியைந்தவை வரினே, நேர்பு நிரைபு மாகு மென்ப.''* 'ஒற்றெழுத் தியற்றே குற்றிய லுகரம்'*, குற்றிய லுகரமு முற்றிய லுகரமு, மொற்றொடு தோன்றி நிற்க வும் பெறுமே''* என்று தொல்காப்பியத்துட் சொன்னமையும் ''உயிர் வரி னுக்குறண் மெய்விட் டோடும், யவ்வரி னிய்யா முற்றுமற் றெரோ

* பொருள். செய். 8—10.

வழி என்று நன்னூலிற் சொன்னமையும், "மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவா, யோவா தளபெடுத் தூஉவுங் கெழூஉவு முதாரணமா, நாவாழ் பெரும்புகழ் நற்றத்தர் யாப்பி னடந்ததுபோற், றேய்வா முக ரம்வந் தாலியற் சீருக்குச் செப்பியதே" என்று காரிகை யுரைச் சூத் திரத்துட் சொன்னமையுமன்றிக் "குற்றிகாங் குற்றுகா மென்றிரண்டு மாய்தமு, மொற்று மிவைநான் குடனகற்றிக்-கற்றே, நுயிருமுயிர் மெய்யு மென வோதினு ராய்ந்து, செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு" என்பதற் குதா ரணம் "மட்டேத்தான் றேய்ந்து மதஞ்சோர்ந்து விட்டுக், களியானை கொண்டுவா வென்றன் களியானைக், கியாரே யெதிர்நிற் பவர்" என்று காட்டினமையுங் கண்டுகொள்க. இனி உதாரணம்:—

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா லூனைப்
பெறுநன்றி மன்னும் பெரிதேன்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்"

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்"

என்னும் வெண்பாவினுள் குற்றியலிகரத்தை யொற்றுக்கிற் சீர்சிதை யாது.

"கொன்றுகொடுநீடு குருதிமாறவுஞ்
சென்றுகொடுநீடு செழுமலைபொருவென
வென்றுகொடுநீடு விறல்வேழ
மென்றுழடுநீடு பிடியுளபோலும்
அதனுல்
ஈண்டிடை யிரவிவ ணெறிவரின்
அவ்ணே கோதை யுயிர்வா ழலளே"

என்னுங் குறளடிவஞ்சிப்பாவினுள் ஆறசைச்சீரும் வந்தமையாற் குற் றுகாங்களை யொற்றுகத்தள்ளச் சீர்சிதையாது.

"வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுது மியல்புமா—மேய்ந்த
விறுதி வருமெழுத்தா மீறரா மோரோர்
மறுவில்பதங் கெட்டு வரும்".

இவ்வெண்பாவினுள், குற்றுகரங்கொள்ளச் சீர் சிதையாது. "தடமண்டு" என்பதனுள்ளும் குற்றுகர மொற்றலாதவாறு கண்டுகொள்க.

"பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவா—னெல்லுக்கு
நூறோஒநூ றென்பா ணுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறோமா லன்றளந்த மண்"

"இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையி
னுப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு".

என்பவற்றில், நூறோநூறெனவும், உப்போ வெனவும், பண்டமாற்றின்கண் வந்த அளபெடையை நீக்கி, நெட்டெழுத்தாகவேகொள்ளச் சீர்சிதையாது.

"அன்னையையா னேவ தவமா லணியிழாய்
புன்னையையா னேவன் புலந்து."        எனவும்,

"பிறிந்த விருந்த பெருமா னுரையை
அறிந்தேன் மௌனமொழி யால்"

எனவும், ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமுங் குற்றெழுத்தானவாறுங் காண்க.

"எஎர் சிதைய வழாஅ லெலாஅநின்
சேஎயரி சிந்திய கண்"        எனவும்,

"உறாஅஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு"

எனவும், ஓரளபெடையு மீரளபெடையும் வந்தவாறு காண்க.

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலா
லென்ன் பிறர்மகளா மாறு".        எனவும்,

"அம்ம் பவள்ள் வரிநெடுங்கண் ணய்வஞ்சிக்
கொம்ம் பவள்ன் கொடிமருங்குல் கோங்கி
னரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்."

"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு."

எனவும், ஒற்றளபெடை ஒருமாத்திரைபெற்று நேரசையாயினவாறு காண்க.

"அம்பொ ரைந்து டைய்ய காம னைய னென்ன வந்தண
னம்பு நீர ரல்லர் நன்கு ரங்கு நீர ராயினுந்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பி னெஞ்சு நொந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்கு லாரெ னப்பு கன்று சொல்லினர்"

என்பதனுள், "குரவ்வரென" ஒற்றில்லாதவிடத் தொற்றுண்டானது கண்டு கொள்க.

"பீலிமஞ்ஞை நோக்கி" என்பதனுள் ஒற்றில்லாதுதோற்றின ஒற்றே அளபானது கண்டுகொள்க.

"கார்க்கடல், பேய்க்குணவு" என்பவற்றுள் அந்நியமான ஈரொற்று மோரொற்றாயினவாறு காண்க.

"உண்ணுழிநிளிகிருன்" எனவும் "அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால், எஎவனை வெல்வா ரிகல்" எனவும், "ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி, யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா" என்பதனால், மூதற்கட் டனிக் குறில் நேரசையாயினவாறு காண்க.

"குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு நேர்மணன்மே னின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ *நீபிற
ருள்ளம் புகாப்ப துரை."

என்பதனுள், வெண்பா சீர்தளை சிதைந்தவாறு காண்க.

'குடநிலைத்தண்புறவில்' என்னுங் கலிப்பாவினுள்ளு மற்றுங் கொச்சகக் கலிப்பாவினுள்ளு மாசிரியவுரிச்சீரும், வெண்சீரும், வஞ்சியுரிச்சீரும்வந்து, வெண்டளையு மாசிரியத்தளையுங் கலித்தளையும் வஞ்சித்தளையு மயங்கிவந்தமை கண்டுகொள்க.

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்கு கவுட் கடுவ
னுண்டுசிலம் பேறி யோங்கிய விருங்கழை
படித மாக்களிற் பயிற்று மென்ப
மடியாக் கொலைவில் லென்னையர் மலையே.

இவ்வாசிரியத்துட் டன்சீரும் வெண்சீரும் விரவிவந்தவாறு கண்டுகொள்க.

---

*'நீபிறர—துள்ளம்புக்கியாப்பதுரை' என்பது, யாப்பருங்கலவிருத்திப் பாடம்.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும்"

எனவும், "தொன்னலத்தின்" எனவும் வரும் வஞ்சிப்பாக்களுள்ளும் பிறவற்றுள்ளும், வெண்சீரும் தன்சீரு மாசிரியச்சீரும் விரவி வெண்டளையுந் தன்றளையுங் கலித்தளையு மாசிரியத்தளையும் மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. (௧)

௩௯. மயங்குமடி யெப்பாவும் வெண்பாவுக் கன்றி
மன்னினமுந் தளையுமயங் கிவரும் அஆ ஐஔ
நயங்கொள்ளும் இஈஎ ஏஉஊ ஒஓ
ஞணநம வசதவனு மோனைமெய்யு மோனை
யியங்குமின நெடில்வருக்கம் வரிலெதுகை மோனை
யாலழவொற் றுசிடையிட் டெிருமிரண் டடியுந்
தயங்கியமுன் றுமெழுத்து மெதுகைகடை யிணைபின்
சார்கூழை யிடைப்புணரு முரண்டொடைக்குஞ் சாற்றே.

என்பது சூத்திரம். 'மயங்குமடி யெப்பாவும் வெண்பாவுக் கன்றி' எ-து எல்லாப் பாக்களுக்கும் ஒருபாவிலடி ஒருபாவிற்புக மயங்கும்; வெண்பாவில், வேற்றுப் பாவினடி வாராது; "மன்னினமுந் தளையும் மயங்கிவரும்" எ-து, தாழிசை, துறை, விருத்தம் என்று சொல்லப்பட்ட நாலு பாவினங்கட்கும் இன்னதளை யென்னு நியமமில்லாமல் மயங்கிவரப்பெறும்; தளையுமென்ற உம்மையால் அடியு மயங்கப்பெறும்; "அஆஐஔ, நயங்கொள்ளும் இஈஎஏஉஊஒஓ, ஞணநம மவசத வனுமோனை" எ-து, அஆஐஔ எனவும், இஈ எஏ எனவும், உஊ ஒஓ எனவும், ஞணநம மவ எனவும் சத எனவும் வரும் இவை, தம்முள் ஒன்றுக்கொன்று அனுவாக வந்தமையா லனுமோனையாம்; *"மெய்யுமோனை" எ-து, ஆதியிலே உயிர் நின்றாலும் மெய் நின்றாலும் நின்றவடியே மோனையாய்வரில் மெய்ம்மோனையாம். † "இயங்குமின நெடில் வருக்கம் வரி லெதுகை மோனை" எ-து, இனவெழுத்தேவந்தா லினவெதுகையென்றும் இனமோனையென்றும், நெடிலெழுத்தே வந்தால் நெடிலெதுகையென்றும் நெடின்மோனையென்றும், வருக்கவெழுத்தே வந்தால் வருக்கவெதுகையென்றும் வருக்கமோனையென்றும் பெயர், இனமென்றது, வல்லின மெல்லின மிடையினம். "யாலழவொற் றுசிடையிட் டெிரு மிரண்டடியுந் தயங்கிய மூன்றுமெழுத்து மெதுகை" எ-து,

* இங்கே "யகரந் தீபமாக, உகரத்தொடுங்கூடி யனுவாம்" என்று ஓலைச்சுவடியிற் காணப்படுகிறது.

† இங்கே, "உம்மையால் அனுமோனைக்குச் சொன்ன வழியினாலு மோனையாம்" என்று ஓலைச்சுவடியிற் காணப்படுகிறது.

"யாலழ வென்னு மீரிரண் டொற்றும், வரன்முறை பிறழாது வந்திடை யுரப்பி, ஞசிடை யெதுகையென் றறியல் வேண்டும்" எனக் கண்டுகொள்க. இடையிட்டெதுகைவந்தால், இடையிட்டெதுகையாம். எதுகையிலே யுயிர்வந்தா லுயிரெதுகையாம். இவ்விரண்டடி யொவ்வோர் எதுகைவந்தா லிரண்டடி யெதுகையாம். மூன்றுமெழுத் தடிதோறும் வந்தால், மூன்றுமெழுத்தொன் றெதுகையாம். "கடையிணை பின்சார் கூழை யிடைப்புணரு மூரண்டொடைக் குஞ் சாற்றே" எ - து, கடைமூரணுங் கடையிணைமூரணும் பின்மூரணுங் கடைக்கூழைமூரணும் இடைப்புணர்மூரணும் எனவரும், அவையாவன:— நாலாஞ்சீர் மூரணுதல் கடைமூரண். நாலாஞ்சீரு மூன்றாஞ்சீரு மூரணுதல் கடையிணைமூரண். நாலாஞ்சீரு மிரண்டாஞ்சீரு மூரணுதல் பின்மூரண். முதற் சீரொழித்த மூன்றுசீருமூரணுதல் கடைக்கூழைமூரண்; இரண்டாஞ்சீரும் மூன் றாஞ்சீரும் மூரணுதல் இடைப்புணர்மூரண் ; எனவரும். உம்மையால் மோனைத்தொடை, எதுகைத்தொடை, இயைபுத்தொடை, அளபெடைத் தொடை: நாலுக்கும் இந்த அஞ்சுதொடையும் வருமெனக்கொள்க. இனி யுதாரணம்:—

"அங்கண் மதிய மாவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யொன்றுநோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே."

இவ்வாசிரியத்துள், "அங்கண் மதிய மாவின்வாய்ப் பட்டெனப், பொங்கிய பூசல் பெரிது" என வெள்ளடியானவாறும்;—

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே:
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலா அ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா

திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே."

இவ்வாசிரியத்துள் "உப்பிலாஅ வவிப்புழுக்கல்" எனவும் "கைக்கொண்டு பிறக்குநோக்காது" எனவும், "இழிபிறப்பினோ னீயப்பெற்று" எனவும், வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க.

"குருகுவேண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சா
லருளா னுகுத லாயிழை கொடிதே."

இவ்வாசிரியத்துள், "மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது, தீ வழங்கு சுழல்விழிக்கட் சியஞ்சென் றுழலுமே" என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

"நேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனக்குழை."

என்னு மிவ் வஞ்சிப்பா ஆசிரிய அடியாயினவாறும்,

"வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மிலைந்தும்
கயனாட்டக் கடைசியர்தங் காதலர்தோள் சேர்ந்தனரே."

எனக் கலியடியாமாறும் கண்டுகொள்க.

வஞ்சிப்பாவினுள் வெள்ளடிவருமாறும், கலிப்பாவினுள் மற்றை மூன்று பாவடியும் வருமாறும் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க. தாழிசை, துறை, விருத்தம் என்று சொல்லப்பட்ட நாலுபாவினங்களுந் தளைமயங்கிவருதற்கு உதாரணம் முன்னர்க் காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. அனுமோனைக்கும் மெய்ம்மோனைக்கும் முன்னர்க் காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

இன வெதுகை மூன்றுவன:—

"தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்."

இது வல்லினவெதுகை.

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு."

இது மெல்லினவெதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

இஃது இடையினவெதுகை.

"ஆவாவென்றே......... ஒரு சாரார்" இது நெடிலெதுகை.

"நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடுவண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லா
பாடமை சேக்கையுட் கண்."

இது வருக்கவெதுகை.

இனி மோனைவருமாறு, இவற்றுள் இனமோனை மூன்றாவன:—

"தயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யரைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே."

இது வல்லினமோனை.

மெல்லினமோனையு மிடையினமோனையும் வந்தவழிக் கண்டுகொள்க.

"ஆர்கலி யுலகத்து" என்பது நெடின்மோனை.

"பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ சோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புணர்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொருதுசினந் தணியாப் பூணுதலொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாட்

பௌவத் தன்ன பாயிரு ணீந்தியிப்
பொழுது வருகுவை யாயின்
நற்ருர் மார்ப நீண்டலெங் கதுப்பே."

இது வருக்கமோனை. இனி ஆசிடையெதுகை வருமாறு:—

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் ருெடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே"

இது யகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

"மாக்கொடி *யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் பொன்னின் ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொக்குமே"

இது ரகரவொற்ருசெதுகை.

"ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு"

இது லகரவொற்ருசெதுகை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"தோடா ரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக ருேறும் பைப்பயப் பெருக
நீடா ரிவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
யோடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே"

இஃது, இடையிட்டுவந்தமையால் இடையீட்டெதுகை.

---

*மாலையும் யாப். வி.

"துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே."

இஃ திரண்டாமெழுத்தின்மேலேறின உயிரொன்றிவந்தமையால் உயிரெதுகை.

"துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளி
ரவைப்பர்தம் பல்லிற் கழகொவ்வா முத்த
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலி
னணங்கு மருதமு மங்நலார் பாடல்."

இது, முன்னிரண்டடியு மோரெதுகையாய்ப் பின்னிரண்டடியும் வேறோரெதுகையாய்வந்தமையால் இரண்டடியெதுகை.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

இது, மூன்றுமெழுத்தெதுகை.

"கயன் மலைந்தன்ன கண்ணிணை கரிதே
தடமுலைத் திவளுந் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சிறிதே
யாடமைத் தோளிக் கல்குலோ பெரிதே."

இஃ தடிதோறுங் கடைச்சீர் மறுதலைப்படத்தொடுத்தமையாற் கடைமுரண்.

"மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
றேரோ காண்கலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே."

இஃ தடிதோறுங் கடைச்சீரிரண்டும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடையிணைமுரண்.

"சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
னலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி

வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே."

இஃ தடிதோறும் முதற்சீர்க்குப்பின்னும் மூன்றாஞ்சீர்க்குப்பின்னும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் பின்முரண்.

"காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே."

இது, முதற்சீரொழித்து மூன்றுசீரும் மறுதலைப்படத்தொடுத்தமையாற் கடைக்கூழைமுரண்.

"போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்குவெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பைங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின வினியோர் மாட்டே."

இஃ திடையிருசீரும் மறுதலைப்படத்தொடுத்தமையால், இடைப்புணர் முரண். முரண்டொடைக்குமென்ற வும்மையால் ஒழிந்ததொடைக்கு மவ்வாறே கொள்க. (உ)

கச சாற்றெல்லை யில்லைநெடி லடியாதி மோனை
சாரெழுவா யெழுத்துமலா தநுமோனை விதியாற்
றேற்றெதுகை மோனையுடன் வரிற்சிறப்பெத் தொடையுஞ்
சீரிடையீ றநுவும்வருந் தொடைகள்பல தளைகள்
தோற்றின்முதல் வந்ததொடை யாற்றளையாற் பெயராஞ்
சுருங்குந்தா ழிசைதாவிற் றாவடிமூன் றிழிபே
யேற்றபா விரண்டேவெண் பாவகவல் வெண்பா
விடத்தில்வருங் கலியகவ லிடத்தில்வரும் வஞ்சி.

என்பது சூத்திரம். 'சாற்றெல்லையில்லை நெடிலடியாதிமோனை' எ-து., ஐஞ்சீர்முதலான வடிகளிடத்து இணைமோனைமுதலானவைகள் இத்தனையாஞ் சீரில்வருமென்னும் நியமமில்லை; 'சாரெழுவா யெழுத்துமலா தநுமோனை விதியால்' எ-து, எழுவாயெழுத்தோன்றிவருவதுபோல முன்விதித்த வநுமோனை வந்தாலும் விதியெனக்கொள்க; 'தேற்றெதுகை மோனையுடன்வரிற் சிறப்பெத் தொடையும்' எ-து., இயைபுத்தொடையும் முரண்டொடையும் அளபெடைத் தொடையும் முதலாயின தொடை தமது இலக்கணங்களால் முடியும்போது

எதுகையுடனும் மோனையுடனுங் கூடிவரிற் சிறப்புடைத்தென்றவாறு; 'சீரிடை யீறனுவும் வரும்' எ-து., அனுவாகியமோனை ஆதியிலே வருவதன்றியுஞ் சீரினிடையிலும் ஈற்றினும் வந்தாலும் மோனையாம்; தொடைகள் பல............... பெயராம்' எ-து., தொடைகள் பலவிரவிவரினும் முதல்வந்ததொடையாலே பெயராம்; தளை பல விரவினும் பாக்களுக்குச் சிறப்பாக விதித்த தளையே முதல்வரி லதனாற் பெயராம்; "தொடைபல தொடுப்பினுந் தளைபல விரவினு, முதல்வந் ததனன் மொழிந்திசிற் பெயரே" என்னும் யாப்பருங்கலத்துட் கண்டு கொள்க; 'சுருங்குந் தாழிசை தரவில்' எ-து., தாவடியிலுந் தாழிசையடி சுருங்கி வரும்; 'தாவடி மூன்றிழிபே' எ-து., தாழிசையுடனே கூடிவருகிற தாவுக்கு மூன்றடிச்சிறுமையாம். அல்லாத தாவுக்குக் கலிப்பாவிற் சிறுமையடியே யடியெனக் கொள்க; 'எற்றபா விரண்டே வெண்பா வகவல் வெண்பாவிடத்தில் வருங் கலி யகவலிடத்தில்வரும் வஞ்சி' எ-து., பாக்களைத் தொகுத்துச்சொல்லுமிடத்து வெண்பாவும் அகவலும் என இரண் டாம், மற்றப் பாவிரண்டும் எங்ஙன் வந்தனவோ வென்னில் வெண்பாவிடத்திலே கலிப்பாவும் ஆசிரியப்பாவினிடத்திலே வஞ்சிப்பாவும் வந்தன; "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின், ஆசிரி யப்பா வெண்பா வென்றாங், காயிருபாவினு ளடங்குமென்ப," "ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை, வெண்பா நடைத்தே கலியென மொழிப" என்னுந் தொல்காப்பியத்திற் கண்டுகொள்க. இவற்றுக் குதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. (௩)

௧௫ இறுகுறளின் சிதைவுஞ்செந் துறையிழிபுங் குறட்டா
    ழிசையாம்வேற் றொலிவரினும் வெண்டுறையொற் றெண்ணு
தறையடிநேர் பதினாறு நிரைபதினே ழெழுத்தா
    யடிநான்கு தொறும்வரிற்கட் டளைக்கலித்து றையே
யுறுபொருள்சூத் திரஞ்குறித்த யாப்பிற்றாய் நாற்சீ
    ரோரடியும் பலவடியும் வருநூற்பா வகவல்
புறநிலைவா யுறைவாழ்த்துச் செவியறிகைக் கிளைகள்
    பொருளாய்முன் வெண்பாப்பின் னகவல்வரு மருட்பா.

என்பது சூத்திரம். 'இறுகுறளின்சிதைவுஞ் செந்துறையிழிபுங் குறட்டாழிசையாம்' எ-து., குறள்வெண்பாச் சந்தஞ்சிதைந்துவரினும், விழுமியபொருளும் ஒழுகிய ஓசையுமின்றி வெண்செந்துறை சிதைந்துவரினும் குறட்டாழிசையின்பாற்படும்; 'வேற்றொலிவரினும் வெண்டுறை' எ-து மூன் வெண்டுறைக்குச்சொன்ன இலக்கணங்களையுடைத்தாய் மூன்னேரோசையாய்ப் பின்னேரோசையாய் வருகினும் அது வேற்றொலி வெண்டுறை. 'ஒற்றெண்ணுதறையடி ... ... ... ... ... கலித்துறையே' எ-து., நாலடியாய் அடி

தோறு மொற்றெண்ணு மூ யி ரு மூயிருமெய்யு மெண்ணில் ஆதியிலே நேரசைவந்தாற் பதினறெழுத்தும் நிரையசைவந்தாற் பதினேழெழுத்தும் உடையதாய் வருவது கட்டளைக்கலித்துறை; "கட்டளைக் கலித்துறை கலித் துறைப் பாற்படும்," "நேரசை யெனவு நிரையசை யெனவு, மாயிரு பெயரா னடக்குமன் னவையே" என்னும் அவிநயத்துட் கண்டுகொள்க. 'உறு பொருள் ... ... ... ... ... ... நூற்பாவகவல்' எ-து., சூத்திரத்தைக் குறித்த யாப்பும் பொருளு முடைத்தாய் நாற்சீரோரடியானும் பலவடியானும் வரும் நூற்பாவகவல்; "நூற்பா வகவ னுணங்க நாடிற், சூத்திரங் குறித்த யாப் பிற் ருகி, யடிவரை யின்றி விழுமிதி னடக்கும்," "சில்வகை யெழுத்திற் பல் வகைப் பொருளைச், செவ்வ னடியிற் செறித்தினிது விளக்கித், திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்," "ஆற்ருெழுக் கரிமா நோக்கந் தவளைப், பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை," "நூற்பா வகவல் யாப்புற் றுணரி, னுசிரி யத்து ளாகு மென்ப" என்பனவுங் காண்க. அகவலுக்கு மூன்றடிச்சிறுமை சொல்லி இதனுள் ஓரடிச்சிறுமை கூறியவாறென்னையோவெனின், பொருண் முடிவே முடிவாதலானும், 'சில்வகையெழுத்தில்' எனப் பகர்தலானும் ஈண் டிலக்கணம் வேறெடுத்தோதினர்; அது வென்போல வென்னில், பொதுப்படக் கலிப்பாவுக்கு நாலடிச்சிறுமைசொல்லித் தரவுகொச்சகக்கலிப்பாவல்லாத கலிப் பாக்களுக்கு மூன்றடிச் சிறுமைகூறுபவாதலா லதுபோலவெனக் கொள்க. 'புறநிலை வாயுறைவாழ்த்து ... ... ... ... ... மருட்பா' எ-து., புறநிலை, வாயுறை, செவியறி, கைக்கிளை யென்னும் பொருணிலையுங் கொண்டு முன் வெண்பாப் பின்னகவலாய் முடிவது மருட்பா, எ-று. இவற்றுக் குதாரணம்,

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி"

இது குறள்வெண்பாச் சந்தஞ் சிதைந்துவந்த குறட்டாழிசை.

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலக மேவல்செய
முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றக்கரிய வைவேல் பாடிக்
தலங்கிகின் றேரெலாங் கருதலா காவண
யிலங்குவா ளிரண்டினு லிருகைவீ சிப்பெயர்த்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டெம்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்சே புரிந்துநின் றுரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுபவே."

இஃ தேழடியாய் முதலிரண்டடியு மறுசீராய்ப் பின்னைந்தடியும் நாற்சீராய் வேறுரோசையாய்வந்தமையால் வேற்றுெலிவெண்டுறை. இதுவும் வெண் டுறையின்பாற்படும்.

"அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவா
யந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே"

"மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வா
யான்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே"

இவை ஒற்றுநீக்கி அடிதோறும் பதினாறெழுத்தா யைஞ்சீராய் நான்கடியாய் நேரசையாதியாகவந்த கட்டளைக்கலித்துறை.

"அடிவரை யின்றி யளபொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதவில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே"

இதுவும் அப்படியே நிரையசையாதியாய்வந்தமையான் நிரையசைக் கட்டளைக்கலித்துறை.

"குறளடி சிந்தடி யிருசீர் முச்சீ, ரளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர், நிரனிறை வகையா னிறுத்தினர் கொளலே" என்று சொல்லுதலானும், "மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே, யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப" என்று தொல்காப்பியத்துட் சொன்னமையானும், "நேர்பதி னாறே நிரைபதி னேழென், றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே" என்று பிறருஞ் சொன்னமையானும் இவை கட்டளைக் கலித்துறையின்பாற்படும்.

"அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே"

"சில்வகை யெழுத்திற்..................சூத்திரம்"

என்பவை நாற்சீரோரடியும் பல வடியும் வந்த நூற்பாவகவல்.

இனி மருட்பா வருமாறு:—

"தென்ற லிடைபோழ்ந்த தேனார் நறுமுல்லை
முன்றின் முகை விரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்று னிற்காப்ப — வென்றும்
திரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே"

இது, 'வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப், பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து பொலிக' வென்றமையாற் புறநிலைவாழ்த்துமருட்பா.

"பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்கு மெறிபடையு மாற்றலு மன்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனே டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
வனைத்தாத னீயிருங் காண்டிர் நினைத்தகக்
கூறிய வெம்மொழி பிறழாது
தேறி நீ ரொழுகிற் சென்றுபயன் றருமே"

இது மெய்ப்பொருள்சொன்னமையான் வாயுறைவாழ்த்துமருட்பா.

"பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுக் காற்றிப் பகைஞ
ரடுகளம் வேட்டோன் மருக வடுதிற
லாளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்று
மீர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
யுடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
படைத்த வரும்பொரு ளாறின்றி வெளவ
லினத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி மன்ற மறுக வகழாதி யென்று
மறப்புற மாக மதுரையா ரோம்பு
மறப்புற மாசைப் படேற்க வறத்தா
னவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்கு மீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றாற் செறத்துநிற் சேர்ந்தானை யாக்குதி
யற்ற மறிந்த வறிவினுய் மற்று
மிவையிவை நீயா தொழுகி னிலையாப்

பொருகட லாடை நிலமக
ளொருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே"

இது, வியப்பின்றி யுயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கடனென் றரசற்குச்சொன்னமையாற் செவியறிவுறூஉமருட்பா.

"திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு – மரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே."

இது, துணிதலை நுதலிய வொருதலைக்காமமாதலிற் கைக்கிளைமருட்பா. ()

௧௬ வருதனிச்சொற் கூன்பொருளோ டடிமுன்வரு மதுவே
வஞ்சியீற் றினுமாம்வெண் பாவகவ லீற்றூற்
சுரிதகமாம் வேறுமடி யாலிசையாற் கலையாற்
சூழெழுத்தெண் ணூல்வகுத்த வகுப்பாற்கா ரணத்தாற்
பெருகியிடுங் காலவழக் காற்பலவாஞ் செய்யுட்
பெயரெழுத்து முதலெட்டு வகைவிரிவுங் குவிவும்
பரவுவகை யுளிவிகா ரம்வண்ணம் மற்றும்
பலவுமடங் காதடக்கிப் பகருவர்சான் றோரே.

என்பது சூத்திரம். 'வருதனிச்சொற் கூன் பொருளோ டடிமுன் வருமதுவே வஞ்சியீற்றினுமாம்' எ-து., தனிச்சொல்லாகிய கூன் செய்யுட்கண் முதற்றண்ணே பொருள்கொண்டுவரப் பெறும்; அதுவே வஞ்சிப்பாவுக்கீற்றினும் வரப்பெறும்; உம்மையால் வஞ்சிக்கு முதலிலும் இடையிலும் வருமென்பது, பெரும்பான்மையால் விளங்கின தனிச்சொற்றானே கூனும்; "அதுவே, வஞ்சியிடையினு மிறுதியு நிலவும்," "வஞ்சிப் பாக்களுக் கெங்கணு முறுமே" என்னும் அவிநயத்துட் கண்டுகொள்க. "வெண்பா வகவலீற்றூற் சுரிதகமாம்" எ-து., வெண்பாவாலும் அகவற்பாவாலுங் கலிப்பாவுக்குச் சுரிதகம் முடியும்; 'வேறுமடியா லிசையாற் கலையாற் சூழெழுத் தெண்ணூல், ... ..., பலவாஞ் செய்யுட் பெயர்' எ-து., இங்ஙனங் கூறினமையன்றியும் அடியினாலும், இசையினாலும், கலையினாலும், எழுத்தெண்ணிச் சொல்லுகையாலும், வகுத்துக்கொண்ட வகுப்பினாலும், பொருள்கொண்டு பாடின் காரணத்தினாலும், "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" என்னுங் காலவழக்கினாலும் பலவகையாக இப்படிச் செய்யுட்கள் பெயர்பெறும். 'எழுத்துமுதல் எட்டுவகை ... ... ... ... ... ... பகருவர் சான்றோரே' எ-து., எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, பா, இனம்; எட்டுவகையினது

விரிவும், குவிவும், வகையுளியும், விகாரமும், வண்ணங்களின்வகையும் வேறு யாப்புக்கு அங்கமான வனப்பும், வாழ்த்தும், வசையும், பொருள்கோளும் குறிப்பு மொழிகளும், இவைபோல்வன பிறவும் பலவு முண்டாகலான் இதனுள் அடக்கிச் சொல்லில் விரியும்; அந்த விரிவெல்லாம் இதனுள் அடக்கிச்சொல்லுவர் பெரியோர் எ-று. இனி உதாரணம் வருமாறு:—

"உதுக்காண்,
சுரந்தானு வண்கைச் சுவானமாப் பூதன்
பரந்தானுப் பல்புகழைப் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளித்தோர் மழை"

இவ்வெண்பாவினுள் முதற்கண் உதுக்காண் எனக் கூன்வந்தவாறு.

"அவரே,
கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே,
தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
யன்ன ளளிய ளென்னாது மாமழை
யின்னும் பெய்யு முழங்கு
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே"

இவ்வாசிரியத்துள், 'அவரே' எனவும், 'யானே' எனவும் கூனுயிற்று.

"உலகினுள்,
பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகை யிருவரைமே லெரியேபோற் சுடர்விடுமே"
"சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெண்ணும் பிறப்பின்றி
யுறுதகைமை பிழைப்பினுமோ ரொப்பாகித் தோன்றாவே"

இக்கலியடி முதற்கண் 'உலகினுள்' எனத் தனிச்சொல் வந்தவாறு.

"உலகே
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழியொழுகுமென்ப
அதனால்,

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI.

நற்றிற நாடுதே னன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே"

இவ்வஞ்சியடி முதற்கண் 'உலகே' எனத் தனிச்சொல் வந்தவாறு.

'மாவழங்கலின் மயங்குற்றன வழி' யென வஞ்சியடியினிறுதிக்கண் வழி யெனக் கூன் வந்தவாறு.

'கலங்கழாலிற் றுறை கலக்காணுதே' என இவ்வஞ்சியடியில் 'துறை' என நடுவுங் கூன் வந்தவாறு.

'தேரோடத் துகள்கெழுமின தெரு' என வஞ்சியடியிறுதிக்கண், 'தெரு' என அசை கூனுயிற்று.

"காமர்கடும்புனல் கலந்தெம்மோடாடுவாள்" என்னுங் கலிப்பாவினுட் 'சிறுகுடியீரே சிறுகுடியீரே' யென ஓரடியாற் றனிச்சொல் வந்தவாறு. பிறவுமன்ன.

வெண்பாவினுலும் அகவலினுலுஞ் சுரிதகம் முடிவது முன்காட்டிய கலிப்பாக்களுட் கண்டுகொள்க.

அடியாற் பெயர்பெற்றது—கழிநெடில், திருவிருக்குறள் முதலாயின; இவற்றிற் கழிநெடிலாவது ஆசிரியவிருத்தம். திருவிருக்குறளாவது வஞ்சித்துறை. இசையாற் பெயர்பெற்றது—சந்தத்தாழிசை முதலாயின. இதிற் சந்தத்தாழிசை—ஆசிரியவிருத்தம். கலையாற் பெயர்பெற்றது—அச்சுக்கலை முதலாயின. இதில் அச்சுக்கலை இரண்டடியால் வந்தாற் செந்துறை. நாலடியால் வந்தாற் சீரையெண்ணி அறுசீர் முதலானவைகளெல்லாம் ஆசிரியவிருத்தம் என வறிக. எழுத்தெண்ணற் பெயர்பெற்றது—கட்டளைக்கலித்துறையாம். வகுத்த வகுப்பாற் பெயர்பெற்றது—புயவகுப்பு. புயவகுப்பு முதலாயின ஆசிரியவிருத்தத்துள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் அடங்கும். காரணத்தாற் பெயர்பெற்றது—திருவெம்பாவை முதலாயின; அம்மானை தாவு கொச்சகக் கலிப்பா வென்பாரு முளர். வெண்டளையே வருதலாற் பஃறொடைவெண்பா வென்பது மிது. காலவழக்காற் பெயர்பெற்றது வெண்பாவினு ளீரடிமுக்கால் முதலாயினவையும் சாரமுதலாயினவையும் 'பலவாஞ் செய்யுட்பெயர்' என்பதற்குப் பொருள்விரிக்கிற் பெருகும்.

எழுத்துமுதலெட்டுவகை விரிவுங் குவிவுமென்றது : தொகையால் யாப்பாம்; வகையால் எழுத்துமுத லெட்டாம்; விரிவால் எழுத்துக் குறில் நெடில் முதலானவைபோல மற்றையேழுக்கும் இப்படியே கண்டுகொள்க. இனி வகையுளி வருமாறு:—

"அருணேக்கு நீரா ரசைசீ ரடிக்கட்
பொருணேக்கா தோசையே நோக்கி—மருணீங்கக்
கூம்புபவுங் கூம்பா தலர்பவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு"

"கடியார்பூங் கோதை கடாயினுஞ் றிண்டேர்
சிறியாடன் சிற்றில் சிதைத்து"

இந்த வெண்பாவைக் கடியாரென்றும் பூங்கோதையென்றும் சீர்பிரித்தாற் றளைசிதையும்; "வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன, வெல்லாத் தளையு மயங்கியும் வழங்கும்' என்பதனாற் 'கடியார்பூங் கோதை' என அலகிடிற் சீர்சிதையாது.

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

இவ்வெண்பாவி னீற்றடியை நிலமிசையென்றும் நீடென்றும் வாழ்வா ரென்றும் அலகிடில் வாழ்வாரென்பது ஆசிரியச்சீராம். நாள் என வெண்பா முடியுமாதலால் நீடுவாழ் என்றும் வாரென்றும் அலகிடக் கூவிளமென்றும் நாளென்றும் முடியும், பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

விகாரம் வருமாறு:—

"வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி"

என்னே? வலித்தலாவது:—

"குறுத்தாட் பூதஞ் சுமந்த
வறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே"

இதனுட் குறுந்தா ளெனற்பாலதனைக் குறுத்தாளென்றது வலித்தல்.

"தண்டைடயி னினக்கிளி கடிவோள்
பண்டைய எல்லண் மானேக் கினளே"

இதனுள், தட்டையெனற்பாலதனைத் தண்டை யென்று மெலித்தவாறு.

"ஆர்த்த வறிவின ராண்டிளைஞ ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப — மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்"

இதனுள், பொத்தறார் எனற்பாலதனைப் போத்தறார் என நீட்டும்வழி நீட்டினவாறு காண்க.

"எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
திருத்தார்நன் றென்றேன் றியேன்"

இதனுள், தீயேன் எனற்பாலதனைத் தியேன் என்றது குறுக்கும்வழிக் குறுக்கினவாறு.

"வெண்மண லெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணாடி மண்டிலத் தூதாவி யொத்திழியுந்
தண்ணந் துறைவன் றகவிலனே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா வாறு"

இதனுள், தண்டுறைவ னெனற்பாலதனைத் தண்ணந்துறைவனென்று விரிக்கும்வழிவிரித்தவாறு.

"பூத்தாட் புறவிற் புனமதில் கைவிட்டார்
காத்தாவிக் காதல ரேனையர்—பார்த்துரு
வேண்டார் வணக்கி விறன்மதுரன் கைக்கோடல்
வேண்மோம் வேண்டார் மகன்"

இதனுள், வேண்டாதாரை வணக்கி யெனற்பாலதனை வேண்டார்வணக்கி யெனத் தொகுக்கும்வழித் தொகுத்தவாறு.

இனி வண்ணம் வருமாறு :—

"தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை வைத்துப்பின்னும்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்
டாங்கே குறிநெடில் வல்லிசை மெல்லிசை யோடிடையுந்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறுந் தலைப்படுமே"

என்னை? தூங்கிசைமுதல் ஐந்தையும் முன்வைத்து அதின்பின்னே குறின் முதலைந்தையும் ஒவ்வொன்றின்பேரிலே யேற்றி யகவன்முதல்நாலையும் பின்னே வைக்கில் அகவன்முதனான்குந் தனித்தனியே யிருபத்தைந்தாம். இந்த நால் வகையு மலகிட வண்ணம் நூறும். (௬)

ஒழிபியல் முற்றும்.

## ௪-வது பொருத்தவியல்.

௧௭ பகர்செய்யுள் மங்கலஞ்சொல் லெழுத்துத் தானம்
பாலுண்டி வருணநாட் கதியே யென்று
புகரில்கண மெனப்பத்தும் பிறங்கு கேள்விப்
புலவர்புகழ் முன்மொழிக்குப் புகல்வர் செம்பொற்
சிகரகிரி யென்ப்பணைத்துப் புடைத்து விம்மித்
திரண்டெழுந்து வளர்ந்திளகிச் செறிந்த கொங்கைத்
தகரமலர்க் குழற்கருங்கட் குமுதச் செவ்வாய்ச்
சரிவளைக்கைக் கொடியென்னத் தயங்கு மாதே. (௧)

௧௮ மாமணிதேர் புகழமுத மெழுத்துக் கங்கை
மதிபரிதி களிறுபரி யுலகஞ் சீர்நாள்
பூமலைகார் திருக்கடனீர் பழனம் பார்சொற்
பொன்றிகிரி பிறவுமுதன் மொழிச்சீர்க் காகும்
நாமவகை யுளிசேர்தல் பொருள தின்மை
நலமிலதாய் வைத்தல்பல பொருளாய்த் தோன்ற
லாமினிய சொல்லீறு திரிதல் போலு
மாதிமொழிக் காகாவா னந்த மாமே. (௨)

௧௯ ஆனவெழுத் தொன்பதே யைந்து மூன்றும்
ஆகாதெட் டாறுநான் காதிச் சீர்க்கே
யூனமிலா அஆவும் இஈஐயும்
உஊவும் எஏயும் ஒஓஔவுந்
தானமிவை வகையாமந் தாதி தன்னிற்
றலைவன்பேர் முதலெழுத்திற் பால ஞதி
மேனிரையெண் ணிற்பால குமார ராசர்
வேண்டிமெய்வெண் டாவிருத்த மரணந் தானே. (௩)

௨௦ மருவுகுறி லாண்டில்பெண் ணலி வர்க்க
மயங்கிறுமாம் வாலாச பேடோற் றுய்த
மூரியகச தடபமவ வேழோ டாதி
யுயிர்க்குறினன் கிவையமுத மாதிச் சீர்க்கும்

அரிய தசாங் கத்தயற்கு லமை தாகு
மமுதமொழிக் கல்லாத வெழுத்துங் கான்மாத்
திரையளவஃ கேனமுடன் மூன்று நஞ்சாய்ச்
செப்புமெழுத் திவையெல்லாந் தீதா மன்றே. (ச)

உக தீதிலுயி ரீராறு முதலொற் றாறுந்
திருமறையோர்க் கடைவேயோ ராறு வேந்தர்க்
கேதில் லவறனக்கள்வணி கர்க்கா மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
யோதிமன்றன் படைப்புயிரே யான்மால் செவ்வே
ளும்பர்கோன் பரிதிமதி மறலி நீர்க்கோன்
காதலள கேசன்முத லிவ்வி ரண்டாய்க்
கம்முதன்மூ வாறெற்றுங் கருதிச் செய்தார். (ரு)

உஉ கருதுமுயி ரடைவேகான் கைந்து மூன்று
கார்த்திகையே பூராட முத்தி ராட
முரைதருகவ் வரியினுன் கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புனர்தம் பூச
மிருமைகொள்சவ் வரியினுன் கைந்து மூன்றி
ரேவதியச் வனிபரணி ஞகர மூன்றும்
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்று
வளர்சோதி விசாகமே சதய மன்னும். (சு)

உரு சதிதிகழ்நவ் வினிலாறு மூன்று மூன்றுந்
தருமனுடங் கேட்டையே பூரட் டாதி
திதமிருபவ் வரியினுன் கிரண்டோ டாறுத்
திரமுதன்மூன் றுமவ்வி லாறு மூன்று
மிதமுடன்மூன் றும்மகமா யிலியம் பூர
மியாவுத்தி ரட்டாதி யூயோ மூல
முதவியவம் முதனுன்கு மொழிந்த நான்கு
மூரோகணியா மிருகசீ ரிடமாம் பேர்நாள். (எ)

உச பேர்நாளுற் பவநாளா தன்மூ வொன்பான்
பிரித்தொன்று மூன்றைந்தே ழாகா தெட்டாங்
கூரிராசி யும்வயிறு சிகழு மாகா
குறில்வன்மை யீரெழுக்கில் வரனோர்க் காகும்

நேர்நெடிலின் முதல்நான்கி றில்லா மென்மை
நிலமக்கள் கதிமுதற்சீர்க் காகும் ஒஔ
ஏர்மருவு யாலழற விலங்கா மற்றை
யெழுத்துநா கக்கதிமுன் னிவைவா ராதால். (௯)

௨௫ வானிலகு நேர்குருவே நிரையாம் வெண்சீர்
வரில்நபத வகணநாட் பரணி மூம்மீன்
ஊனமிகு புனர்பூசம் பூசம் வாணு
ளூற்றபுகழ் சூனியநோய் பலன்க ளாகுந்
தேனனையாய் வஞ்சிச்சீ ரடைவே நான்குந்
திகழ்சரம யகணநாட் சோதி யாரல்
தானமுறு கேட்டைசத யந்தான்கேடு
சாவுதிரு மகிழ்ச்சிபலன் றாத்தொ டங்கும். (௯)

௨௬ துறக்கமதி வான்பரிதி காய்ச்சீர் முன்னுஞ்
சூழ்காற்றுத் தீநிலநீர் கனிச்சீர்ப் பின்னு
நிறுத்துகண மிவ்விரண்டா மகவற் சீரின்
நேரீறு வெள்ளைச்சீர் நிரைவஞ் சிச்சீர்
சிறப்புடையிவ் விரண்டுமாங் கணப்பேர் மற்றுந்
திகழியற்சீ ரயன்றிருக்கோக் கருடன் முன்னும்
வெறுத்தபின்னு மாமென்ப விறைவ னாட்கு
மேவுகண நாட்பொருத்தம் வேண்டு மாதோ. (௧0)

௨௭ ஆவதுமங் கலத்தேற்ற பரியா யச்சொ
லடைகொடுத்து முதற்சீருக் கடுத்த செய்யுண்
மேவுதலை யிடைகடைமங் கலச்சொல் வைத்து
விதியெழுத்துப் பால்வருண மயங்கு மென்ப
வாவுமொரு நற்கதியால் முன்னோர் நூலின்
மங்கலத்தால் நஞ்சுசில வமுத மாகுந்
தூவமுத மெனிற்கதியிற் பழுது பேரமேற்
றொடர்கலப்பா மரபினது தொடக்கஞ் சொல்வாம். (௧௧)

பொருத்தவியன் முற்றும்.

## ரு-வது மரபியல்.

௨௮ துறுகொலைநீக் கித்தெய்வக் காப்பாய்ச் சுற்றத்
தொகையளவு வகுப்பகவல் விருத்தந் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றிற்சிறுதே ரிவைபின் மூன்றுந்
தெரிவையர்க்குப் பெருகழங்கம் மானை யூசல்
பெறுமூன்று முதலிருபத் தொன்று ளொற்றை
பெறுதிங்க டனிற்பிள்ளைக் கவியைக் கொள்ளே. (௧)

௨௯ கொண்டபுயந் தவமதங்கம் மானை காலங்
குறங்களிசம் பிரதமறம் பாண்கார் தூது
வண்டுதழை கைக்கிளைசித் திரங்க ளூசல்
மடக்குமருட் பாவகவல் விருத்தம் வெண்பா
வெண்டுறைவஞ் சித்துறையா சிரியம் வஞ்சி
விருத்தப்பாக் கலியினமர் தாதி யாகக்
கண்டவைமுன் னாதியொரு போகு வெண்பாக்
கலித்துறைநேர் கூறல்கலம் பகமா மன்றே. (௨)

௩௦ அன்புறுதே வர்க்குநூ றிழிபைந் தையர்க்
காசர்க்குத் தொண்ணூறு வணிகர்க் கைம்பா
னின்புறுமுப் பானுழவர்க் கமைச்சி னுள்ளோர்க்
கெழுபதெனுங் கலம்பகத்தம் மானை யூசல்
முன்பொருபோ கொழித்ததுபன் மணிமா லைப்பேர்
மொழிவெள்ளை நூறுகலித் துறைநூ றாதல்
நன்குறிலந் தாதிகலித் துறைநா னூறாய்
நடப்பதகப் பொருட்கோவை நாம மன்னே. (௩)

௩௧ மன்னிருபான் வெள்ளைகலித் துறையி ரட்டை
மணிமாலை நூறுவெள்ளை யகவற் பாவாற்
பின்னர்கலித் துறையிணை மணிமா லைப்பேர்
பேசகவல் வெள்ளைகலித் துறைமுப் பானாற்

சொன்னதுமும் மணிக்கோவை வருப்பு மூப்பான்
சூழொலியர் தாதிவெள்ளை யகவற் பாவாற்
பன்னுமிரு பாவிருப திவையந் தாதி
பயோதரங்கண் ணுரைத்திடிலப் பேர்ப்பத் தாமால். (௪)

௬உ பத்தியல்வெண் பாவின்மலை நதிநா டூர்தார்
பரிகளிறு கொடிமுரசு செங்கோல் பாடின்
மெத்துதசாங் கப்பத்தாந் தசாங்கந் தன்னை
வெண்பாவாற் றெண்ணூறேழ் பஃது மூப்பா
னித்தகைமை மொழிவதுசின் னப்பூ வாகு
மெழிற்குடைசெங் கோனூர் வில்வாள் வேன்மா
அத்திதனித் தனியகவல் விருத்தம் பத்தா
லறைவிருத்த விலக்கணமா மமுதச் சொல்லாய். (ரு)

௬௩ சொற்கலித்தா ழிசைபகவல் விருத்த மாதல்
சுற்றமுடன் ஞுழிசையாய்ச் சொல்வ தூசல்
வற்கவுயிர் கசதநப மவவெட்டின்சூழ்
மருவகவல் வரின்வருக்க மாலை வெள்ளை
நற்கலியின் றுறைபகவ லந்தா தித்த
னடைமுப்பான் மும்மணிமா லைப்பேர் மேலோ
ரொற்கமிலா சிரியவிருத் தத்தைக் கூட்டி
லொருநாற்பான் னான்மணிமா லைக்கென் றூதே. (௬)

௬௪ ஓதும்வெள்ளை கலித்துறையா சிரியம்வஞ்சி
யுறுவிருத்தம் வருப்பைந்தா லுரைக்கி லம்ம
கோதிலலங் காரபஞ்ச கப்பே ரெட்டுக்
குலவகவல் விருத்தமுறு தெய்வங் காப்பா
மீதட்ட மங்கலமிப் படிபொன் பானு
மேத்துநவ மணிமாலை யெப்பாட் டேனுந்
தீதிலொரு பானெருபா வொருபஃ தென்ப
செப்பிவைக ணூன்கையுமந் தாதி தன்னால். (எ)

கூரு அகவல்விருத் தம்வகுப்பா தல்பத் தாதி
யந்தநா ருரும்பல் சந்த மாலை
புகழகவ லாற்புலவர் பாணர் கூத்தர்
பொருநர்முத லவருரையாற் றெதிர்ப்பா டாகப்
பகருமதா ற்றுப்படையாங் கலிவெண் பாவாற்
பாதாதி கேசங்கே சாதி பாத
மகிழவுரைத் திடிலந்தப் போர மந்த
வகையுரைக்கின் வெளிவிருத்தத் தங்க மாலை. (அ)

கூசு மாசில்குல மகளுக்கு வகுப்பு வெண்பா
வருபொருளொன் பாஞென்பா ஞகப் பாடிற்
றேசுயர்மங் கலவள்ளை வேந்தர்க் குண்மை
திகழ்கீர்த்தி யுரைப்பதுமெய்க் கீர்த்தி வஞ்சி
பேசுகுணப் பேரடுக்கி மடவார்க் கோதிற்
பெரும்புகழ்ச்சி மாலையப் படியாண் பாற்கு
மாசகல வுரைக்கிலது நாம மாலை
வருங்காம மொருதலைகைக் கிளைய தாகும். (கூ)

கூஎ குழமகனை யடையாளங் கலிவெண் பாவாற்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பை பன்மூன்
றியன்மங்கை பத்தொன்பான் மடந்தை யையைந்
தழகரிவை முப்பஃதோர் தெரிவை நாற்பா
ஞம்வயது பேரிளம்பெண் முதலா யுள்ளோர்
தொழவுலாப் போந்ததுலாத் தலைவன் பேர்க்குத்
தொடைபெதுகை யொன்றிலின்ப மடலாய்ச் சொல்லே.

கூஅ சொன்னமா தரைக்கண்டு கனவிற் சேர்ந்தோன்
துணிவன்மட லென்றதுலா மடல்பாங் கற்கு
ளின்னலுரைத் திடுதலனு ராக மாலை
யிருநிணையை விடறாதிவ் வைந்து முற்பாப்

பன்னுபொரு ளிடங்காலந் தொழின்முப் பானுற்
　　பானெழுபான் தொண்ணூறு நூறல் வெண்பா
மன்னுகலித் துறையாதல் புகலப் பேராந்
　　மாலையுமா மென்னறுவு மருவும் பேராம். (கக)

௩௯ மகிழ்நிரைகொள் வதுவெட்சி கரந்தை மீட்டல்
　　மாற்றூர்பாற் செலல்வஞ்சி யூன்றல் காஞ்சி
பகர்மதிலைக் காக்குமது நொச்சி சுற்றிப்
　　படைவளைத்த லுழிஞைபொரல் தும்பை வென்று
புகழ்படைத்தல் வாகையது மாலைப் பேராற்
　　போற்றுவது மாலையுமாப் புகல்வர் தானை
யகலமுரைப் பதுதானை மாலை தூசி
　　யணிவகுப்பிற் றூசிகைமா லையைச்சொல் லாய்ந்தே. (கஉ)

௪0 ஆய்ந்ததசப் பிரா துற்ப வம்பத் தான
　　வரிபிறப்பா சிரியவிருத் தத்தால் வாழ்த்தில்
ஏய்ந்திடுநா ழிகைவெண்பா மன்னர்க் கீசர்க்
　　கெய்தியநா ழிகைவெண்பா நாலெட் டாய்ச்சொல்
வாய்ந்தசெருக் களவஞ்சி களத்தைக் கூறல்
　　வாலாற்று வஞ்சிபல வாலா றோதல்
பாய்ந்திடுமும் மதத்தானைத் தொழினேர் கொல்லும்
　　படைக்களிற்றைக் கண்டாசன் பற்றிச் சேர்தல். (கங)

௪க படைபுக்கா யிரம்வேழ மெதிரார் போரிற்
　　படப்போர்செய் தானுக்குக் கடவுள் வாழ்த்துக்
கடைதிறப்புப் பாலைநிலங் காளி கோட்டங்
　　கழுது நிலை காளிக்குப் பேய்ச்சொல் பேய்க்குத்
தொடர்காளி சொலலதனுற் றலைவன் கீர்த்தி
　　சொல்லலவண் சேறல்புறப் பொருடோன் றப்போ
ரடுதல்களம் விரும்பலிவை நாற்சீ ராதி
　　யடியிரண்டி லேறுமற் பரணி பாடே. (கச)

௪உ பாடுநெறி வணக்கம்வாழ்த் தொன்று நாலாய்ப்
　　பகர்பொருண்முன் வரவிறைவன் வெற்பு வேலை
நாடுநகர் பொருள்பருவ மிருசுடர்பெண் வேட்டல்
　　நண்ணன்முடி பொழில்புனலா டல்கள் ளுண்டல்

கூடுமெகிழ் வூட றுனி புதல்வர்ப் பேறு
கூறிடுமந் திரந்தூது செலல்போர் வென்றி
நீடுசந்தித் தொடர்ச்சிசுவை பாவந் தோன்ற
நிகழ்த்தியம்பன் மூதற்பெருங்காப் பியத்துக் கம்மா. (கரு)

சந அறையுமிதிற் சிலகுறைபா டெனினுங் குன்றா
தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
பெறுவதுகாப் பியமாகும் புராண மாகும்
பேசின்முத னூல்பொருளோ டளவு தன்மை
செறிமிகுதி செய்வித்தோன் கருத்த னுனுந்
திகழுமிடு குறியானு நூற்குப் போரா
முறுகலிவஞ் சிப்பாக்கை யறத்துக் காகா
வுரைப்பதினி வாழ்த்தினுக்கெப் பாவுமாமே. (கசு)

சச பாடுமுறை தொடர்செய்யு டெரிக்க வல்ல
பாவலனற் குணங்குலஞ்சீ ரொழுக்க மேன்மை
நீடழகு சமயநூல் பிறநூல் மற்று
நிகழ்த்து நூ லிலக்கணநாற் கவியுள் ளானாய்
நாடுறுப்பிற் குறைவிலனாய் நோயி லானாய்
நாற்பொருளு மூணர்ந்துகலை தெளிந்து முப்பான்
கூடும்வய திகந்தெழுபான் வயதி லேறாக்
குறியுடைய னுகிலவன் கவிதை கொள்ளே. (கஎ)

சடு கொள்ளுமிடம் விதானித்துத் தொடைய னூற்றிக்
கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பந்
துள்ளுபொரி விளக்கொளிர முரசி யம்பத்
தோகையர்பல் லாண்டிசைப்ப மறையோர் வாழ்த்த
வெள்ளைமலர்த் துகில்புனைந்து தவிசின் மேவி
வேறுமொரு தவிசிருத்திச் செய்யுள் கேட்டே
யுள்ளமகிழ் பொன்புவிபூ ணாடை மற்று
முதவியே முடிபுலவ னுடன்போய் மீளே. (கஅ)

சசு உடம்படச்செய் யான்செய்யுட் பிறர்பாற் கூறி
ஹற்றதிரு வவனிடைப்போ யொதுங்கு மன்றித்
திடம்பெறச்செய் யுள்வரைந்து செம்பூச் சூட்டித்
தெருவுமயா னம்புற்றுக் காளி கோட்டத்
திடந்தனிலங் கவன்றன்னை நினைந்து சுட்டா
லீராறு திங்கடனி லிறுதி யாவன்
தொடர்ந்துசெயா துளநொந்தாற் சுற்றத் தோடுந்
தொலைவனிஃ துண்மையகத் தியன்றன் சொல்லே. (கசு)

சஎ அகத்தியன்சொல் லெழுத்துமுதற் குற்றஞ் செய்யுட்
கடையாமற் றுடைகொண்டா லடையுஞ் செல்வ
மகத்துயர்நோ யகலுமக லாது சுற்றம்
வாணுளு மதிகம்வழி மரபு நீடுந்
தொகைக்குற்றம் பாட்டுறிற்செல் வம்போம் நோயாஞ்
சுற்றமறு மாணமுறுஞ் சோருங் காலுஞ்
சகத்தவர்க்கீ தன்றியே தேவர்க் காகிற்
றப்பாதிப் பலன்கவிதை சாற்றி னூர்க்கே. (உ0)

மரபியல் முற்றும்.

ஆகக்கவி—சஎ,

சிதம்பரப்பாட்டியல் முற்றும்.

உ

# சிதம்பரப்பாட்டியற் செய்யுண்முதற்குறிப்பகராதி.

எண்கள் பக்கங்களைக் குறிப்பன.


| | | | |
|---|---|---|---|
| அகத்தியன்சொல் | ௭௦ | தோடையெழுவா | ௧௩ |
| அகவல்விருத்தம் | ௬௮ | நீகழிருசீர் | ௯ |
| அறையுமிதிற் | ௭௦ | நிரவியற்சீர் | ௬ |
| அன்புறுதேவர்க்கு | ௬௬ | பகர்செய்யுண் | ௬௩ |
| ஆசிவிசை | ௨௯ | படைபுக்காயிரம் | ௬௯ |
| ஆந்தலைசீர் | ௪௨ | பத்தியல்வெண்பா | ௬௭ |
| ஆய்ந்ததசப் | ௬௯ | பரவகவலகவலிசை | ௨௫ |
| ஆர்வெண்பா | ௧௭ | பலவடியா | ௨௨ |
| ஆவதுமங்கலத் | ௬௫ | பாடுநெறி | ௬௯ |
| ஆனவெழுத் | ௬௩ | பாடுமுறை | ௭௦ |
| இறுகுறளின் | ௫௪ | பூமேவு | ௨ |
| உடம்படச்செய்யான் | ௭௦ | பெறுதரவு | ௩௩ |
| ஓதும்வெள்ளை | ௬௭ | பேர்நாளுற்பவநா | ௬௪ |
| கருதுமுயிரடைவே | ௬௪ | மகிழ்நிரைகொள்வது | ௬௯ |
| குழமகனை | ௬௮ | மயங்குமடி | ௪௭ |
| கோண்டபுயங் | ௬௬ | மருவுகுறி | ௬௩ |
| கொள்ளுமிடம் | ௭௦ | மருவுவிள | ௮ |
| சதிதிகழ்தநவ்வினி | ௬௪ | மன்னிருபான் | ௬௬ |
| சாற்றெல்லையில்லை | ௫௩ | மாசில்குல | ௯௮ |
| சோற்கவித்தாழிசை | ௬௭ | மாமணிதேர் | ௯௩ |
| சொன்னமாதரைக் | ௬௮ | யாப்புவிதி | ௨ |
| தீதிலுயி | ௬௪ | வருதனிச்சொற் | ௫௮ |
| துறக்கமதி | ௬௫ | வானிலகு | ௯௫ |
| துறுகொலைநீக்கி | ௬௬ | | |

உ

# இலக்கண மேற்கோண் முதற்குறிப்பு.

## எண்கள் பக்கங்களைக் குறிப்பன.


| | | |
|---|---|---|
| அ இ உ எ ஒக் | (நன்) | ௪ |
| அஃகேனமாய்தம் | | ௪ |
| அகரமுதல | | ௪ |
| அதுவே, வஞ்சி | (அவிநயம்) | ௫௮ |
| அருணேக்குநீரா | | ௬௧ |
| ஆ ஈ ஊ ஏ | (நன்) | ௪ |
| ஆசிரியநடைத்தே | (தொல்) | ௫௪ |
| ஆற்றெழுக் | (நன்) | ௫௫ |
| இசைகெடின் | (நன்) | ௪ |
| இயற்சீராசிரியச்சீ | | ௬ |
| இருவகையுகர | (தொல்) | ௪௩ |
| ஈறொற்றுயினு | | ௪௩ |
| உயிரீராறே | | ௪ |
| உயிர்வரினுக்குறண் | (நன்) | ௪௩ |
| உன்னல்காலே | | ௫ |
| எழுதப்படுதலி | | ௩ |
| எழுவகையிடத்தும் | | ௪ |
| ஏவல்குறிப்பே | | ௪௬ |
| ஐ ஔவென்னு | (தொல்) | ௪ |
| ஒற்றெழுத்தியற்றே | (தொல்) | ௪௩ |
| ககரமுதல | | ௪ |
| கட்டளைக்கலித்துறை | (அவிநயம்) | ௫௫ |
| கண்ணிமை கைந்நொடி | | ௫ |
| குற்றிகரங் குற்றுகர | | ௪௪ |
| குற்றியலுகரமு | (தொல்.) | ௪௩ |
| குறளடிசிந்தடி | (யாப். வி.) | ௫௬ |
| குறியதன்முன்ன | (நன்) | ௪ |
| ஙஞணநமன | (நன்) | ௫ |
| சில்வகையெழுத்திற் | (நன்) | ௫௫ |
| செய்யுட்க | (மாபுரா.) | ௪௨, ௪௫ |
| தற்சுட்டளபொழி | (நன்) | ௪ |
| தொடைபல | (யாப். வி) | ௫௪ |
| நூற்பாவகவல் | | ௫௫ |
| நூற்பாவகவனுணங்க | | ௫௫ |
| நெடிலேகுறிலிணை | | ௪ |
| நேர்பதினறே | | ௫௬ |
| நேரசையெனவு | (அவிநயம்) | ௫௫ |
| பந்தந்தலையின் | | ௪ |
| பழையனகழிதலும் | (நன்) | ௫௮ |
| பாவிரிமருங்கினைப் | (தொல்) | ௫௪ |
| மாத்திரை வகையாற் | | ௫ |
| மாவாழ்புலிவாழ் | (காரிகையுரைச்) | ௪௪ |
| மூவைந்தெழுத்தே | (தொல்) | ௫௬ |
| மூன்றுயிரளபிரண்டா | (நன்) | ௫ |
| மெய்யுடம்புறுப் | | ௪ |
| யகரம்வரக் | (நன்) | ௪ |
| யரலழவென்னு | | ௪௮ |
| யாப்பும்பாட்டுந் | | ௩ |
| வஞ்சிப்பாக்களுக் | (அவிநயம்) | ௫௮ |
| வணக்கமதிகார | | ௨ |
| வல்லெழுத்தாறே | | ௪ |
| வலித்தன்மெலித்தல் | (நன்) | ௬௧ |
| விதப்புக்கிளவி | | ௪௩ |
| வெண்பாமுதல | | ௪௩ |
| வெள்ளையுட்பிறதளை | (யாப். வி.) | ௬௧ |

உ

# உதாரண முதற்குறிப்பு.

எண்கள் பக்கங்களைக் குறிப்பன.


அ அவனும் ௪௬
அங்கண்மதிய ௪௮
அங்கண்வானத் ௭, ௯
அடிதாங்குமளவன்றி ௧௮
அடிவரையின்றி ௫௬
அணிமலரசோகின் ௧௫, ௨௫
அந்தமில்பாத ௫௬
அம்ம்பவள்ள் ௪௫
அம்பொரைந்துடைய்ய ௪௬
அரிதாயவறனெய்தி ௧௮
அரியவரைகீண்டு ௧௯, ௨௰
அருளல்ல ௬௪
அவரே, கேடில் ௫௯
அறம்பொருளின்பம் ௫௬
அறிந்தானையேத்தி ௨௩
அன்பீனுமார்வ ௫௰
அன்னையையா ௪௫
ஆ அவளிய ௧௫
ஆய்திணைகாத்து ௬௰
ஆர்கலியுலகத்து ௨௪, ௫௰
ஆர்த்தவறிவின ௬௧
ஆவாவென்றே ௨௫, ௫௰
ஆவேறுருவின ௫௧
இடங்கைவெஞ்சிலை ௧௧, ௨௯
இடைநுடங்க ௪௫
இரங்குகுயின்முழவா ௨௮
இருங்கடலுடுத்த ௪௮
இருதுவேற்றுமை ௧௰, ௪௨
இரும்பிடியை ௪௧
இருள்பரந்தன்ன ௧௪
இரைக்குமஞ்சிறைப் ௧௰, ௨௮
இன்றுகொலன்றுகொ ௨௧
இன்னகைத்தவர்வாய்க் ௧௪, ௧௮
இன்னுமைவேண்டி ௨௧
உண்ணுஞெளிநிருண் ௪௬
உதிக்காண், சுரந்தானு ௫௯
உரிமையின்க ௮
உருவுகண்டெள்ளாமை ௧௯, ௨௰, ௬௩
உலகினுள், பெருந்தகையார் ௫௯
உலகுடன்விளக்கு ௧௨
உலகே, மூற்கொடுத்தார் ௫௯
உரூஅஅர்க்குறுநோ ௪௫
எஃஃகிலங்கிய ௪௫
எல்லாவிளக்கும் ௫௰
ஏஎர்சிதைய ௬௫
ஏர்மலர்நறுங்கோதை ௩௩
ஒக்குமேயொக்குமே ௧௨
கடியார்பூங்கோதை ௬௧
கண்ண்கருவிளை ௬௫
கணிகொண்டலர்ந்த ௧௰, ௨௮
கயலேருண்கண் ௫௰
கயன்மலைந்தன்ன ௫௨
கருமமுமுள்படாப் ௨௰
கரைபொருகான்யாற்றங் ௨௮
கன்றுகுணிலாக் ௨௭
காமர்கடும்புனல் ௩௮, ௬௰
காய்மாண்ட ௫௧
காவியங்கருங்கட் ௫௩
கூடநிலைத்தண்புறவிற் ௩௪, ௪௬
குருகுவேண்டாளி ௪௯
குலாவணங்கு ௬௬
குழலிசைய ௨௪
குறுத்தாட்பூதஞ் ௬௧
குன்றக்குறவன் ௭
கூடலருமாமுனிவர் ௩௰
கோங்குதங்கு ௧௧, ௨௯
கொடிவாலன ௬௧
கொண்டன்மூழங்கின ௨௫
கொய்திணைகாத்துங் ௬௰
கொல்லையஞ்சாரற் ௨௭
கொன்றூர்ந்தமைந்த ௨௮
கொன்றுகோடுநீடு ௬௬
கொன்றைவேந்தன் ௨௪
சாரலோங்கிய ௫௨
சில்வகையெழுத்திற் ௫௬
சிறியகட்பெறினே ௨௯
சிறுநன்றி ௬௪
சீறடிப்பேரக ௧௯

சுடர்த்தொடீஇ உஉ
சுரையாழ உச
சுறமறிவன எ, க, கக
சூரல்பம்பிய உஎ
செங்கண்மேதி கஉ
செல்வப்போர்க் ரு, க, கஉ, நச
சேற்றுக்கானீலஞ் உக
சோலையார்ந்த சஉ
தக்கார்தகவில சக
தடமண்டு உ0, சச
தண்டையினினக்கிளி கூக
தண்மதியோர் நசு
தாஅட்டாஅமரை கசு
திருநுதல்வேரரும்புந் ருஅ
திருமழைதலைஇய கூ
திரைத்தசாவிகை க0, சஉ
துவைக்குந்துளி ருஉ
துளியொடுமயங்கிய ருஉ
தூங்கேந்தடுக்கல் சுஉ
தென்றலிடைபோழ்ந்த ருசு
தேம்பழுத்தினியநீர் க0, கச, சக
தொன்னலத்தின் கக, சக, சஎ
தோடாரெல்வளை ருக
நண்ணுவார்வினை உச
நண்பிதென்று உச
நற்கொற்றவாயி உங
நறுநீலநெய்தலுங் உங
நன்றறிவாரிற் அ
நீடிணர்க்கொம்பர்க் ரு0
நீரின்றண்மையுந் உசு
நீலமாகடல் உச
நெடுவரைச்சாரற் சசு
நேரிழைமகளி (பட்டின. அடி-22) சக
பகலே, பல்பூங்கானற் ரு0
பருஉத்தடக்கை நரு
பல்யானைமன்னர் ருஎ
பல்லுக்குத்தோற்ற சரு
பலமுறையு ருஎ
பன்மாடக்கூடல் உக, சுஉ
பாம்புசயிருக் உஎ
பாலொடுதேன் அ, கஉ, கக, உ0
பிறிந்தவிருந்த சரு
பீலிமஞ்ஞை சசு
பூண்டபறை ச0
பூத்தவேங்கை கங
பூத்தாட்புறவிற் சுஉ
பூந்தாமரைப் சக
பேடையையிரும்போத்து சக
பொய்மையும் ருஉ
பொன்னுமார்பிற் எ, க, கஅ, உ0
பொன்னினன்ன கசு
போதுவிரிகுறிஞ்சி ருங
மட்டுத்தான் சச
மடங்கலந்த ங
மடப்பிடியை சக
மணிகிளர்நெடுமுடி நசு
மண்டிணிந்த சஎ
மலர்மிசையேகினன் சுக
மாக்கொடியானையு ருக
மாவும்புள்ளும் கச
மீன்றேர்ந்துவருந்திய ருஉ
முதக்குறைந்தனளே கஉ
முல்லைமுறுவலித்துக் உசு
முழங்குதிரைக் ருரு
மூவடிவினவிரண்டு கக
மூன்றடியானு ருசு
மென்றினைகாத்து. ச0
மைசிறந்தன சஉ
மொய்த்துடன் கரு
யானுந்தோழியு ச0
வஞ்சியேனென்றவன்ற உ0
வடிவுடைநெடுமுடி நச
வண்டார்பூங் ருரு
வயலாமைப் (பட்டினப் அடி-64) சக
வாரெணடுங்கண் உக
வாய்ந்தவுயிர்ப்பின் சச
வாள்வரிவேங்கை ச0
வாளார்ந்த நங
வானுறநிமிர்ந்தனை உஎ
விளங்குமணிப் நக
வெட்சிநிரைகவர்தல் உங
வெண்மணலெக்கர் சுஉ
வென்றான்வினையின் க0, ச0
வேய்தலைநீடிய ச0
வேல்வேலி உசு
வைகலும்வைகல் உ0
வையகமெல்லாம் உக

ஸ்ரீ:

# பிழையுந் திருத்தமும்.

———:(o):———

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| அ | 29 | வெண்சீர்வேண் | வெண்சீர்வெண் |
| கo | 7 | றுாக் கத்திஞே | றுறக் கத்திஞே |
| கச | 22 | நிலவுகுவித் தன்ன | நிலவுக்குவித் தன்ன |
| கரு | 4 | னறுதால் | னறுநுதால் |
| உங | 19 | பேரர்க்களத்து | போர்க்களத்து |
| உகூ | 34 | தாறுங் | நாறுங் |
| ஙo | 20 | திரண்டோட் | திரடிண்டோட் |
| ஙக | 8 | நிழறிகழும் | நிழறிகழைம் |
| ஙஉ | 7 | வரிவன | விரிவன |
| ,, | 34 | எதிலர்ச் | ஏதிலர்ச் |
| ஙச | 23 | றகையுறாஉ | றகையேறு |
| ,, | 27 | புல்விய | புல்விப் |
| ஙகூ | 25 | மணிகிர் | மணிகிளர் |
| ஙஅ | 6 | நனிநா ணுற்றுளங் | நனிநா ணிற்றுளங் |
| சஉ | 32 | யணையுமாம்—மைதீரொற், றின்றியுஞ் செய்யுட் கெடி ஞெற்றை யுண்டாக்கு, குன்றுமே லொற்றளபுங் கொள்'' என | யணையுமாம்'' என |
| சங | 1 | | |
| சச | 19 | குருதிமாறவுஞ் | குருதிபாயவுஞ் |
| ,, | 25 | அவணே | வண்டுண் |
| சஅ | 1 | யுரப்பி, | யுயிர்ப்பி, |
| ,, | 3 | இடையிட்டெதுகை | இடையீட்டெதுகை |
| ,, | 22 | வெள்ளடியானவாறும்:— | வெள்ளடியானவாறு காண்க. |
| ருக | 20 | தொழியென் | தோழியென் |
| கூo | 20 | கடடளைக் | கட்டளைக் |

உ

கடவுள் துணை.

# பொருட்டொகைநிகண்டு

இது,

புதுக்கோட்டைச்சமஸ்தானத்தைச்சார்ந்த
குடுமிமாமலை வைத்தீசுரதீக்ஷிதரவர்கள் குமாரர்

**சுப்பிரமணியபாரதியவர்கள்**

இயற்றியது.

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

**சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்**

திருத்தியும், விளக்கியுங், கூட்டியுஞ் செய்யப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம்-41.

மதுரைத்
தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்பதிப்பு.

இதன் விலை அணா 6.

உ

கணபதிதுணை.

# முகவுரை.

இப்பொருட்டொகை நிகண்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்தைத்தாபித்துப் பெரும்புகழ்பெற்ற புலவர் பெருமானாகிய பாண்டித்துரைத்தேவரவர்கள் காலத்தில் அவர்களபிப்பிராயப்படி சீர்செய்து, அச்சிட்டு வெளியிடும்படியாகத் தமிழபிமானிகள் கொடுத்த பலவிதமான சுவடிகளிலொன்று.

இந்நூல் செய்தவர் காலமிந்நூலிலெழுதப்படவில்லை.

இந்நூல் பழங்கடிதத்தில். அாஎஅ. சூத்திரமாக எழுதப்பட்டிருந்தது.

இதிற்கண்ட பொருட்டொகைகளெல்லாம் பெரும்பாலும் பேரகராதியென்று முன்பதிப்பித்திருக்கிற பிரதியிலுள்ளனவாக விருந்தன. சில பொருட்டொகைகள் வழுவாயுஞ், சில பொருட்டொகைகள் விளங்காதனவாயுஞ், சில பொருட்டொகைகள் சேர்க்கவேண்டுவனவாயுந் தோற்றியபடியால், அவற்றைத் திருத்தியும், விளக்கியுங் கூட்டியுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. சேர்க்கவேண்டுவனவாகிய பொருட்டொகைகளின்னும் பலவுளவாயினும் அவகாசமின்மையாற் றெரிந்தெடுத்த பொருட்டொகைகள் சிலவற்றை 122 சூத்திரமாகச்செய்து சேர்த்து, ஆயிரஞ்சூத்திரமாக இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றன. தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிற பொருட்டொகைகள் சிலவற்றை பின்னநூலிலுள்ளவென்று கூறப்பட்டிருக்கின்றன. பிங்கல நிகண்டிலுஞ், சூடாமணி நிகண்டிலுமில்லாத பொருட்டொகைகள் இந்நூலிலேயமைக்கப்பட்டிருக்கிறபடியால் இந்நூல் கற்போர்க்குப் பேருபகாரமாயிருக்கின்றது.

இங்ஙனம்,

ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

சிவமயம்

கணபதிதுணை.

# பொருட்டொகைநிகண்டு.

இஃது

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச்சார்ந்த குடுமிமாமலை

வைத்தீசுரதீக்ஷிதரவர்கள் குமாரர்

## சுப்பிரமணியபாரதியவர்கள் இயற்றியது.

### விநாயகர்துதி.

அருட்கடல் விநாயக னடியிணை யிறைஞ்சிப்
பொருட்டொகை நிகண்டினைப் புகலுது மியாமே.

### ஒருபொருள்.

ஒருமை யாவது முத்திப் பேறு
மஃதிறை யுணர்ந்துற லாமென மொழிப. (1)

### இருபொருள்.

அச்சுவினி தேவ ரவரிரு வோர்தமைத்
தேவ மருத்துவ ரென்னச் செப்புவர். (2)

அயன மிரண்டுத் தாந்தக் கிணமே. (3)

உத்தரா யணந்தை யாதியா றேதுப. (4)

தக்கண யனமெனச் சாற்றுவர் மற்றவை. (5)

அறமிரண் டவையில் லறந்துற வறமே. (6)

இல்லற மில்லத் திருந்தில் லாளொடு
வேதா கமநூல் விதிப்படி யொழுகலே. (7)

*

இல்லற வுறுப்புக ளிருபஃ தாமவை
யில்வாழ்க்கை வாழ்க்கைத் துணைநலம் புதல்வரைப்
பெறுதலன் புடைமை விருந்தோம்ப லினியவை
கூறல் செய்ந்நன்றி யறித னடுவு
நிலைமை யடக்க முடைமை யொழுக்க
முடைமை பிறனில் விழையா மைபொறை
யுடைமை யழுக்கா றுமைவெஃ காமை
புறங்கூ றாமை பயனில சொலாமை
தீவினை யச்ச மொப்புர வறித
லீகை புகழென வியம்பப் படுமே. (8)

துறவற மாவது பற்றைத் துறத்தலே. (9)

துறவற வுறுப்பிரண் டாமவை விரத
ஞான மென்ன நவிலப் படுமே. (10)

விரத வுறுப்பு விளம்பிலொன் பானவை
யருளுடை மைபுலான் மறுத்த றவமொடு
கூடா வொழுக்கங் கள்ளாமை வாய்மை
வெகுளாமை யின்னா செயாமை கொலாமையே. (11)

ஞான வுறுப்பு நான்கவை நிலையாமை
துறவுமெய் யுணர்த லவாவ றுத்தலே. (12)

ஆயுத வகையிரண் டத்திரஞ் சத்திரம். (13)

அத்திரங் கைவிடு மாயுத மென்ப. (14)

சத்திரங் கைவிடா வாயுத மெனத்தகும். (15)

ஆன்மா விரண்டா மவைசீ வான்மாப்
பரமான் மாவெனப் பகரப் படுமே. (16)

சாற்றுசீ வான்மாச் சரீரந் தோறும்
வேறாய் வியாபக மாகி நித்தமா
யிருப்பன வென்ன வியம்புவர் புலவர். (17)

பரமான் மாவீ சுரன்முற் றறிவ
னொருவனே யென்ன வோதுவர் கற்றோர். (18)

இதிகா சங்க ளிரண்டவை பாரதஞ்
சிவரக சியம்பின் செப்பிது நீக்கி
யிராமா யணமென வியம்பப் படுமே. (19)

பாரதம் வியாச முனிவன் பகர்ந்த
சந்திர குலமனர் சரித மென்ப. (20)

இராமா யணம்வான் மீகி யியம்பிய
சூரிய குலமனர் தங்களில் சரிதமே. (21)

இருமை யாவன விம்மை மறுமையே. (22)

இம்மை யாவ திப்பிறப் பென்ப. (23)

மறுமை யாவது வருபிறப் பென்ப. (24)

எச்சமி ரண்டுபெய ரெச்சம்வினை யெச்சம். (25)

கந்தமி ரண்டுநற் கந்தந்துர்க் கந்தம். (26)

நற்கந்த மோப்பத் தகுமென நவிலுப. (27)

துர்க்கந்த மோப்பத் தகாதெனச் சொல்லுப. (28)

சூத்திரண் டுவகை தேசிக மார்க்கமே. (29)

சாந்திவி னோதமுஞ் சாற்றுவர் புலவர். (30)

சுடரிரண் டாமவை சூரியன் றிங்கள். (31)

சூரிய னிகழ்ச்சி துலங்கு பகலென்ப. (32)

திங்களி னிகழ்ச்சி திகழிர வென்ப. (33)

இருபோ தென்பது பகலிர வாமே. (34)

திணையிரண் டவையுயர் திணையஃ றிணையே. (35)

உயர்திணை மக்களென் றோதப் படுமே. (36)

அஃறிணை மிருகம் புண்மர மாதிய
வுயிருள் ளனவுமண் ணுதகந் தீக்க
லாதி யுயிரில் லனவுமா மென்ப. (37)

தோற்ற மிரண்டா மவைசர மசரமே. (38)

சரநிலை பெயர்வன வென்னச் சாற்றுப. (39)

அசர நிலைபெய ராதன வாமே. (40)

பக்க மிரண்டவை சுக்கிலங் கிருட்டின
மிவையே பூருவ மபரமா மென்ப. (41)

சுக்கில பக்கம் வளர்பிறைப் பிரதமை
யாதி பூரணை யதுவரை யென்ப. (42)

கிருட்டின பக்கந் தேய்பிறைப் பிரதமை
யாதி யமாவா சைவரை யென்ப. (43)

பொருளிரண் டுவகை கல்வி செல்வம். (44)

கல்வி யாவது கலைஞான மென்ப. (45)

செல்வம் பொருளெனச் செப்புவர் புலவர். (46)

மரபிரண் டாமவை தந்தைதாய் வழியே. (47)

தந்தை வழியது தாயத் தவர்வழி. (48)

தாயின் வழியது சம்பந்த வழியே. (49)

வினையிரண் டவைநல் வினைதீ வினையே. (50)

நல்வினை யுலக நயக்குஞ் செய்கையே. (51)

தீவினை யுலகஞ் சினக்குஞ் செய்கையே. (52)

வைணவ வாகமம் வகையிரண் டென்ப. (53)

பாஞ்ச ராத்திரம் பகர்வை காநசம். (54)

பாஞ்ச ராத்திரம் பகர்தாந் திரிகம். (55)

வைகா நசமது வைதிக மென்ப. (56)

முப்பொருள்,

அயனரி யரன்மும் மூர்த்தி யாமே. (57)

சூரிய னக்கினி சந்திரன் வழியின்
வருமன் னவர்குலம் வழங்குமுக் குலமே. (58)

பதிபசு பாசமாப் பகர்வர்முப் பொருளே. (59)

அவனவ ளதுவெனு மவைமுப் பாலே. (60)

கன்னமுங் கையுங் கோசமு மென்னு
மின்னமுத் தானத் திழிவன மும்மதம். (61)

அரசர் மூவர் சேரன் சோழன்
பாண்டிய னென்னப் பகருவர் புலவர். (62)

சேர னானவன் றிகழ்சீர் வஞ்சியுங்
குடக நாடுங் கொல்லி மலையும்
பொருநை யாறும் புகழ்பனை மாலையும்
பாடல மென்னப் பகருங் குதிரையும்
விற்கொடி யுமுள னென்ன விளம்புப. (63)

சோழ னானவன் றொல்லுறை யூருந்
தண்புன னாடுந் தனிநேரி மலையுங்
காவிரி யாறுங் கவினார் மாலையுங்
கோர மென்னுங் குதிரையும் வரிப்புலிக்
கொடியு முடையவ னென்னக் கூறுப. (64)

பாண்டிய னானவன் பகர்சீர்ப் பொருநையுஞ்
செந்தமிழ் நாடுந் திகழ்பொதி யமலையும்
வையை யாறும் மலிவேம் பாரமுங்
கனவட்ட மாகக் கழறுங் கற்கியு
மீனக் கொடியு முளனென விளம்புப. (65)

அரசனீ தியைமுன் னாக்கி யரசிய
லங்க வியலொழி பியலென வறைவர். (66)

அரசிய லுறுப்பிரு பத்தைந் தாமவை
யிறைமாட்சி கல்வி கல்லாமை கேள்வி
யறிவுடைமை குற்றங் கடிதல் பெரியாரைத்
துணைக்கோ டல்சிற் றினஞ்சே ராமை
தெரிந்து செயல்வகை வலியறிதல் கால
மறித லிடனறித றெரிந்து தெளிதல்
தெரிந்து வினையாடல் சுற்றந் தழாஅல்
பொச்சா வாமை செங்கோன் மைகொடுங்
கோன்மை வெருவந்த செயாமைகண் ணோட்ட
மொற்றாட லூக்க முடைமை மடியின்மை
யாள்வினை யுடைமை யிடுக்கணழி யாமையே. (67)

அரசங்க வியன்மூப் பத்திரண் டாமவை
யமைச்சு சொல்வன் மைவினைத் தூய்மை
வினைத்திட் பம்வினை செயல்வகை தூது
மன்னரைச் சேர்ந்தொழு கல்குறிப் பறித
லவையறி தல்லவை யஞ்சாமை நாடெ
னரண்பொருள் செயல்வகை படைமாட் சிபடை
செருக்கு நட்பு நட்பா ராய்தல்
பழமைதீ நட்புக் கூடா நட்பு
பேதைமை புல்லறி வாண்மை யிகல்பகை
மாட்சி பகைத்திறந் தெரித லுட்பகை
பெரியாரைப் பிழையாமை பெண்வழிச் சேறல்
வரைவின் மகளிர் கள்ளுண் ணாமை
சூது மருந்தெனச் சொல்லப் படுமே. (68)

அரச னொழிபியல் பதின்மூன் றாமவை
குடிமை மானம் பெருமைசான் றாண்மை
பண்புடைமை நன்றியில் செல்வநா ணுடைமை
குடிசெயல் வகையுட னுழவுநல் குரவோ
டிரவி ரவச்சங் கயமை யென்பரே. (69)

இசைமூன் று மந்தர மத்திமந் தாரமே (70)

மந்தர மாவது மந்தவோ சைத்தே. (71)

மத்திம நடுத்தா வோசைத் தாமே. (72)

தார மாவ துச்சவோ சைத்தே. (73)

இடமூன்று தன்மை முன்னிலை படர்க்கையே. (74)

தன்மை யிடமது தனைக்காட் டுவதே. (75)

முன்னிலை யிடமெதிர் முகமாக் கேட்பதே. (76)

படர்க்கை யிடமது பேசப் படுவதே. (77)

ஈசுரன் பிரபுத் துவசா மர்த்திய
குணமூன் று கர்த்தத் துவமகர்த் தத்துவ
மந்நிய தாகர்த் தத்துவ மென்ப. (78)

கர்த்தத் துவமது செய்யுந் தன்மையே. (79)

அகர்த்தத் துவமது செய்யாத் தன்மையே. (80)

அங்கிய தாகர்த் தத்துவ மாவது
வேறுசெய் தன்மை யென்ன விளம்புப. (81)

உலக மூன்றவை பூலோ கம்பர
லோகம் பாதாள லோகமா மென்ப. (82)

பூலோக மாவது நல்வினை தீவினை
புரியு மிடமெனப் புகலப் படுமே. (83)

பரலோக மாவது நல்வினைப் பயனைத்
திளைக்கு மிடமெனச் செப்புவர் புலவர். (84)

பாதாள மாவது தீவினைப் பயனை
நுகரு மிடமென நுவலுவ ரான்றோர். (85)

பூமி யந்தர சுவர்க்கமும் புகல்வர். (86)

கடுக மூன்றவை சுக்குத் திப்பிலி
மிளகா மிவைதிரி கடுக மென்ப. (87)

சுக்கு வாதப் பிணியைத் தொலைப்பதே. (88)

திப்பிலி பித்தத் தைச்சிதைப் பதுவே. (89)

மிளகு சிலேட்டுமம் விலக்குவ தாமே. (90)

கால மூன்றவை யிறந்த கால
நிகழ்கா லம்மெதிர் கால மென்ப. (91)

இறந்த காலமுன் னடந்த தென்ப. (92)

நிகழ்காலமது நடக்கின்ற தாமே. (93)

எதிர்கா லம்பினி நடப்ப தாமே. (94)

குணமூன் றவைசாத் துவிக மிராசதந்
தாமத மென்னச் சாற்றுவர் புலவர். (95)

சாத்து விககுணத் தன்மையெட் டாமவை
ஞான மருடவம் பொறைறவாய்மை மோன
மேன்மை யைம்பொறி யடக்க லாமே. (96)

இராசத குணவிய லெட்டா மவைமன
வூக்க ஞானம் வீரந் தருமந்
தானங் கல்வி கேள்வி தவமே. (97)

தாமத குணவியல் பன்னொன் றாமவை
பேருண்டி நெடுந்துயில் சோம்பு பொய்கொலை
மறதிநீ திவழு வொழுக்க வழுசினங்
காமம் வஞ்ச மென்னக் கழறுப. (98)

குற்ற மூன்றவை காமம் வெகுளி
மயக்க மென்ன வழங்கப் படுமே. (99)

காம மாவது பொருள்விருப் பென்ப. (100)

வெகுளி யாவது பொருள்வெறுப் பென்ப. (101)

மயக்க மாவது விருப்பும் வெறுப்புமே. (102)

சத்தி மூன்றவை யிச்சா சத்தி
ஞான சத்தி கிரியா சத்தியே. (103)

இச்சா சத்தி யுயிர்க்கரு ணேசமே. (104)

ஞான சத்தி கருமமறிந் தூட்டலே. (105)

கிரியா சத்தி யுலகங்க ளாக்கலே. (106)

சாத்திரங் கண்மூன் றவைதான் சாங்கியம்
பதஞ்சலி யம்வே தாந்த மிவையே. (107)

சாங்கிய சாத்திரங் கபிலர்சாற் றியதே. (108)

பதஞ்ச லியம்ப தஞ்சலி பகர்ந்ததே. (109)

வேதாந்த சாத்திரம் வியாதன் மொழிந்ததே. (110)

சீவ தேக மூன்றவை தூல
சூக்குமங் காரண மென்னச் சொல்லுப. (111)

சீவா வத்தை மூன்றவை சாக்கிரஞ்
சொப்பனஞ் சுழுத்தி யென்னச் சொல்லுப. (112)

சுடர்மூன்று சூரியன் றிங்களக் கினியே. (113)

சூரிய னிகழ்ச்சி பகலெனச் சொல்லுப. (114)

சந்திர னிகழ்ச்சி யிரவெனச் சாற்றுப. (115)

அக்கினி நிகழ்ச்சி யல்லும் பகலுமே. (116)

தமிழ்மூன் றியலிசை நாடக மாமே. (117)

இயற்றமி ழாவ தெழுத்துச் சொற்பொருள்
யாப்பணி யிவையென வியம்பு நூலே. (118)

இசைத்தமி ழாவ திலக்கண நெறியே
யியம்புங் கீத நெறியென விசைப்பர். (119)

நாடகத் தமிழிலக் கணநிகழ் பாவ
மிராகந் தாள மியையுநூ லென்ப. (120)

தான மூன்றவை தலைப்படு தான
மிடைப்படு தானங் கடைப்படு தானமே. (121)

தலைப்படு தான மாவ தறத்தா
னீட்டிய பொருளைமுக் குற்ற மற்ற
நற்றவத் தோரைக் கொள்கெனப் பணிந்து
குறையிரந் துளமுவந் தீத லென்ப. (122)

இடைப்படு தான மாதுலர் குருடர்
மாதர் முதற்பிறர் சிறுமையைப் பற்றி
மனம திரங்கியே வழங்க லென்ப. (123)

கடைப்படு தான மதுபுக ழார்வங்
கைம்மா றச்சங் கண்ணோட்டங் காரணங்
கடைப்படு மிவற்றைக் கருதித் தருதலே. (124)

உயிரி னுள்ளதீ மூன்று மென்ப
வுதரத் தீவிந் துத்தீ சினத்தீ. (125)

உதரத் துள்ளதீ யுணவைத் தகிக்குமே. (126)

விந்துத் தீக்கரு வினைவிளைத் திடுமே. (127)

சினத்தெழு தீபுண் ணியமதைத் தேய்க்குமே. (128)

தொழின்மூன் றாக்கல் காத்த லழித்தலே. (129)

ஆக்கற் ஒருழிலோ னயனு மென்ப. (130)

காத்தற் றொழிலோன் கார்வண்ண மாலே. (131)

அழித்தற் றொழிலோ னுருத்திர னாமே. (132)

நான்மூன் றாமவை முதல்வழி சார்பே. (133)

பக்குவர் மூவர் கரும காண்டி
ஞான காண்டி பத்தி காண்டியே. (134)

கரும காண்டி பலவகைப் பட்ட
சாதியாச் சிரமஞ் சமயந் தெய்வ
முளவெனக் கிரியை யுணர்ந்துசெய் பவனே. (135)

ஞான காண்டி சாதி முதலிய
வல்ல லெனக்கிரி யைதுறந் தென்று
மான்ம தெரிசன மனுட்டிப் பவனே. (136)

பத்தி காண்டி சமயமேற் கொண்டு
கடவுள் வழிபாடு காண்பவ னென்ப. (137)

பரிச்சேத மூன்றவை காலபரிச் சேதந்
தேய பரிச்சேதம் வத்துபரிச் சேதமே. (138)

காலபரிச் சேதமொரு காலத் துண்டொரு
காலத் தின்றெனக் கழறுவ தாமே. (139)

தேயபரிச் சேதமோர் தேயத் துண்டொரு
தேயத் தின்றெனச் செப்புவ தாமே. (140)

வத்துபரிச் சேத மொருபொரு ளிதுவா
மொருபொரு ளீதன் றென்ன வுரைத்தலே. (141)

பலைமூன் றுகடுக் காய்நெல் லிக்காய்
தான்றிக் காயிவை தாந்திரி பலையே. (142)

கடுக்காய் வாதப் பிணிகடத் துவதே. (143)

நெல்லிக்காய் பித்த மதைநீக் குவதே. (144)

தான்றிக் காய்கபந் தணிப்ப தாமே. (145)

பாவ புண்ணிய வழக்கமூன் றுமவை
செய்தல் செய்வித்த லுடன்பட லென்ப. (146)

பாவின மூன்றுதாழிசைதுறை விருத்தமே. (147)

பிணிமூன்று வாதம் பித்தங் கபமே. (148)

வாதநோய்த் தன்மை வலித்த விசித்தலே. (149)

பித்தநோய்த் தன்மை பிதற்ற லழற்றலே. (150)

கபநோய்த் தன்மை கனைத்த லிருமலே. (151)

புரமூன் றிரும்பு வெள்ளிபொன் மதிலிவை
முப்புர மென்ன மொழியப் படுமே. (152)

பேத மூன்றவை சுகத பேதஞ்
சுசாதி பேதம் விசாதி பேதமே. (153)

சுகத பேத மரத்தி னுக்கிலை
பூக்காய் முதல போன்மென மொழிப. (154)

சுசாதி பேத மாவதோர் சாதி
மரத்துக் குமறு மரம்போன் மென்ப. (155)

விசாதி பேத மரத்துக் குக்கற்
போலு மென்னப் புகலுவர் புலவர். (156)

பொறிமூன் றுமனம் வாக்குக் காயமே. (157)

மனப்பொறி யொன்லற மனனஞ் செய்யும். (158)

வாக்குமன னத்தை வசனிக் கும்மே. (159)

காயந் தொழிற்கெலாங் காரண மாகுமே. (160)

போதப் பிரகா ரம்மூன் றுமவை
யுத்தேச மிலக்கணம் பரீக்கை யென்ப. (161)

உத்தேச மாவது விவகரிக் கும்பொருட்
பெயரை மாத்திரம் பேசுவ தென்ப. (162)

இலக்கண மாவதப் பொருளின் சிறப்புத்
தன்மை கூற லென்னச் சாற்றுப. (163)

பரீக்கை யப்பொரு ளிலிவ்வி லக்கண
முண்டோ வின்றோ வென்ன வுணர்தலே. (164)

மங்களா சரண மூன்றவை வாழ்த்து
வணக்கஞ் செயப்படு பொருளென வழங்குப. (165)

வாழ்த்து மங்கல வாசக மென்ப. (166)

வணக்கந் தாந்தலை வணங்குதன் முதலவே. (167)

செயப்படு பொருளக் கதையா தியவே. (168)

சூரியன் வீதி சொல்வர் மூன்றவை
மேட மேறு மிதுன மென்ப. (169)

ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்
காந்துவர லெழினியு மெனத்திரை மூன்றே. (170)

மண்டல மூன்றவை யக்கினி யிரவி
சந்திர மண்டல மென்னச் சாற்றுப. (171)

அக்கினி மண்டலங் குதங்குய் யம்மே. (172)

இரவி மண்டலம் நாபி யிதயமே. (173)

சந்திர மண்டல மடிநா நெற்றியே. (174)

மலமூன் றாணவ மாயை கன்மமே. (175)

ஆணவ நானென்ப தென்ன வறைகுவர். (176)

மாயை யுலகிற் குபதான மென்ப. (177)

கன்ம மாவ துயிர்களின் றொழிலே. (178)

முத்தி விக்கின மூன்றறி யாமை
ஐயந் திரிபா மென்ன வறைகுப. (179)

அறியாமை யுண்மைப் பொருளுணா ராமையே. (180)

ஐய மதுவிது வோவென் றெண்ணலே. (181)

திரிபொன்றை வேறென்றுச் சிந்தித்த லென்ப. (182)

மும்மை யாவன வும்மை யிம்மை
மறுமை யென்ன வழங்கப் படுமே. (183)

உம்மை முற்பிறப் பென்ன வோதுப. (184)

இம்மை யிப்பிறப் பென்ன வியம்புப. (185)

மறுமை வருபிறப் பென்ன வழங்குப. (186)

மொழிமூன் றவைமெய் கூறல் புகழ்கூறல்
பழிகூற லென்னப் பகரப் படுமே. (187)

அங்கி மூன்றவை காருக பத்தியந்
தக்கிணாக் கினிய மாகவ னீயமே. (188)

வைசியர் மூவ ரவர்தன வைசியர்
பூவை சியர்கோ வைசிய ரென்ப. (189)

தனவை சியர்பொரு ளீட்டும்வர்த் தகரே. (190)

பூவை சியர்பயிர் புரக்கு முழவரே. (191)

கோவை சியர்பசுக் காக்குங் குணத்தரே. (192)

இவர் வரு ணத்தா லொருவ ராயினுந்
தொழிலான் மூவ ராகுவ ரென்ப. (193)

ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவஞ்
சிவதத் துவமெனத் தத்துவ மூன்றே. (194)

தைவிக மான்மிகம் பௌதிக மென்னத்
துக்கமூ வகையாச் சொற்றன ருணர்ந்தோர். (195)

உயிர்கள் மூவகை யாக வுரைப்பர்
சகலர் பிரளயா கலர்விஞ் ஞான
கலரிவ ரென்னக் காண்ப ருணர்ந்தோர். (196)

கொடைமணம் வீரங் குறித்திசைத் தலினுன்
முரச மூன்றென மொழிகுவ ருணர்ந்தோர். (197)

கொன்றை யங்குழ லாம்ப லங்குழன்
முல்லையங் குழலென வங்கிய மூன்றே. (198)

இடைகலை பிங்கலை சுழுமுனை யெனுமிவை
மூன்றுநா டிகளென மொழிந்தனர் புலவர். (199)

கதலி மாப்பலாக் காணுமுக் கனியே. (200)

வனசரங் கிரிசர நதிசர மென்ன
மூவகை யானையா மொழிகுவர் புலவர். (201)

## நாற்பொருள்.

அங்க நான்குதேர் பரிகரி யாளிவை
சதுரங்க மென்னச் சாற்றவும் படுமே. (202)

அரணுன் குமலை காடு மதில்கடல். (203)

நால்வகை யாந்தே ரதிரத மாரதஞ்
சமாரத மர்த்த ரதமெனச் சாற்றுவர். (204)

அளவு நான்கவை யெண்ண லெடுத்தன்
முகத்த னீட்ட லாமென மொழிப. (205)

எண்ண லளவு பொருளா வியல்வதே. (206)

எடுத்த லளவு தராசா லியல்வதே. (207)

முகத்த லளவு படியான் முகத்தலே. (208)

நீட்ட லளவு கோலா னிகழ்வதே. (209)

அனுபந்த நான்கவை விடயஞ் சம்பந்தம்
பிரயோ சனமதி காரி யென்ப. (210)

ஆச்சிரம நான்கவை பிரம சரிய
மில்வாழ்வு வானப் பிரத்தஞ் சந்நியாசம். (211)

பிரம சரிய மாசிரி யனிடத்
தோதி விரதங் காத்து விவாக
மின்றி யிருப்ப தென்மனார் புலவர். (212)

இல்வாழ் வில்லறம் வழாதில் லாளொடு
கூடி வாழ்த லென்னக் கூறுப. (213)

வானப் பிரத்த மில்ல றந்துறந்
தில்லோ டாயினுந் தனித்தா யினுமே
வனத்தி லிருந்து தவஞ்செய லென்ப. (214)

சந்நி யாச முற்றத் துறத்தலே. (215)

ஆடூஉக் குணநான் காமவை யறிவு
நிறையோர்ப் புக்கடைப் பிடியென நிகழும். (216)

இராகத் தகுதி நான்கிடஞ் செய்யுள்
குணங்கா லம்மிவை பற்றிக் கூறுவர். (217)

இடம்பற் றியவைந் திராகத் துள்ளே
குறிஞ்சி யிடத்தி ராகங் குறிஞ்சியே
பாலை யிடத்தி ராகம் பஞ்சுரம்
வெஞ்சம மென்ன வுளம்புவ ரிசையோர்
முல்லை யிடத்தி ராகஞ் சதாரியே
மருத நிலத்தி ராக மருதமே
நெய்த நிலத்தி ராகஞ் செவ்வழி. (218)

செய்யுள் பற்றிய விராகத துள்ளே
வெண்பா விராகஞ் சங்கரா பரணமே. (219)

அகவ ரூழிசை யிராகந் தோடியே. (220)

கலியி னிராகம் பந்து வராளியே. (221)

கலித்துறை யிராகம் பைரவி யென்ப. (222)

விருத்த விராக மத்திய மாவதி
காம்போ திகலி யாணி பலவுமே. (223)

உலாவி ராகஞ் சௌராட் டிரமே. (224)

தோடைய விராகஞ் சௌராட்டிர நாட்டை. (225)

மங்கள ராக மங்கள கௌசிகம். (226)

பிள்ளைக் கவியிசை கேதார கௌளம். (227)

பரணி யிராகங் கண்டா ரவமே. (228)

குணம்பற் றியவி ராகத் துள்ளே.
இரக்க விராக மாகிரி பியாகடை
நீலாம் புரிபுன் னாகவ ராளி
கண்டா ரவமெனக் கழறப் படுமே. (229)

துக்க விராகஞ் சொல்லிய விரக்க
ராகங்க ளன்றியும் வராளி மேலாமே. (230)

மகிழ்ச்சி யிராகந் தங்கி யாசி
சாவே ரியிரா கங்காம் போதியே. (231)

யுத்த விராக நாட்டையென் றோதுப. (232)

காலம் பற்றிய விராகத் துள்ளே
வசந்த கால விராகங் காம்போதி
யசாவே ரியொடு தங்கியாசி யென்ப. (233)

மாலை யிராகங் கலியாணி காபி
கன்ன டங்காம் போதி யென்ப. (234)

யாம விராக மாகரி யாமே. (235)

விடிய விராகம் பூபாள நாட்டை
யிராம கலிதே சாட்சரி யிந்தோளம். (236)

உச்சி யிராகஞ் சாரங்க மற்றுந்
தேசாட் சரியெனச் செப்புவ ரிசையோர். (237)

எக்கா லத்தினு மியையு மிராக
மாகரி யிந்தோ ளஞ்சா ரங்க
மிராம கலிபூ பாள நீங்கி
நின்ற மற்றவை நிகழு மென்ப. (238)

இழிச்சொன் னான்கா மவைதாங் குறளைபொய்
கடுஞ்சொல் பயனில் சொல்லெனக் கழறுப. (239)

குறளை யாவது கோட்சொல் லென்ப. (240)

பொய்சொலத் தகாமையைப் புகல லென்ப. (241)

கடுஞ்சொ லாவது வெட்டெனக் கழறலே. (242)

பயனில சொல்பொருட் பயவாத பேசலே. (243)

உண்டி நான்கவை யுண்ட றின்ற
னக்கல் பருக லென்ன நவிலுப. (244)

உண்டற் குரியவை சோறு தியவே. (245)

தின்றற் குரியவை கறியா தியவே. (246)

நக்கற் குரியவை தேனு தியவே. (247)

பருகற் குரியவை நீராதி யென்ப. (248)

உபாய நான்கவை சாமந் தானம்
பேதந் தண்ட மென்னப் பேசுப. (249)

சாம வுபாயஞ் சமாதா னம்மே. (250)

தான வுபாயம் பொருளைத் தருதலே. (251)

பேத வுபாயந் துணைவலி பிரித்தலே. (252)

தண்ட வுபாயம் படைகொண்டு தாக்கலே. (253)

உரைநான் காமவை கருத்துரை பதவுரை
பொழிப்புரை யகல வுரையெனப் புகலுப. (254)

கருத்துரை செய்யுட் கருத்தை யுரைத்தலே. (255)

பதவுரை சொற்றொ றும்பய னுரைத்தலே. (256)

பொழிப்புரை பொருளைத் தொகுத்துப் புகலலே. (257)

அகல வுரைய திலக்கண விலக்கிய
மெடுத்துக் காட்டுடன் பொருள்விரித் தியம்பலே. (258)

ஊறு பாடு நான்கவை யெறிதல்
குத்தல் வெட்ட லெய்த லென்ப. (259)

கணக்கு வகைநான் கவைதொகை பிரிவு
பெருக்குக் கழிவெனப் பேசப் படுமே. (260)

தொகைதான் பலவெண்ணை யொன்றாக் கூட்டலே. (261)

பிரிவோ ரெண்பல வெண்ணுப் பிரிதலே. (262)

பெருக்கோ ரெண்மற் றெண்ணாற் பெருக்கலே. (263)

கழிவோ ரெண்ணின்மற் றேரொண் கழிதலே. (264)

கதிநான் காமவை தேவர்கண் மக்கள்
விலங்கு நரக ரென்ன விளம்புப. (265)

காரண நான்கா மவைமனம் புத்தி
யகங்கா ரஞ்சித் தமென வறைகுப. (266)

மனமது பற்றுதன் மருவு மென்ப. (267)

புத்தி விசாரித் தறியு மென்ப. (268)

சித்த மதுசிந் திக்கு மென்ப. (269)

அகங்கா ரங்கொண் டெழுப்பு மென்ப. (270)

கவிக ணால்வகை யாசு மதுரஞ்
சித்திரம் வித்தா ரமெனச் செப்புப. (271)

ஆசு கவிபொரு ளடிபா வணிமுதற்
கொடுத்துமற் றொருவன் பாடுக வென்ற
வுடனே பாடுங் கவியென வுரைப்ப. (272)

மதுர கவிசொற் பொருளாஞ் செல்வந்
தொடைதொடை விகற்ப முதலி யவலங்
காரத் தோடு மின்னோ சைத்தா
யமுதுறப் பாடுங் கவியென வறைகுவர். (273)

சித்திர கவியுயர் மாலை மாற்றுச்
சுழிகுள மேக பாதஞ் சக்கர
மெழுகூற் றிருக்கை காலைத கரப்புக்
காந்துரை கவின்று சங்கொளல் வாவண்

ஞாற்றுப் பாத மயக்குப் பாவின்
புணர்ப்புக் கூட சதுக்கங் கோமூத்திரி
யோரெழுத் தினமொற் றெழுத்துத் தீர்ந்த
வொருபொருட் பாட்டுச் சித்திரப் பாவே
விசித்தி ரப்பா வினவுத் தரமே
சருப்பதோ பத்திர மெழுத்து வருத்தன
மிவைகண் முதலிய மிறைக்கவி யாமே. (274)

வித்தா ரகவி மும்மணிக் கோவை
பன்மணி மாலை மறங்கலி வெண்பா
தசாங்க மடலூர்தல் சாற்று மியலிசை
விரித்துரை கூத்துடன் விளம்பு நூல்களே. (275)

கேள்வி நான்கா மவைவதா மறம்பொரு
ளின்பம் வீடா மென்ன மொழிகுவர். (276)

அறமா வதுபிறி தோருயி ருக்குந்
துன்பஞ் செய்யா தின்பஞ் செய்தலே. (277)

பொருளா குவதற வழியி னீட்டிய
பொன்னிதி முதலிய வென்னப் புகலுப. (278)

இன்ப மாவ தவ்வகைப் பொருளான்
மனையுட னுகர்ந்து மகிழ்த லென்ப. (279)

வீடா குவதம் மூன்றும் விடுத்தலே. (280)

சாந்து வகைநான் காமவை பீதங்
கலவை வட்டிகை புலியெனக் கழறுப. (281)

மார்க்க நான்கவை வகுப்பாஞ் சரியை
கிரியை யோக ஞான மென்ப. (282)

சரியை கோயி லலகிடன் மெழுகல்
மலர்தொடுத் தணித தீப மேற்ற
லடியவர் பணிமுத லாமென மொழிப. (283)

கிரியை யாவது கிளரிறை பூசை
யாதிய செய்தழ லோம்ப லென்ப. (284)

யோக மாவ தட்டாங்க வுறுப்பிசைந்
தாரு தாரப் பொருளறிந் தேகி
மதியமு துண்டு வளர்சோ தியினிற்
புக்கழுந் துவதெனப் புகலுவர் புலவர். (285)

ஞான மாதவம் மூன்று முற்றி
யருளைப் பெற்று வினையொப்பு வாய்ந்த
பருவந் தன்னிற் பரன்குரு வடிவா
வந்துப தேசம் வகுத்திடப் பதியை
யிரண்டறு கலப்பி னெய்தி நிட்டை
புரிந்திருப் பதுவெனப் புகன்றனர் புலவர். (286)

சொல்வகை நான்காம் பெயர்வினை யிடையுரி. (287)

பெயர்ச்சொ லொவ்வொரு பொருளைக் குறித்துத்
தோன்று தொட்டு வழங்குவ தென்ப. (288)

வினைச்சொ லாவது பொருளின் செயலைக்
காட்டி வழங்குவ தென்னக் கழறுப. (289)

இடைச்சொல் லாவது பெயர்வினை யோடு
கலந்து தன்பொருள் காட்டுவ தென்ப. (290)

உரிச்சொல் பொருளி னிறஞ்சுவை முதலிய
குணங்களைக் காட்டுவ தென்னக் கூறுப. (291)

தோற்ற நான்கா மவைவபை முட்டை
நிலம்வியர் வையினி னிகழு மென்ப. (292)

பையின் றோற்ற மனித ரொடுமா
டாடு முதனாற் காலியர மென்ப. (293)

முட்டையின் றோற்றம் பறவை யூர்வன
நீந்து வனவா மென்ன நிகழுமே. (294)

நிலத்தின் றோற்ற மரம்புல் லாதியே. (295)

வியர்வையின் றோற்ற மிருபே னாதியே. (296)

நிலம்நான் காமவை குறிஞ்சி முல்லை
மருத நெய்த லென்ன வழங்குப. (297)

குறிஞ்சி நிலமலைச் சார்பெனக் கூறுப. (298)

முல்லை நிலங்கான் சார்பென மொழிப. (299)

மருத நிலம்வயற் சார்பென வழங்குப. (300)

நெய்த நிலங்கடற் சார்பென நிகழுமே. (301)

நிலைநான் காகு மவைவபை சாசம்
மண்டல மாலீடம் பிரத்தி யாலீட
மிவைவிற் றொடுத்தம் பெய்வார்க் குரியவே. (302)

பைசாச நிலையொரு காலி னின்றொரு
காலை முடக்க லென்னக் கழறுப. (303)

மண்டல நிலையிரு காலும் பக்கல்
வளையமண் டலித்த லென்ன வழங்குப. (304)

ஆலீ டநிலை வலக்கான் மண்டலித்
திடக்கான் முந்துற லென்ன வியம்புப. (305)

பிரத்தி யாலீட நிலைதான் வலக்கான்
முன்னுற் றிடக்கான் மண்ட லித்தலே. (306)

பண்ணுன் காமலை பாலை குறிஞ்சி
மருதஞ் செவ்வழி யென்ன வழங்குப. (307)

பதவி நான்கு சாலோகஞ் சாமீபஞ்
சாரூ பஞ்சா யுச்சிய மென்ப. (308)

சாலோ கம்பதி யுலகத்தில் வாழ்தலே. (309)

சாமீ பம்பதி சமீபத்தில் வாழ் தலே. (310)

சாரூ பம்பதி யுருப்பெற்று வாழ்தலே. (311)

சாயுச் சியம்பதி யுடனென் றுதலே. (312)

பாநான்கு வெண்பா வாசிரி யப்பா
கலிப்பா வஞ்சிப் பாவெனக் கழறுப
மருட்பாக் கூட்டியைந் தென்றும் வழங்குப. (313)

நால்வகைப் புண்ணியத் தோற்றத் தவர்தவ
மொழுக்க மீகை கல்வியோ ரென்ப. (314)

புலமையோர் நால்வ ரவர்கவி கமகன்
வாதி வாக்கி யென்ன வழங்குப. (315)

ஆசு முதற்கவி யறைகுவன் கவியே. (316)

கமக னேயரும் பொருளைச் செம்பொருள்
நடையாக் காட்டி நவிலு வோனே. (317)

வாதியே காரண மும்மேற் கோளு
மெடுத்துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத்
தன்மத நிறுத்து பவனெனச் சாற்றுப. (318)

வாக்கி யறம்பொரு ளின்பம் வீடெனும்
நாற்றிறங் களையுங் கேட்க வேட்க
விரித்துக் கூறுவோ னென்ன விளம்புப. (319)

பூநான் கலைவகொடிப் பூக்கோட் டுப்பூ
நீர்ப்பூப் புதர்ப்பூ வென்ன நிகழுமே. (320)

பெண்கள் பருவ நான்கவை வாலை
தருணி பிரவிடை விருத்தை யென்ப. (321)

வாலைப் பருவ வயதைந் தாமே (322)

தருணி பருவ வயதுபதி னைன்றே. (323)

பிரவிடை பருவ வயது நாற்பதே. (324)

விருத்தை பருவ வயதுநாற் பான்மே
லுள்ளன வென்ன வோதப் படுமே. (325)

பெண்வகை நான்கவை பதுமினி சித்தினி
சங்கினி யத்தினி யென்னச் சாற்றுப
இவ்வகை கொக்கோ கத்தியம் புவரே. (326)

அறம்பொரு ளின்பம்வீ டாகுநாற் பொருளே. (327)

பொன்வகை நான்கவை யாடகங் கிளிச்சிறை
சாத ரூபஞ் சாம்பூ நதமே. (328)

மகடூஉக் குணநான் கவைநா ணமட
மச்சம் பயிர்ப்பென வறையப் படுமே. (329)

யுகநான் காமவை கிருதந் திரேதந்
துவாபரங் கலியுக மென்னச் சொல்லுப. (330)

கிருத யுகம்பதி னேழிலக்கத்
திருபத் தெண்ணா யிரமாண் டென்ப. (331)

திரேதா யுகம்பன் னிரண்டிலக் கத்துடன்
றொண் ணூற் றாறா யிரமென மொழிப. (332)

துவாபர யுகந்தா னெட்டிலக் கத்தோ
டறுபத்து நான்கா யிரமென வறைகுவர், (333)

கலியுக மாவது நாலிலக் கத்து
முப்பத் தீரா யிரமென மொழிகுவர். (334)

இப்படிச் சதுர யுகமா யிரம்வரிற்
பிரம னுக்கொரு பகலா கும்மே. (335)

வருணம் நான்கவை பிரம சத்திரிய
வைசிய சூத்திர வர்க்க மென்ப. (336)

வானோர் வரநான் கிலகு சூக்கும
மக்கயம் பிரகா சமென மொழிகுவர். (337)

இலகுகன மின்மை யென்னச் சொல்லுப. (338)

சூக்குமங் கண்டிப் பிலதெனச் சொல்லுப. (339)

அக்கயங் கெடுதி யின்மையா மென்ப. (340)

பிரகாசஞ் சோதி மயமெனப் பேசுப. (341)

மத்தளந் தண்ணுமை யிடக்கை சல்லியென
வைத்த நான்குமுத் தமத்தோற் கருவி. (342)

வேத நான்கவை யிருக்குத் தைத்திரியஞ்
சாம மதர்வண மென்னச் சாற்றுப. (343)

நால்வகை நரம்பு நவிலுங் காலை
யிணைகிளை பகைநட் பெனவியம் புவரே. (344)

இணையெனப் படுவது கீழு மேலு
மணையத் தோன்று மளவின வென்ப. (345)

கிளையெனப் படுவது கிளக்குங் காலை
குரலே யிளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகு மென்ப. (346)

நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ்
சென்றுபெற நிற்பது பகைநரம் பாமே. (347)

நட்பு நாலாம் நரம்பெனப் படுமே. (348)

சல்லிய கரணி சந்தான கரணி
சமனிய கரணி மிருதசஞ் சீவினி
யிவையே நால்வகை மருந்தெனச் செப்புப. (349)

சந்தானிக பிச்சை தருகண பிச்சை
மாதுகரி பிச்சை யயாசக பிச்சை
யென்பன நால்வகைப் பிச்சை யிவைகளைச்
சைவ சமய நெறியிற் சாற்றினர். (350)

கொட்டு மசையுந் தூக்கு மளவு
மொட்டப் புணர்ப்பது நால்வகைத் தாளம். (351)

நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென்
றுற்ற நான்கு மவினய நிலக்களன். (352)

பெரிதா மிலக்குஞ் சிறிதா மிலக்கு
மசையு மிலக்கு மசையா விலக்கு
மெனநான் கிலக்கம் பெய்யு மிலக்கே. (353)

ஐம்பொருள்.

அகிற்கூட் டைந்தா மவைகள் சந்தனங்
கருப்பூ ரமெரி காசுதே னேலமே. (354)

அக்கினி யைந்தா மவைக ளிராகங்
கோபங் காமஞ் சடந்தீ பனமே. (355)

அங்க மைந்தா மவைதிதி வார
நட்சத் திரமொடு யோகங் கரண
மிவைபஞ் சாங்க மெனவும் புகலவர். (356)

திதிபிர தமைமுதற் பதினைந் தாமே. (357)

வார ஞாயிறு முதலே ழென்ப. (358)

நட்சத் திரமசு பதிமுத லாய
விருபத் தேழென வியம்புவர் கணிதர். (359)

யோகம்விட் கம்ப முதன்மூ வொன்பதே. (360)

கரண வகைபவ முதற்பதி ணென்றே. (361)

அரசர்க் குக்குழு வைந்து மந்திரியர்
புரோகிதர் சேனு பதியர் தூதர்
சாரண ரென்னச் சாற்றப் படுமே. (362)

மந்திரி யரானவ ரரசர்க் குத்துணை
யிருந்தா லோசிப் பவரே யென்ப. (363)

புரோகித ரானவ ராசர்க் குவரும்
காரியம்முரைத்துங் கிருத்திய மவைகளைச்
செயச்சொலுஞ் சோதிட ரென்னச் செப்புப. (364)

சேனு பதிய ரானவர் படைகொடு
பகைவரை வெல்பவ ரென்னப் பகருப. (365)

தூத ரானவ ரொருவர்க் கொருவர்
சொன்ன செய்தியைச் சொல்பவ ரென்ப. (366)

சாரண ரானவர் புறம்பி னுண்டாகுஞ்
செய்தி யெல்லாந் தெரிந்துரைப் பவரே. (367)

எலுமிச் சம்பழ நாரத் தம்பழ
மாதுளம் பழமொடு தமரத் தம்பழங்
குளஞ்சிப் பழமென கூறுவ ரைங்கனி
யிவையபி டேகத் தியல்வன வாமே. (368)

கடுகுட னோமம் வெந்தய முள்ளி
பெருங்காய மென்னப் பிறங்குமைங் காயம். (369)

சீனக் காரந் திகழ்வெங் காரம்
பொரிகா ரத்துடன் புகல்சௌக் கார
நவச்சா ரம்மென நவில்வரைங் காரம். (370)

அரசர்க் குறுதிச் சுற்றமை வராமவர்
நட்பாள ரந்தணர் நன்மடைத் தொழிலர்
மருத்துவக் கலைஞர் நிமித்திகப் புலவரே. (371)

நட்பாள ரானவ ரரசன் றின்பந்
துன்பந் தமதெனச் சூழ்ந்தியல் பவரே. (372)

அந்த ணாள ரரசன் வாழ்நாள்
செங்கோல் வளர நீதி செப்புவரே. (373)

மடைத்தொழி லாள ரறுசுவை யுண்டிக
ளுடம்பிற் கினியவா வூட்டுவோ ரென்ப. (374)

மருத்துவக் கலைஞ ருடம்பி னோயறிந்
தன்னு டகப்பரி காரஞ் செய்பவர். (375)

நிமித்திகப் புலவர் பல்லிச் சொன்முதற்
குறிகளை யாய்ந்து கூறு வோரே. (376)

அவத்தை யைந்தவை சாக்கிரஞ் சொப்பனஞ்
சுழுத்தி துரியந் துரியா தீதமே. (377)

அந்நுவய விலக்கண மைந்தவை விசேடணம்
விசேடியங் கருத்தா கருமங் கிரியையே. (378)

விசேடண மாவது பொருளின் குணத்தை
விளக்குஞ் சொல்லென விளம்புவர் புலவர். (379)

விசேடிய மாவது குணச்சொலை யடுத்த
பொருளைக் காட்டுஞ் சொல்லெனப் புகலுப. (380)

கருத்தா வாவது கருதிய வினைகளை
வெளிப்படச் செய்பவ னென்ன விளம்புப. (381)

கரும மாவது செயலாற் றோற்றுஞ்
செயப்படு பொருளா மென்னச் செப்புவர். (382)

கிரியை யாவது செய்பவன் செயலின்
முடிவு காட்டு மொழியா மென்ப. (383)

இலக்கண மைந்தவை யெழுத்துச் சொற்பொருள்
யாப்பணி யென்ன வியம்புவர் புலவர். (384)

எழுத்தி னிலக்கண மெழுத்தின் பெயர்முறை
பிறப்புரு வாதியைப் பேசுவ தென்ப. (385)

சொல்லி னிலக்கணந் திணைபா லிடமிரு
வழக்காதி காட்டி வழங்குவ தென்ப. (386)

பொருளி னிலக்கண மகமே புறமே
யெனுமிரு வகைத்தாய்க் கைக்கிளை யாதிய
வெழுதிணை யகமும் வெட்சித் திணைமுத
லெழுதிணைப் புறமு மாம்பொரு ளியம்புவர். (387)

யாப்பி லக்கண மெழுத்தசை சீர்பந்த
மடிதொடை பாவின மாமென மொழிப. (388)

அணியி னிலக்கண முவமை யாதி
யேதி றுதிநா ருகிய பொருளணி
மடக்குச் சித்திர மாகிய விருவகைச்
சொல்லணி யென்னச் சொல்லுவர் புலவர். (389)

இலிங்க மைந்தவை பிருதிவி யப்புத்
தேயு வாயு வாகாய விலிங்கமே. (390)

பிருதி விலிங்கங் காஞ்சியிற் பிறங்கும். (391)

அப்புலிங் கந்திரு வானைக் காவிலே. (392)

தேயு லிங்கந் திருவண் ணமலையிலே. (393)

வாயுலிங் கம்வரை காளத்தி மன்னுமே. (394)

ஆகாய லிங்கஞ் சிதம்பரத் தவிருமே. (395)

ஈசுரன் முகமைந் தீசானந் தற்புரு
டமகோரம் வாமஞ்சத் தியோசாத மைந்தே. (396)

ஈசா னம்முக மனைத்து மாளுமே. (397)

தற்புரு டமுகங் காக்கு மென்ப. (398)

அகோர முகம தழிக்கு மென்ப. (399)

வாம முகமது விளக்கு மென்ப. (400)

சத்தியோ சாத முகந்தோற் றுவிக்கும். (401)

உலோக மைந்தா மவைபொன் வெள்ளி
செம்பிரும் பீய மென்னச் செப்புப. (402)

எழுத்துத் தான மைந்தவை பாலன்
குமர னரசு மூப்பு மரணமே. (403)

பாலத் தானம் அஆ வென்ப. (404)

குமரத் தானம் இஈ ஐயே. (405)

அரசத் தானம் உஊ ஔவே. (406)

மூப்புத் தானம் எஏ மொழிப. (407)

மரணத் தானம் ஒஓ வழங்குப. (408)

ஓதிய தானத் துயிர்மெய் தனின்மெய்
தள்ளி யுயிரைக் கொள்கெனச் சாற்றுப. (409)

பாட்டுடைத் தலைவன் பெயர்முத லெழுத்தை
பாலனுக் கோடல் பாவலர் வழக்கே. (410)

முன்னைய தான மூன்று நன்மையே. (411)

மங்கலச் சொன்முன் னெழுத்துவரை யெண்ணுக
விவைவெண் பாப்பாட் டியலிற் காண்கவே. (412)

ஐம்புல நுகர்ச்சியி னிறப்பன வைந்தவை
மீன்வண் டியானை யசுணம் விட்டிலே. (413)

சுவையா லிறப்பன மீனெனச் சொல்லுப. (414)

நாற்றத் தாலிறப் பனவண் டென்ப. (415)

பரிசத் தாலிறப் பனயானை யென்ப. (416)

ஓசையா லிறப்பன வசுணமென் றோதுப. (417)

ஒளியா லிறப்பன விட்டிலென் றுரைப்ப. (418)

கருமேந் திரிய மைந்தவை வாக்குப்
பாதம் பாணி பாயு வுபத்தமே. (419)

கன்னிகை யைவ ரகலிகை திரௌபதி
சீதை தாரைமண் டோதரி யிவரே. (420)

குரவ ரைவ ரரச னுபாத்தி
யாயன் றந்தை தேசிகன் மூத்தோன். (421)

குற்ற மைந்தவை கொட்டாவி நெட்டை
குறுகு றுப்புமூச் சிடலல மரலொடு
நட்டு விழுத லென்ன நவிலுவர். (422)

கேள்வி யைந்தவை யறமாதி நான்கோ
டவற்றின் வழிநிற் றலாமென மொழிப. (423)

கைத்தொழி லைந்தவை யெண்ண லெழுத
லிலைகிளல் பூத்தொடுத் திடல்யாழ் வருடலே. (424)

கோச மைந்தவை யன்னமய கோசம்
பிராண மயகோச மனோமய கோசம்
விஞ்ஞான மயகோச மானந்த மயகோசம். (425)

கௌட மைந்தவை சுத்த கௌடங்
கான குச்சஞ் சார சுவத
முற்கல மைதுலை யென்ன வோதுப. (426)

கௌட மென்பது கருதுமோர் தேசமே. (427)

கௌவிய மைந்தவை கோசல கோமயம்
பாறயிர் நெய்யிவை யென்னப் பகருவர். (428)

சத்தக் கருவி யைந்தவை தோறுளை
நரம்பு கஞ்ச மிடறென நவிலுப. (429)

சத்தி யைந்தவை பராசத்தி யாதி
சத்தி யிச்சா சத்தி ஞான
சத்தி கிரியா சத்தி யென்ப. (430)

சயன மைந்தவை யிலவம் பஞ்சு
செம்மை வெண்பஞ்சு மயிரனத் தூவி
இவற்றாற் செய்வன வியம்பு பஞ்சணையே. (431)

சிவதத் துவமைந் தவைசுத் தவித்தை
ஈசுரஞ் சாதாக் கியஞ்சத்தி சிவமே. (432)

சுத்த வித்தை ஞானமஃதேறிக்
கிரியை குறைந்த தென்னக் கிளக்குப. (433)

ஈச்சுர மாவது ஞானங் குன்றிக்
கிரியை யுயர்ந்த தென்னக் கிளக்குப. (434)

சாதாக்கிய ஞானங் கிரியை யொத்ததே. (435)

சத்தி யாவது கிரியை நாடலே. (436)

சிவமா வதுமெய்ஞ் ஞான மொன்றலே. (437)

சூதக மைந்தலைவ சனன மரணு
சூசஞ் சண்டாள நீரிற் ரேய்தல்
சுராபா னம்பணல் பொய்கூ றலென்ப. (438)

ஐவர்தந் தையர்பிறப் பித்தோன்கற் பித்தோ
னுபதே சஞ்செய்தோ னன்னந் தந்தோ
னுபத்துக் குதவினே னுமென மொழிப. (439)

தருவைந் தவையரி சந்தனங் கற்பகஞ்
சந்தா னம்பா ரிசாதமந் தாரமே. (440)

தாய ரைவர்பா ராட்டுதா யூட்டுதாய்
முலைத்தாய் கைத்தாய் செவிலித் தாயே. (441)

தாள மைந்தா மவைசச் சற்புடஞ்
சாசற் புடஞ்சட் பிதாபுத் திரிகஞ்
சம்பத்து வேட்ட முற்கடி தம்மே. (442)

சச்சற் புடதாள மீசன் சத்தியோ
சாத முகத்திற் பிறந்தது பிரம
சாதியா மஃதெட் டுமாத்திரை பெறுமே. (443)

சாசற் புடதா ளமீசன் வாம
முகத்திற் பிறந்த வரச சாதியஃ
தாறு மாத்திரை யளவு மென்ப. (444)

சட்பிதா புத்திரி கதாள மானது
ஈச னகோர முகத்திற் பிறந்த
வைசிய சாதிபன் னிருமாத் திரையதே. (445)

சம்பத் துவேட்ட தாள மீசன்
றற்புரு டமுகத் திற்பிறந்த தபின்னுஞ்
சூத்திர சாதிபன் னிருமாத் திரையதே. (446)

உற்கடித தாள மீச னீசான
முகத்திற் பிறந்த சங்கிரம சாதி
யஃதாறு மாத்திரை யாகு மென்ப. (447)

திணையைந் தாமவை நிலநான் கினொடு
பாலையுங் கூட்டிப் பகரப் படுமே. (448)

பாலை நீரிலாப் பரனில மென்ப. (449)

திணைப்பா லைந்தவை யொருவ னொருத்தி
பலரொன் றுபலவெனப் பகரப் படுமே. (450)

திராவிட மைந்தவை துளுவ மாந்திரங்
கன்னட மகாராட் டிரங்கூர் சரமே. (451)

திரவிய முண்டா மிடமைந் தாமலை
காடு நாடு நகர்கட லென்ப. (452)

மலைபடு திரவிய மைந்தவை மிளகு
கோட்ட மகிறக் கோலங் குங்குமமே. (453)

காடுபடு திரவிய மைந்துதேன் கருந்தினை
யரக்கு மயிற்பீலி நாவி யென்ப. (454)

நாடுபடு திரவிய மைந்தவை செந்நெல்
சிறுபயறு கரும்பு வாழை யிளநீரே. (455)

நகர்படு திரவிய மைந்தவை யரசன்
பித்தன் மந்தி யானைகண் ணாடியே. (456)

கடல்படு திரவிய மைந்தவை யுப்பு
முத்துச் சங்கு பவளமொக் கோலையே. (457)

திருமா லாயுத மைந்தவை சக்கரம்
தனுவா டண்டு சங்க மென்ப. (458)

துரக கதியைங் தவைமல் லகதி
மயூர கதிமிகு வல்லியாக் கிரகதி
வானர கதியுட னிடப கதியே. (459)

தேவ ரைவர் பிரமன் விட்டுணு
வுருத்திரன் மகேசு ரன்சதா சிவனே
யிவரே பஞ்ச கர்த்தாக் களென்ப. (460)

பிரமன் படைத்தலைப் பேணுவ னென்ப. (461)

விட்டுணு காத்தலை மேவுவ னென்ப. (462)

உருத்திர னழித்தலை யுடையவ னென்ப. (463)

மகேச்சுரன் மறைத்தலை மருவுவ னென்ப. (464)

சதாசிவன் விளக்கித் தானருள் பவனே. (465)

ஐந்து பறவை வல்லூ றுந்தை
காகங் கோழி மயிலெனக் கழறுப. (466)

அவைகளி னக்கர மைந்தவை முறையே
அஇ உஎ ஒவ்வுந் தத்த
நெடிலோ டியைந்து நிகழு மென்ப. (467)

அன்னவை யின்றொழி லைந்தவை யுண்டி
நடையர சுறக்கஞ் சாவென நவிலுப. (468)

உண்டி முதன்மூன்று நன்றென வுரைப்ப. (469)

பாதக மைந்தவை கொலைபொய் களவு
கள்ளருந் தல்குரு நிந்தை யிவையே. (470)

புலனைந் தவைசுவை யொளியூ றோசை
நாற்ற மென்ன நவிலப் படுமே. (471)

பூத மைந்தா மவைநில நீர்தீக்
காற்று விசும்பிவை பஞ்ச பூதமே. (472)

பொறியைந் தவைமெய் வாய்கண் மூக்குச்
செவியிவை யென்னச் செப்புவர் புலவர். (473)

மயிர்ப்பா லைந்தா மவைமுடி கொண்டை
சுருள்குழல் பனிச்சை யென்னச் சொல்லுப. (474)

முடியது மயிரை யுச்சியின் முடித்தலே. (475)

கொண்டை பக்கத்தின் முடித்தலைக் கூறுப. (476)

சுருளது பின்னிச் செருகலைச் சொல்லுப. (477)

குழலது சுருட்டி முடித்தலைக் கூறுப. (478)

பனிச்சை பின்னி விடுதலைப் பகருப. (479)

வெள்ளிடை மன்ற மிலஞ்சி மன்றங்
கன்னின்ற மன்றம் பூத சதுக்கம்
பாவை மன்றமாப் பகர் மன்றைந்துஞ்
சிலப்பதி காரந் திகழ்வுறச் சொலுமே. (480)

மன்மதன் கணைக ளைந்தவை வனசஞ்
சூத மசோகு முல்லை நீல
முன்மத்த மதன மோகஞ் சந்தாபம்
வசிகரண மென்ன வழங்குவர் பெயரே. (481)

ஐங்கணை யவத்தை யைந்தவை சுப்பிர
யோகம் விப்பிர யோகஞ் சோக
மோக மரண மென்ன மொழிகுப. (482)

சுப்பிர யோகஞ் சொல்லு நினைவுமே. (483)

விப்பிர யோகம் வெய்துயிர்த் திரங்கலே. (484)

சோகம் வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும். (485)

மோக மழுங்கலு மொழிபிதற் றலுமே. (486)

மரண மயர்ப்பு மயக்கமு மென்ப. (487)

மாயையின் பெயரைந் தவைதம மாயை
மோக மவித்தை யநிர்த மென்ப. (488)

தமமே சிவ சைதன் னியத்தை
மறைக்கை யாற்பெயர் வழங்கப் படுமே. (489)

மாயை சகத்து ரூப மான
வந்தியதாத் தோற்றத் துக்கா ரணமே. (490)

மோகம் விபரீத ஞான முண்டாக்கலே. (491)

அவித்தை யுணர்வினை யழிக்கையா லென்ப. (492)

அமிர்தஞ் சத்துரு பத்துக் கந்தியம். (493)

மூல மைந்தவை செவ்வியஞ் சித்திர
மூலங் கண்டுபா ரங்கிபே ரரத்தை
சுக்கா மென்னச் சொல்லப் படுமே. (494)

யாக மைந்தவை பிரமந் தெய்வம்
பூதம் பிதிர்மா னுடமெனப் புகல்ப. (495)

பிரம யாகம் வேத மோதுதலே. (496)

தெய்வ யாக மோமம் வளர்த்தலே. (497)

பூதர்க் கிடுபலி பூத யாகமே. (498)

பிதிர்யா கந்தர்ப் பணமுடிப் பதுவே. (499)

மானுட யாக மிரப்போர்க் குணவிடல். (500)

வண்ண மைந்தவை வெண்மை கருமை
செம்மை பொன்மை பசுமை யென்ப. (501)

வாச மைந்தவை லவங்க மேலங்
கருப்பூ ரஞ்சாதிக் காய்தக் கோலமே. (502)

வினாவைந் தாமவை யறியான் வினாவ
லறிவொப்புக் காண்ட லைய மறுத்த
லவனறிவு கோடன்மெய் யவற்குக் காட்டலே. (503)

விரையைந் தாமவை கோட்டந் திருக்கர்
தகர மகில்சந் தனமா மென்ப. (504)

ஆன்ம சுத்தி யவிர்தான சுத்தி
திரவிய சுத்தி மந்திர சுத்தி
யிலிங்க சுத்தி யைவகைச் சுத்தியாம். (505)

பாறயிர் நெய்தேன் பகர்சருக் கரையிவை
யைந்தமு தென்ன வறைகுவ ரிவற்றொடு
முக்கனி கூட்டிற் பலபஞ் சாமிர்தம். (506)

கறியுப் புவெடி யுப்பட் டுப்பு
வளைய லுப்பு மண்ணுப் பிவைகள்
பஞ்ச லவண மாகப் பகருவர். (507)

பச்சைக் கருப்பூ ரங்குங் குருக்கங்
காரகில் சந்தனங் கருஞ்சீ தாரி
யிவையின் புகையை வகைவிரைத் தூபம். (508)

ஐந்தெழுத் தவைபஞ் சாக்கர மந்திரம். (509)

பிதிரர் தெய்வம் விருந்துசுற் றத்தார்
தானிவ ரைவர் தாமைம் புலத்தவர். (510)

இன்னு மைவகை யாக மியம்பிற்
கன்ம யாகங் கரைதவ யாகஞ்
செபயா கமெனத் திகழ்மந் திரயாகந்
தியானயா கம்மெனச் செப்புபா வனையுடன்
ஞானயா கம்மென நவிலுவர் புலவர். (511)

சுத்த மாய்ய யசுத்த மாயை
கன்ம மாணவந் திரோத மென்ன
வறைந்திடு மிவைக ளைவகைப் பந்தம். (512)

கடித்த னக்கல் பருகல் விழுங்கல்
சுவைத்த லிவையை வகையுண வென்ப. (513)

ஐவகை வடிவ மாவன வெவையெனிற்
சிவசா தாக்கிய மமூர்த்திசா தாக்கிய
மூர்த்திசா தாக்கியங் கர்த்திருசா தாக்கியங்
கன்மசா தாக்கியங் கருதிய வைந்துஞ்
சிவனை வகைவடி வென்னச் செப்புவர். (514)

சாதாக் கியமென் பதுதான் சத்தி
விகற்பமாங் கலையென விளம்புவர் புலவர். (515)

சாத்திர மைவகைத் தாமென வுரைப்பர். (516)

லௌகீ கம்பின் னவில்லவை தீக
மத்தியான் மீக மதிமார்க்க மந்திர
மென்ன வுரைப்ப ரினிலௌ கீக
மாயுள் வேதந் தண்டமுத லாயின
விவைக ளிம்மையிற் பலிக்குநூ லென்ப. (517)

வைதீக மாவது மறைகளிற் கிரியா
காண்டங் கூறுஞ் சோதிட் டோம
முதலிய புண்ணியத் தாலே பெறப்படுந்
துறக்க முதலி யவற்றைச் சொல்லு
மீமாஞ்சை நூலும் விளம்பு நியாயமும்
வைசேடிக நூலு மாமூன் றுவகை
யிவையிம்மை மறுமையிற் பலிக்கு நூலே. (518)

அத்தியான் மீக மாவது சாங்கியம்
பாதஞ் சலியம் பகர்வே தாந்த
மெனமூ வகைப்படு மிவையான் மஞானந்
தனைப் பலிப்பிக்கு நூலெனச் சாற்றுவர். (519)

அதிமார்க் கநூலா வதுபா சுபதங்
காபா லமாவிர தமெனக் கழறுவர். (520)

மந்திர மாவது சித்தாந்த சாத்திரம். (521)

தொடையும் விலக்குஞ் செலவுஞ் சேமமுந்
தவறறுத் தேவினை தான்செய் தலுமிவை
யைந்துபோர்த் தொழிலு மைவினை யெனத்தகும்
மாச்சரந் துரத்தலும் வருசரம் விலக்கலும்
வளரமர் நீந்தலுங் கருவியுட் காத்தலுங்
கணைபுறங் காணலுங் கழறுவர் முறையே. (522)

நந்தை பத்திரை சுரபி சுசீலை
சுமனை யைவகைப் பசுவெனச் சொல்லுவ
ரிவைசிவ தருமோத் திரமியம் பிடுமே. (523)

ஆமாசயமே லமைபக்கு வாசய
மலாச யத்துடன் வருமூத்தி ராசயங்
கருப்பா சயமெனக் கருதைந் தாசய
ஞானு மிர்தநூ னவின்ற தென்ப. (524)

தேவ தீர்த்த மாரிட தீர்த்த
மானுட தீர்த்தம் பூத தீர்த்தம்
பிதிர்தீர்த் தம்மிவை பஞ்ச தீர்த்தஞ்
சைவ சமய நெறியிற் காண்கவே. (525)

(ஆறுபொருள்)

அரசர்க் கங்க மாறவை படைகுடி
கூழுய ரமைச்சு நட்பர ணென்ப. (526)

அரசிய லாறவை யறநிலை யறமே
மறநிலை யறமே யறநிலைப் பொருளே
மறநிலைப் பொருளே யறநிலை யின்பமே
மறநிலை யின்பமே யென்ன வழங்குப. (527)

அறநிலை யறமே யாவது தத்தம்
வருணத் திற்பிற ழாது நிலைபெறப்
பாது காத்த லென்னப் பகருப (528)

மறநிலை யறமா வதுநிரை மீட்டுப்
பகைவென்று சோற்றுக் கடனது கழியா
தாரைத் தண்டித் துக்குறை செய்தலே. (529)

அறநிலைப் பொருளது நெறிவழி நின்று
தத்தம நிலையினுன் முயன்றுபெறு பொருளே. (530)

மறநிலைப் பொருளது பகைஞர் பொருளுந்
திறைப்பொரு ளுஞ்சூ தில்வெல் பொருளுமே. (531)

அறநிலை யின்ப மாவது பருவமுங்
குலமு மொழுக்கமுங் குணமு மொத்த
கன்னிகை யைத்தீ வேட்டில் லத்தி
ருத்த லென்மனு ரியல்புணர்ந் தோரே. (532)

மறநிலை யின்ப மதுதா னேறு
தழுவியும் வில்லா விலக்க மெய்து
மிவ்வாறு மாறுடை நெறியின் மணத்தலே. (533)

ஆதார மாறவை மூலஞ் சுவாதிட்
டான மணிபூரக மநாகதஞ் விசுத்தி
யாஞ்ஞை யென்ன வறைகுவர் முனிவர். (534)

மூலா தாரங் குதமென மொழிப. (535)

சுவாதிட் டானங் குய்ய மென்ப. (536)

மணிபூ ரகநா பியென வழங்குப. (537)

அநாகத மிதய மாமென மொழிப. (538)

விசுத்தி யடிநா வென்ன விளம்புப. (539)

ஆஞ்ஞை நெற்றி யென்ன வறைகுப. (540)

ஈசுரன் முக்கிய குணமா றுமவை
சர்வஞ் ஞத்துவஞ் சர்வேசுர த்துவஞ்
சருவ நியந்தி ருத்துவஞ் சருவாந்
தரியா மித்துவஞ் சருவ கற்பிதத்
துவமொடு சருவ சத்தித் துவமே. (541)

அன்றியும்,

தன்வயத்த னாதன் முதலில னாத
லுடம்பில னாத லெல்லா நலமு
முளனாத லெங்கும் வியாபக னாத
லெலவைக்குங் காரண னாதலு மாமே. (542)

வெண்பா வாசிரி யங்கலி வஞ்சி
பரிபாடன் மருட்பாப் பகருவ ரறுபா. (543)

நேர்கட் டிதேனி ரியாசங் கர்ப்பூர
மார மகில்புகை யுறுப்பா ரென்பர். (544)

உட்பகை யாறவை காமங் குரோத
முலோப மோக மதமாற் சரியமே (545)

உவர்ப்பா ருமவை யாசிய மிரதி
யாரதி சோகம் பயங்குற் சிதமே. (546)

சிரிப்பா சைவெறுப் புச்சோர் வச்ச
மருவருப் பெனமுறை யாமவற் றின்பொருள். (547)

கரும பூமிக் குரிமையா ருமவை
வரைவுதொழில் வித்தை வாணிக முழவு
சிற்பமிவ் வறுவகைத் தொழிலெனச் செப்புவர். (548)

கருவு ளமைப்பா றவைவபே றிளமை
யின்புபிணி மூப்புச் சாக்கா டென்ப. (549)

காலமா றவைபரு வத்தைக் காண்கவே. (550)

சக்கர வர்த்திக ளறுவ ரரிச்சந்
திரனன் முசுகுந் தன்புரு குச்சன்
புரூரவன் கார்த்த வீரிய னிவர்மற்
றொருவரைப் பணியா துலகாண் டவரே. (551)

சாத்திர மாறுவே தாந்தம் வைசேடிகம்
பாட்டம் பிரபாகரம் பூர்வமீ மாஞ்சை
உத்தரமீ மாஞ்சை யென்ன வோதுப. (552)

சிறுபொழு தாறவை மாலை யாமம்
வைகறை விடியனண் பகலெற் பாடு
சூரியாத் தமன முதலொவ் வொன்றும்
பப்பத்து நாழிகை முறையே யென்ப. (553)

சுப்பிரமணிய சுவாமி பிரதானத்
தலமா ருமவை திருப்பரங் குன்றஞ்
சீரலை வாயா வினன்குடி யேரகங்
குன்றுதோ றாடல் சோலை மலையே. (554)

சுவையா றுமவை கைப்புத் தித்திப்புப்
புளிப்புட னுவர்ப்புத் துவர்ப்புக் கார்ப்பே. (555)

தானை யாறவை தேர்பரி கரியாள்
வில்வே லென்ன விளம்பப் படுமே. (556)

அந்தணர் தொழிலா றுமவை யோத
லோது வித்தல் வேட்டல் வேட்பித்த
லீத லேற்ற லென்மனுர் மேலோர். (557)

அரசர் தொழிலா றோதல் வேட்ட
லீத லோம்பல் படையைப் பயிற்றல்
போர்செய் தீட்ட லென்னப் புகலுவர். (558)

வைசியர் தொழில்க ளாறு கும்மவை
யோதல் வேட்ட லீத லீட்டல்
பசுவைக் காத்த லேருழுத லென்ப. (559)

சூத்திரர் தொழிலா றவைமுதன் மூவர்க்
கேவ லிவர்பொரு ளீட்ட லுழுதல்
பசுவைக் காத்தல் குயிலுவத் தொழில்செயல்
காருக வினைசெய லென்னக் கழறுப. (560)

குயிலுவத் தொழிலா வனதோற் கருவி
கொட்ட லுந்துளைக் கருவியூ தலுமே. (561)

காருக வினையா வனபட்டு நூலையும்
பருத்திநூ லையுங்கொண் டாடை யாக்கலுஞ்
சுமத்தலு முழத்தலு மென்னச் சொல்லுப. (562)

நாட்டமைதி யாறவை செல்வம் விளைவு
செங்கோல் வளங்குறும் பின்மைநோ யின்மையே. (563)

பருவ காலமா றவைகார் கூதிர்
முன்பனி பின்பனி யிருவகை வேனி
லிவையே வருடஞ் சாமமே மந்தஞ்
சிசிரம் வசந்தங் கிரீட்டும மென்னு
மாறிரு துக்க ளென்னவு மறைகுப. (564)

கார்கால மாவணி புரட்டாசி யாமே. (565)

கூதி ரைப்பசி கார்த்திகை கூறுப. (566)

முன்பனி மார்கழி தையென மொழிப. (567)

பின்பனி மாசி பங்குனி பேசுப. (568)
இளவேனில் சித்திரை வைகாசி யென்ப. (569)
முதிர்வேனி லானி யாடி மொழிகுப. (570)

போக பூமிக ளாறு தியரி
நல்லரி யேமத மேமவஞ் சங்கள்
தேவ வுத்தர குருவங் களென்ப. (571)

வேதாங் கமாறு சீக்கை கற்ப
மிலக்கணஞ் சந்தோ பிசித நிருத்தஞ்
சோதிட மென்னச் சொல்லப் படுமே. (572)

சைவம் பாசு பதமா விரதங்
காளா முகத்தொடு வாமம் வைரவ
மிவை யகச் சமய மென்ன வியம்புவர். (573)

உலகா யதம்பௌத் தம்மா ருகத
மீமாம்சை மாயா வாதத் துடனே
பாஞ்ச ராத்திர மறுபுறச் சமயமே. (574)

அறுவகைச் சூலை யவைபித்த சூலை
வாத சூலை சிலேட்டும சூலை
வாத பித்த சூலை சிலேட்டும
பித்த சூலை யையகண சூலை
எனமருத் துவநூ லியம்பு மென்ப. (575)

அறுவகை மலடுக ளாவன முறையே
வாத பித்த மலடு கிருமி
மலடுசூழ் மலடு வாயு மலடு
சூதக மலடு துன்மா மிசமல
டெனவே மருத்துவ நூலியம் பிடுமே. (576)

அரித்தி ரான்ன மவிர்பர மான்ன
முற்கான் னத்துடன் மொழிகிரு தான்னந்
ததியா ரன்னந் தக்ககு ளான்ன
மிவைகடெய் வங்கட் கினியவாச் செய்யு
மாறு விதனை வேத்திய மாமே. (577)

## ஏழு பொருள்.

இசையே ழுவைகுர றுத்தங் கைக்கிளை
யுழையிளி விளரி தாரமென் றேதுப
விலைவீ ணையில்நரம் பேழென வும்படும். (578)

இசைகள் பிறப்பிட மேழவை மிடறுநா
வண்ணஞ் சிரநெறி நெஞ்ச மூக்கே. (579)

இசைகளி னோசைக் குவமையே ழவைமயி
லிடப மாடுகொக் குருயில் பரிகரி
வண்டு கிள்ளை வாசி யானை
தவளை பசுவா டென்னச் சாற்றுவர். (580)

இசைக ளின்சுவைக் குவமையே ழவைபா
றேன்றயிர் நெய்யே லம்வா ழைக்கனி
மாதுளங் கனியென வழங்குவர் முறையே. (581)

இசைகளின் வாசனைக் குவமையே ழாமவை
மௌவன் முல்லை கடம்பு வஞ்சி
நெய்தல் பொன்னு விரைபுன்னை யென்ப. (582)

இசையெழுத் துக்க ளியனெடி லேழே. (583)

இசைகளின் மாத்திரை யியம்பிடிற் குரலொடு
துத்தங் கிளையுழை யிளியுடன் விளரி
தாரமா முறையே தரும்நான்கு நான்கு
மூன்றி ரண்டு நான்கு மூன்றோ
டிரண்டு மாத்திரை யாமென விசைப்பர். (584)

இசைகளுக் கிறைவ ரெழுவர் விசுவா
மித்திர னியம னங்கி திங்க
ளிரவி கௌதமன் காசிப னென்பர்
இவைக ளுக்குயி ரீசுர னென்ப. (585)

இசைகளிற் பிறக்கும் பாலையே ழாமவை
செம்பாலை படுமலைப் பாலை செவ்வழிப்

பாலை யரும்பாலை கொடிப்பாலை விளரிப்
பாலை மேற்செம் பாலை யென்ப. (586)

செம்பாலை குரலே குரலாச் செனிக்குமே. (587)

படுமலைப் பாலை துத்தக் குரலே. (588)

செவ்வழிப் பாலை கைக்கிளைக் குரலே (589)

அரும்பாலை யுழையே குரலா யினென்ப. (590)

கொடிப்பாலை யிளியே குரலா யினென்ப. (591)

விளரியே குரலாயின் விளரிப் பாலை. (592)

மேற்செம் பாலை தாரக் குரலே. (593)

உலோக மேழவை செம்பொன் வெண்பொ
னிரும்பு செம்பீயம் வெண்கலந் தாராவே. (594)

பூலோ கம்புவ லோகஞ் சுவலோ
கம்மகா லோகஞ் சனலோ கந்தவ
லோகஞ் சத்திய வுலக மேழே. (595)

அதலம் விதல மாகுஞ் சுதல
மிதமுறு தாதலம் ரசாதல மகாதலம்
பாதலத் துடன்கீழ்ப் பகரே ழுலகே. (596)

காமப் பகுதியிற் களவிய லேழ்வகை
யவைதகை யணங்குறுத் தலுங்குறிப் பறிதலும்
புணர்ச்சி மகிழ்தலு நலம்புனைந் துரைத்தலுங்
காதற்சிறப் புரைத்தலு நாணுத்துற வுரைத்தலு
மலரறி வுறுத்தலு மாமென மொழிப. (597)

கடலே ழாமவை யுவர்நீர் நன்னீர்
பாறயிர் நெய்கருப் பஞ்சாறு தேனே. (598)

சிரஞ்சீ வியர்க ளெழுவ ராமவர்
அசுவத் தாமன் மாபலி வியாசன்
அனுமான் விபீடணன் மார்க்கண் டமுனி
பரசி ராம னென்னப் பகருப. (599)

சுரமே ழாமவை சரிகம பதநியே. (600)

தாதுக்க ளேழவை நரம்போ டிரத்தஞ்
சுக்கில மூளை தசையென்பு தோலே. (601)

தாள மேழவை துருவ மட்டிய
முரூபகஞ் சம்பை திரிபுடை யடதாள
மேக தாள மென்ன வியம்புப. (602)

தீவே ழவைதா நாவ லிறலி
குசைகிர வுஞ்சம் புட்கரந் தெங்கு
கமுகா மென்னக் கழறப் படுமே. (603)

நதியே ழாமவை கங்கை யமுனை
சரசு வதிநரு மதைகா வேரி
குமரி கோதா வரியிவை சத்த
தீர்த்த மென்னச் செப்புவர் மேலோர். (604)

நரக மேழவை யள்ள லிரௌரவங்
கும்பி பாகங் கூட சாலஞ்
செந்துத் தானம் பூதிமா பூதியே. (605)

நரக வட்ட மேழவை நாடி
லறமிலா தவர்புகு மிருள்குளிர் புகைமண
றுயிலாமை யிரத்தந் தீயெனச் சொல்லுப. (606)

நாட்டுக் குற்ற மேழவை தொட்டியர்
கள்வர் யானை பன்றி விட்டில்
கிள்ளை பெருமழை யென்னக் கிழக்குப. (607)

பாதக மேழகங் கார முலோபங்
காமம் பகையே பேரசனப் பிரியம்
காய்தல் சோம்ப லென்னக் கழறுப. (608)

பிறப்பே ழாமவை தேவர் மக்கள்
விலங்கு புள்ளூர் வனநீர் வாழ்வன
நிற்பன விவற்றின் யோநி பேத
மெண்பத் துறுநான் கிலக்க மாமென்ப. (609)

தேவர் யோநி பதினுன் கிலக்கமே. (610)

மக்கள் யோநி யொன்ப திலக்கமே. (611)

விலங்குபுள் ளீந்துவ பப்பத் திலக்கமே. (612)

ஊர்வன யோநி பதினே ரிலக்கமே (613)

நிற்பன யோநி யிருப திலக்கமே. (614)

தேவர் பதினு றிலக்கந் தாவரம்
பதினெட் டிலக்கம் பகருவர் சில்லோர். (615)

புண்ணிய மேழாம் பூமியிற் பயிரிட
ரூனம் விரதஞ் சிநேகநற் போசனங்
கமையுற் சாக மென்னக் கழறுப. (616)

புரியே ழாமவை யயோத்தி மதுரை
மாயை காசி காஞ்சி யவந்திகை
துவாரகை யென்னச் சொல்லப் படுமே. (617)

பெண்கள் பருவ மேழவை பேதை
பெதும்பை மங்கை மடந்தை யரிவை
தெரிவை பேரிளம் பெண்ணெனச் செப்புப. (618)

பேதை வயதுதா னைரைந் தினுக்குமே
லேழு வரையா மென்மனுர் புலவர். (619)

பெதும்பை பதினொன் று வரையெனப் பேசுப. (620)

மங்கை பதின்மூன் று வரையா மென்ப. (621)

மடந்தை பத்தொன் பதுவரை யும்மே. (622)

யரிவை யிருபத் தைந்து வரையுமே. (623)

தெரிவை முப்பத் தொன்றெனச் செப்புப. (624)

பேரிளம் பெண்ணுற் பதுவரை பேசுப. (625)

பெரியோ ரியல்பே ழவையே யறம்பொரு
ளின்பன்பு புகழ் மதிப்புப் பொறுமையே. (626)

மண்டல மேழவை வாயு வருண
சந்திர சூரிய நட்சத்தி ராக்கினி
திரிசங்கு மண்டல மென்னச் செப்புப. (627)

மலையே ழாமவை கைலை யிமய
மந்தரம் விந்த நிடத மேம
கூட நீல கிரியெனக் கூறுப. (628)

இன்னும் வேறே ழியம்புவ ராலவை
மகேந்திர மலயஞ் சைய மோடு
சாறு மந்த மிருட்ச பர்வதம்
விந்தியம் பாரியாத் திரமென விளம்புவர். (629)

மாதர்க ளெழுவ ரவரபி ராமி
மாயே சுவரிகௌ மாரிநா ராயணி
வராகி யிந்தி ராணி காளியே. (630)

மாதர்க ளெழுவரின் வாகன மேழவை
யனமிட பம்மயில் கருடன் சீயம்
யானை பேயென வறைகுப முறையே (631)

மாதர்க ளெழுவரி னாயுத மேழவை
மறைபி னாகம் வேலாழி கலப்பை
வச்சிரஞ் சூல மென்ன வழங்குப. (632)

முனிவ ரெழுவ ரத்திரி குச்சன்
கௌதமன் பிருகு காசிப னங்கிரா
வசிட்ட னுமென வகுத்தனர் புலவ
ரின்னுமு னிவர்வே றெழென வியம்புவர். (633)

மேக மேழுசம் வர்த்தமா வர்த்தம்
புட்கலா வர்த்தஞ் சங்கா ரித்தந்
துரோணங் காள முகிநீல வருணமே (634)

மேக மேழுந் தருவன வேழவை
மணிநீர் பொன்மலர் மண்கற் றீயே. (635)

வார மேழவை ஞாயிறு திங்கள்
செவ்வாய் புதன்வி யாழன் வெள்ளி
சனியா மென்னச் சாற்றப் படுமே. (636)

வித்தியா தத்துவ மேழவை கால
நியதி கலைவித்தை யிராகம் புருடன்
மாயை யென்ன வழங்கப் படுமே. (637)

செந்தூக் குத்திகழ் மதலைத் தூக்கு
துணிபுத் தூக்கு கோயிற் றூக்கு
நிவப்புத் தூக்கு கழாற் றூக்கு
நெடுந்தூக் கென்ன நிகழெழு தூக்கு
நால்வகைத் தாளங் களின் வழிவருமே. (638)

ஏழ்பரி யாவன வியம்பு காயத்திரி
திருட்டுபு செகதி யனுட்டுபு பந்தி
பிரகதி முட்டினு கென்ன வேழுஞ்
சூரியன் பரியெனச் சொல்லுவர் புலவர். (639)

செய்யுட் சூரிய தளையே ழுவைதா
நிரையொன் றாசிரி யத்தளை நேரொன்
றாசிரி யத்தளை யியற்சீர் வெண்டளை
வெண்சீர் வெண்டளை மிக்க கலித்தளை
யொன்றிய வஞ்சித் தளையோ டொன்றா
வஞ்சித் தளையென வழங்கப் படுமே. (640)

எண் பொருள்.

அங்க யோகமெட் டாமவை யியம
நியம மாதனம் பிராண யாமம்
பிரத்தியா காரந் தாரணை தியானஞ்
சமாதி யிவையட் டாங்க யோகம். (641)

இயம மாவது கொலைசெய் யாமை
மெய்ம்மை கூறல் களவு செய்யாமை
பிறர்பொருள் வெஃகாமை யிந்திரிய மடக்கலே (642)

நியம மாவது தவந்தூய்மை தத்துவ
நூலை யோர்தன் மனமுவந் திருத்த
றெய்வம் வழிபட லென்னச் செப்புப. (643)

ஆதன மொன்ப தாமவை சுவத்திகங்
கோமுகம் பதுமம் வீரங் கேசரி
பத்திர முத்த மயூரஞ் சுகமே. (644)

சுவத்திக மாவது தொடைமுழங் காற்கு
நடுவிரண் டுள்ளங் காலையுஞ் செலுத்தி
யிருமாந் திருத்த லென்மனர் புலவர். (645)

கோமுக மாவது சகனப் பக்கத்தி
லிருகாற் பரட்டையு மாறலவைத் தவ்விரு
காற்பெரு விரலைக் கைப்பிடித் திருத்தலே. (646)

பதும மாவ திருதொடை மேலு
மிரண்டுள்ளங் காலையு மாறித் தோன்ற
வைத்த லென்ன வழங்கப் படுமே. (647)

வீர மாவது வலமார் தொடையி
லிடக்காற் பரட்டைச் சேர்த்தி யிருமாப்
புற்றி ருத்த லென்ன வோதுப. (648)

கேசரி யாவது பீசத் தின்கீழ்ச்
சீவனி யிடத்துப் பரட்டை வைத்திட
முழங்கையை முழந்தா ளில்வைத் தங்குலி
விரித்து நாசியைப் பார்த் திருத்தலே. (649)

பத்திர மாவது பீசத்தின் கீழே
சீவனி யிடத்திரு காற்பரட் டிணையும்
வைத்தவ் விருபா தத்தையு மிருகையா
லிறுகப் பிடித்தசை யாதே யிருத்தலே. (650)

முத்த மாவ திடக்காற் பரட்டாற்
சீவனி தன்னை யழுத்தி வலக்காற்
பரடப் பரட்டின் கீழுந்த விருத்தலே. (651)

மயூர மாவது முழங்கை யிரண்டு
முந்திப் புறத்தி லழுந்தப் புவியிற்
கையூன் றிக்கா னீட்டித் தலையை
நிமிர்ந்தி ருத்த லென்மனர் நெறியோர். (652)

சுகாதன மாவது சுகமுந் திடமு
மெவ்வா றிருக்கி னெய்தப் படுமோ
வவ்வா றிருத்த லென்ன வறைகுப. (653)

பிராணு யாம மாவது பிராண
வாயுவை யிரேசக பூரக கும்பகஞ்
செய்த லென்னச் செப்புவர் முனிவர். (654)

பிரத்தியா கார மாவ துபாதியை
நீக்கி யுண்ணோக்க லென்மனார் நெறியோர். (655)

தாரணை யாவது கண்ட மிதய
நெற்றி கபால நாபி யிவற்று
ளொன்றிற் சந்ததஞ் சிந்தை வைத்தலே. (656)

தியான மாவ தைம்புல மடக்கிச்
சிவயோகஞ் சேர்த லென்னச் செப்புப. (657)

சமாதி யாவ திந்திரிய முதலிய
தத்துவ சேட்டைகட் கேதுவாம் யாக்கையு
ணின்றவற் றோடு கூடினு மவற்றிற்
பற்றின்றி யிருக்கு மான்மா வாகிய
தனைத்தான் கண்டு பதியுடன் சார்தலே
யிவற்றிற் சிலவே றுவித மியம்புவர். (658)

அரசர்க்குத் துணைவ ரென்ம ராமவர்
மந்திரி மாருடன் வரும்பெருங் கணக்கர்
சுற்றங் கடைகாப் பாளர் நகர
மாக்கள் படைத்தலைவ ரிவுளி மறவர்
யானை வீர ராமென மொழிப. (659)

அளவை யெட்டா மவைகள் காட்சி
யனுமான மாகம மருத்தா பத்தி
யுபமான மபாவஞ் சம்பவ மைதிகம். (660)

காட்சி யளவை யாவது காணலே. (661)

அனுமான வளவை யாவது புகையைக்
கண்டு நெருப்புண் டென்ப தாமே. (662)

ஆகம வளவை யாவது பெரியோர்
வாய்ச் சொ லென்ன வழங்கப் படுமே. (663)

அருத்தா பத்தி யாவது பகலிலே
யுண்ணு னென்னி லிரவி லேயொழித்
துண்பா னென்ன வுணர்தல் போல்வதே. (664)

மரைபசுப் போல்வ தென்ப துவமானம். (665)

அபாவ வளவை யாவது முன்னு
மில்லைப் பின்னு மில்லை யொருகாலு
மில்லை யென்ப தென்மனார் பெரியோர். (666)

சம்பவ வளவை யாவ தாயிரத்தி
னூறுண் டென்ப தென்ன நுவலுப. (667)

ஐதிக வளவை யாவதிம் மரத்திற்
பேயுள தென்ப தென்னப் பேசலே. (668)

அறத்துறுப் பெட்டவை யையப் படாமை
விருப்பு வெறுப்பின்மை மயக்க மின்மை
பழிபய நீக்க லழிந்தோரை நிறுத்த
லறம்வி ளக்குதல் பேரன் புடைமையே. (669)

ஈசுரன் குணங்க ளெட்டா மவைக
டன்வயத்த னாத றாய வுடம்பின
னாத லியற்கை யுணர்வின னாதன்
முற்று முணர்த லியல்பாகப் பாச
நீங்குதல் பேரரு ளுடைமை முடிவி
லாற்ற லுடைமை வரம்பி லின்ப
முடைமை யன்றியும் வரம்பின் ஞானம்
வரம்பில் காட்சி வரம்பி லின்பம்
வரம்பி லாற்ற லுமை மின்மை
கோத்திர மின்மை யாயு ளின்மை
யிடையூ றின்மை யெனவுங் கூறுப. (670)

ஊறெட் டாமவை வெம்மை தண்மை
மென்மை வன்மை திண்மை நொய்மை
நீர்மை சருச்சரை யென்னச் செப்புப. (671)

எச்சமெட் டாமவை குறள் கூ னூமை
செவிடு குருடு முடமுறுப்பு மயக்க
முறுப்பில் பிண்ட மிவையே யெண்வகை
யுடற்குறை யென்ன வோதவும் படுமே. (672)

ஐசு வரியமெட் டாகு மவைகள்
ராசாங்க மக்கள் சுற்றம் பொன்மணி
நெல்லு வாகன மடிமை யென்ப. (673)

கணமெட் டாமவை நிலநீர் மதியுயிர்
சூரிய னங்கி வாயு வாகாயமே. (674)

கணங்க ளெட்டினுண் முன்னுன்கு நன்றே. (675)

நிலக்கண மாவது மூன்று நிரையது
நிரைநிரை நிரைகரு விளங்கனி யென்ப. (676)

நீர்க்கண மாவ தாதி நேரது
நேர்நிரை நிரைகூ விளங்கனி யென்ப. (677)

மதிக்கண மாவ தாதி நிரையது
நிரைநேர் நேர்புளி மாங்கா யென்ப. (678)

உயிர்க்கண மாவது முற்று நேரது
நேர் நேர் நேர்தே மாங்கா யென்ப. (679)

சூரிய கணமா வதுநடு நிரையது
நேர்நிரை நேர்கூ விளங்கனி யென்ப. (680)

தீக்கண மாவது நடுநே ரமது
நிரைநேர் நிரைபுளி மாங்கனி யென்ப. (681)

வாயு கணமா வதுகடை நிரையது
நேர்நேர் நிரைதே மாங்கனி யென்ப. (682)

ஆகாய கணமா வதுகடை நேரது
நிரைநிரை நேர்கரு விளங்கா யென்ப. (683)

கணித மெட்டா மவைசங் கலிதம்
விபகலிதம் குணனம் பாகாரம் வர்க்கம்
வர்க்க மூலங் கனங்கன மூலமே. (684)

சங்கலித மாவது கூட்ட லென்ப. (685)

விபகலித மாவது கழித்த லென்ப. (686)

குணன மாவது பெருக்க லென்ப. (687)

பாகார மாவது பிரித்தலென்ப. (688)

வர்க்க மாவதோ ரெண்ணையவ் வெண்ணு
லொருமுறை பெருக்க லென்ன வோதுப. (689)

வர்க்க மூல மாவதவ் வர்க்கத்
தொகையின் மூலங் காணுத லென்ப. (690)

கனமாவ தோரெண் ணூலே யந்த
வெண்ணைப் பெருக்கிப் பெருக்கிப் பெற்றதை
மறுபடி யவ்வெண் ணூலே பெருக்கலாம். (691)

கனத்துக்கு மூலங்காணல் கனமூலம். (692)

குற்றமெட் டாமவை ஞான வரணியந்
தரிசன வரணியம் வேத நீய
மோக நீய மாயு நாமங்
கோத்திர மந்த ராய மென்ப
விவையா ருகத மதநூற் கூறுமே. (693)

சித்தியெட் டாமவை யணிமா மகிமா
லகிமா கரிமா பிரார்த்தி பிராகாமிய
மீசத்துவம் வசித்துவ மென்ன வியம்புப. (694)

சிறிய வுயிர்தொறுஞ் சிறிய வணுவா
யுறைதலணிமா வென்ன வோதுப. (695)

பிருதுவி முதற்சி வாந்தமா முறு
முட்புற மகலா துறைதன் மகிமா. (696)

மேருபா ரம்போல் விளங்கும் யோகியை
யெடுத்தாற் பஞ்சென விருப்ப திலகிமா. (697)

அணுப்போ லிருக்கும் யோகியை யெடுத்தான்
மேருபா ரம்போல் விளங்குதல் கரிமா. (698)

பிலத்தி லிருந்தோ னயலுல கிற்புகன்
மீண்டும் பிலம்புகல் பிராத்தி யாமே. (699)

வான்புலத் தியங்க லிச்சித்த போக
நினைந்தபடி வருதல் பிராகா மியமே. (700)

ஈசத் துவமெலா மாட்சியுள ளாதலே. (701)

வசித்துவ மாவ தெல்லாந் தன்வச
மாக்க வல்லவ னாத லென்ப. (702)

தயாவி ருத்தியெட் டாமவை பிறர்க்குப்
பொருள்வர வுவத்தல் பிறர்பொருள் பொறுத்தல்
பிறர்கரு மத்திற் குடன்பட டீமைக்
கஞ்சல் பிறர்கரு மஞ்செய விரைதல்
பிறரையந் தீர்த்தனன் மைகடைப் பிடித்தல்
பிறர்துயர்க் கிரங்க லென்னப் பேசுப. (703)

திக்கெட் டாமவை கிழக்குத் தென்கிழக்குத்
தெற்குத் தென்மேற்கு மேற்கு வடமேற்கு
வடக்கு வடகிழக் கிவையென வகுப்பர். (704)

திக்குப் பாலக ரெண்ம ராமவ
ரிந்திர னக்கினி யமனிருதி வருணன்
வாயு குபேர னீசான னிவர்களே
கிழக்காதியட்ட திக்குப்பா லகரே. (705)

திக்குப் பாலகர் குறிகளெட் டாமவை
கொடிபுகை சீயநா யிடபங் கழுதை
யானை காக மென்ன வறைகுப. (706)

திக்கு யானைக ளெட்டா மவைக
ளைரா வதம்புண் டரீகம் வாமனங்
குமுத மஞ்சனம் புட்ப தந்தஞ்
சாருவ பூமஞ் சுப்பிர தீபமே. (707)

திக்கி யானையின் பிடியெட் டாமவை
யப்பிரமை கபிலை பிங்கலை யநுபமை

தாமிர கர்ணிசுப் பிரதந் தியங்கனை
யஞ்ச னுவதி யாமென மொழிப. (708)

நாகமெட் டாமவை வாசுகி யனந்தன்
றக்கன் சங்க பாலன் குளிகன்
பதுமன் மாபதுமன் கார்க்கோ டகனே. (709)

மந்திரந் தெய்வ மருந்து நிமித்தந்
தந்திர மிடனே காலங் கருவி
யெட்டுங்கள்ளாற் கியம்புசா தனமே. (710)

நாட்டுக் குற்ற மெட்டா மவைகள்
விட்டி றன்னரசு வேற்றர சியானை
மிகுமழை மிகுகாற் றுக்கிளி நட்டமே. (711)

பேரக மெட்டா மவைபெண் ணுடை
யணிகல முண்டிதாம் பூலம் பரிமளம்
பாட்டு பூவ மளியெனப் பகருப. (712)

மங்கல மெட்டா மவைகள் சாமர
நிறைகுடங் கண்ணாடி தோட்டி முரசு
விளக்குக் கொடியிணைக் கயலென விளம்புப. (713)

மணமெட் டாமவை பிரமம் பிரசா
பத்திய மாரிடந் தெய்வங் காந்தருவ
மாசுர மிராக்கதம் பைசா ,சமென்ப. (714)

பிரம மணமது பிரமசா ரிக்குக்
கன்னிகை யைத்தீ முன்னர்க் கொடுப்பதே. (715)

பிரசா பத்திய மணமா வதுதலை
மகனினத் தார்கள் வேண்டத் தலைமக
ளினத்தா ருடன்பட் டவளைத் தீமுனர்க்
கொடுப்ப தென்னக் கூறுவரியலோர். (716)

ஆரிட மணமா குவதொன் றிரண்டு
பசுவு மெருதும் வாங்கிக் கொண்டு
கன்னிகை யைத்தீ முன்னர்க் கொடுப்பதே. (717)

தெய்வ மணமது செப்புங்காலே
வேள்வியா சிரியற் குக்கன் னிகையைத்
தீமுன் கொடுப்ப தென்னச் செப்புவர். (718)

காந்த ருவமண மாவது கொடுப்பார்
கேட்பா ரின்றி யிருவருந் தனியிடத்
தெதிர்ந்து தாமே கூடுவ தென்ப. (719)

அசுர மணமணப் பெண்ணிற் குப்பொன்
சூட்டிச் சுற்றத் தாருக் குப்பொன்
வேண்டுவ கொடுத்துக் கொளலென விளம்புப. (720)

இராக்கத மணமா வதுதான் பெண்ணும்
பெண்ணினத் தாரு முடம்பா டின்றி
வலிதிற் கொள்ள லாமென வழங்குப. (721)

பைசாச மணமா வதுதுயின் றவளையுங்
களித்தவ டன்னையுங் கலத்த லென்ப. (722)

மலையெட் டாமவை கைலையாதி
யேழொடு கந்தமா தனமு மென்ப. (723)

மாலிய வானுங் கந்தமா தனமு
நிடதமு மேம கூடமு மிமயமு
நீலமுஞ் சுவேதமுஞ் சிருங்கமு மெண்மலை
யாகவுங் கூறுவ ரறிவுடை யோரே. (724)

மூர்த்த மெட்டா மவைகள் பூமி
நீர்தேயு வாயு வாகாயஞ் சூரியன்
சந்திர னான்மா வென்னச் சாற்றுப. (725)

மெய்ப்பரி சத்தொழி லெட்டவை யூன்றல்
கட்டல் குத்த றடவ றட்ட
றீண்டல் பற்றல் வெட்ட லிவைமெய்ப்
பொறியிற் செயப்படுந் தொழிலெனப் புகலுப. (726)

வசுக்க ளெண்மரா மவர்க ளநல
னநில னுபன் சோமன் றரனே
துருவன் பிரத்தியூ டன்பிர பாசனே. (727)

வணிகர் குணமெட் டாமவை தனிமை
யாற்றல் முனிவில ளூத லிடனறிந்
தொழுகல் பொழுதொடு புணர்த லுறுவது
தெரித லிறுவ தஞ்சாமை யீட்ட
லவைபகுத் திடலென வறையப் படுமே. (728)
வெற்றி யெட்டா மவைகள் பகைநிரை
கவர்தல் பகைவர் கவர்ந்த தன்னிரை
மீட்டல் பகைமேற் செல்லல் வரும்பகை
முன்னெதி ரூன்றல் தன்னரண் காத்தல்
பகையரண் வளைத்தல் பொருதல்போர் வெல்லலே. (729)
வெற்றி மாலை யெட்டவை வெட்சி
கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி
யுழிஞை தும்பை வாகையென் றோதுப. (730)
வாமை சேட்டை ரௌத்திரி காளி
கலவி கரணியே பெலவி கரணி
பெலப்பிர தமநி சர்வ பூதைக
தமநி யென்னச் சாற்றிய வெண்ம
ரட்ட சத்திக ளாமென மொழிப. (731)

ஈசாநி பூரணி யார்த்தி வாமை
மூர்த்தி யாரணி ரோத யித்திரி
செநநி யென்னச் சாற்றிய வெண்மரு
மட்ட சத்திக ளாமென மொழிப. (732)

யாகம் புரிதல் வேத மோதுத
ருனந் தவஞ்சத் தியந்திடம் பொறுமை
லோப மின்மை யென்னு மிவைக
ளட்ட தரும மாகு மென்ப. (733)

நாடி முகமல மமூரி நாக்கண்
சரீரந் தொனியெனச் சாற்றிய வெட்டு
மருத்துவ ரட்ட பரீக்கைத் தானமே. (734)

கருங்குட் டம்பெரு கிரணக் குட்டம்
வெண்குட் டம்மே மிகுசெங் குட்டங்

கிருமிக் குட்டங் கிளர்நீர்க் குட்டம்
விரல்குறை குட்டஞ் சொரிகுட் டம்மென
விவையெண் குட்ட மென்பர் மருத்துவர். (735)

சுக்கான் கல்லு தொகுகொம் பரக்கு
சாதிலிங் கஞ்செம் பஞ்சுதேன் மெழுகுட
னெருமை வெண்ணெருங் கிலியநற் காவி
யிவையெண் பொருளை யிடித்துத் திரட்டப்
படுவ தட்ட பந்தன மருந்துகள். (736)

அட்ட புட்ப மவைகொல் லாமை
யைம்பொறி யடக்கல் பொறையரு ளறிவு
வாய்மை தவமன் பாமெண் குணங்களு
மாகிய புட்ப மந்தரி யாக
பூசையா கியவகப் பூசைக் குரியன. (737)

மகாஅ வைரவ ருக்கிர வைரவர்
சண்டாள வைரவர் குரோத வைரவ
ருன்மத்த வைரவர் காபால வைரவர்
பீடண வைரவர் சாகர வைரவ
ரிவர்களே யட்ட வைரவ ரென்ப
ரிவர்சிவ லோகத் தியல்சோதி மயமாங்
கோட்டையி லெட்டுக் குலவிய வாயிலிற்
காவல்செய் திருப்பவ ராகக் கழறுவர். (738)

தலைமோ வாய்செவி தாமிரண் டிருபுயங்
கைகளெட் டுறுப்புங் காணும் புவியிற்
றோயப் பணிதல் சொல்லுமட் டாங்க
நமக்கார மென்ன நவிலுவ ருணர்ந்தோர். (739)

சுக்குநல் லரத்தை சொல்லுஞ் செவ்வியஞ்
சித்திர மூலந் திகழ்சிறு தேக்கு
கோரைக் கிழங்கு குலவுநன் னரிவேர்
காஞ்சொரி வேரெனக் கருதுறு மிவைக
ளட்ட மூல மாமென மொழிப. (740)

கொலைகுன் மங்கொடு வாத குன்மம்
பித்த குன்மம் பெருவலிக் குன்மஞ்
சந்நி குன்மஞ் சத்தி குன்மம்
வெய்ய குன்மம் மிகுமெரி குன்ம
மெனவிவை யெண்வகைக் குன்ம மென்ப. (741)

அடியா ரடிதொழ லவிர்சிவ பூசையின்
மகிழ்தல் சிவார்ச்சனை வனப்புற வியற்றல்
சிவபணி விடைக டிருந்தச் செய்தல்
சிவசரி தங்கேட் டானந் தக்கண்
ணீருறச் சொரிதல் புளக முறுத
லச்சரி தம்பல காற்சிந் தித்த
றிருப்பணிப் பொருளை யபகரி யாமை
யெனவிவை யெண்வகைப் பத்தியா மென்பர். (742)

புன்னைவெள் ளெருக்கம் பூச்சண் பகப்பூ
நந்தியா வர்த்த நறுமலர் பாதிரி
நீலோற் பலமலர் நிலவிய வலரி
மலர்செந் தாமரை மலரா மெண்மலர்
புறம்பே செய்யும் பூசைக் குரியன. (743)

தனலக் குமிமிகு தானிய லக்குமி
தைரிய லக்குமி சௌரிய லக்குமி
வித்தியா லக்குமி கீர்த்தி லக்குமி
விசய லக்குமி யிராச்சிய லக்குமி
யிவர்களே யட்ட லக்குமி யென்பர் (744)

குலமே ரூபம் யவ்வனம் வித்தை
தனம்பிர புத்துவம் சகாயஞ் சகச
மென்னு மிவற்றால் வருஞ்செருக் கினையே
யெண்வகை மதமா மென்ன வுரைப்பர். (745)

செறியா மாந்தந் தெறுபோர் மாந்த
மலட்டு மாந்தம் வளர்பெரு மாந்தம்
வாத மாந்தம் வருசுழி மாந்தம்

வலிமாந் தத்தொடு வன்கண மாந்த
மெனுமிவை யட்ட மாந்த மென்ப. (746)

சிவசம வாத மைக்கிய வாதஞ்
சங்கிராந்த வாதம் பிரவா கேசுர

வாதங் காபா லிகவா தத்தோ
டவிகார வாதம் பேதா பேத
வாத மநேகேச் சுரவா தம்மிவை
யெண்வகைச் சமய வாத மென்பர். (747)

காமக் குரோத லோப மோக
மதமாற் சரியம் வளரு மசூயை
யகங்கா ரம்மிவை யட்ட விகாரம். (748)

அனந்தர் சூக்கும ரரிய சிவோத்தம
ரேக நேத்திர ரேக ருத்திரர்
திரிமூர்த்தி யோடு சீகண்டர் சிகண்டி
யென்பவ ரட்ட வித்தியே சுரரே. (749)

பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்
கண்ணிய செலவு விளையாட்டு கையூழ்
குறும்போக் கிசையெழு வுந்தொழி லெட்டே. (750)

வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ள
லேருடைப் பட்டடை யென்னு மிவைக
ளெட்டு வகையி னிசைக்கரண மென்ப. (751)

வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையிவை
யெண்வகை மெய்ப்பாட் டியல்வன சுவையே. (752)

வாத முடனே வலியகல் லடைப்புக்
குட்ட மேக மகோதரம் பகந்தர
மூல ரோகங் கிராணி ரோக
மெனுமிவை யட்ட மகாரோ கங்கள். (753)

சந்தன மகரு தருகத் தூரி
கருப்பூ ரம்பச் சிலைகுங் குமத்துட
னிலாமிச்சை கோட்ட மிவையட்ட கந்தம். (754)

ஒணான் றவளை யடவீ மனைப்பலி
காட்டு மசகந் தேனீ மலையெறும்
பூறு சிலந்தியென் றோதிய விவைக
ளெண்வகைக் கீட மென்ன வியம்புவர். (755)

எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
கடலை துவரை மொச்சை யென்றுங்
குடனிவை முதிரைக் கூல மென்ப. (756)

நெல்லுப் புல்லு வரகு சாமை
தினையுட னிறுங்கு தோரை யிராகி
யெண்வகைத் தானியக் கூல மென்ப. (757)

நெஞ்சு மிடறு நாக்கு மூக்கு
மண்ணுக்கு முதடும் பல்லுந் தலையு
மிசைப்பெருந் தான மெட்டெனச் சொல்லுவர். (758)

எடுத்தல் படுத்த னலிதல் கம்பிதங்
குடில மொலியுருட்டு தாக்கெனக் கிரியை
யெட்டாகு மென்றே வியம்பப் படுமே. (759)

இன்பந் தெளிவே நிறையோ டொளியே
வன்சொ லிறுதி மந்தமுச் சமென
வந்த வெட்டும் பாடலின் பயனே. (760)

அம்மை யழகு தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை யெனவனப் பெட்டே. (761)

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே. (762)

(ஒன்பது பொருள்.)

தமனிய மிரும்பு தாமிர மீய
மிரசித மதுகம் பித்தளை நாகம்

கஞ்ச மென்னக் கருதுறு மிவைக
ணவலோக மென்ன நாட்டப் படுமே. (763)

நவதா னியமென நவிலும் பொருள்க
ளுழுந்து கடலை யெள்ளுக் கொள்ளு
கோதுமை யவரைநெற் றுவரை பயறே
யவரையென் பதுகரு மொச்சை யாமே
பயறென் பதுபா சிப்பய றென்ப. (764)

அட்ட நாகமு மாதி சேடனு
நவநாக மென்ன நவிலுவர் புலவர். (765)

சங்கம் பதுமந் தருமகா பதும
மகரங் கச்சப முகுந்தங் குந்த
நீலம் வரமென நிகழ்த்துவர் நவநிதி. (766)

இரத மொன்பதா மவைசிங் காரம்
வீரியம் பெருநகை கருணை யிரௌத்திரங்
குற்சிதஞ் சாந்த மற்புதம் பயமே. (767)

கண்ட மொன்பதா மவைகீழ் விதேக
மேல்வி தேகம் வடவி தேகந்
தென்வி தேகம் வடவி ரேபதம்
தென்னி ரேபதம் வடப ரதந்தென்
பரத மத்திம கண்ட மென்ப. (768)

கிரக மொன்பதா மவையா தித்தன்
சோமனங் காரகன் புதன்வி யாழன்
சுக்கிரன் சனியுட னிராகு கேதுவே- (769)

சித்தரொன் பதின்மர் சாத்திய நாதர்
சதோக நாத ராதி நாத
ரநாதி நாதர் வகுளி நாதர்
மதங்க நாதர் மச்சேந்திர நாதர்
கடேந்திர நாதர் கோரக்க நாதரே. (770)

தாரணை யொன்பதா மவைநாம தாரணை
வச்சிர தாரணை மாயா தாரணை
சித்திர தாரணை செய்யுட் டாரணை
நிறைவு குறைவாகிய வெண்பொருட் டாரணை
சத்த தாரணை வத்து தாரணை
சதுரங்க தாரணை சாற்றுவ ரருகர். (771)

தாள மொன்பதா மவையரி யரும
சமசய சித்திர துருவ நிவிர்த்த
படிம விடம தாளங்க ளாமிவை
நவசந்தி தாள மென்ன நவிலுப. (772)

சிந்து திரிபதை சவலை சமபாத
விருத்தஞ் செந்துறை மிக்க வெண்டுறை
பெருந்தேவ பாணி சிறுதேவ பாணி
வண்ண மிசைப்பா வொன்பது வகையே. (773)

வாமை சேட்டை ரௌத்திரி காளி
கலவி கரணி பெல விகரணி
பெலப் பிரமதனி சர்வ பூத
தமனி மனோன்மணி யொன்பது சத்திகள். (774)

அயனரி யரன்மகே சன்சதா சிவனே
சிவஞ்சத்தி நாதந் திகழும் விந்து
நவந்தரு பேத வுருவென நவிலுவர்
முன்னான் குருவம் பின்னான் கருவ
மிடையொன் றுருபா ரூப மென்ப. (775)

கங்கை யமுனை வாணி நருமதை
சிந்து காவிரி கோதா வரியுடன்
சோண மாநதி துங்க பத்திரை
யிவைநவ நதியென வியம்புவர் சைவ
சமய நெறியிற் றூனறிந் திடுகவே. (776)

தாளப் பிரமா ணம்பத் தாமவை
கால மார்க்கங் கிரியை யங்கங்

கிரகஞ் சாதி களையி லயைசதி
பிரத்தார மிவையே யாமெனப் பேசுப. (777)

தாளத் தின்கா லப்பிர மாணம்
பத்தவை கணம்லவங் காட்டை நிமிடந்
துடிதுரித மிலகு குருபுலுதங் காக
பதமெனக் கீத வல்லோர் பகருவர். (778)

கணகால மாவது தாமரை யிதழை
நூறடுக் கியதிலோ ரிதழி லூசி
செலுத்துங் கால மென்னச் செப்புப. (779)

இலவகா லங்கண மெட்டுக் கொண்டதே. (780)

காட்டை கால மிலவமெட் டென்ப. (781)

நிமிட காலங் காட்டை யெட்டென்ப. (782)

துடிகால நிமிட மெட்டெனச் சொல்லுப. (783)

துரித காலந் துடியிரண் டாமே. (784)

இலகு காலந் துரித மிரண்டே. (785)

குருகால மிலகி ரண்டெனக் கூறுப. (786)

புலுத கால மிலகுமூன் றென்ப. (787)

காகபத காலங் குருவிரண் டாமே. (788)

தாள மார்க்க மாறவை தக்கணம்
வார்த்திகஞ் சித்திரஞ் சித்திர தரமே
யர்த்த சித்திர மதிசித் திரமே. (789)

தக்கண மாவது மாத்திரை யெட்டோர்
களையா கக்கொண் டதென்னக் கழறுப. (790)

வார்த்திக மாவது நான்கோர் களையே. (791)

சித்திர மாத்திரை யிரண்டோர் களையே. (792)

சித்திர தரமாத் திரையொன் றோர்களை. (793)

அர்த்த சித்திர மாத்திரை யரையே. (794)

அதிசித் திரமாத் திரைகா லோர்களை
மாத்திரை யாவது கைந்நொடி யளவே. (795)

தாளக் கிரியை யிரண்டவை மார்க்கந்
தேசிக மென்னச் செப்புவ ரிசையோர். (796)

மார்க்க மெட்டவை நிசத்த நான்கு
சசத்த நான்கெனச் சாற்றுவ ரிசையோர். (797)

நிசத்த நான்கா மவையா வாப
நிட்கிரா மம்விட் சேபம்பிர வேசமே. (798)

சசத்த நான்கவை துருவஞ் சம்பியந்
தாளஞ் சன்னி பாத மென்ப. (799)

தேசிக மெட்டா மவையே துருவஞ்
சர்ப்பிணி கிருட்டியை பதுமினி விசர்ச்சிதை
விட்சிதம் பதாகை பதித மென்ப
விவற்றிலக் கியங்களை யிசைநூலி லறிகவே. (800)

தாளத்தி னங்க மாறவை பிறைமதி
கணைவில் பாம்பு புள்ளடி யிவற்றை
யநுதுரிதந் துரிதம் லகுகுரு புலுதங்
காக பதமெனக் கழறுவர் முறையே
யிவற்றினுற் பத்தியும் பரியாய நாமமும்
வண்ணமு மதிதே வதையு மாத்திரையு
மர்த்தாங் குலப்பிர மாணமுங் காதைப்
பிரமா ணமுமிசை நூல்பெரி துரைக்குமே. (801)

தாளத்தின் கிரக நான்கவை யதீத
மநாக தஞ்சமம் விடம மென்ப. (802)

அதீதமா வது குரன்முன் னுந் தாளம்
பின்னும் வருவ தென்னப் பேசுப. (803)

அநாகத மாவது தாள முன்னுங்
குரல்பின் னும்வர லென்னக் கூறுப. (804)

சமமா வதுகுரு ளை மிரண்டு
மொத்து வருவ தென்ன வுரைப்ப. (805)

விடம மாவது குருவுந் தாளமு
முன்னும் பின்னுங் கலந்து வருவதே. (806)

தாளச் சாதி யைந்து சதுரசிரந்
திரிசிர மிசிரங் கண்டஞ் சங்கிரண
மாமிவை முறையே பிரம வரச
வைசிய சூத்திர சங்கிரம சாதியே
யிவற்றைமுற் கூறிய விலகு வக்கர
காலங் களினு லறிக வென்ப. (807)

தாளத் தின்கலை மூன்றவை யேக
கலைது விகலை சதுர்க்கலை யென்ப. (808)

ஏக கலையக் கரகால மாயுங்
கிரியை யோடும் வரலெனக் கிளக்குப. (809)

இதையிரட் டித்துக் கிரியையொடு வருவது
துவி கலை யென்னச் சொல்லுவர் புலவர். (810)

சதுர்க்கலை யதையிரட் டித்துக் கிரியை
யோடு வருவ தென்ன வுரைப்ப. (811)

தாளத் திலயை மூன்றவை விளம்ப
மத்திமந் துரித மென்ன வழங்குப
விவைவரு வதுகலை யின்னுெப் பாமே. (812)

தாளத் தின்சதி யாறு மவைசமம்
விடம மிருதங்கம் வேத மத்தியங்
கோபுச் சஞ்சு ரோதோ வகமே. (813)

சமசதி நெட்டங்க மாயினுங் குற்றங்க
மாயினு மொரேவித மாய்வர லென்ப. (814)

விடம சதியெலா வங்கமுங் கிரம
மின்றிக் கலந்து வரலென் றியம்புப. (815)

மிருதங் கசதி முதலினுங் கடையினுங்
குற்றங் கமுமிடை யின்னெட் டங்கமும்
வருவ தென்ன வழங்குவ ரிசையோர். (816)

வேத மத்தியஞ் சதிமுதல் கடையி
னெட்டங் கழுமிடை யிற்குற் றங்கழும்
வருவ தாகு மென்ன வகுப்பர். (817)

கோபுச் சசதி முதலினெட் டங்கழு
மீற்றிற் குற்றங் கழுமாய் வரலே. (818)

சுரோதோ வகசதி முதலிற்குற் றங்கழு
மீற்றினெட் டங்கழு மாய்வர லென்ப. (819)

தாளத் தின்பிரத் தார முதலிய
மற்றைய விவ்விலக் கணத்தா லுணர்கவே. (820)

புண்ணிய மொன்பதா மவையெதிர் கொள்ளல்
பணித லாதனத் திருத்தருள் கழுவ
லருச்சித்த றூபங் கொடுத்த றீபங்
காட்டல் புகழ்த லமுத மேந்த
லிவைதுறந் தோர்க்குச் செய்வன வென்ப. (821)

மணிக ளொன்பதா மவைகோ மேதக
நீலம் பவளம் புட்ப ராக
மரகத மாணிக்க முத்துவை டூரியம்
வைர மிவையென வகுப்ப ருணர்ந்தோர். (822)

வாயி லொன்பதா மவைகண் காது
மூக்கிவை யொடுவாய் குதங்குய் யம்மே. (823)

வானோர் கணமொன் பானக் கணத்தோர்
பத்திச் சுவாலகர் ஞான திக்கர்
பத்தி ராசனர் நாத கிருத்தியர்
சத்துவகர் பலவத் தர்பிரா தமிக
ரதிதூதர் தூத ராவ ரிவரே
நவவிலா சசபை யாரென நவிலுப. (824)

பத்திச் சுவாலகர் கடவுளைக் குறித்த
பத்தியி னாலே சுவாலிக் கிறவரே. (825)

ஞான திக்கர் கடவுளைக் குறித்த
ஞானத்தி னாலதிக் கம்பெற் றவரே. (826)

பத்திரா சனர்கட வுள்ளெழுந் தருளி
யிருக்குந் தேவ சிங்கா தனத்தைப்
புகழ்ந்திருப் பவர்க ளென்மனூர் புலவர். (827)

இம்மூ வருமுத லாகு மர்ச்சியப்
பிரபுத் துவமுடை யோரெனப் பேசுப. (828)

நாத கிருத்தியர் நாதன் கிரியையை
யவனரு ளாற்புரி பவரா மென்ப. (829)

சத்து வகர்கட வுளினரு ளாலே
பற்பலற் புதஞ்செய் சத்துவ முளரே. (830)

பலவத்தர் கடவு டிருவுளப் படியே
யெய்துங் கருமங் கட்கு வருமிடை
யூற்றை யவனரு ளாலே தடுக்கும்
பலாஅத் காரம் பெற்றவ ரென்ப. (831)

இம்மூ வரிரண் டாகு மர்ச்சியப்
பிரபுத் துவமுடை யோரெனப் பேசுப. (832)

பிராதமிகர் கடவுளின் றிருவுளப் படியே
யிராச்சிய சம்பந்த மான சாதாரண
நன்மை நடத்துந் தலைமை பெற்றவரே. (833)

அதிதூத ரதிகப் பிரதான விசேட
முலகத்தி லறிவிக்கத் தானுதி பதியாய்
வருபவ ரென்ன வழங்குவர் புலவர். (834)

தூத ரானவர் மனிதர் பிறந்த
கணமுத லாகத் தனித்தனி யேயவ
ரவரைப் பாது காத்துநன் னெறியி
னடத்திமற் றும்பிர தானவி சேடங்
களுக்க னுப்பப் படுபவ ரென்ப. (835)

இம்மூவர் மூன்று மர்ச்சியப் பிரபுத்
துவமுடை யோரா மென்னச் சொல்லுப. (836)

அர்ச்சியப் பிரபுத் துவமே யதிச்சுர
பதவி யென்னப் பகர்நரு முளரே. (837)

குரங்கு வேங்கை தோல் குக்கலாடு
பஞ்சா னனநரி சரபம் பாய்முய
லெனுநவ சுதியு மியம்புவர் பரிக்கே. (838)

(பத்துப் பொருள்.)

வெள்ளிபொன் வத்திரம் வெல்லம் பூமி
நெய்பால் பசுவெள் ளுப்புப் பத்துந்
தசதா னப்பொரு ளாகச் சாற்றுவர். (839)

சிவனடி யார்கள் செய்கைபத் தாமவை
தத்துவ ரூபந் தத்துவ தெரிசனந்
தத்துவ சுத்தி யான்ம ரூப
மான்ம தெரிசன மான்ம சுத்தி
சிவரூ பஞ்சிவ தெரிசனம் பின்னர்ச்
சிவயோ கஞ்சிவ போக மாமே. (840)

அங்கம் பத்தவை மலையாறு நாடூர்
மாலை பரிகரி முரசுகொடி செங்கோ
லிவையே யாசர்க் குரிய தசாங்கமே
கோல்விடுத் தாணையுந் தானையுங் கூறுவர். (841)

சிற்பத் தொழிற்குறப் புப்பத் தாமவை
கல்லுலோ கஞ்செங் கன்மா மண்சுதை
தந்தம் வண்ணங் கண்ட சருக்கரை
மெழுகிவை யென்ன விளம்பப் படுமே. (842)

சேனைத் தொகைபத் தாமவை பதாதி
சேனாமுகங் குமுதங் கணகம் வாகினி
பிரளயஞ் சமுத்திரஞ் சங்க மநீக
மக்குரோணி யென்ன வறையப் படுமே. (843)

பதாதி யாவது யானை யொன்று
தேரொன் றுபரி மூன்றூ ளைந்து
கூடிய தென்னக் கூறப் படுமே. (844)

பதாதி முதல மேன்மேன் மும்மடி
கொண்டதாஞ் சேனா முகமா தியவே. (845)

திக்குப் பத்தா மவைகிழக் காதி
யெட்டொடு கீழ்மே லென்ன வழங்குப. (846)

திருமா லவதா ரம்பத் தாமவை
மச்சங் கூர்மம் வராக நரசிங்கம்
வாமனம் பரசு ராம னிராமன்
பலபத் திரன்கணன் கற்கி யென்ப. (847)

தீக்குணம் பத்தா மவைவாக் கினது
நான்கு மெய்யினது மூன்று மனத்தது
மூன்றென மூவகை யாமென மொழிப. (848)

வாக்கின் றீக்குண நான்கா மவைகள்
பொய்சொலல் கோட்சொலல் கோபித் துச்சொலல்
பயனில சொல்லெனப் பகரப் படுமே. (849)

மெய்யின் றீக்குண மூன்று மவைகள்
களவு செய்தல் வறிதே தொழில்செயல்
கொலைசெய லென்னக் கூறப் படுமே. (850)

மனத்தின் றீக்குண மூன்று மவைகள்
கொலைநினைக் கைகா மப்பற் றாசையே. (851)

துவர்பத் தாமவை நாவல் கடுக்காய்
நெல்லி தான்றி யாலர சத்தி
யித்தி முத்தக் காசுமாந் தளிரே
மாந்தளிர் முத்தக் காசினை வரைந்து
பூவந்தி கருங் காலியைச் சேர்த்துப்
பத்துத் துவரெனப்ப கருவர் சிலப்பதி
கார வுரையிற் கண்டு கொள்கவே. (852)

நற்குணம் பத்தா மவைவாக் கினது
நான்கு காயத் தினது மூன்று
மனத்தி னதுமூன் றெனவச னிப்பர். (853)

வாக்கி னற்குணம் நான்கவை மெய்யுரை
நல்வார்த்தை யின்னுரை பயன்படு சொல்லே. (854)

காயத்தி னற்குண மூன்றவை கோயில்
சூழ்த றவஞ்செய றானஞ் செய்தலே. (855)

மனத்தி னற்குண மூன்றவை யருணினை
வாசை யறுத்த றவப்பற் றாமே. (856)

நாடி பத்தா மவைசுழி முனையிடை
பிங்கலை காந்தாரி யத்தி·சிகுவை
யலம்புடை புருடன் குகுசங் கினியே. (857)

சுழுமுனை நாடி யாவதா தார
மாறினு மூடு ருவிநிற் பதுவே. (858)

இடைபிங் கலைகளி ரண்டுகெத் தரிகைக்
கால்போற் பின்னிநிற் பதெனக் கழறுப. (859)

காந்தாரி நாடி நாபியிற் றோன்றிச்
சுரமே மூக்கு மெழுநா டியாக்
கண்டத் துறுவ தாமெனக் கழறுப. (860)

அத்தி சிகுவை யிரண்டும் பத்து
நாடி யுற்று நயனத்தில் நிற்பவே. (861)

அலம்புடை புருட னிரண்டுஞ் செவியினுற்
றிருபது நரம்புற் றிருப்பன வென்ப. (862)

குகுநாடி நாபி யுறைந்து குய்யம்
பற்றி நிற்ப தென்னப் பகருப. (863)

சங்கினி நாடி யுபத்தம் பற்றியதே. (864)

மகளிரான் மலரு மரம்பத் தவைமகி
ழெழி லம்பாலை பாதிரி முல்லை
புன்னை குராவ சோகு குருக்கத்தி
மாாசண் பகமிவை முறையே சுவைக்க
நட்புற நிந்திக்க நகைக்க வாட
வணைக்க வுதைக்கப் பாடப் பார்க்க
நிழல்படத் தளிர்த்துப் பூத்து நிலவுமே. (865)

மூலம் பத்தவை சிறுபஞ்ச மூலம்
பெரும்பஞ்ச மூல மென்னப் பேசுப. (866)

சிறுபஞ்ச மூலங் கண்டங் கத்திரி
சிறுவழு துணைசிறு மல்லி பெருமல்லி
நெரிஞ்சி யிவற்றின் வேரா கும்மே. (867)

பெரும்பஞ்ச மூலம் வில்வம் பெருங்குமிழ்
தழுதாழை பாதிரி வாகையின் வேர்களே. (868)

வாயுபத் தாமவை பிராண னபானன்
சமான னுதானன் வியான னுகன்
கூர்மன் கிருகரன் தேவ தத்தன்
றனஞ்சய னிவைகள் சடத்தினிற் பனவே. (869)

பிராண வாயுவி தயத்தியங் குவதே. (870)

அபான வாயு குதங்குய் யத்தி
னிடைநிற்ப தென்ன வியம்பப் படுமே. (871)

சமான வாயு கந்தரக் குழியிற்
சந்திடை நிற்ப தென்னச் சாற்றுப. (872)

உதான வாயு நாபியி லுறுவதே. (873)

வியான வாயு வுடன்முழு துறுமே. (874)

நாக வாயு நீட்டன் முடக்கல்
கிளக்கல் செய்வ தென்னக் கிளக்குப. (875)

கூர்ம வாயு வுரோமம் புளகித்
திமைப்ப தென்ன வியம்பப் படுமே. (876)

கிருகர வாயு தும்மலுஞ் சினமும்
வெம்மையும் விளைப்ப தென்ன விளம்புப. (877)

தேவதத்த வாயு வோட்டமு
மிளைப்பும் வியர்வு மியற்றுவ தென்ப. (878)

தனஞ்சய வாயு பிராணன் போகினும்
போகா துடலினை வீக்கித் தலைகிழித்
தகலுவ தென்ன வறைகுவ ராய்ந்தோர். (879)

வேளாண் மாந்த ரியல்புத் தாமவை
யாணைவழி நிற்ற லழிந்தோரைநி றுத்தல்
கைக்கட னாற்றல் கரிலகத் தின்மை
யொக்கல் போற்ற லோவா முயற்சி
மன்னிறை தருத லொற்றுமை கோடல்
விருந்து புறந்தருத றிருந்திய வொழுக்கமே. (880)

(பதினொரு பொருள்)

உருத்திரர் தாம்பதி னொருவ ராமவர்
மாதே வன்னா னுருத்திரன் சங்கரன்
நீலலோ கிதனீ சானன் விசயன்
வீம தேவன் பவோற்பவன் கபாலி
சௌமிய னென்னச் சாற்றப் படுமே. (881)

தேவர் முப்பான் முக்கோடி யர்க்கு
ளுருத்திரர் பன்னொரு கோடிய ருக்குத்
தலைவர் பதினொ ருருத்திர ராகக்
கந்த புராணத் துருத்திரர் கேள்விப்
படலந் தன்னிற் பகர்ந்தனர் காண்கவே. (882)

கரணம் பதினொன் றவைபவ பாலவ
கௌலவ தைதுலை கரசை வனசை
பத்திரவா சகுனி சதுர்ப்பாத நாகவா
கிமித்துக் கினமெனக் கிளக்குப கணிதர். (883)

நதிபதி னொன்று மவைகங்கை யாதி
யேமொடு சிந்து தாமிர பருணி
துங்க பத்திரி கிருட்டிணி யென்ப. (884)

கடைய மயிராணி கருதிய வாடன்
மரக்கால் விந்தை பரலவை திருவாட
லல்லியங் கும்ப மல்லரி யாட
குடைதுடி யிரண்டுங் குமா னாடல்
கொட்டிபாண் டரங்க மரனுடை யாட
காம னாடல் பேடெனக் கரைவ
ரிவைகள் பதினோ ராட லென்மனார். (885)

(பன்னிரு பொருள்)

இராசி பன்னிரண் டாமவை மேட
மிடப மிதுனங் கடகஞ் சிங்கங்
கன்னி துலாம்விருச் சிகமொடு தனுசு
மகரங் கும்ப மீன மென்ப. (886)

இராசிகள் நாழிகை யறுப தாமவை
தனித்தனி மீன மேடநா லேகா
விடபங் கும்ப நான்கே முக்கான்
மிதுனஞ் சிங்கம் விருச்சிக மகர
மைந்தே கால்கள் கடகந் தனுசுக
ளைந்தரை கன்னி துலாமைந் தென்ப. (887)

உயிர்மெய் வேதனை பன்னிரண் டாமவை
யனல்சீத மசனி புனல்வாத மாயுதம்
விடமொடு மருந்து பசிதா கம்பிணி
முனிவ ருமை யென்ன மொழிகுப. (888)

சூரியர் பன்னிரு வோரவர் தாத்துரு
சக்கர னரியமன் மித்திரன் வருண
னஞ்சுமா னிரணியன் பகவரன் றிவச்சுவான்
பூடன் சவித்திரு துவட்ட னிவர்களே
சித்திரை யாதி மாதமொவ் வொன்றிற்
சூரிய துவாதசா தித்தரா முறையே. (889)

மாதம் பன்னிரண் டாமவை சித்திரை
வைகாசி யானி யாடி யாவணி
புரட்டாசி யைப்பசி கார்த்திகை மார்கழி
தைமாசி பங்குனி யென்னச் சாற்றுப. (890)

கொடுந்தமிழ் நாடு குலவுபன் னிரண்டாந்
தென்பாண்டி குட்டங் குடங்கற் காவேண்
பூழி பன்றி யருவா வருவா
வடதலை சீத மலாடு புனனாடே. (891)

(பதின்மூன்று பொருள்.)

தமிழ்நா டுகள்பதின் மூன்று மவைசெந்
தமிழ்நா டொன்று கொடுந்தமிழ் நாடு
பன்னிரண டெனவிரு பாற்படு மென்ப. (892)

(பதினான்கு பொருள்.)

பதினான்கு வித்தைகள் பகரில் வேதநான்
கங்க மாறுமீ மாஞ்சை தருக்கம்
புராண மிருதி யென்னப் புகலுவர். (893)

உலகம் பதினான் காமவை கீழுல
கேழு மேலுல கேழிரு வகையுமே. (894)

கீழுல கேழவை யதல விதல
சுதல தராதல ரசாதல மகாதல
பாதாள லோக மென்னப் பகருவர் (895)

மேலுல கேழவை பூபுவ சுவசன
தவமகா சத்திய லோக மென்ப. (896)

தயாவி ருத்தி பதினான் காமுயிர்க்
காமுப காரமேழ் கல்வி பயிற்றுத
றுயரந் தீர்த்த றண்டத்தி னீக்க
லையந் தேற்றல் பிறர்குணத் தழுக்கா
றின்றிப் பொறுத்தல் பிறராற் செயப்படுந்
தீமையை மறந்து நன்றியை நினைத்தல்
பிறர்க்குவேண் டித்தெய் வம்வழி படலே. (897)

உடற்குப காரமே ழாவன வுணவு
பான முடையிட மடிமை காத்தல்
சிறைநோய் பயந்தீர்த் தல்பிண மடக்கலே. (898)

முகம்பதி னான்கா மவையஞ் சிதமுக
மதோமுக மாகம் பிதம்பிர கம்பித
மாலோ லிதமுலோ லிதமுத் துவாகிதஞ்
சமஞ்சௌளந் தாந்துதம் விதுதம்ப ராவிருத்தம்
பரிவா கிதந்திரச் சீன மென்ப. (899)

அஞ்சித முகமா வதுவருத் தத்தை
யாற்று திருதோண் மேற்றலைச் சாய்த்தலே (900)

அதோமுகந் தலையைக் குனிந்து பார்த்தலே (901)

ஆகம் பிதமுகஞ் சம்மதித் தற்கு
மேல்கீழ் தலையை யாட்ட லென்ப. (902)

பிரகம் பிதமுக மதிச யத்தினாற்
சிறிதாத் தலையை யாட்ட லென்ப. (903)

ஆலோ லிதமுக மாசையான் மலர்ந்த
முகமா யொருவனை யழைத்த லென்ப. (904)

உலோலி தமுகந் துயரா லொருதோண்
மேற்றலை சாய்த்த லென்ன விளம்புப. (905)

உத்துவா கிதமுக மண்ணாந்து பார்த்தலே. (906)

சமமுகந் தலைபசை யாம லிருத்தலே. (907)

சௌந்தா முகமிகு மகிழ்ச்சியான் மலர்தலே. (908)

துதமுக மாவது வேண்டா மைக்கு
வலமிடந் தலையை யாட்ட லென்ப. (909)

விதுத முகமஃ திணவணி முதலிய
வேண்டா மைக்கு மிகச்சிர நடுக்கலே. (910)

பராவிருத் தமுகம் வேண்டா மைக்கு
பக்கந் திருப்ப லென்னப் பகருவர். (911)

பரிவா கிதமுக மதத்தா லொருபுறஞ்
சாய்ந்த தலையைச் சிறிதாச் சுற்றலே. (912)

திரச்சீ னமுக நாணமுற் றூட்டலே. (913)

சுவாயம்பு சுவரோ சிடனுத் தமனுயர்
தர்மச னிரேவதன் சாட்குடன் வைவச்
சுதன்சூ ரியசா வர்ணி யோடு
தக்கசா வர்ணி பிரமசா வர்ணி
தர்மசா வர்ணி யுருத்திரசா வர்ணி
யுரோச்சியன் பௌம னிவர்பதி னால்வர்
மனுக்க ளென்ன வழுத்துங் கூர்ம
புராண மதனிற் புகலு மிவரு
ளுரோச்சியன் பௌம னெனவிரு பெயர்க்கு
மிரௌச்சியன் பௌச்சிய னெனவே றியம்புவர். (914)

(பதினைந்து பொருள்.)

திதிபதி னைந்தா மவைகள் பிரதமை
துவிதியை திரிதியை சதுர்த்தி பஞ்சமி
சட்டி சத்தமி யட்டமி நவமி
தசமி யேகா தசிதுவா தசியே
திரயோ தசிசதுர்த் தசியிவற் றோடு
பௌர்ணி மையல தமாவா சியாமே. (915)

திதியின் பகுப்பைந் தலைநந்தை பத்திரை
சயையிருத் லதையுடன் பூரணை யாமே
நந்தை தொடங்கிப் பிரதமை யாதியை
மும்மடங் கெண்ணி மொழியப் படுமே. (916)

திருமா லவதா ரம்பதி னைந்தாஞ்
சனகன் சனந்தனன் சனாதன னோடு
சனற்கு மாரன் னரநா ராயண
னயக்கி ரீவன் றத்தாத் திரேயன்
மோகினி யாக பதியொடு வியாதன்
றன்வந்திரி புத்தன் கபில னிடப
னாரத னென்ன நவிலுவர் முனிவர். (917)

(பதினாறு பொருள்.)

உபசா ரம்பதி னாறு மவைக
டவிசினை யளித்தல் கால்கழு நீர்தால்
கைகழு நீர்தால் முக்குடி நீர்தா
னீராட்ட லாடை சாத்தன் முப்புரிநூ
லணித றேய்வை பூசல்பூச் சாத்தன்
மஞ்ச ளரிசி தூவன் னறும்புகை
காட்டல் விளக்கிடல் கர்ப்பூர மேற்ற
லமுத மேந்த லடைகாய் தருதன்
மந்திர மலரா லருச்சித் தலுமே. (918)

சைவம் பதினா றுமவை யூர்த்த
சைவ மநாதி சைவ மாதி

சைவ மகாசைவம் பேத சைவ
மபேத சைவ மந்தர சைவங்
குணசைவ நிர்க்குண சைவ மத்துவா
சைவம் யோக சைவ ஞான
சைவ மணுச்சை வங்கிரியா சைவ
நால்வகைச் சத்திநி பாதச் சைவஞ்
சுத்தசை வமெனச் சொல்லுவ ரறிஞர். (919)

பேறு பதினா றவைபுகழ் கல்வி
வலிவெற்றி நன்மக்கள் பொன்னென் னல்லூழ்
நுகர்ச்சி யறிவழகு பெருமை யிளமை
துணிவு நோயின்மை வாழ்நா ளென்ப. (920)

சத்திகள் பதினா றாமவை சயையொடு
விசயை யசிதை பராசிதை மேலா
நிவிர்த்தி பிரதிட்டை வித்தியை சாந்தி
யிந்திகை தீபிகை ரேசிகை மோசிகை
வியோம ரூபை யனந்தை யநாதை
யநாசிரு தையென வறைகுவ ருணர்ந்தோர் (921)

(பதினெண் பொருள்.)

கணம்பதி னெட்டவை யமரர் சித்த
தாரகை தைத்தியர் கருடர் கின்னரர்
நிருதர் கிம்புருடர் கந்தருவ ரியக்கர்
விஞ்சையர் பூதர் பைசாசர் சாரணர்
முனிவ ருரக ராகாய வாசிகள்
போக பூமிய ரென்னப் புகலுப. (922)

தருமநூல் பதினெட் டாமவை தாமநு
பிரகற் பதியமந் தக்கங் கௌதம
மங்கிரம் யாஞ்ஞவல் லியம்பிர தேசஞ்
சாதா தபம்பரா சரஞ்சம் வர்த்த
முசனஞ் சங்கம் லிகித மத்திரி
விட்டுணு வாபத் தம்ப மாரித
மிவ்வை திககரு மங்களை யியம்புஞ்
சங்கஞ் சங்க லிதமென வும்படும். (923)

மநுவா மிருதி கிருத யுகக்கே. (924)

கௌதம மிருதி திரேதா யுகக்கே. (925)

சங்கலித மிருதி துவாபர யுகக்கே. (926)

பராசர மிருதி கலியுகத் திற்கே. (927)

புராணம் பதினெட் டவைசிவ புராணம்
பத்து விட்டுணு புராணம் நான்கு
பிரம புராண மிரண்டு சூரிய
னக்கினி புராண மொவ்வொன் றாமே. (928)

சிவபு ராணம்பத் தாமவை யெவையெனிற்
சைவங் காந்த மிலிங்கங் கூர்மம்
வாமனம் வராகம் பௌடிக மச்ச
மார்க்கண் டேயம் பிரமாண்ட மென்ப. (929)

விட்டுணு புராண நான்கா மவைக
ணாரதீ யம்பா கவதங் காருடம்
வைணவ மென்ன வழங்கு மென்ப. (930)

பிரம புராண மிரண்டா மவைகள்
பிரமம் பதும மென்னப் பேசுப. (931)

சூரிய புராணம் பிரமகை வர்த்தமே. (932)

அக்கினி புராண மாக்கி னேயமே. (933)

காமப் பகுதியிற் கற்பிய லீரொன்
பான்வகை யாமவை பிரிவாற் றாமை
படர்மெலிந் திரங்கல் கண்விதுப் பழிதல்
பசப்புறு பருவா றனிப்படர் மிகுதி
நினைந்தவர் புலம்பல் கனுநிலை யுரைத்தல்
பொழுதுகண் டிரங்க லுறுப்புநல னழித
னெஞ்சொடு கிளத்த னிகழ்நிறை யழித
லவர்வயின் விதும்பல் குறிப்பறி வுறுத்தல்
புணர்ச்சி விதும்ப னெஞ்சொடு புலத்தல்
புலவிபுலவி நுணுக்கமூட
லுவகையென்ன வோதுவர்புலவர். (934)

யாக்கைக் குறுகுற் றம்பதி னெட்டவை
பசிநீர் வேட்டல் பயஞ்சின முவகை
வேண்டல் நினைப்பு நரைநோ யுறக்க
மரணம் பிறப்பு மதமின்ப மதிசயம்
வியர்த்தல் கேதங் கையற வென்ப
ரிவற்றுட் சிற்சில பேதமா வியம்புவர். (935)

நார சிங்க முதலுப புராணம்
பதினெட் டாகப் பகருவர் புலவர்
பிங்கல நிகண்டிற் பேசினர் காண்கவே. (936)

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந்
துளுவங் குடகங் கொங்கணங் கன்னடங்
கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்
கங்க மகதங் கடாரங் கௌடங்
குசலந் திராவிடம் பதினெண் பாடையே. (937)

சோதிட் டோம மக்கினிட் டோம
முத்தியஞ் சோடசீ வாச பேய
மதிராத் திரமிகு சோம யாகஞ்
சாதுர் மாசியம் பௌத்திர மேதஞ்
சௌத்தி ராமணி புண்ட ரீக
மங்கி சயனுய ரிராச சூய
மசுவ மேதம் விச்சுவ தித்து
பிரம மேதம் பிரணவ மேதம்
பசுபந் தம்மெனப் பதினெட் டியாகமே. (938)

ஓடாவி கன்னார் குயவர் கொல்லர்
கோவியர் சிவியார் தச்சர் தட்டார்
நாவிதர் மாலைக் காரர் பாணர்
பள்ளர்மூ வாணிபர் வண்ணார் வலையர்
வெட்டியான் பதினெண் குடிக ளாமே. (939)

அகத்தியர் போகர் கைலாச நாதர்
சட்ட முனிகோ ரக்கர்திரு மூலர்
நந்தி கூன்கணர் கொங்கணர் மச்ச

முனிவா சமுனி கூர்ம முனியுடன்
கமல முனியிடைக் காடர் புண்ணாக்
கீசர் சுந்தரா னந்த ருரோமச
முனிபிர மமுனி பதினெண் சித்தரே. (940)

பதினான்கு வித்தை யுடன்மீ மாஞ்சை
நியாய மிருதி நிகழும் புராண
மிவையட் டாதச வித்தை யென்ப. (941)

எருக்கு கண்டங் கத்திரி காந்தை
கறிமுள் ளிகுமிழ் கடுங்கொடி வேலி
சங்கங் குப்பி தகுசிற் றாமலி
தழுதாழை தூதுளை சாற்றுநன் னாரி
பாதிரி நொச்சி பசியமா விலிங்கை
முருங்கை பேரா மல்லி வில்வம்
வேர்க்கொம் பென்ன விளம்பிய விவைகள்
பதினெண் மூலமாப் பகருவர் மருத்துவர். (942)

கடன்கோ டல்லுடன் கருதிய வுபநிதி
கூடி மேம்படல் குறித்துநல் கியதை
நல்காமை யொப்பிப் பணிசெய் யாமை
கூலி கொடாமை குலவிய வுடையா
னல்லாது விற்றல் விற்றுக் கொடாமை
கொண்டுள மொப்பா மையுடன் கட்டுப்
பாடு கடத்தல் பகர்நில வழக்கு
மாத ராடவர் தருமம் வகுக்குந்
தாய பாகந் தருவன் செய்கை
சொற்கொடு மையுடன் றோன்று தண்டக்
கொடுமை சூது கூறு தொழிந்தன
வட்டா தசவிவ கார பதங்களே. (943)

(இருபது பொருள்.)

முத்துச் சனிக்கு மிடமிரு பானவை
மதிபுயல் சங்கு சிப்பிமீ னந்து
முதலை யுடும்பு தாமரை வாழை

கழுகு கரும்பு செந்நெல் மூங்கில்
யானைக் கொம்பு பன்றிக் கொம்பு
பசுப்பன் னுகங் கொக்கு மாதரின்
கழுத்திவை யென்னக் கழறுவர் புலவர். (944)

(இருபத்தோரு பொருள்.)

அரச சின்ன மிருபத் தொன்றவை
முடிகுடை கவரி தோட்டி முரசு
சக்கரம் யானை கொடிமதில் தோரண
நீர்க்குட மாலை சங்குகடன் மகர
மிணைக்கய லாமை சிங்கந் தீப
மிடப மாசன மென்மனூர் புலவர். (945)

வள்ள லிருபத் தொருவ ராமவர்
முதலிடை கடையென மூவகைப் படுவரே. (946)

முதல்வள லெழுவர் காரி சகரன்
விராடன் செம்பியன் றுந்து மாரி
நளனி ருதியென நவிலுவர் புலவர். (947)

இடைவள லெழுவ ரக்குர னசந்திமா
னந்திமான் கன்னன் சாந்தன் சிசுபா
லன்வக் கிரனென வறைகுவர் புலவர். (948)

கடைவள லெழுவ ரெழினி யோரி
யாயொடு நள்ளி பாரி பேகன்
மலைய னென்ன வழங்குவர் புலவர். (949)

(இருபத்திரண்டு பொருள்.)

மங்கலச் சொல்லிரு பத்திரண் டாமவை
திருயானை தேர்பரி கடன்மலை மணிபூ
புகழ்சீர் மதிநீ ரெழுத்து பொன்னிரஞ்
சொல்புய லுலகங் கங்கை யமுதம்
பரிதி நிலமிவற் றின்பரி யாய
நாமமு மாமென நவிலுவர் புலவர்; (950)

(இருபத்தினான்கு பொருள்.)

வெகுண்டோ னைய முற்றோன் சோம்பினோன்
களித்தோ னுவந்தோ னழுக்கா றுடையோ
னின்ப முற்றோன் றெய்வ முற்றோ
னஞ்ஞை யுற்றோ னவினுடம் பட்டோ
னுறங்கினோன் றுயிலை யுணர்ந்தோன் செத்தோன்
மழைபெயப் பட்டோன் பனித்தலைப் பட்டோன்
வெயிற்றலைப் பட்டோ னூண முற்றோன்
வருத்த முற்றோன் கண்ணோ வுற்றோன்
றலைநோ வுற்றோ னழற்றிறம் பட்டோன்
சீத முற்றோன் வெப்ப முற்றோ
னஞ்சுண் டோனவி நயமிரு பானுன்
கவிநய மென்பது பாவக மாமே. (951)

(இருபத்தேழு பொருள்.)

நட்சத் திரமிரு பத்தே ழாமவை
அசுபதி பரணி கார்த்திகை ரோகணி
மிருகசீ ரிடந்திரு வாதிரை புனர்பூசம்
பூசமா யிலிய மகம்பூ ரமுத்திர
மத்தஞ் சித்திரை சோதி விசாகம்
மனுடங் கேட்டைமூ லம்பூ ராட
முத்திரா டந்திரு வோண மவிட்டஞ்
சதயம் பூரட் டாதி யுத்திரட்
டாதிரே வதியென வறைகுவர் கணிதரே. (952)

யோக மிருபத் தேழா மவைகள்
விட்கம் பந்திகழ் பிரீதி யாயுண்மான்
சௌபாக் கியஞ்சோ பனமதி கண்டஞ்
சுகர்மந் திருதி சூலங் கண்டம்
விருத்தி துருவம் வியாகத மரிடணம்
வச்சிரஞ் சித்தி விதிபாதம் வரியான்
பரிகஞ் சிவஞ்சித் தஞ்சாத் தியஞ்சுபஞ்
சுப்பிரம் பிரமமைந் திரமவை திருதியே. (953)

(இருபத்தெண்பொருள்).

சிவாகம மிருபத் தெட்டா மவைகள்
காமிகம் யோகசஞ் சிந்தியங் காரண
மசிதந் தீப்தஞ் சூக்குமஞ் சகச்சிர
மஞ்சுமான் சுப்பிர பேதம் விசய
நிசுவா சஞ்சுவா யம்புவ மனலம்
வீர மிரௌரவம் மகுடம் விமலஞ்
சந்திர ஞான முகவிம் பம்புரோற்
கீதம் லளிதஞ் சித்தஞ் சந்தான
சருவோத் தம்பா ரமேச்சுரங் கிரணத்
துடன்வா துளமென வோ துவ ருணர்ந்தோர். (954)

இருபத் தெட்டுப் பேத நரகம்
பாவப் பயனனு பவிக்கும் போகமாந்
தமமே யந்த தமமோ டிரௌரவ
மகாஅ ரௌரவங் கும்பி பாகங்
கால சூத்திர மசிபத் திரவனங்
கிருமி பட்சண மந்த கூபஞ்
சந்தங் கிசஞ்சன் மலியே சூர்மி
வைதா ணிகொடும் பிராண ரோதம்
வைசசம் லாலா பட்சணம் வீசி
சார பட்சணம் வச்சிர கண்டம்
காரம் பிரசித பட்சணங் கடிய
சூலப் பிராந்தந் தொக்க விதோகந்
தந்த சூகம் பாரியா வருத்தந்
திரோத னஞ்சூ சிமுகம் பீடண
மென்பன வாமிவற் றுட்சில பெயரை
வேறு கூறலு முண்டென விளம்புப. (955)

(முப்பது பொருள்.)

தோற்கருவி முப்பது சொல்லுங் காலை
பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை

திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி
யந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசிற குணிச்சம் விரலேறு பாகந்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே
சிலப்பதி கார வுரையிற் றெரிகவே. (956)

(முப்பத்தொரு பொருள்.)

முனிவர் முப்பத் தொருவ ரகத்திய
னத்திரியாங் கிரச னிரணிய மாமுனி
யுரோம னேரண்டன் கலைக்கோட்டன் காசிபன்
கௌதமன் சத்தகூன் சச்சி தானந்தன்
சமதக்கினி சனகன் சனற்கு மாரன்
சுகன்ற தீசி துருவாச னாரதன்
பதஞ்சலி பரத்து வாசன் பராசரன்
பற்பன் பிருகு பிணுகி புலத்தியன்
மார்க்கண்டன் வசிட்டன் வான்மீகன் விசுவா
மித்திரன் வியாக்கிர பாதன் வியாசனே. (957)

(முப்பத்திரண்டு பொருள்.)

அறமுப் பத்தி ரண்டா மவைக
ளாதுலர் சாலை யோதுவார்க் குண்டி
யறுசம யத்தார்க் குணவு பசுவூண்
சிறைச்சோ றையந்தின் பண்ட நல்க
லறவைச் சோறு மகப்பெறு வித்தன்
மகவு வளர்த்தல் மகப்பால் வார்த்த
லறவைப் பிணஞ்சுட லறவைத் தூரியஞ்
சுண்ணநோய் மருந்து வண்ணார் நாவிதர்
கண்ணாடி காதோலை கண்மருந் துதலைக்
கெண்ணெய்பெண் போகம் பிறர்துயர் காத்த

றண்ணீர்ப் பந்தன் மடந்தடஞ் சோலை
யாவுரிஞ் சுதறி விலங்கிற் குணவு
விலைகொடுத் துயிரைக் காத்த லேறு
விடுத்தல் கன்னிகா தான மென்னப்
பிங்கல நிகண்டிற் பிறங்கச் சொற்றனர்
காஞ்சிப் புராணங் கழுவாய்ப் படலந்
தனிற்சில வேறு சாற்றினர் காண்கவே. (958)

இராக முப்பத் திரண்டா மவைகள்
பைரவி தேவக் கிரியை மேக
ரஞ்சி குறிஞ்சிபூ பாளம்வே ளாவளி
மலகரி பௌளிசீ ராகமிந் தோளம்
பல்லதி சாவேரி படமஞ் சரிதேசி
யில்லிதை தோடி வசந்த மிராமக்
கிரியை வராளி கைசிக மாளவி
நாரா யணிகுண் டக்கிரியை கூர்ச்சரி
பங்காளந் தன்னியாசி காம்போதி கௌளி
நாட்டைதே சாட்சரி காந்தாரி சார்ங்கமே. (959)

புருட ராக மெட்டவை பைரவி
பூபாளஞ் சீபட மஞ்சரி வசந்தம்
மாளவி பங்காள நாட்டை யென்ப. (960)

இராகத் தின்சாதி நான்கிப் பைரவி
யாதி யிவ்விரண் டாகு முறையே. (961)

இராகத்தின் தேவதை யெட்டா குமவை
யீசன் மால்சர சுபதி யிலக்குமி
சூரிய னாதன் விநாயகன் றும்புரு
விவர்பை ரவிமுத லாணெட் டினுக்கே. (962)

பெண்ணிரா கங்க ளிருபத்து நான்கவை
பைரவி யாதிய புருடரா கங்க
ளொவ்வொன் றைபடுத் தேவக் கிரியை
முதலிய நிரையே மும்மூன் றுமவை

யவற்றின் மனைவிக ளாமென மொழிப
இவையன் றிப்பல வகைப்பட வழங்கு
மிராகம் பலவுள வென்மனு ரிசையோர். (963)

உபநிட தம்முப் பத்திரண் டாமவை
சிருத் திரம்பி ரகதா ரண்ணியஞ்
சுவேதாசு வதரங் கைவல் லியமே
காலாக் கினிகடம் வல்லிகாத் தியாயனம்
பிரமநா ராயண மங்கிசம் பரமாங்
கிசம்பாற் கரம்பிரம பிந்தோ டாருணி
யமிர்த பிந்து பகுவ பஞ்சம்
பிரம சாபாலந் தேசோ பிந்து
வார்சியா யநீயம் போதாய நீய
மாசுவ லாயநீ யஞ்சாங் கியாயநீ
யம்வா சிநாயநீ யஞ்சௌன கியஞ்
சிவசங் கற்பஞ் சிரவணம் பாரா
கங்கிம் புரோடிய மாண்டூக முண்டிர
மௌண்டிர மென்ன வழங்கப் படுமே. (964)

சிற்ப நூன்முப் பத்திரண் டாமவை
விச்சுவ தருமம் விச்சு வேசம்
விச்சுவ சாரம் விருத்தந் தாவட்ட
நளமய மனுமான் பானுகற் பாரியஞ்
சிருட்டமா னசாரம் வத்துவித் தியாபதி
பாரா சரிய மருடிகஞ் சைத்திகம்
வாத்து போதம் வித்தார மிந்திரம்
வச்சிரஞ் சௌமம் விச்சுவ காசிபம்
மகதந்திரம் விசாலஞ் சித்திரங் காபில
கால பூபநா மசங்கி தையுடன்
சாத்திகம் விச்சுவ போதமா திசாரம்
வெருச்சுரு மான பேதமா மென்ப. (965)

இலவங்கம் பச்சிலை கச்சோல மேலங்
குலவிய நாகணங் கோட்ட நாகந்

தருமதா வரிசிதக் கோலநன் னுரி
வெண்கோட் டங்கத் தூரிநல் வேரி
யிலாமிச் சத்துட னிசைகண்டில் வெண்ணே
கடுநெல்லி தான்றி கருநூங் துத்தம்
வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சி
சயிவேகம் புழுகு தகுபுனைத் தாது
புலியுகிர் சரளங் தமாலம் பதுமுக
நுண்ணேலம் வகுள மிசைகொடு வேரி
முப்பத் திரண்டோ மாலிகை யென்ப. (966)

(முப்பத்துமூன்று பொருள்.)

தேவர்முப் பத்து மூவரா தித்தர்
பன்னிரு வோர்மருத் துவரிரு வோர்க
ளுருத்திரர் தாம்பதி னொருவரெண் வசுக்களே
யிவர்க்குத் தலைவரு முப்பத்து மூவரே. (967)

(முப்பத்தைந்து பொருள்).

அலங்கார முப்பத் தைந்தா மவைகள்
தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்னர் விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை விபாவனை
யொட்டே யதிசயந் தற்குறிப் பேற்ற
மேது நுட்ப மிலேச நிரனிறை
யார்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயித முதாத்த
மரிதுண ரவநுதி சிலேடை விசேட
மொப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோத
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதர்சனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்துச் சங்கீ ரணம்பா விகமே (968)

(முப்பத்தாறுபொருள்.)

ஆன்ம தத்துவ மவையிரு பத்துநான்
கினிய வித்தியா தத்துவ மேழு

சிவதத் துவமைந் தாகத் தத்துவ
முப்பத் தாறென மொழிந்தனர் புலவர். (969)

(முப்பத்தெண்பொருள்.)

கருதுமுப் பானெண் கலைகளாவன
சிவபூ சையினைச் செய்யுங் காலை
சதாசிவ னைமுகந் தன்னிற் பனவாக்
கொளப்படுங் கிரியா சத்திக ளாகு
மீசான முகத்தி லினியவைங் கலைக
டற்புருட முகத்திற் சார்கலை நான்கா
மகோர முகத்தி லவிர்கலை யெட்டு
வாமதே வத்தில் வருபதின் மூன்று
கலைகள் சத்தியோ சாதத்தி லெட்டுக்
கலைக ளாமெனக் கரைகுவ ருணர்ந்தோர். (970)

(ஐம்பத்தாறுபொருள்.)

தேய மைம்பத் தாறு மவைக
ளங்க மருண மவந்தி யாந்திர
மிலாடம் யவன மொட்டியங் கருசங்
கலிங்கங் கன்னடங் கனுடங் காசங்
காசிமீ ரங்காந் தாரங்காப் போசங்
கிராடங் குருகு குடகங் குந்தளங்
குருகு விந்தங் கூர்ச்சரங் கேகயங்
கேரளங் கொங்கணங் கொல்லங் கோசலஞ்
சகஞ்சவ் வீரஞ் சாலவஞ் சிங்களஞ்
சிந்து சீனஞ் சூர சேனஞ்
சோழஞ் சோனகந் திராவிடந் துளுவந்
தெங்கண நிடதநே பாளம்பாஞ் சாலம்
பப்பரம் பல்லவம் பாண்டியம் புலிந்தம்
போட மகத மச்சமராட
மலையாள மாளவம் யுகந்தாம் வங்கம்
வங்காளம் விதர்ப்ப மென்ன வழங்குப. (971)

(அறுபதுபொருள்.)

வருட மறுபதா மவைகள் பிரபவ
விபவ சுக்கில பிரமோ தூத
பிரசோற் பத்தியாங் கீரச சீமுக
பவயுவ தாது வீசுர வெகுதானிய
பிரமாதி விக்கிரம விசுசித் திரபானு
சுபானு தாரண பார்த்தி பவிய
சருவ சித்து சருவ தாரி
விரோதி விகிர்தி கரநந்தன விசய
சயமன் மதந்துன் முகியேர் விளம்பி
விளம்பி விகாரி சார்வரி பிலவ
சுபகிருது சோப கிருது குரோதி
விசுவரவசு பராபவ பிலவங்க கீலக
சௌமிய சாதாரண விரோதி கிருது
பரிதாபி பிரமா தீச வானந்த
விராக்கத நளபிங் களகால யுத்தி
சித்தார்த்தி யிரௌத்திரி துன்மதி துந்துபி
யுருத்திரோற் காரி யிரத்தாக்கி குரோதன
வக்கய வென்ன வறைப் படுமே. (972)

(அறுபத்துநான்குபொருள்.)

கலைஞா னம்மறு பத்துநான் காமவை
யக்கர விலக்கண மிலிகிதங் கணிதம்
வேதம் புராணம் வியாகரண மினிய
நீதி சோதிட தரும யோக
மந்திர சகுன சிற்ப வைத்திய
வுருவசாத் திரமிதி காசங் காவிய
மலங்கார மதுர பாடன நாடக
நிருத்தஞ் சத்தப் பிரமம் வீணை
வேணு மிருதங்கந் தாள மற்றுரை
யத்திர கனகவி ரதகச வசுவ
விரத்தின பூமிப் பரீக்கைசங் கிராம

விலக்கண மல்ல யுத்தமா கருடண
முச்சா டனம்வித்து வேடணம் மதன
சாத்திர மோகனம் வசீகரண மற்று
மிரசகாந் தருவபை பீல கௌத்துக
தாதுவா தங்கள் காருட நட்ட
முட்டியா காயப் பிரவே சம்மா
காயக மனம்பர மாகாயப் பிரவேச
மதிரிசி யமிந்திர சால மகேந்திர
சால மக்கினி சாலம்வா யுதிட்டி
வாக்கு சுக்கிலங் கன்னங் கட்சத்
தம்ப மவத்தைப் பிரயோக மாமே. (973)

(தொண்ணூற்றாறு பொருள்.)

தத்துவந் தொண்ணூற் றாறு மவைக
ளகக்க ருவிமுப் பத்தா றுபுறக்
கருவி யறுப தாகக் கரைந்தன
ரிவைதத் துவக்கட் டளைக ளியம்புமே. (974)

பிரபந் தந்தொண் ணூற்றா றாமவை
சாதகம் பிள்ளைக் கவியே பரணி
கலம்பக மகப்பொருட் கோவை மற்றை
யைந்திணைச் செய்யுள் வருக்கக்கோவை
மும்மணிக் கோவை யங்க மாலை
யட்ட மங்கல மநுராக மாலை
யிரட்டை மணிமாலை யிணைமணி மாலை
நவமணி மாலை நான்மணி மாலை
நாம மாலை பலசந்த மாலை
பன்மணி மாலை பகர்மணி மாலை
புகழ்ச்சி மாலை பெருமகிழ்ச்சி மாலை
வர்க்க மாலை மெய்க்கீர்த்தி மாலை
காப்பு மாலை வேனில் மாலை
வசந்த மாலை தாரகை மாலை
யுற்பவ மாலை தானை மாலை

மும்மணி மாலை தண்டக மாலை
வீரவெட்சி மாலை வெற்றிக் கரந்தை
மஞ்சரி போர்க்கெழு வஞ்சி சிறந்த
வரலாற் றுவஞ்சி செருக்கள வஞ்சி
காஞ்சி மாலை நொச்சி மாலை
யுழிஞை மாலை தும்பை மாலை
வாகை மாலைவா தோரண மஞ்சரி
யெண்செய் யுட்டொகை நிலைச்செய் யுள்ளுய
ரொலிய லந்தாதி பதிற்றந் தாதி
நூற்றந் தாதி யுலாவு லாமடல்
வளமட லொருபா வொருபஃ திலங்கு
மிருபா விருபஃ தாற்றுப் படையே
கண்படை நிலையே துயிலெடை நிலையே
பேரின் னிசையே யூரின் னிசையே
பேர்நே ரிசையே யூர்நே ரிசையே
யூர்வெண் பாவே விளக்கு நிலையே
புறநிலை கடைநிலை கையறு நிலையே
தசாங்கப் பத்துத் தசாங்கத் தயலே
யரசன் விருத்த நயனப் பத்து
பயோதரப் பத்து பாதாதி கேசங்
கேசாதி பாத மலங்கார பஞ்சகங்
கைக்கிளை மங்கல வள்ளை தூது
நாற்பது குழமகன் முண்டகம் பதிகஞ்
சதகஞ் செவியறி வுறூஉ மற்று
வாயுறை வாழ்த்துப் புறநிலை வாழ்த்து
பவனிக் காத்தல் குறத்திப் பாட்டே
யுழத்திப்பாட் டூசே லெழுகூற் றிருக்கை
கடிகை வெண்பா சின்னப் பூவே

விருத்த விலக்கண முதிகாஞ் சியுட
னியன்மொழி வாழ்த்துப் பெருமங் கலமே
பெருங்காப் பியஞ்சிறு காப்பிய மாமே. (975)

சாதக மாவது திதிவார நாண்மீன்
யோகங் கரண மோரை கிரக
மிவ்வே ழுறுப்பி னிலைமையுஞ் சோதிட
நூலா லுணர்ந்து நன்கவை யமைத்தே
யவற்றாற் றலைவற் குறுவன கூறலே
யேனைய வெல்லா மியற்றமிழ் நூலினு
மகரா தியினு மறைந்தன காண்கவே. (976)

(நூறு டோருள்.)

அலங்கா ரமினு நூறு மென்ப
ரலவசங் கிராலோ கத்திற் காண்கவே. (977)

சொல்லிய வல்லன தொல்காப் பியங்களிற்
கண்டுணர்ந் திடுதல் கற்றோர் கடனே. (978)

முற்றிற்று.

---

# அநுபந்தம்.

## இருபோருள்.

இருநிதி பதும நிதிசங் கநிதி. (1)

## முப்பொருள்.

தேசி வடுகு சிங்கள மென்ன
மெய்க்கூத்து மூவகை விளம்பிடு மிவைகண்
மெய்த்தொழிற் கூத்தா தலினான் மெய்க்கூத்
தாமெனுஞ் சிலப்பதி கார வுரையே. (2)

வாத்தியக் கூறுமூ வகையா மென்ப
கிதாங் கமுமேற் கிளர்கிருத் தாங்கமு
மூபயாங் கமுமென வுரைக்குமூன் றிற்கும்

வாசித் திடும்வாத் தியங்க ளாமெனச்
சிலப்பதி கார வுரையிற் றெரித்தனர். (3)

அவைகண் மூன்று மிகுதி யொப்புத்
தாழ்வா மென்னச் சாற்றின ருணர்ந்தோர். (4)

நூலா சிரிய ருரையா சிரியர்
போதகா சிரிய ராசிரியர் மூவ
ரிலக்கணக் கொத்தி லியம்பினர் காண்க. (5)

நாற்போருள்.

நால்வகைச் சத்திக ணவிலுங் காலை
பார்வதி துர்க்கை பகர்கா டுகிழாள்
விட்டுணு வென்ன விளம்பினர் கந்த
புராண மகாசாத் தப்பட லத்தே. (6)

மாயா காரியம் வகுப்பர் நால்வகை
யவைதநு கரண புவன போகமே. (7)

நால்வகை யொடுக்க நவிலுங் காலை
நித்தியப் பிரளய நிகழுநை மித்திகப்
பிரளயம் பிராகிரு தப்பிர ளயமுட
னாத்தி யந்தப் பிரளய மாமெனக்
கூர்ம புராணங் கூறிய தென்ப. (8)

பேரியாழ் மகரயாழ் பேணுஞ் சகோடயாழ்
செங்கோட் டியாழெனச் செப்புநால் வகையாழ். (9)

மந்தர மந்தந் தீவிரந் தீவிர
தரமென நால்வகைச் சத்திநி பாதஞ்
சித்தியா ருரையிற் செப்பினர் காண்க. (10)

தன்மை யெழுத்துந் தரும்வடி வெழுத்து
பெயரெழுத் தோடு பேசு முடிவெழுத்
தெனநால் வகையெழுத் தியம்பும் பிங்கலம். (11)

ஐந்துபொருள்.

மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனச்
சிறுபொழு தைந்துரைத் திடுமகப் பொருணூல். (12)

அந்தரான் மாச்சீ வான்மாத் தத்துவ
வான்மாப் பூதான் மாமந் திரான்மா
வெனப்பஞ் சான்மா வியம்புவர் தமிழ்ச்சொல்
லகார தியினி லறிந்து கொள்கவே. (13)

ஈசா னந்தற் புருட மகோரம்
வாம தேவஞ் சத்தியோ சாத
மிவைபஞ்ச மந்திர மெனுஞ்சித்தி யாரே. (14)

நிவிர்த்திபிர திட்டை வித்தை சாந்தி
சாந்தி யதீதை தாமைங் கலைக
ளென்னச் சித்தியா ரியம்பிடு மென்ப. (15)

சிந்தா மணிதிகழ் சிலப்பதி கார
மணிமே கலைவளை யாபதி குண்டல
கேசி பஞ்சகா வியமெனக் கிளத்துவர். (16)

கடுக்காய்த் தோல்கத் தூரி மஞ்ச
ணெல்லிப் பருப்பு நிகழ்வேப் பவித்து
பஞ்ச கற்பமாப் பகவர் மருத்துவர். (17)

சித்திர மூலஞ் சுக்குச் செவியர்
திப்பிலி திப்பிலி மூல மென்பன
பஞ்ச கோலமாப் பகர்ந்தனர் வைத்திய
பரிபா டையினிற் பரிந்து காண்கவே. (18)

ஐந்துமுத் திரைக ளாசா ரியர்கட்
கவைதிரு நீறக் கமணி பூணு
லுத்த ரீய முட்டி நீடஞ்
சைவ சமய நெறியிற் சாற்றின
ரின்னும் பதுமஞ் சங்க மகரஞ்
சக்கரந் தண்டந் தாமிவை ரேகை
ரூப மாக நுவலு முத்திரைமா
விரத சமயத் தோர் மேனியினிற்
றரிப்பன வென்னச் சாற்றின ருணர்ந்தோர். (19)

அகத்தியர் காசிபர் கௌசிகர் கௌதமர்
பாரத்து வாசரென் பவர்பஞ்ச முனிவ
ரிவர்கோத் திரத்தவ ராதி சைவரே. (20)

நாடக விலக்கண நவில்சந்தி யைந்து
முகம்பிர திமுகங் கருப்பம் விளைவு
துய்த்த லென்னச் சொல்லுப தமிழ்ச்சொல்
லகரா தியினி லறிந்து கொள்கவே. (21)

இன்னு மாறு கிராணி யாறெழுத்
தெழுவகை முழவுட னேழுவகை யள
வெண்வகை யாவின் கணமெட் டக்கரம்
பன்னிரு திருமுறை பன்னிரண் டாழ்வார்
குறுமுனி மாணவர் குலவுபன் னிருவர்
பதினெண் கீழ்க்கணக் கறுபத்து மூவ
ரைம்பது பாவமா வறைபஞ் சாசத்
பாவ முதலன பகருந் தமிழ்ச்சொல்
லகரா தியினி லறிந்து கொள்கவே. (22)

அநுபந்தம் முற்றிற்று.

ஆகச்சூத்திரம், கூ.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 11 | 155 | மாம். | மரம். |
| 12 | 170 | காந்து. | கரந்து. |
| ஷை | 177 | குபதான. | குபாதான. |
| 14 | 204 | மர்தத. | மர்த்த. |
| 15 | 217 | வளம்புவ. | விளம்புவ. |
| ஷை | ஷை | சதாரியே. | சாதாரியே. |
| 16 | 229 | இரக்க. | யிரக்க. |
| 20 | 286 | மாதவம். | மாவதம். |
| 25 | 356 | புகலவர். | புகல்வர். |
| 26 | 364 | ராசர்க். | ரரசர்க். |
| 28 | 387 | லெழுதிணைப். | லெழுதிணை. |
| 32 | 451 | திளுவ. | திராவிட. |
| ஷை. | ஷை | டிரங்கூர். | டிரங்கூர்ச். |
| ஷை | 458 | சக்கரம். | சக்கரந். |
| 42 | 576 | மலடுசூழ். | மலடுசீழ். |
| 43 | 579 | சிரநெறி | சிரநெற்றி. |
| ஷை | 585 | னென்பர்இவைக | னென்பரிவைக். |
| 55 | 710 | கள்ளரற். | கள்ளர்க். |
| ஷை | 713 | வினக்குக. | விளக்குக். |
| 59 | 742 | கங்மீக்ட். | கங்கேட். |
| 66 | 807 | சதுர. | சதுர். |
| 69 | 841 | கோல்விடுத்தானே | கோல்விடுத்தானை. |
| 70 | 852 | சேர்ந்துப். | சேர்த்துப். |
| 72 | 880 | ரியல்புத். | ரியல்புபத். |
| 74 | 891 | பூழீ. | பூழி. |
| 76 | 914 | தர்மச. | தாமச. |
| 77 | 915 | துவிதியை. | துதியை. |
| 78 | 923 | வியம்பர. | கியம்பர. |
| 81 | 943 | ஞெறன்று. | ஞேறன்று. |
| 82 | 948 | சாந்தன். | சந்தன். |
| 83 | 953 | சீவஞ்சித். | சிவஞ்சித். |
| 88 | 966 | சயிவேகம். | சயிலேகம். |

"செந்தமிழ்"ப்பிரசுரம் — கஉ.

ஸ்ரீ:

கடவுள் துணை

# பன்னிருபாட்டியல்

[மூலம் மட்டும்]

இரண்டாம்பதிப்பு

முன்னைச் "செந்தமிழ்"ப்பத்திராசிரியர்

திரு. ரா. இராகவையங்காரவர்கள்

பரிசோதித்தபடி.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை, மதுரை.

1951

விலை அணா—12.

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 21 | றழவெனத் | ழறவெனத் |
| ,, | 23 | மன்னுவ | மன்னுவர் |
| 7 | 3 | வென்னு | னென்னு |
| 8 | 17 | டாரு | டாகு |
| 9 | 3 | வலியன் | வலியான் |
| 17 | 21 | திருந்திச் | திருந்திய |
| 25 | 22 | ரூனுள | ரூனும் |
| 32 | 9 | திளையாள் | திளையார் |
| 53 | 4 | தொடுப்பது | தொகுப்பது |

ஸ்ரீ:

# பதிப்பாசிரியர் முன்னுரை

பாட்டியல் என்பது செய்யுளிலக்கணத்தினுள் ஒரு பிரிவாகும். இவ்விலக்கணங்கூற எழுந்த தமிழ்நூல்கள் பலப்பல. அவற்றுள் பன்னிருபாட்டியல் என்பது பன்னிரண்டு பாட்டிலக்கணம் என்று பொருள்படும். அஃது ஆகுபெயராய் வெவ்வேறாசிரியர்களால் இயற்றப்பட்ட பாட்டிலக்கணநூல் பன்னிரண்டினை உணர்த்துவதுடன் அப்பன்னிரண்டுநூல்களிலிருந்து பிற்காலத்தாரொருவர் எடுத்துத் தொகுத்த சூத்திரங்களையுடையதொரு தொகை நூலினையும் உணர்த்திநிற்கும்.

கோவைக்கொத்துப்போலப் பல பாட்டிலக்கணநூல்களிலிருந்து எடுத்துத்தொகுக்கப்பட்ட சூத்திரங்களையுடைய இந்நூலுள் 1 அகத்தியர், 2 அவிநயனார், 3 இந்திரகாளியார், 4 கபிலர், 5 கல்லாடர், 6 கோவூர்கிழார், 7 சீத்தலையார், 8 செயிற்றியனார், 9 சேந்தம்பூதனார், 10 நற்றத்தனார், 11 பரணர், 12 பல்காயனார், 13 பெருங்குன்றூர்கிழார், 14 பொய்கையார், 15 மாபூதனார் என்னும் பதினைந்து பாட்டியற்புலவர் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவைகொண்டு பாட்டியனூல் பன்னிரண்டு இவையென்றோ அவற்றை இயற்றினார் இன்னாரின்னாரென்றோ துணியுமாறில்லை.

இப்பன்னிருபாட்டியல் 360 சூத்திரங்களுடையது; அவற்றுள் 359 சூத்திரங்கள் நூற்பா. 204-ஆம் சூத்திரம் ஒன்றுமட்டும் நேரிசைவெண்பா. எழுத்தியல் சொல்லியல் இனவியல் என்னும் மூன்றியல்களுடைய இந்நூலுள் எழுத்தியல் எழுத்தின் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்னும் ஒன்பதனையும் விரிப்பது. சொல்லியல், சீர்க்கணம் மங்கலச்சொல் பெயர்ப்பொருத்தம் என்பவற்றை விளக்குவது. இனவியல்,

பாப்பொருத்தம் பாவினம் என்பவற்றை விளம்புவது. இதனுள் பாவினம் சாதகம் முதல் கையறுநிலை இறுதியாக அறுபத்தாறாகக் கூறப்பட்டன. பாவினம் 96 என்பாரும் அதனினும் மிகுத்துக் கூறுவாரும் உண்டு.

இந்நூல் முன்னைச் செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்தவரும் ஸேதுஸம்ஸ்தான மஹாவித்வானும் ஆன பாஷாகவிசேகரர் திரு. ரா. இராகவையங்காரவர்களால் நன்காராய்ந்து 1904-ஆம் ஆண்டு முதன்முறை செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. அம் முதற்பதிப்புப் பிரதிகள் முழுதும் செலவாய்விட்டமையால் அப் பதிப்பினுள்ளபடி இப்பொழுது இரண்டாமுறை பதிக்கப்பட்டுள் ளது. இப்பதிப்பில் இச்சங்கத்துள்ள ஏட்டுச்சுவடிகளில் யான் கண்ட பிரதி பேதம் முதலியனவும் கீழ்க்குறிப்பிற் காட்டப் பட்டுள்ளன.

இவ்விரண்டாம்பதிப்பு முடிந்தபின் இதனைக்கண்ணுற்ற முன் னாட் சென்னைப்பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவரும் என் அருமைநண்பருமான ராவ்ஸாஹிப் திரு. S. வையாபுரிப்பிள்ளை யவர்கள் தம்மிடம் உள்ள பன்னிருபாட்டியற்பிரதிகளோடு இவ் விரண்டாம்பதிப்புப்பிரதியினையும்வைத்து ஒப்புநோக்கித் தாம் கண்ட பிரதிபேதம் முதலியவற்றை அன்புடன் குறித்தனுப்பினர் கள். அவை ஏற்றபெற்றி அடுத்தபதிப்பிற் சேர்த்துக்கொள்ளப் படும். தமக்குள்ள பலபணிகளுக்கிடையே இப்பதிப்பினை ஒப்பு நோக்கிப் பிரதிபேதம் முதலியவற்றைக் குறித்தனுப்பிய பிள்ளை யவர்களுதவி பாராட்டத்தக்கது.

இங்ஙனம்,

திரு. கி. இராமாநுஜையங்கார்,

பதிப்பாசிரியர்.

---

ஸ்ரீ:

# பன்னிருபாட்டியல்.

## பாயிரம்.

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தையில் வைத்து முன்னோர் பொருணெறி
கூட்டி யுரைப்பல் பாட்டியன் மரபே.

## எழுத்தியல்.

1 ஏத்திய வோத்திய லெழுத்திய லியம்பிற்
பிறப்பும் வருணமுஞ் சிறப்பாங் கதியு
மிருவகை யுண்டியு மூவகைப் பாலும்
பொருவி றூனமுங் கன்னலும் புள்ளு
நயம்பெறு நாளு மியம்புதல் கடனே. (க)

### க.—பிறப்பு.

2 சிறப்புடை யெழுத்தின் பிறப்பினி துரைப்பின்
முந்நான் குயிரு முதல்வன் படைத்தனன். (க)

3 நல்லுயிர்ப் பகுதி நான்முகன் படைத்தனன்: போய்கையார்.

4 கண்ணுத லிருமால் கதிர்வேன் முருகன்
விண்ணவர் தலைவன் வெங்கதிர் வெண்மதி
[1]நிதிக்கோன் கூற்றுவ னெடுநீர் வருண
னென்னுங் கடவுள ரிரண்டிரண் டாக
மன்னிய வொற்று [2]வகைவேறு படைத்தனர். (ங)

5 ஒன்பது தேவரு முடம்பு படைத்தனர்: போய்கையார். (ச)

### உ.—வருணம்.

6 நறுமலர்த் திசைமுக னீச னாரண
னறுமுகன் படைத்தன வந்தணர் சாதி. (க)

அவை:— அகாமுதற் பன்னீருயிரும்,
க, ங, ச, ஞ, ட, ண வும்.

---

[பிரதிபேதம்.] [1] நிதிக்கோ னியமன். [2] வகைபடைத்தனரே.

*

7 திருமா லரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி: பரணர். (௨)

8 இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னருஞ் சிறப்பின் மன்னவர் சாதி. (௩)

அவை:—த, ந, ப, ம, ய, ர.

9 இந்திர னிரவி சோமனிம் மூவர்
தந்த வெழுத்தே யரசர் சாதி: பரணர். (௪)

10 திருமிகு நிதிக்கோன் வருணன் படைத்தன
வணிமிகு சிறப்பின் வணிகர் சாதி. (௫)

அவை:—ல, வ, ற, ன.

11 இயம னிதிக்கோ னென்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி: (௬)

இது வேறொரு மதம்.

12 கூற்றுவன் படைத்தன கூற்றன விரண்டு
மேத்திய மரபிற் சூத்திரர் சாதி. (௭)

அவை:—ழ, ள.

13 இயமன் படைத்த விருவகை யெழுத்துந்
துகடீர் மரபிற் சூத்திரர் சாதி: பரணர். (௮)

இதுவும் வேறொரு மதம்.

14 ஒற்றுமைக் காலையும் வேற்றுமைக் காலையும்
பிறவியும் வருணமும் பெறுமென மொழிப. (௯)

15 உயிர்மெய் போல வொற்றுமிம் முறைபெறும். (௧௦)

16 உயிர்மெய் வழக்க மெய்வழக் காகும்
வேற்றுமைக் கண்ணே யென்றார் பிறரும். (௧௧)

17 நால்வகை வருணத் தோர்க்கு நால்வகை
யியம்பு மெழுத்தை யியப்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையா ராண்டே. (௧௨)

18 மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த
தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு
வைத்துமுன் னெடுப்பி னதுமாண் புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே: இந்திரகாளியார்.

## ௩—கதி.

19 வானவர் மக்க ணரகர் விலங்கென
ஊனமில் கதியே யொருநான் காகும். (க)

20 கதியெனப் படுபவை காண்டக விரிப்பிற்
றேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய கதிக ளீரிரண் டாகும்: இந்திரகாளியார். (உ)

21 தேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய நான்கே யெழுத்தியல் கதியே: பரணர். (௩)

22 அவற்றுள்,
உயிர்க்குறில் வல்லின மீற்றெழுத் தொழியப்
பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே. (௪)

23 தேவர் கதியே தெரியுங் காலை
அஇ உஎ கசட தபவே: பரணர். (௫)

24 மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின் ஙஞண நமவே. (௬)

25 அவைதாம்,
ஆஈ ஊஏ ஙஞண நமக்கள்
மேவிய மக்கட் கதியென விளம்புவர். (௭)

26 ஒழிந்த ஐஔ ஆய்த வெழுத்துங்
கழிந்த வளனவு நரகர் கதியே. (௮)

27 ஒ ஓ விரண்டும் யரல றழவெனத்
தொக்கன வைந்தும் விலங்கின் கதியே. (௯)

28 மன்னுவ தேவர் மக்கள் செய்யுளுண்
மன்னு விலங்கொடு நரகர் கதியே. (க0)

29 விலங்கு [1]நரகும் விலங்கின வென்ப: இந்திரகாளியார். (கக)

30 [1]நரகும் விலங்கும் வரைவ றீண்டே
தேவரு மக்களு மேவின பாட்டே. (கஉ)

---

[பி-ம்.] [1] நரகரும்.

## ச.—உண்டி.

31 அமுதென விடமென [1]வருமிரு வகையு
முணவெனப் புலவ ருரைத்தன ருளரே. (க)

32 நஞ்சென வமுதென நவிலவும் படுமே: பொய்கையார். (உ)

33 உணவே யமுதமும் விடமு மாகும்: அவிநயனார். (ங)

34 உயிர்க்குறி ஞன்கொடு கசதப நமவ
[2]மயக்கற வமுத வெழுத்தாகு மென்ப. (ச)

[3]அவை:—அ, இ, உ, எ, க, ச, த, ப, ந, ம, வ.

35 இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கொளலே. (ரு)

36 ஆஔ விரண்டும் யரல மூன்றுந்
தாவிலிவ் விருவகைக் கூட்டத் தியைந்தவு
மளபு மாய்தமு மைவகைக் குறுக்கமு
[4]முளமலி புலவ ருரைத்தனர் நஞ்சென்
றவையொரு பெயர்மருங் கணைய நிற்பி
[5]னவையுறு துஞ்சலு நடுக்கமுஞ் செய்யும். (சா)

37 இருவகைக் கூட்டத் தியைந்தமேற் கூறிய
ஆகார வோகாரத் தொடுய ரலக்க
ளென்னு மொற்றொடு மியைந்தவுயி ரளபெடை. (எ)

38 ஐவகைக் குறுக்கமு மறையுங் காலை
இகர உகர ஐகார ஔகார
மகர மென்னு மிவற்றின் குறுக்கம். (அ)

39 ஆ ஔ யரல முதலிப வளபெடை
யாய்தமைங் குறுக்க முளப்பட வெல்லாம்
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே: பரணர். (கூ)

---

[பி-ம்.] [1] விருவகை யெழுத்து. [2] மயக்கறு மமுதெழுத்தாகு; எனப்பதி ஞென்று மமுதென மொழிப. [3] 'அவைதாம், அஇ உஎ கசதந பமவ, வெனப்பதி ஞென்று மமுதென மொழிப'. [4] முளமகிழ். [5] னவையுறு துஞ்சலுங் கெடுதலுஞ்; னவையுறத் துஞ்சலுங் கெடுதலுஞ்.

40[1] நஞ்சா மொற்றொடு நடந்த வுயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்தில ரென்ப; (௧௦)

41 இருவகை யுண்டியென் றெடுத்தன வல்ல
தாமே நிற்பினுந் தோமில வென்ப; (௧௧)

42 நஞ்சு மமுதா மங்கலம் புகினே; (௧௨)

43 அமுதெழுத் தென்ற வாதியுயிர் நான்கொடும்
புணர்ந்த மெய்யை யுணர்ந்தமு தென்ப; (௧௩)

44 மெய்யா மமுதின் மேவிய வுயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப: (௧௪)

[2]இவை இந்திரகாளியார்.

---

[1] 40 முதல் 44 முடிய உள்ள சூத்திரங்கள் சங்கத்தில் உள்ளதோர் ஏட்டுச்சுவடியிற் காணப்படவில்லை; அவற்றுக்குப் பிரதியாகப் பின்வரும் சூத்திரங்கள் காணப்படுகின்றன.

'குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.'

'வல்லெழுத் தாறே டெழுவகை யிடத்தும்
உகரம் அரையாம் யகரமொ டியையின்
இகரமுங் குறுகு மென்மனர் புலவர்.'

'ஐயும் ஔவும் அளவிற் குறுகும்
வகார மிசையு மகாரங் குறுகும்.'

'நெட்டுயிர் ஆ ஓ யரல வியைந்தவும்
அளபெடை யாய்தக் குறுக்க முளப்பட
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே.'

'நஞ்செனப் படுபவை நாடுங் காலை
யரல ஆ ஓ வியைந்தவு மளபுங்
குறுகிய வொற்றெழுத் திரண்டுங் கொளலே.'

'நஞ்செனப் படுபவை பெயரொடு நிற்பிற்
றுஞ்சல் கெடுதல் சொல்லினர் புலவர்.'

[2] "தெரிந்த யரலமேல்" என்னும் வெண்பாவுரையில் இவ்வைந்து சூத்திரங்களையு மெடுத்தோதி இவற்றை இந்திரகாளியமென்றார் வச்சணந்திமாலையுரைகாரரும்.

## ரு.—பால்.

45 ஆண்பால் பெண்பா லலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். (க)

46 இருவகை யைங்குறி லாண்பா லென்ப. (உ)

47 அகரமோ டைங்குறி லென்று ராண்பால்.[1] (ங)

48 நெடிலே ழிருவகை பெண்பா லென்ப. (ச)

49 ஒற்று மாய்தமு மலியெனப் படுமே. (ரு)

50 ஒற்றின் வருக்க மொன்பதிற் றிரட்டியும்
பெற்ற வாய்தமும் பேடெனப் படுமே. (சா)

51 அவ்வவ் வெழுத்தே யப்பாற் குரிய
விரவினும் வரையா ரலியெழுத் தொழித்தே. (எ)

52 [2]அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முண் மயங்கினுந் [3]தாவின் றென்ப. (அ)

53 உயிரீ ராறு மாணென மொழிப
வுயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப
வுடம்பெழுத் தெல்லா நபுஞ்சக மாகும்: போய்கையார். (கூ)

## சா.—தானம்.

54 குறிலைங் துடனெடில் கூட்டி நின்ற
ஐ ஔ விரண்டும் இ உ வடக்கிப்
பால குமார வரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (க)

55 முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே: (உ)
அகத்தியர் பாட்டியல்.

---

[1] சங்கத்திலுள்ளதோர் ஏட்டுச்சுவடியிற் பின்வருஞ் சூத்திரங்களும் காணப்படுகின்றன. "ஆணெழுத் தென்ப ரகரமொ டைங்குறில்", "நெட் டெழுத் தெல்லாம் பெண்ணெனப் படுமே"

[2] இது பரணர்பாட்டியலில் உள்ளதென்பது "குற்றெழுத்தாடூஉ" என்னும் நவநீதப்பாட்டியலுரையால் விளங்குகின்றது.

[பி-ம்.] [3] தவறின்றதுவே.

56 நட்பே யுதாசீ னம்பகை யென்னு
மொப்புடைக் குறிப்பி னொருமூன் றாகும். (௩)

57 பால குமார வரச வென்னு
மூவகைத் தானமு நட்பெனப் படுமே. (௪)

58 ஒழிந்த விரண்டு முதாசீ னம்[1]பகை. (௫)

59 பாட்டுடைத் தலைவ னியற்பெயர் முன்னெழுத்துப்
பால னாக நால்வகை யெழுத்தும்
வட்டமாய் முறைமையி னியலு மென்ப. (௬)

60 பெயர்முத லெழுத்துப் பால னாக
நால்வகை யெழுத்தினும் வட்ட மாக
முறையே நட்புதா சீனம் பகைவரும். (௭)

61 அகரந் தனக்காய நட்பென் றுரைப்பர்
இகர வுகாரங்க டாம்; (௮)

62 அகரக் கெகர முதாசீன மாகு
மகரக் கொகரம் பகை; (௯)

63 உகர மெகர மெனவிரண்டு மென்ப
விகரந் தனக்காய நட்பு; (௧0)

64 இகரக் கொகர முதாசீன மாகு
மிகரக் ககரம் பகை; (௧௧)

65 உகர வெழுத்துக்கு நட்பாய் வருமே
யெகர வொகாரங்க டாம்; (௧௨)

66 உகரக் ககர முதாசீன [2]மென்ப
வுகரக் கிகரம் பகை; (௧௩)

67 எகரக் கொகர மகரநட் பாகு
மிகர முதாசீன மாம்; (௧௪)

68 எகரந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகர வெழுத்தென் றுணர்; (௧௫)

69 ஒகர வெழுத்துக் ககர வெழுத்து
மிகர வெழுத்துநட் பாம்; (௧௬)

[பி-ம்.] [1] பகையுமாம். [2] மாகு, மிகரம் பகையென் றறி.

70 ஒகரக் குகர முதாசின மாகு
மெகரம் பகை[1]யா மெனல்; (கஎ)

71 நட்புப் பகையாம் பகையுநட் பாமவை
வைத்த முறையே [2]கொளல்:[3] (கஅ)

இவை கல்லாடனுர்.

எ.—கன்னல்.

72 குணபாற் பரிதி தென்பா லியமன்
குடபால் வருணன் வடபாற் சோமன்
றிசைமுக நடுவாந் தெய்வ நிலைகளிற்
குறிலைந் தமைத்து முதன்மூன் றுங் கொள்கென
நெறியறி புலமை யறிஞர்நேர்ந் தனரே. (க)

73 அருக்க னியமன் வருணன் சோமன்
பிரமனுந் தெய்வ நிலையெனப் பேசுவர். (உ)

74 [4]அகரமுத லாக முறையா னெய்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே: கபிலர். (ங)

75 உரைத்த குறிலைந் தொரோவொன் றுக
வருக்கனெ டாறு மவ்வாறு நாழிகை. (ச)

76 அகரந்தானே யருக்கனோ டுதிப்ப
விகர மின்புற வெய்தி யிருக்கு
முகர நடக்கு மெகர முறங்கு
மொகரந் துஞ்சுமென் றுரைத்தனர் புலவர். (ரு)

77 அவரவர் பெயர்முத லெழுத்துவந் துதிப்ப
வவரவர்ப் பாடி னாக்கந் தருமே: இந்திரகாளியார். (சு)

78 இராப்பொழு திற்கு மிவ்வகை கொள்க. (எ)

---

[பி-ம்.] [1] யாகு மே. [2] கொளின். [3] இதற்குப்பின், 'உய்த்துணர்ந்து நாடி னுயிர்மெய்க்கு மிவ்வகையே, வைத்துணர்ந்து கொள்க வகுத்து' என்று ஒரு சூத்திரம் காணப்படுகிறது. [ச. பி.] [4] அம்முத.

### அ.—புள்.

79 ஐவகைக் குறிலு மகாமுத லாக
வல்லூ ரூந்தை வலியன் குருகே
மெல்லியன் மயிலென விளம்பின ரிவற்றின்
பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. (க)

80 எண்ணப் பட்ட அகாமுத லைந்தும்
வல்லூ ரூந்தை வலியான் குருகே
மெல்லியன் மயிலென விளம்பிய வியற்கையிற்
புள்ளென விளம்பும் புலவரு முளரே: பரணர். (உ)

### ஆ.—நாள். [1]

81 [2]மொழிக்கு முதலா கியவெழுத் தூக்கட்
கோதிய நாள்வகை யியற்றுதல் கடனே. (க)

82 உயிர்முத னான்குஞ் [3]செயிர்தபு கார்த்திகை
ஐந்து மூன்று மவற்றி னடைவே
வந்தபூ ராட முத்திரா டம்மே. (உ)

83 ககர வருக்க வகைநாள் விரிப்பி
னான்கு மிரண்டு மூன்று மூன்று
மோண மாதிரை புனர்பூசம் பூசம். (ங)

84 சகர நான்கைந் தொருமூன் றிவற்றின்
வகைநா ளிரேபதி முதன்மூன் றென்ப. (ச)

85 ஞகர [4]வருக்கத் தொருமூன் றவிட்டம். (ரு)
[ஞா, ஞெ, ஞொ. உ-ம்: ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.]

86 தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு
வகைநாள் சோதி விசாகஞ் சதயம். (சு)

---

[1] 'அமுதெழுத் தல்லா வேணெ யெழுத்து
நாளொடு புணர்த லேத மின்றே' (கூ0)
என்று ஒரு சூத்திரம்மட்டும் தனியே எழுதப்பட்டுளது. [ச. பி.]
[பி-ம்.] [2] நாமநாண் மொழிக்குமுத லாகிய வெழுத்து. [3] செயிர்தீர்.
[4] வருக்கத்து மூன்று மவிட்டம்.

87 நகரத் தாறு மநுடத் தடைவே
யேனை யாறுங் கேட்டைபூ ரட்டாதி. (எ)

88 [1]பத்திய பகரத் தொருநான் கிரண்டா
றுத்திர மத்தஞ் சித்திரை யாகும். (அ)

89 மகரத் தாறு மூன்று மூன்று
மகமா யிலியம் பூர மாகும். (கூ)

90 யாவே யுத்திரட் டாதி யேனை
யூயோ மூலமென் றுணர்ந்திசி னோரே. (க0)

91 யூயோ விரண்டு மேனாண் மூலம்
யாவே யுத்திரட் டாதிநாள் பெறுமே. (கக)

92 ஒருநான் குரோகணி வகர மவ்வகை
மற்றை நான்கு மகசிர மாகும். (கஉ)

93 [2]மூவகை யாய்ச்செய் தொன்றுமூன் றைந்தே
முட்டம ராசி வைநா சியக்கால்
விட்டனர் பின்னர் மேவினர் கொளலே. (கங)

94 இரண்டி ரிரண்டா றெட்டொன் பானெனத்
திரண்ட நாளே செல்வம் புகுதரும். (கச)

95 நன்மை பொருள்பே றின்பந் தருமெனத்
தொன்னெறிப் புலவ ருரைத்தனர் துணிந்தே.
அவை,-மூவகை யொன்பதின் முதன்முத னாளாம். (கரு)

---

[பி-ம்.] [1] பற்றிய.

[2] "சொல்லியநாள் இருபத்தேழையும் ஒன்பதொன்பதாக மூன்றுகூறாக்கிப் பாட்டுடைத்தலைவனியற்பெயரின் முதலெழுத்தினைத் தொடங்கிக் கூறுகளை யெண்ண, ஒன்று மூன்று ஐந்து எழ்வரிற் பொருந்தா. அல்லாத நாட்களுட் பாட்டுடைத்தலைவன்பெயர்முதலெழுத்தினிராசிதொடங்கி எட்டாமிராசிநாட்களும் பொருந்தா. வைநாசியமாகிய எண்பத்தெட்டாங் கால் நின்ற நாளும் பொருந்தாது" என்பது வச்சணந்திமாலையுரை.

96 சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்
பெயர்நா ளாயினு மியலுற வுணர்ந்தபி
ஞென்றற் கேனு மிரண்டற் கேனு
[1]மூன்றிகழ் பொருத்த மொழிவது கடனே. (கசு)

[பின்வரும் சூத்திரங்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. (ச-பி.)

'வகர வருக்கத் தொருநான்கும் ரோகணி
மற்றொரு நான்கு மகசிர மாகும்.' (க00)

'ஆரியர் சிதைவு மழிந்த வழக்குஞ்
சீரிய மொழிமுதற் காமெனப் புணர்க்கும்
வம்பப் புலவரு மன்னுந ராதலின்
மொழிமுதலாவகையெழுத்தெல்லாம்
பன்னீ ருயிரு மன்ன வடக்கி
யங்நாள் பெறுமென் றறைகுந ருளரே.' (க0க)

'இருப துடனே ழியன்ற நாளை
ஒருவகை யொன்பா னுக்கி யிவ்வகை
மூவகை யாய்ச்செய் தொன்றுமூன் றைந்தேழ்
அட்டம ராசி வைநா சியக்கால்
விட்டனர் பின்னர் மேவினர் கொளலே.' (க0உ)]

## எழுத்தியல் முற்றிற்று.

---

## சொல்லியல்.

97 நவையறு சீர்க்கண மங்கலச் சொற்பெய
ரிவையொரு நாலுக் கியம்புதல் சொல்லியல்.

### க.—சீர்க்கணம்.

98 ஈரசைச் சீரே மூவசைச் சீரே
நாலசைச் சீரே யோரசைச் சீரெனச்
சீர்வகை நான்குந் தெரிந்தனர் புலவர். (க)

---

1 மூன்று இகழ் பொருத்தம்—(ங, ஙு, எ என்னும்) மூன்றிணையும் விட்ட பொருத்தம்.

99 ஈரசை யகவன் மூவசை நான்கு
நேரிறில் வெள்ளை நிரையிறில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே. (உ)

100 மூவசை [1]யெண்சீர் கணமென மொழிந்தனர்
ஈரசை நாலசை யோரசை யொழித்தே. (௩)

101 கணமே மூவசைக் கூட்ட மாகும்: கபிலர். (௪)

102 முற்பாட் டெடுப்பின் முதலீ ரசைச்சொல்
சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி
நிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந் தோரே. (௫)

103 நன்மைசெய் கடவு ளுடி னவற்றிற்குத்
தொன்னெறி மரபி [2]னின்மை யானே
நாலசைச் சீரு மேலோ ரொழித்தனர்: இந்திரகாளியார். (௬)

104 நீடிய யானன் றிங்க ணிலநீர்
சூரியன் வான மங்கி காற்றென
வியம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (எ)

105 [3]நேரசை மூன்றிய மான னதற்குச்
சீர்புனை நாளே பரணி வாழ்நாண்
மற்றது பயக்குமென் றுய்த்துரைத் தனரே. (அ)

106 நிரைநேர் நேர்நீண் மதிய மதற்கு
வருநாண் மகசிர மலிபுக ழாகும். (௯)

107 நிரையசை மூன்று நிலக்கண மதற்குத்
தருநாள் கேட்டை திருமிகத் தருமே. (௧௦)

108 நீர்க்கண நேர்நிரை நிரைநாள் சதயம்
பார்க்கதிர்ப் பெருக்கம் பார்க்கு மென்ப. (௧௧)

---

[பி-ம்.] [1] யொண்சீர். [2] னின்மை யான.

[3] இயமானனைச் சுவர்க்கம் என்னும் பெயராற் கூறுவர் வெண்பாப் பாட்டியலார். இந்திரகணமென்பர் நவநீதப்பாட்டியலுரைகாரர். "இந்திர கணமே பெருக்கஞ் செய்யும், சந்திர கணமே வாழ்நா டருமே"—மாழலம்: என்பது நவநீதப்பாட்டியலுரைமேற்கோள்.

109 கண்ணிய நேர்நிரை நேர்வரிற் கடுங்கதிர்
நண்ணிய நோய்தரு நாள்புனர் பூசம். (கஉ)

110 நிரைநிரை நேர்தாம் வரினது வானம்
பெருகிய கேடது [1]தருநா ளோணம். (கங)

111 நெருப்பின் கணநிரை நேர்நிரை கார்த்திகை
விருப்புறு நாள திடுக்கண் செய்யும். (கச)

112 காட்டிய நேர்நேர் நிரைவரிற் காற்றது
நாட்டறை போக்குநாட் சோதி யாகும். (கரு)

113 நிற்பன தீக்கண நான்கவை நீக்கி
நற்கண நான்கவை நாட்டினர் கொளலே. (கசு)

114 நீரே நிலனே வானே நீண்மதி
சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்
காற்றெனக் கிளர்ந்த கூற்றன வென்ப. (கஎ)

115 அவைதாம்,
நேர்முத லாகி நிரையிணை பின்வரி
னீர்க்கண மென்ப நெறியுணர்ந் தோரே. (கஅ)

116 நிரைமூன் றியைந்தது நிலனெனத் தகுமே. (ககூ)

117 முந்துநிரை யிணைந்து நேரிறு மூவசை
யந்தர கணமென் [2]றறிதல் வேண்டும். (உ0)

118 முதனிரை யாகி யிணைநேர் வழிவரி
னதுமதிக் கணமென் [3]றறிந்தனர் கொளலே. (உக)

119 [4]நேரசை மூன்றிய மானன் கணமே. (உஉ)

120 நேர்நடு வாகி நிரையிரு பாலுஞ்
சேரு மாயிற் செந்தீக் கணமே. (உங)

121 நிரைநடு வாகி நேரிரு பால்வரி
னலர்கதிர்க் கணமென் றறிந்தனர் கொளலே. (உச)

---

[பி-ம்.] [1] நாளோண மென்ப. [2] றறைதல். [3] றறைந்தனர்.
[4] 'நேர்முச் சீரிய மானன் கணமே' (ங0) [ச-பி.]

122 ஈறுநிரை யாகி யிணைநேர் முன்வரின்
மாறி வந்த மாருத கணமே. (உரு)

123 [1]நிலனு மதியு நீருமிய மானனு
நலமிகு முதல்வரிற் பிறநான் கும்பகை. (உசா)

124 யாவர்செய் யுட்கு மினமொடு புணரு
மூவசைச் சீரே [2]முதனிற் பனவே. (உஎ)

125 அவைதாம்,
பெருக்கஞ் செய்தலின் வாழ்நாள் பயத்தலிற்
றருக்கிய சீர்த்தி தன்னைத் தருதலின்
மிகுதிரு வாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்குந்
தருமெனப் பகரினுந் தகாதுமற் றச்சீர்க்
குரிய நாளொடு செய்யுட் செய்யும்
பொருபடைக் குரிசினுள் பொருந்தாக் கடையே. (உஅ)

126 அவைதாம்,
தேயம் போக்குதல் செல்வத்து விளிதல்
சூனிய மாதல் சுழனை யுறுத
லூனம் பயக்குமென் றுரைத்தன ராயினு
மாதி யமுதெழுத் தாகிய சீர்கட்
கோதிய தெய்வத் திற்குரித் தாக
வோதிய நாளொடு பாடப் படுமே. (உகூ)

127 எல்லாக் கணமு நாணல மிலவெனிற்
பொல்லாங்கு தருமெனப் புகல வேண்டும்: இந்திரகாளியார்.

128 மங்கல மமைந்த சொல்லொடு பொருந்திய
வீரசை நான்கினு ணேரீ றொழித்து

---

[1] "நேரசை மூன்றிய மான னிரைப்பின்பு நேரிரண்டு
சேர்வன திங்க ணிரையசை மூன்றுஞ் செழுநிலமா
நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரி னீர்க்கணமாந்
தேரிய லல்குற் றிருவே யிதுநல்ல சீர்க்கணமே."
என்பது நவநீதப்பாட்டியல்.

[பி-ம்.] [2] முன்னிற் பனவே.

நிரையீற் றியற்சீர் முதற்க ணிற்பினும்
வரையார் மூவசை வாராக் காலே. (௩௧)

129 ஈரசை முதலா நேரீ றெழித்து
நிரையீற்று மங்கலம் புணர்த்தனர் கொளலே. (௩௨)

130 நிரைநிரை கொற்றவை நேர்நிரை சாத்தன். (௩௩)

131 அவைதாம்,
மிருதரு திருவும் புகழுஞ் செய்யும்: சேந்தம்பூதனார். (௩௪)

132 ஓரசைச் சீரு நாலசைச் சீரும்
ஈரசைச் சீரு ணேரிறு சீரும்
மங்கலம் புணரினு மங்குதல் செய்யும்: கோவூர்கிழார். (௩௫)

[பின்வரும் சூத்திரங்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. (ச-பி.)

'நிலனு நீரு நிலவிய மதியும்
இயமானனு நல்ல வருக்குங் காலே' (௩௪)

'ஏனை நான்கு மூனம் பயக்கும்' (௩௫)

.............................................
.............................................
.............................................
............................................. (௩௭)

'சந்திரன் நீயெல் லந்தர மதனொடு
பூமி தேவியெனப் புகலுந்தெ.........
நிரைநேர் நிரைப்பின் னேர்நிரை நிரைவரும்
ஒருநாற் சீரு மொத்தமுறை யுடைமையின்
மற்றக் கடவுட்கு வரன்முறை யாகப்
பெற்றிடற் குரிய சீரும் பெறுமே' (௩அ)

'எண்வகைச் சீரு மியலுமக் சீருள்
வருண னுளே சதயம் பெறுமே' (௩௯)

'இயமான னுளே பரணி யாகும்' (௪0)

'சந்திர னுளே மகசிர மாகும்' (௪௧)

'தண்பூமி தேவிநாட் கேட்டையாகும்' (௪௨)

'எஞ்சிய சீர் ரிரண்ட னுள்ளும்
வஞ்சமின் மாருத நாளே சோதி' (௪௪)

'எரிநாள் கார்த்திகை யந்தர கணத்திற்
சூரிய நாள தோண மாகும்' (சரு)

'சூரிய னாளே புணர்பூசம்மே' (சசா)

'நீர்க்கண முதனேர் நேரீ றந்தரம்
பார்க்கண முந்நிரை பான்மதி நிரைமுதல்
இயம்பினர் வருமென நயம்பெறு முன்னோர்.' (சகூ)

'நிரைநடு வாமெரி நேர்நடு வாங்கதிர்
பின்னிரை காற்றுமுன் னிரையிய மானன்
நயம்பெறு கணமென வியம்பினர் புலவர்' (ருo)

'நலனுந் தீமையு நாடுங் காலை
நிலனே திருவா நீரே பெருக்கம்
மதியஞ் சீர்த்தி யியமானன் வாழ்நாள்
வாயுநா டகற்றல் வான்றீ விளிதல்
நோயிடைக் குறுகல் சூரிய கணமே' (ருஉ)

'வானின் கணமே சூரிய கணமே
வாயுக் கணமே தீயின் கணமே
சூனிய மாமெனத் துணிந்தனர் கொளலே' (ருங)

'காவல னுளொடு கணத்தி னன்னாண்
மேவப் புணர்த்தன் மெய்ந்நெறி வழக்கே.' (ருச)

'ஈரசை முதல வானோ ரேனும்
நேர்நேர் நிரைநே ரொழிந்து நிரையிறு
மங்கலம் புணர வந்தன கொளலே.' (ருசா)]

---

உ.—மங்கலச்சொல்.

133 பொன்பூத் திருமணி புனலா ரணங்கடல்
செங்கதிர் திகிரி தேர்பரி யெழுத்தே
மாநிலங் கங்கை மலைபுக ழமுதங்
கார்புய லுலகங் களிறே யருந்ததி
பார்மதி நாள்சீர் [1]ஞெண்டுட னென்ன
வெண்ணிய சொல்லே யவையல பிறவுங்
கண்ணிய மங்கலச் சொல்லெனக் காட்டினர்: பொய்கையார்.

---

[பி-ம்.] [1] ஞெண்டென வெண்ணிய, சொல்லே யவையல பிறவுங் கண்ணிய, மங்கலச் சொல்லென வகுத்துக் காட்டினர்.

134 சொல்லெனப் படுமவை சொல்லுங் காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொன் ஞெண்டு நாட்டிய பரிமலை
கருட னருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே: பொய்கையார். (உ)

135 செப்பிய வுடம்பொடு சேரா துயிர்முத
னிற்பன மக்கட் காமென நேர்ந்திலர்
மற்றவை கடவுளர் முனிவர்க் காமே. (ங)

136 உயிரொடு புணரா மென்மையு மிடையுஞ்
செயிரிற் றீமையுஞ் செப்பத் தகுமே. (ச)

137 ஓதிய மெய்யொடு புணரா துயிரெழுத்
தாதி நிற்பி *ஞனந் தம்மே. (ரு)

138 உடம்பு பிரிவுயிர் சாத ரூனே: இந்திரகாளியார். (சு)

139 [1]நரகரும் விலங்கு மமுதொடு வரினவை
புகரில வென்ப புலமை யோரே: பரணர். (எ)

140 மூன்றைந் தேழொன் பானெழுத் தான்ற
வொற்றுட னெண்ணிமுன் சொற்ற முறையிற்
பல்பொருள் படவரூஉஞ் சொல்லா லகற்றி
யொருபொருட் டாகி வருமொழி பற்றித்
திரித லொழியத் திருந்திச் சொல்லினுட்
[2]டெரிவோர் வகையுளி மறுத்து நட்டது
மங்கலச் சொல்லென வகுத்தனர் புலவர். (அ)

141 முன்னிலை யெழுத்தின் †வியநிலை நலனே
‡சமநிலை யாயின் முதல்வற் கூனம். (கூ)

---

* ஆனந்தம்—சாக்காடு.

[பி-ம்.] [1] இச்சூத்திரத்துக்குமுன், 'எழுத்தின் கிழத்தி நாமக ளாதலிற், பெண்ணெழுத் தல்லது முன்வைத் துரையார்' என்று ஒருசூத்திரம் காணப்படுகிறது. [2] டிரவோர். [ச-பி.]

† வியம்—ஒற்றையெண். ‡ சமம்—இரட்டையெண்.

142 சொல்லிய மரபின் மங்கலஞ் சிதைத்துப்
புல்லுதல் குற்றம் பொருட்டலை மகற்கே. (௧௦)

143 தொடுகழல் வேந்தன் றன்னு தோரும்
வடுவறு பரிசில் வழங்கா தோருங்
கெடுதல் வேண்டிச் சிதைத்தலு முரித்தே. (௧௧)

[மங்கலச்சொல் என்ற தலைப்பின்கீழ்ப் பின்வரும் சூத்திரங்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. (ச. பி.)

'திருவே பூவே திங்கள் ஞாயிறு
கடலே மலையே கார்மழை பசும்பொன்
மணியே மாநிலம் வருபுன லமிழ்தம்
தேர்பரி களிறு சீர்முத லென்றிவை
போல்வன பிறவும் புகழ்ந்தநற் சொல்லே' (சூ௧)

'திருப்பொன் கடலே தேர்பரி களிறே
பொருப்பே மணிபூப் புகழிவை பிறவும்
வந்தன விதிக்கு மங்கலச் சொல்லே' (சூ௨)

'நிலைபெறு கணத்தின் முதனிலை யெழுத்தே
தலைவ னொளொடு தாஅ னிருவகைப்
பெயர்முத லெழுத்தொடு கொள்ளும் பெற்றித்
தான வகைய தாப்பால் கணங்கதி
யூன மின்றி யொற்றுமை பற்றிய
வுயிர்மெய் வல்லெழுத் தாக்கிச் செயிர்தீர்
வேற்றுமை யாகா விதியின் மாறி
நஞ்செனப் படாஅ வமிழ்தெனத் தோன்றி
யெஞ்சிய விலக்கண மெல்லா முடைத்தா
யேதந் தீர்ந்த வியல்பின வென்ப' (சூ௫)

'உயிரொடு புணர்ந்த மென்மை யிடைமையுஞ்
செயிரின் றிவையுஞ் செப்பத் தகுமே' (சூ௬)

'தொடுகழல் வேந்தன் றன்னு ளொருவன்
வேறு பரிசில் வீயா தொருபகல்
கெடுதல் வேண்டிற் கிளத்தலு முரித்தே' (௭௧)

'எடுத்த முதன்மொழி யீறுதிரிந் தொன்றலும்
வகுத்த வச்சீர் வகையுளி சேர்தலும்
பொதுப்பட மொழிதலும் பொருட்புல னின்மையுஞ்
சிறப்பொடு படாமையுஞ் சிறுபெயர் பிளத்தலு
மறத்துள் வழீஇய வானந் தம்மே' (௭௨)]

## ௩—பெயர்ப்பொருத்தம்.

144 எண்வகைப் பெயரு நண்ணுதல் செப்பிற்
குலங்குடி கோத்திர நலம்பெறு குணமே
மனமே யாணை மன்னிய சிறப்பே
யியற்பெய ரென்றிவை தம்மு ளியன்ற
சிறப்பியற் பெயரெனு மிருதிறத் திற்கு
[1]மயக்கற மொழிமுத லெடுக்குஞ் சொல்லுடன்
பொருத்தங் கொள்வர் கருத்துணர்ந் தோரே. (௧)

145 பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெய ராகும். (௨)

146 குடிப்பெய [2]ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டிய னென்றிவை
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே. (௩)

147 கோத்திரப் பெயரே கூறுங் காலைத்
தாதைகுடிப் பெயரைத் தக்கவற் றியற்றல். (௪)

148 குணப்பெய ரேனைப் புலவோர் கொடுப்பத்
தணப்பில வாகித் தழூவும் பெயரே. (௫)

149 மனப்பெய ராவன தனக்குத் தானே
யெனக்கிது வேண்டுமென் றெய்தும் பெயரே. (௬)

[இஃ திராசாக்க ணுய னடியார் தோழன்.]

150 ஆணைப் பெயரே வலியோ ரஞ்சப்
பேணி யுலகம் பேசும் பெயரே. (௭)

151 சிறப்புப் பெயரே தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே. (௮)

152 சாதியி லுள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் [3]சிறப்பியற் பெயர்கொளற் குரியர். (௯)

153 முடியுடை வேந்தன்முற் குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணு மாழியு
நட்டமி னலமலி சிறப்புப் பெயருங்
கொடாஅ னெனமொழிப குல்மொழிப் புலவர். (௧0)

---

[பி-ம்.] [1] மயக்கறு. [2] ராவது. [3] சிறப்பிற்.

154 வினைசெயன் மருங்கின்மிக் கோரும் பெறுப. (கக)

155 தந்தை மகப்பெயர் முந்திய குலப்பெயர்
மனப்பெயர் கோத்திரங் குணப்பெய ராணை
யியற்பெயர் சிறப்புடைப் பெயரிரண் டாகுங்
கயக்கறு முதன்மொழிப் பொருத்தங் கொளலே. (கஉ)

[பெயர்ப்பொருத்தம் என்ற தலைப்பின்கீழ்ப் பின்வரும் சூத்திரங்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. (ச. பி.)

'கோத்திரப் பெயரே கூறுங் காலைக்
காப்பியன் கவுணியன் காசிப னென்றிவை
போல்வன பிறவும் பூசுரர்க் காகும்' (எசா)

'அரசர் கோத்திரப் பெயரே கூறிற்
குடிப்பெய ரதனை வைத்தவர்க் கியற்றல்.' (எஎ)

'தந்தையர் பெயர்வழிப் பெயரன்பெய ரென்று
சிந்தித் திடுவ தியற்பெய ராகும்' (அங)

'தந்தைக்கு முந்திய தெய்வப் பெயரும்
மிக்கோர் பெயரும் விதியிற் புனைவ
தியற்பெய ரென்ப வியல்புணர்ந் தோரே' (அச)

'எண்வகைப் பெயரி னிருமூன்று பெயரொழித்
தியற்பெயர் சிறப்புப் பெயரிரண் டிற்கு
மயக்கறு மொழிமுதற் பொருத்தங் கொளலே' (அரு)

'பாடுங் குரிசி லியற்பெயர்க்கு முன்வந்து
கூறுங் குறிநிலை கொண்டு சிறப்பின்
ஆகிய பால ராதி பெயர்......
நீக்கி யியற்பெயர் கொண்டமுத லெழுத்து
நின்ற நிலனே பால னாகத்
தென்றமிழ்ப் புலவர் திண்ணிதிற் கொளலே' (அசா)]

சொல்லியல் முற்றிற்று.

---

## இனவியல்.

156 வெள்ளை யகவ றுள்ளுகலி வஞ்சி
யென்னு நாற்பா விவற்றுட னியன்மருட்
டாழிசை துறைவிருத் தங்களென் றிவற்றிற்
[1]சூழ்வகை யினம்பல சொல்லுத லினவியல். (க)

---

[பி-ம்.] [1] குளவகை.

157 ஒன்றே யாகியு மொன்றுபல வாகியும்
பலவொன் றாகியும் பாற்படு மினமே. (உ)

158 அவற்றுள்,
ஒன்று கியவின மெனப்பட் டனவுலா
வாற்றுப் படைவகை மடன்முத லாயின. (௩)

159 [1]ஒன்றுபல வாகிய வினமந் தாதி
கோவை காப்பிய மாதியாக் கூறுவன. (௪)

160 பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலித்தொகை குறுந்தொகை [2]நெடுந்தொகை [3]முதலாயின.

161 பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலம்பக மும்மணிக் கோவைமுத லாயின. (௬)

க.—பாப்பொருத்தம்.

(வெண்பா.)

162 அந்தணர் சாதி யாகிய வெள்ளைக்குச்
சந்திரன் றன்னொடு தகைமிகு வியாழன்
கடவுளர் கார்த்திகை [4]முதலேழ் நாளா
மீனங் கடகந் தேளே யோரை
சந்தனம் விரைபூ வந்தண் மல்லிகை
வெண்மதி [5]நிறனே வண்ண நிலனே
முல்லை யென்னச் சொல்லினர் புலவர். (க)

(ஆசிரியப்பா.)

163 காவலர் சாதி யாகிய வகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளே மகமுத லுளே ழாகுஞ்
சிங்கந் தனுவே மேட மோரை
செஞ்சந் தனம்விரை கழுநீர் பூவே
செந்நிற நிறனே நன்னிலங் குறிஞ்சி. (உ)

---

[பி-ம்.] [1] ஒன்று பலவா கியவின மென்பவை, அந்தாதி கோவை காப்பிய மாகும். [ச. பி.]

[2] நெடுந்தொகை என்பது அகநானூறு.

[பி-ம்.] [3] முதலியன. [4] முதலு ளேழா. [5] நிறமே.

(கலிப்பா.)

164 நெடுநிலைக் கலியே வணிகர் சாதி
கடவுளர் சனிபுதன் கருதிய நாளே
யநுடமுத லாறே யோரை துலாங்குட
மிதுனஞ் சந்தனம் விரைபூச் சண்பகம்
பொன்னிற நிறனே நன்னில நெய்தல். (௩)

(வஞ்சிப்பா.)

165 எஞ்சிய வேளாண் சாதி வஞ்சி
நாளே யவிட்ட முத[1]லேழ் நாளா
மிடபங் கன்னி மகர மோரை
சார்ந்த விரையே தண்ணறுங் கலவை
யேந்திய போதே யின்னறு நீல
நீல[2]நிறனே நெடுநில மருதம். (௪)

166 நால்வகைப் பாவிற்கு மேலோர் வகுத்த
வினங்களும் பெறுமென நினைந்தனர் கொளலே. (௫)

167 நால்வகைப் பாவு நால்வகைக் குலத்தின்
பால்வகைப் படுமே [3]முதலன விரண்டின்
புணர்ச்சி மருட்பாப் பொருந்தா வருணம். (௬)

168 நாளு மோரையு நலத்தகு நிலனும்
விரையுஞ் சாதியு நிறனுங் குணனு
[4]முரைபெறும் பாநரர்க் குடைய வென்ப: கல்லாடனார். (௭)

169 அந்தச் சாதிக் கந்தப் பாவே
[5]தந்தனர் புலவர் தவிர்ந்தன வரையார். (௮)

170 வெள்ளையு மகவலும் விருத்தமுங் கலியும்
வஞ்சியு மெஞ்சா மங்கலம் பொருந்தும். (௯)

---

[பி-ம்.] [1] லே ழாகு. [2] நிறமே நிலமே மருதம். [3] முதல. [4] முரை பெறு பாநான் குடைய; முரைபெறு நான்கு முடைய. [5] யிசைந்தன புலவர் தவிர்ந்தன வரையார்.

171 வெள்ளை யகவல் விருத்தங் கலியே
வஞ்சி யென்றிவை மங்கலப் பாவே: அவிநயனார். (கo)

[இனவியல் என்ற தலைப்பிட்டுப் பின்வருஞ் சூத்திரங்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. (ச. பி.)

'வெள்ளை யகவல் கலியே வஞ்சி
யெனுநாற் பா......வேற்றுட னியலு
மருட்டா ழிசைதுறை விருத்தமென் றிவற்றிற்
சூழ்வகை யினம்பல சொல்லுத லினவியல்' (க)
'செய்யுட் டானே யிரண்டென மொழிப' (உ)
'புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயிற்
செவியுறைச் செய்யு ளதுவென மொழிப' (ங)
'வசையொடு நசையொடும் புணர்ந்த......
னங்கதச் செய்யு ளென்மனார் புலவர்' (ச)
'வெள்ளை யகவல் விருத்தங் கலியே
வஞ்சி யென்றிவை மங்கலப் பாவே' (ரு)]

---

உ—பாவினம்.

172 [1]மேதகு சாதகம் பிள்ளைப் பாட்டே
கோதில் வேந்தன் குடைமங் கலமே
யோதிய வொருபோ கமைந்த கலம்பக
முலாவே யின்னப் பூவே பரணி
பழுதின் மடன்மறம் பல்சந்த மாலை
யிணைமணி மாலை யிரட்டைமணி மாலை
மும்மணி மாலை நான்மணி மாலை
கலம்பக மாலை மும்மணிக் கோவை
[2]யருங்கலி யொலியே யானைத் தொழிலே
வருக்க மாலை நாம மாலை
திருக்கிள ரின்னிசை சிலைபரி கரியே
யெழில்புனை [3]வாள்குடை தொழில்புனை வேல்கோ
லழிவி லாநே ரைம்படை விருத்த

---

[பி-ம்.] [1] மேவிய. [2] யிருங்கலை யொலியியல். [3] வாள்வே றேரொடு நாடூர், பொழியிசை சங்கம்,.......வைம்படை விருத்த

நாழிகைக் கவியே நவமணி மாலை
கைக்கிளை யரிபிறப் பட்டமங் கலமே
யில்லற வெள்ளை யெழில்புனை தாரகை
சொல்லிய தாண்டகந் துகளறு பதிகஞ்
சீர்மெய்க் கீர்த்தி செருக்கள வழியே
யாற்றுப் படைவகை கண்படை துயிலெடை
விளக்கு நிலையே வெஞ்சினக் கடாநிலை
யெண்ணிய யாண்டே கண்ணிய பறைநிலை
[1]யரும்பொரு ணிறுத்த வந்தா தித்தொகை
புறநிலை வாயுறை செவியறி வுறூஉவே
பாத மாதி பணைமுலை நயனங்
குற்றமி லுழத்தி குறத்திப் பாட்டே
யொருபா வொருபஃ திருபா விருபஃது
கோவை கணக்கே தொடர்நிலை பாட்டே
கடைநிலை கையறு [2]நிலையெனக் கருதி
யிடனறி புலவ ரியம்பின ரினமே. (க)

1—சாதகம்.

173 தோற்றிய சாதகஞ் சாற்றுங் காலைப்
பற்றிய கலியுகத் துற்ற யாண்டிற்
றிருந்திய [3]சகாத்தமு மாண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமு மேய வாரமு
மிராசியு மன்னுற மொழிதற் குரிய. (உ)

2—பிள்ளைப்பாட்டு.

174 பிள்ளைப் பாட்டே தெள்ளிதிற் கிளப்பின்
மூன்று முதலா மூவே ழளவு
மான்ற திங்களி னறைகுவர் நிலையே. (ங)

---

[பி-ம்.] [1] அறிஞர் தெரிந்த. [2] நிலையென வுணர்ந்தோர் - இயலும் பாவின மெனவிளம் பினரே. [3] சகாத்தத்தி ணுண்டும் பொருந்திய-ஞாயிறும் பக்கமுஞ் செய்யுட்கு முரித்தே.

175 ஒன்றுமுத லியாண் டீறாதினும் வரையார்: பொய்கையார். ()

176 தோற்ற முதல்யாண் டீரெட் டளவு
மாற்றல் சான்ற வாண்பாற் குரிய. (ரு)

177 காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய: இந்திரகாளியார். (சு)

178 தொன்[1]னில வேந்தர் [2]சுடர்முடி சூடிய
பின்னர்ப் பெறூஅர் பிள்ளைப் பாட்டே: பரணர். (எ)

179 காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகவென் றன்முத
லம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய [3]மற்றவை [4]சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (அ)

180 தந்தை தாயே பாட்டன் பாட்டி
முந்துற வுரைத்தன் முறைமை யென்ப. (கூ)

181 [5]திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்று மன்னுநீக் கென்றனர். (க0)

182 சிற்றில் சிறுதேர் சிறுபறை யொழித்து
மற்றவை மகளிர்க்கும் வைப்ப தாகும். (கக)

183 சிற்றி லிழைத்தல் சிறுசோ றுக்கல்
பொற்பமர் குழமகன் புனைமணி யூசல்
யாண்டீ ராறதி லெழிற்காம னோன்பொடு
வேண்டுத றுனுள விளம்பினர் புலவர். (கஉ)

---

[பி-ம்.] [1] னிலை. [2] பொன்முடி. [3] பத்திவை.

[4] "சுற்றத் தளவுங் கவிக்கெல்லை யாய்க்கொண்டு சொல்லுவரே" என்றார் நவநீதப்பாட்டியலுடையாரும்.

[பி-ம்] [5] இச்சூத்திரத்துக்குமுன்,

'பெண்பா லாயிற் பின்னர் மூன்று
மன்னுதல் நீக்கினர் வாய்மொழிப் புலவர்' (கச)

என்று தனியே ஒருசூத்திரம் எழுதப்பட்டுளது. [ச-பி.]

184 திருமா லரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேன் முருகன் பரிதி வடுக
னெழுவர் மங்கைய ரிந்திரர் சாத்த
னிதியவ [1]னீலி [2]பதினொரு மூவர்
திருமக ளுமக டிகழ்மதி யென்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே. (கங)

185 காப்பின்முத லெடுக்குங் கடவு டானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோ னாகும். (கச)

186 அவன்றான்,
காவற் கிழவ னாக லானும்
பூவின் கிழத்தியைப் புணர்த லானு
முடியுங் கடகமு மொய்பூந் தாருங்
குழையு நூலுங் குருமணிப் பூணு
மணியுஞ் செம்ம லாக லானு
முன்னுற மொழிதற் குரியனென்ப. (கரு)

187 விரிசடைக் கடவுளும் வேய்த்தோ ளெழுவரு
மருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையுங் கொடுமையுங் கூறு ராகிப்
பெயருஞ் சின்னமும் பிறவுந் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமக ளென்றிவை
விளங்கக் கூறல் [3]விளம்பிய மரபே. (கசு)

---

[பி-ம்.] [1] னீலி நிலமக ணீளை.

[2] பதினொருமூவர்—பன்னிருவர் ஆதித்தர், பதினொருவர் உருத்திரர், எண்மர் வசுக்கள், இருவர் மருத்துவர் ஆகிய முப்பத்துமூவர். "நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு" என்றார் **திருமுருகாற்றுப்படையினும்.** "பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியு, நிதிமுத லோனும் பரிதி யுஞ் சாத்தனும்" என்பதனால் **நவநீதப்பாட்டியலாரும்** பன்னிருவர் ஆதித்த ரின்வேறாய்ப் பரிதியெனக் கூறுதல் காண்க.

[பி-ம்.] [3] வழங்கிய; விளங்கிய.

188 ஒன்பது பதினொன் றென்பது காப்பே: பரணர். (கஎ)

189 அகவல் விருத்தமுங் கட்டளை யொலியுங்
கலியின் விருத்தமுங் கவின்பெறு பாவே. (கஅ)

190 பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரு முளரே. (கக)

191 முதற்க ணெடுக்கு மகவல் விருத்த
மெழுத்தின் பகுதி யெண்ணினர் கொளலே. (உ0)

192 நீணெறி யுவகை [1]யாண்மக விற்கே
யைம்மூ வாண்டே [2]யவர்முதற் சாற்றல். (உக)

193 பொங்குகதி ரிளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
யடலிள விடையே யாறிரண் டாண்டி
னிடைநிக ழுவமை யென்மனார் புலவர். (உஉ)

194 பெண்மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனி னின்பந் தெள்ளாத் தேறல்
கரும்பி னிளமுளை கல்லாக் கிள்ளை
யிளந்தளிர் வல்லி யென்றிவை யெல்லாம்
பெய்வளை மகளிர்க் கெய்திய வுவமை. (உங.)

195 இளங்[3]கதிர்த் திங்க ளெல்லார்க்கு முரித்தே: பரணர். (உச)

196 அவைதாம்,
பிள்ளையைப் பாடலிற் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே யோகை காப்பே வளர்ச்சி
யச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
யம்புலி சிற்றில் குழமக னூச

[பி-ம்.] [1] 'யாமாண் மகவிற், கெனினுமூ வாண்டே யாறுமுதல் சார்த்தல்'. [2] யாறுமுதற். [3] கதிர் திங்கள்.

லென்றனர் பிறவுந் தொன்னெறி மரபிற்
றத்தந் தொழிற்குத் தகுவன புகற
லெத்திறத் தோர்க்கு முரிய வென்ப[1]
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே. (உரு)

197 நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யு
ளொன்றுமூன் றைந்தே ழொன்பான் பதினென்
றென்றிவை யிவற்றி [2]னிகந்தன விழுக்கே. (உசு)

198 பிறப்பே யோகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட வச்ச முறுத்தலொடு நான்கு
மாரா யுங்கா லைந்துமூன் றிடையா
யோரே ழொருபொருட் குபர்ச்சிபிழி பொன்றே: (உஎ)
இந்திரகாளியார்.

### 3.—வேந்தன் குடைமங்கலம்.

199 முன்னீ ரடியினுங் குடைத்தொழி லியம்பியும்
பின்னீ ரடியிற் றனிநிலை யிரட்டியுங்
கொற்றவற் [3]புகழ்ந்து குடையென முடிக்கு
நற்றிற நேரிசைக் குடைவெண் பாட்டே.[4] (உஅ)

---

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்க்குமாறு,
'கொச்சகக் கலியொடு கலிவெண் பாட்டே
நெடுவெண் பாட்டின்முந் நான்கிற வாது
நேரடி நெடிலடி கழிநெடி லடியெனு
மூவகை யடியி னீரிரண் டாகிக்
கோவை யொப்பது கொச்சகக் கலியே' (உஅ)
என்று ஒரு சூத்திரம் தனியே எழுதப்பட்டுளது. [ச-பி.]

[2] னிழிந்தன. [3] புணர்ந்து.

[4] இதற்குப்பின் சேர்க்குமாறு,
'கொடைமங் கலப்பொருள் குறித்த நேரிசைத்
தொடையமை வெள்ளை சுடர்முடி சூடிய
மொய்கழன் மன்னைமுற் பாடுங் கலியென
மையறு புலவர் வகுத்துரைத் தனரே' (கூஉ)
என்று ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுளது. [ச-பி.]

200 அதுவே,
குடைச்சொற் சிந்தடி யீற்றில்வைத் தந்தக்
குடைச்சொல் [1]லாதி குறளகத் தடக்கி
யீற்றய லடியினு மீற்றினு மிறைவனைப்
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும்: இந்திரகாளியார். ()

201 ஒட்டிய குடைப்பொரு ளுரைக்கு நேரசை
கட்டளை யாகுதல் கடனென மொழிப. (௩௦)

202 கட்டளை யென்பது கருதுங் காலை
யீற்றடி யொழிய வேனைமூன் றடியும்
பாற்படு மெழுத்தின் பகுதியொப் பதுவே. (௩௧)

203 இதற்கே யாமெழுத் தெண்ணுங் காலைக்
குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமு
[2]மொற்று மொழித்துயி ருயிர்மெய்யுங் கொளலே. (௩௨)

204 மோனையு மெதுகையுந் தொடையென மொழிப. (௩௩)

205 சாற்றியமா ரொருத்த றனிமை மிகுதிசமம்
போற்றுமுடம் பாடு புலனுண்மை—யேற்றுந்
தலைப்பாடு பாதி தருகொடை பத்து
நிலைப்பாடு நேரசையா நேர். (௩௪)

[இஃது நேரசை தனிமைக்கண் வந்தது.]

4.—ஒருபோது.

206 தன்மை முன்னிலை படர்க்கையுட் டன்மை
யொழித்திரு வகையு ளொன்றுற் கடவுட்
பழிச்சு மொருபோ திருமூன் றுறுப்பு
மமைந்தொருங் கியலு நயந்திகழ் கலியுள்
வண்ணகம் போதினு மெண்ணே போதினு
மோதிய வுறுப்பாற் பேர்புகன் றனரே. (௩௫)

[பி-ம்] [1] லாதிக் குளகத் தடக்கி. [2] மொற்றுமாய் தமுமொழித் துயிர்மெய்யுங்.

207 வரன்முறை பிறழ வுறப்பு மயங்கி
மிக்குங் குறைந்தும் வருவது கொச்சக
வொருபோ காமென வுரைத்தனர் புலவர்.[1] (௩௬)

208 [2]கொச்சகத் தன்மையிற் கொச்சக மென்ப:[3] நற்றத்தனார். ()

209 தேவப் பிராணம மெனும்வட மொழியைத்
தேவ பாணியெனத் திரித்துவழங் கினரே: செயிற்றியனார்.

---

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்க்கவேண்டியனவாக,

'தாவு.........ருழிசைமுறையின்றிச்
சுரிதக நிமிர்ந்து மெண்ணிடை பிறழ்ந்தும்
வருவது கொச்சக வொருபோ கடி....கை
...ருபதிழி பாய்நாற் பதின்மிகு மென்ப.' (௩௧)

'எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்
டனிச்சொல் வார மோடைந் நிலத்தே.' (௪0)

என இரண்டு சூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளன. [ச. பி.]

[2] 'கொச்சக மென்பது ஒப்பிணுகியபெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்; அதுபோல, ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சக மெனப்படும்' (தொல். செய். ௧௨௧) எனவும், 'இனிக் கொச்சக மென்பது ஒப்பிணுகியபெயர்: என்னே? பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்ப; அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்மு ளொப்ப அடுக்கியுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்றுராகலி னென்பது. இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கிக் கொய்சகமென்று சிதைத்தும் வழங்குப' (தொல். செய். ௧௫௩) எனவும் பேராசிரியரும், "பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்பவாகலின் அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியும் தம்மு ளொப்ப அடுக்கியும் வருஞ் செய்யுளைக் கொச்சகமென்றார். இது ஒப்பிணுகியபெயர். இக்காலத்து இது மகளிர்க்குரியதாய்க் கொய்சகமென்று வழங்கிற்று" (தொல். செய். ௧௫௩) என நச்சினார்க்கினியரும் கூறியவாற்றானறிந்து கொள்க. இனிக் கொச்சைத்தன்மையினென்பதூஉம் பாடம். "கொச்சக மராகம்" (தொல். செய். ௧௨௧) என்பதனுரையில் 'சிறப்பிலதனைக் கொச்சை யென்று கூறும் வழக்குநோக்கி இதனையும் சிறப்பின்மையாற் கொச்சக மென்று ரென்பாரு முளர்' என நச்சினார்க்கினியரே கூறினார்.

[பி-ம்.] [3] இதற்குப்பின், 'தேவரை வாழ்த்தலிற் றேவர்பாணி யென்ப' என ஒரு சூத்திரம் காணப்படுகிறது. [ச. பி.]

210 தேவ பாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலைந்த சென்னி
நீர்நில மளந்த நெடியோன் மேற்றே. (௩௯)

211 சுடர்கதிர்த் திங்கள் சூடி யோற்கும்
படர்திரைப் பனிக்கடன் மாதடிந் தோற்கு
முரிய காலமு முளவென மொழிப: செயிற்றியனார். (௪0)

212 வேந்தன் வேண்டு நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியு மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர். (௪௧)

### 5—கலம்பகம்.

213 சொல்லிய கலம்பகஞ் சொல்லி லொருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
யம்மனை யூசல் யமகங் களிமறஞ்
சித்துக் கால மதங்கி வண்டே
[1]கொண்டன் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
குறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்த
மாதி யாக வருமென மொழிப.[2] (௪௨)

---

[பி-ம்.] [1] 'கொண்டன் மருள்சம் பிரதம்வெண் டுறைதவம்
வஞ்சித் துறையே யின்னிசை குறமே
யகவல் விருத்த மெனவருஞ் செய்யுட்
கலந்துட னெய்திய வந்த மாதியாய்
வருமென் றறைந்தனர் வாய்மொழிப் புலவர்' [ச. பி.]

[2] இதற்குப்பின் சேர்க்குமாறு,
'சொல்லிய கலம்பகத் தொடர்பு நோக்கி
லொருபோகு முதற்கண் வெண்பாக் கலித்துறை
புயமே யம்மனை யூசன் மதங்கு
களிமறஞ் சித்துக் கால மடக்கே
வண்டே கொண்டன் மருள்சம் பிரதம்
வெண்டுறை தாழிசை வஞ்சித் துறையே
யின்னிசை குறமே யகவல் விருத்தமென
வந்த செய்யுட் கலந்துட னெய்தி
யந்த மாதியாய் வருமென மொழிப' (௪௩)
என ஒரு சூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச. பி.]

214 தேவர்க்கு முனிவர்க்குங் காவ லரசர்க்கு
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பி லெழுப தமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள். (சங)

## 6—உலா.

215 முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி. (சச)

216 பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையு
மொத்த காமத் திளையாள் வேட்கையுங்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி [1]நடப்பது [2]கலிவெண் பாட்டே: போய்கையார்.

217 பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே. (சரு)

218 குடிநெறி மரபு கொளல்கொடை விடிய
[3]னன்னீ ராட னல்லணி யணித
ரென்னக ரெதிர்கொள [4]நன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும். (சஎ)

---

[பி-ம்.] [1] நடப்பினது; நடப்பது வெண்கலிப் பாட்டே.

[2] "இனி யொருபொருணுதலாது திரிந்துவருங் கலிவெண்பாட்டும் ஈண்டுக்கூறிய நெடுவெண்பாட்டோ டொருபுடையொப்புமையின் அக்கலி வெண்பாட்டாக இக்காலத்தார் கூறுகின்ற உலாச்செய்யுளும் புறப்புறக் கைக்கிளைப்பொருட்டாதல் ஒன்றெனமுடித்தல் என்னு முத்தியாற் கொள்க. அவ்வுலாச்செய்யு ளிரண்டுறுப்பாயும் வெண்பாவிற் கெட்டும் வருதலிற் கலிவெண்பாவின் கூறும். இக்காலத்து அதனை ஒருறுப்பாகச் செய்து செப்பலோசையாகவுங் கூறுவர். அது துள்ளலோசைக்கே யேற்குமா றுணர்க" (தொல். செய். கதஅ) எனவும், "அது திருவுலாப்புறத்துள், 'வாமான வீசன் வரும்' (சேரமான்பெருமாணுயனர் ஞானவுலா) என முடித்து மேல் வேறோருறுப்பாயவாறும், ஒழிந்தவுலாக்களுள் வஞ்சியுரிச்சீர் புகுந்த வாறும் அடிவரையறையின்மையும்" (தொல். செய். கருக) எனவும் நச்சி னார்க்கினியர் கூறுவர்.

[பி-ம்.] [3] வின்னீ, [4] னன்னெடு.

219 ஆதி நிலையே குழாங்கொள லென்றெடுத்
தோதிய புலவரு முளரென மொழிப. (சஅ)

220 எழு நிலையு மியம்புங் காலைப்
பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவக் காத
ஞேக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே.[1] (சகூ)

221 பேதைக் கியாண்டே யைந்துமுத லெட்டே. (ருo)

222 பெதும்பைக் கியாண்டே யொன்பதும் பத்தும். (ருக)

223 மங்கைக் கியாண்டே பதினென்று முதலாத்
திரண்ட பதின லளவுஞ் சாற்றும். (ருஉ)

224 மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படு மொன்பதிற் றிரட்டி செப்பும். (ருங)

225 அரிவைக் கியாண்டே யறுநான் கென்ப. (ருச)

226 தெரிவைக் கியாண்டே யிருபத்தொன்பது. (ருரு)

227 ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது
பேரிளம் [2]பெண்டுக் கியல்பென மொழிப: போய்கையார். ()

228 காட்டிய முறையே நாட்டிய வாண்பாற்
கெல்லையும் பெயரு மியல்புற வாய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரு முளரே. (ருஎ)

229 பாலன் யாண்டே யேழென மொழிப. (ருஅ)

230 மீளி யாண்டே பத்தியை காறும். (ருகூ)

231 மறவோன் யாண்டே பதினன் காகும். (கூo)

---

[பி-ம்.] [1] இதற்குப் பின் சேர்த்துக்கொள்ளும்படி,
'ஐந்தொன் (பது)பதி னென்றுபன் மூன்றே
பத்தொன் பதுநா லுடனே யைந்து
முப்பதொ டெட்டுய ரெண்ணைந் தென்ன
யாண்டி னெல்லை யியம்பினர் புலவர்' (சகூ)
என்று ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுளது. (ச-பி.)

[2] பெண்ணிற் கியல்பென.

232 திறலோன் யாண்டே பதினெந் தாகும். (௬௧)

233 பதினா றெல்லை காளைக் கியாண்டே. (௬௨)

234 அத்திற [1]மிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகு மிகினே முதுமகன்: அவிநயனார். (௬௩)

235 நீடிய நாற்பத் தெட்டி னளவு
மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப. (௬௪)

236 சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
[2]நன்மது நுகர்த லின்ன பிறவு
மவரவர்க் குரிய வாகு மென்ப. (௬௫)

237 வேந்தர் கடவுளர் விதிநூல் வழியுணர்
மாந்தர் கலிவெண் பாவிற் குரியர். (௬௬)

238 நாலு வருணமு மேவுத லுரிய
வுலாப்புறச் [3]செய்யுளென் றுரைத்தனர் புலவர்: அவிநயனார்.

7—சின்னப்பூ.*

239 மலையும் யாறு நாடு மூரும்
பரியுங் களிறுங் கொடியு முரசுந்
தாரும் பெயரு மெனத்தெரி பத்துஞ்
சொல்லு மெல்லையின் முதற்குறட் கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப்
பின்னர்க் குறளுட் பாட்டுடைத் [4]தலைவ
ரியற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றுஞ்

---

[பி-ம்.] [1] மியன்ற. [2] யொளிபெறு காத லின்னன பிறவு. [3] செய்யு ளெனவுரைத் தனரே.

* "வழக்கொடு சிவணிய வகைமை யான" (தொல். பொருள். புறத். ௩௧) என்பதனுரையில் நச்சினார்க்கினியர் "சிவணியவகைமை என்றதனானே முற் கூறியவற்றோடே நாடும், ஊரும், மலையும், யாறும், படையும், கொடியும், குடையும், முரசும், நடைநவில்புரவியும், களிறும், தேரும், பிறவும் வருவன வெல்லாங் கொள்க. இவற்றுட் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ என்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க" என்பர்.

[பி-ம்.] [4] தலைவர், பெயர்வைத் தவர்தமக் குரிமை தோன்றுஞ்.

செயல்பெற வைப்பது சின்ன மதுவே
யாதிப் பாவி னதனினம் வருமே: போய்கையார். (சூஅ)

240 மலையே யாறே நாடே யூரே
பறையே பரியே *களிறே தாரே
†பெயரே கொடியே யென்றிவை தசாங்கம். (சூகூ)

241 பத்தே யேழே மூன்றே சின்னம்.[1] (எ0)

8—பரணி.

242 மயக்கறு கொச்சகத் தீரடி யியன்று
நயப்புறு தாழிசை யுறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த வுழிஞை முற்றித்
தும்பையிற் [2]சென்ற தொடுகழன் [3]மன்னனை
[4]வெம்புசின மாற்றான் றானைவெங் களத்திற்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்
[5]தொருதனி யேத்தும் பரணியது பண்பே. (எக)

243 தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி யமருங் காளி கோயில்

---

* களிறொழித்துப் படைகோடலுமுண்டு. அவ்வாறு திருவாசகத்துள்ள திருத்தசாங்கத்துக் காண்க.

† பெயரை ஆணை என்பாருமுளர். (இலக்கணவிளக்கப்பாட்டியல்-உஉ)

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,

'பத்தே யேழே மூன்றொரு சின்னமொழி
யாயிற் பின்னர் வருமொழி தன்னொடு
பிளவா ரிருமொழி யாமெனி னஞ்செழுத்
துடன் ........... ........... தாகு
மெ(ன்)ன மொழிப தொன்னெறிப் புலவர்' (ருச)

'ஒருபெய ரீரடி மொழிவைத்துப் பிளவார்'

என இரண்டு சூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன. [ச-பி.]

[2] சினம்பெற. [3] மன்னன்; மன்னவன். [4] வெம்பு சினமாற் றானை வெங் களத்துக், குருதிப் பேரியாறு பெருகுங் கொற்றத். [5] தொருவற் போற்றும். [ச-பி.]

கன்னியை யேத்த லலகை விநோதங்
கணநிலை நிமித்தம் பசியே யோகை
பெருந்தேவி பீட மழகுற விருக்க
வமர்நிலை நிமித்த மவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையு மளவு
மரபினி துரைத்தன் மறக்களங் காண்டல்
செருமிகு களத்திடை யடுகூழ் வார்த்தல்
[1]பரவுத லின்ன வருவன பிறவுந்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே. (எஉ)

244 யானை சாய்த்த வடுகளத் தல்ல
தியாவரும் பெறுஅர் பரணிப் பாட்டே. (எங)

245 [2]எழ்தலைப் பெய்த நூறுடை யிபமே
யடுகளத் தட்டாற் பாடுதல் கடனே. (எச)

9—மடல்.

246 அறம்பொருள் வீடு திறம்பெரி தழித்துச்*
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் [3]தலைமக னியற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபி னந்த வொண்டொடி [4]பெய்தலு
மற்றவள் வடிவை யுற்றகிழி யெழுதிக்
காமங் [5]கவற்றக் கரும்பனை மடன்மா
வேறுவ ராடவ ரென்றனர் புலவர். (எரு)

247 மடன்மாப் பெண்டி ரேறா ரேறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே. (எசு)

248 கடவுளர் மேற்றே காரிகை மடலே.* (எஎ)

---

[பி-ம்.] [1] பரவுதன் மன்ன. [2] இச்சூத்திரம் சங்கத்துப்பிரதியிற் காணப்படவில்லை.

* இவ்வாறு வந்தன மங்கையர்கோன் அருளிச்செய்த சிறியதிருமடல் பெரியதிருமடல் என்பன.

[பி-ம்.] [3] தலைவ னியற்பெயர்க். [4] யேத்தன். [5] கையறக்.

249 எந்தை [1]யுடைப்பெயர்க் கெதுகை சாற்றி
யந்தமி லின்பம் பொருளா [2]வேத்திப்
பொருளு மறனும் [3]வீடும் பழித்து
மடன்மா வேறு தன் மாதர்க் குரித்தே. (எஅ)

### 10—மறம்.

250 பெருநில வேந்தன் மகட்பால் [4]வேண்டி
யொருபெருந் தூத னுரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் [5]வெஞ்சினந் திருகி
[6]மாற்றமிக வுரைப்பது மறமென மொழிப.[7] (எகூ)

### 11—பல்சந்தமாலை.

251 சொன்ன கலம்பக வுறுப்புவகை நீக்கி
மன்னிய பத்து முதனூ றளவா
வந்த மரபின் வரூஉஞ்செய்யுண் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும்.[8] (அ0)

### 12—இணைமணிமாலை.

252 இணைமணி மாலை தணிவிலந் தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
றுறையு மியைந்தி ரைம்பது வருமே. (அக)

---

[பி-ம்.] [1] யுடையபெயர்க். [2] வேற்றி. [3] வீடு மழித்து. [4] வேண்ட, வொருபெருந். [5] வெஞ்சின வஞ்சின, மறமிக மொழிவது. [6] மாற்றமென.

[7] இதற்குப் பின் சேர்த்துக்கொள்ளுமாறு,

'கூடாக் குலமுதன் மன்னன் மகள்வேண்டத்
தாதையுந் தாயுந் தன்னைய ரனைவரு
மாறுசொன் மகட்பாற் காஞ்சியு மறனே' (சூஉ)

என ஒருசூத்திரம் தனியே யெழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

[8] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,

'உறுப்பி னீக்கிய பலவகைச் சந்த
மிறுத்த வகைய தியற்பல சந்தம்' (சூச)

என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

253 வெண்பாக் கலித்துறை யீரிரண் டியைந்த
வொண்பா நூறவை யிணைமணி மாலை.* (அஉ)

13—இரட்டைமணிமாலை.

254 வெண்பா முதலாக் கலித்துறை பின்வரு
மிந்த விருப திரட்டைமணி மாலை. (அ௩)

255 ஆதியந்தம் வெண்பாக் கலித்துறை
[1]யேதமின்றி வருவ திரட்டைமணி மாலை
[2]யதுவே நாலைந் தியலு மென்ப. (அச)

14—மும்மணிமாலை.

256 மிருத்த வெள்ளை கலித்துறை யகவல்
விருத்த மும்மணி [3]விளம்புமந் தாதி[4]. (அரு)

15—நான்மணிமாலை.

257 [5]வெண்பாக் கலித்துறை யகவல் விருத்தம்†
நண்பாய் வருவது நான்மணி மாலை. (அசு)

258 அகவலு மகவல் விருத்தமு நாற்ப
தகவலை முன்வைத் தறைவது கடனே.‡ (அஎ)

---

* வெண்பாவகவ லிணைமணிமாலையுங் கொள்வர் இலக்கணவிளக்கப் பாட்டியலார்.

[பி-ம்.] 1 யேதமின் றியல்வ. 2 அதுவே, நாலைந் தியலு மென்மனார் புலவர். 3 'மாலையந் தாதி.

4 இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,
'வெண்பாக் கலித்துறை யகவல் விருத்தம்
வண்பா மூன்றவை மும்மணி மாலை' (சுஅ)
'வெள்ளை கலித்துறை யகவல் விருத்தங்
கொள்வ மும்மணி கோத்தவந் தாதி' (சுகூ)
என இரண்டுசூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன.

5 'வெண்பா முன்வரக் கலித்துறை யகவல்
விருத்த நண்பாய் வருவது நான்மணி
மாலை யென்று வகுத்துரைத் தனரே' [ச-பி.]

† வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் எனத் தொடுப்பர் பிற்காலத்தர்.

‡ இது நான்மணிமாலைக்குப் பொருந்தாதிருக்கிறது.

259 வெள்ளை கலித்துறை யகவல் விருத்தங்
கொள்வது நான்மணி கோத்தவந் தாதி.[1] (அஅ)

## 16—கலம்பகமாலை.

260 [2]ஒருபோ குடனே யம்மனை நீக்கி
வெள்ளை முதலா வெல்லா வுறுப்புந்
தள்ளா வியலது கலம்பக மாலை.[3] (அகூ)

261 ஒருபோ கம்மனை யொழித்துவெண் பாமுதற்
கருதிற் போது கலம்பக மாலை. (கூ0)

## 17—மும்மணிக்கோவை.

262 [4]வெள்ளையு மகவலு நேரிசை யாகக்
கலித்துறை வரவந் தாதி யாகி
முறைமையி னியல்வது மும்மணிக் கோவை. (கூக)

263 தோன்றிய வகவல் வெள்ளை கலித்துறை
மூன்றும் வருவது மும்மணிக் கோவை.* (கூஉ)

264 மும்மூன் றொருபொருண் மிசைவரு மென்ப. (கூங)

---

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளும்படி,
'வெண்பா வகவல் கலியே வஞ்சியெனு
நன்பா லூறவை நான்மணி மாலை' (எ0)
'அதுவே யந்தாதி யாக வருமே' (எக)
என இரண்டுசூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன. [ச-பி.]

[2] ஒருபோ குடனம் மனைநனி நீக்கி. [ச-பி.]

[3] இதற்குப்பின் சேர்த்துக் கொள்ளும்படி,
'அந்த மாதி யாகியுங் கலம்பகம்
வந்த செய்யுளள வாகினும் வருமே' (எங)
என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

[4] 'அகவலும் வெள்ளையு நேரிசை யாகக்
கலித்துறை வரவந்த மாதி முறைமையி
னியல்வது மும்மணிக் கோவை யாகும்' [ச-பி.]

* இதற்கும் அளவு முப்பது. இஃது ஆசிரியம் வெண்பாக் கலித்துறையாக வருமெனவும், மும்மணிமாலை வெண்பாக் கலித்துறை ஆசிரிய விருத்தமாக வருமெனவும் கொள்க.

18—கலியந்தாதி.

265 வல்லின மெல்லின மிடையின [1]வெழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனிற் குறிலே நெடிலெனி னெடிலே
[2]பொருந்தி நாற்கலை [3]கொண்டோ ரடியாய்த்
திருந்து மிவ்வகை நான்கடி யாகியு
மோரொலி யாகியு மெண்ணான் காகிய
[4]கலையொடு பொருந்தியுங் குறிலு நெடிலு
முறைமுதல் வரினு மவ்வெழுத் தாகியு
மிப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும். (௬௪)

266 [5]வெண்கலி யுஞ்சில சிறுபான்மை வருமே. (௬௫)

19—ஒலியந்தாதி.

267 தத்த மினத்தி லொப்புமுறை பிறழாது
நாலடி யீரெண் கலையொரு முப்பது
கோவிய தொலியந் தாதி யாகும். (௬௬)

268 ஈரொலி [6]யாகிய வெண்ணான்கு கலையெனச்
சீரியற் புலவர் [7]செப்பினர் கொளலே. (௬௭)

269 வண்ணக மென்ப தொலியெனப் படுமே. (௬௮)

20—யானைத்தொழில்.

270 மூவகை நிலனு மூவகை நிறைவும்
பல்வகைத் தேயமு மெழுவகை யுறுப்பும்
வருணமும் யாண்டு மைவகைக் கொலையும்

---

[பி-ம்.] [1] வொற்றுப். [2] பொருந்து. [3] கொண்டதோ ரடியாய்த்.
[4] 'கலையொடு பொருந்தியுங் குறிலுங் குறிலு
நெடிலு நெடிலு மிம்முறை முதல்வர
அவ்வெழுத் தாகியு மிப்பரி சியன்ற
முப்பது கட்டளை கலியந் தாதி
யாகும் பெயரென் றறையல் வேண்டும்' [ச-பி.]
[5] 'வெண்கலி யுஞ்சிறு பான்மையில் விடத்துள'
[6] யாகி யெண்ணான்கு. [7] செப்பின ரென்ப. [ச-பி.]

மிருவகை நடையு மைவகை யுணர்வு
முடையோர்ப் பேணலு முளப்படப் பிறவு
நண்ணிய வேளாண் பாவி னலம்பெற
வெண்ணி யுரைப்ப தியானைத் தொழிலே. (௯௯)

271 [1]கிரிசரம் வனசர நதிசர மென்றிவை
நிலைபெறு நிலனென நிறுத்திசி னோரே. (௧௦௦)

272 உயரமு நீளமுஞ் சுற்று மளவினிற்
குறையா தியல்வது நிறைவெனப் படுமே. (௧௦௧)

273 பல்வகைத் தேயங் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமு மென்மனார் புலவர். (௧௦௨)

274 பாத நாலுங் கையும்வா லதியுங்
கோசமு நிலனுறத் தீண்டுதல் குறியே. (௧௦௩)

275 குலமெனப் படுவது பலவகை வருணமு
நலனுற வுரைக்கு நலத்த தென்ப. (௧௦௪)

276 நலமிகு வாழ்நாள் பொலிவுற வியம்புதல்
யாண்டென மொழிப வியனெறிப் புலவர்.[2] (௧௦௫)

277 கையுமுற் கூறுங் கடியபிற் கூறுங்
கூர்ங்கோ டிரண்டுங் கொலைத்தொகை வகையே. (௧௦௬)

278 முன்ன ரூன்றிய காற்குறி தன்னிற்
பின்னர்ப்பத மிடுவது தோரண மென்ப. (௧௦௭)

279 பிறழ விடுவது வக்கிர மதுவே
சாரிகை விகற்பமு மாகு மென்ப. (௧௦௮)

280 நன்மை யியற்றலுந் தீமை யியற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலுங்
கயக்கறு கால நினைத்தலும் புலனே. (௧௦௯)

---

[பி-ம்.] [1] மலையே யாறே காடே யென்றிவை. [ச-பி.]

[2] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,
'அரும்பெறற் றடக்கையிற் பாதத் திறத்திற்
றிருந்துபு வாலிற் சினமிகு வாயிற்
பொருந்திறற் கோட்டிற் கொல்லுதல் கொலையே' (௮௫)
என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுளது. [ச-பி.]

281 வழுவா துடையோ ரேவ லியற்ற
றுடையோர்ப் பேண லென்மனூர் புலவர். (ககo)

[மேல் நண்ணிய என்றதனு லாசிரியவடியாற் பாடுவாருமுளர்.]

282 அகவலு முரித்தென வறைகுந ருளரே. (ககக)

21—வருக்கமாலை.

283 [1]மொழிக்குமுத லாகிய வெழுத்துக் கெல்லாம்
வருக்க முரைப்பது வருக்க மாலை. (ககஉ)

22—நாமமாலை, புகழ்ச்சிமாலை.

284 [2]மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்தவடி [3]மயக்க நாம மாலை.[4] (ககங)

285 ஆடவர் திறத்து வஞ்சி யின்னெறி
நாடிய பாத மயங்க வைப்பி
னும மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாகும். (ககச)

286 அதுவே, செங்கலை வண்ணப் பாவு மியங்கும்: கோவூர்கிழார்.

287 வெள்ளடி யியலாற் [5]புணர்ப்போன் குறிப்பிற்
ருள்ளா [6]வியலது புகழ்ச்சி மாலை: சேந்தம்பூதனூர். (ககரு)

23—இன்னிசைத்தொகை.

288 தொண்ணூ றேனு மெழுப தேனு
[7]மின்னிசைத் தொடுப்பி னின்னிசைத் தொகையே.[8] (ககஎ)

---

[பி-ம்.] [1] மொழிக்கு முதலெழுத்தின் வருக்க மெல்லாம்.

[2] மாந்தர்க். [3] மடக்கு.

[4] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,

'மாதர்க் கெனினது புகழ்ச்சி மாலை யென்
றேதினர் விளங்க வுயர்மொழிப் புலவர்' (கூங)

என்று ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

[5] புணர்ப்போர். [6] வியல்பது. [7] மின்னிசை தொடுப்பினஃ தின்னிசைத் தொகையாம்.

[8] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளுமாறு,

'இனிதி னுசை மேம்பா டுடைமையி
னின்னிசை யென்பர் தொன்னெறிப் புலவர்' (கூஎ)

என்று தனியே ஒருசூத்திரம் எழுதப்பட்டுளது. [ச-பி.]

289 எண்ணிய வகையா னின்னிசை வெண்பாத்
தொண்ணூ றெழுபது தொடுப்பதத் தொகையே: (கக அ)

கோவூர்கிழார்.

24—விருத்தவகை.*

290 பரிசிலை யானை [1]வாள்குடை வேல்செங்
கோலொடு நாடு [2]ருரைப்பி னகவல்
விருத்தம் பத்தென [3]வேண்டினர் புலவர்[4]. (ககசு)

25.—ஐம்படைவிருத்தம்.

291 சக்கரந் தனுவாள் சங்கொடு தண்டிவை
யைம்படை யகவல் விருத்த மாகும். (கஉ0)

26—நாழிகைக்கவி.

292 ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரு
மிருநான் கேழே ழிருநான் காமெனக்
கன்னன் முப்பது மெண்ணின ரினிதே. (கஉக)

293 மன்னர் கடவுளர் முன்னிலை யாக
வன்ன கடிகை யென்னு மியல்பிற்
றெருகுநெறி யன்னவை நேரிசை வெண்பா. (கஉஉ)

[முதல்யாமம் ஏழளவும் பாடி எட்டாவதில் யாமம் ஒன்றென்றும், இரண்டாம்யாமம் ஆறளவும்பாடி ஏழில் யாமம் இரண்டென்றும், மூன்றும் யாமம் ஆறளவும்பாடி ஏழில் யாமம்மூன்றென்றும், நான்காம்யாமம் ஏழளவும் பாடி எட்டில் யாமம் நான்கென்றும் பாடின் முப்பதுவெண்பாவாம்]

---

* பரிமுதலியவற்றைப் பத்துப்பத்தாகக் கூறும் ஒன்பதுவகை விருத்தமும் அவ்வப்பெயரான் விளங்குமென்றுணர்க.

[பி-ம்.] [1] வாளொடு வேறேர். [2] ருறுப்பி. [3] விளம்பினர்.
[4] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளும்படி,

'வரிசிலை யானை வாளொடு வேலே
தேர்பரி நாடு ருரைப்பி னகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர்' (கூஅ)

என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

## 27—நவமணிமாலை.

294 பாவே யினமே யென்றிவை யிரண்டு
மேவிய வகையது நவமணி மாலை. (கஉங)

## 28—கைக்கிளைமாலை.

295 [1]இரங்க வருவது மயங்கிய வொருதலை
யியைந்த நெறியது கைக்கிளை மாலை[2]. (கஉச)

296 தாயர் சேரிய ராயர் தீங்குழ
றென்றல் சேமணி யன்றிறிங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காம னங்கணை கண்வளர் கனவென
வெஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை
பயிறரு [3]நன்னலம் பாங்கர் பாங்கிய
ரியன்ற பருவா லென்மனார் புலவர். (கஉரு)

297 முல்லை யசோகு மாந்தளிர் தாமரை
யல்லி நீல மைங்கணை யாகும். (கஉசா)

[மயங்கிய என்றதனால் ஓரினப்படுத்திப்பாடுவாருமுளர். பாடும்பொழுது மருட்பாவாற்[4]பாடப்படும்: அல்லாதவழி ஆசிரியமும் வஞ்சியும் ஒழிய அல்லாத பாவானும் இனத்தானும் [4]பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப்பாவானு மினத்தானும் [4]பாடப்படும் (எனக் கொள்க.)]

## 29—அரிபிறப்பு.

298 சேலே யாமை யேனஞ் சிங்கங்
கோல வாமனன் மூவகை யிராமர்
கரியவன் கற்கி யெனவரு கடவுளர்
புரிதரு தோற்றந் தெரிதரப் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி

---

[பி-ம்.] [1] இயங்க. [2] இதற்குப்பின், 'கைக்கிளை யென்ப தொருதலைக் காமம்' என ஒருசூத்திரம் காணப்படுகிறது. [3] நன்னிலம். [4] பாடப்பெறும். [சு-பி.]

யினமொழி நாட்டி யகவல் விருத்த
மொருப தியற்றுத லாழியோன் பிறப்பே[1]. (கஉஎ)

30—அட்டமங்கலம்.

299 ஒருவனைக் காக்கவென் றிறைவனை யேத்திய
வெண்வகை யகவல் விருத்தம் புணர்த்த
னண்ணிய வட்ட மங்கல மென்ப. (கஉஅ)

300 இறைவனை யேத்திய வெண்வகை மங்கல
மறிதரும் பாவே யகவல் விருத்தம்: **சேந்தம்பூதனார்.** (கஉகூ)

31—இல்லறவெள்ளை.

301 கலைதரு வண்ணமும் வெள்ளையு மொன்பா
னிலைபெறப் புணர்ப்பினஃ தில்லறவெள்ளை. (கங0)

[இதனுள், கலைதருவண்ணம் என்றதனால் வெண்கலிப்பா ஒன்றனும், நிலைபெற என்றதனாற் சந்தவகை யொன்பதினாலும் வெண்பா ஒன்பதினாலும் பாடுவாருமுளர்.]

32—மங்கலவெள்ளை.

302 சந்தமும் வெள்ளையுந் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன வொன்பான். (கங௧)

303 அதுவே,
வெண்கலி யானும் [2]வருதற்கு முரித்தே: **மாபூதனார்.** (கஙஉ)

304 சந்தமும் வெள்ளையுந் தனித்தனி புணர்த்தலு
மந்தமில் புலவ ராமென மொழிப: **சீத்தலையார்.** (கஙங)

33—தாரகைமாலை.

305 இரண்டு பொருள்புண ரிருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை. (கஙச)

---

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்த்துக்கொள்ளும்படி,
'போற்றி யொருவன் புறங்காப் பு...க்கு
மாற்றல் சான்ற வகவல் விருத்தம்' (க0அ)
'வெண்கலி தானும் வருதற்கு முரித்தே' (கககக)
என இரண்டுசூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன.

[2] வருதலு. [சு-பி.]

### 34—செந்தமிழ்மாலை.

306 எப்பொரு ளேனு மிருபத் தெழுவகை
செப்பிய [1]நெறியது செந்தமிழ் மாலை. (கஙரு)

[பாவானும் இனத்தானும் [2]பாடுவாரு முளர். நான்கு முதற்பாவானு தல் ஒருபாவி னினத்தானுதல் [3]பாடுக என்பாருமுளர்.]

### 35—தாண்டகம்.

307 மூவிரண் டேனு மிருநான் கேனுஞ்
சீர்வகை நாட்டிச் செய்யுளி னுடைவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டக மவற்று
ளறுசீர் குறியது நெடியதெண் சீராம். (கஙசு)

308 அறுசீ ரெண்சீ ரடிநான் கொத்தங்
கிறுவது தாண்டக மிருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே: பல்காயனார். (கஙஎ)

309 மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புக ழுரைப்பது தாண்டக வகையே. (கஙஅ)

310 தாண்டக மானிடர் கடவுளர்க் குரித்தே: மாபூதனார். ()

311 அடிவரை நான்கும் வருமெழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டக [4]மாகும்: சீத்தலையார். (கச0)

### 36—பதிகம்.

312 ஆசிரி யத்துறை யதனது விருத்தங்
கலியின் விருத்த மவற்றி னன்கடி
யெட்டின் காறு முயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிக மாகும். (கசக)

### 37—சீர்மெய்க்கீர்த்தி.

313 சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு

---

[பி-ம்.] [1] வகையது. [2] பாடுவாருளர். [3] பாடுவாருமுளர். [4] மென்ப.

மவனுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி.[1] (கசஉ)

314 [2]நிலைபெறு சீர்மெயக் கீர்த்தியி னந்த
முரையாய் முடியு மெனவுரைத் தனரே: கோவூர்கிழார். ()

### 38—செருக்களவழி.

315 தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா வின்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே. (கசச)

316 நேரிசை யின்னிசை பஃறொடை வெண்பா
போரின் களவழி புகலப் படுமே. (கசரு)

### 39—மறக்களவஞ்சி.

317 குறள்சிந் தளவடி யகவ லடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னவர் மறக்கள
மெஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி. (கசசு)

318 இயங்குபடை மன்ன ரிகற்களம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி. (கசஎ)

### 40—செருக்களவஞ்சி.

319 விருத்தவகை பத்தான் விளம்பு மதனைச்
செருக்கள மெனவே செப்பினர் புலவர். (கசஅ)

### 41—ஆற்றுப்படை.

320 புரவலன் [3]பரிசில் கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவல னூர் பெயர்கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை. (கசகூ)

---

[பி-ம்.] [1] இதற்குப்பின் சேர்த்துக் கொள்ளும்படி,
‘மதிபுரை வெண்குடைக் கீழரி யணைமிசை
விதியினி திருந்தென மெய்பெற நாட்டே’ (கஉஉ)
என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது.

[2] நிரைபெறு. [3] பரிசு. [ச-பி.]

321 ஓங்கிய வதுதா னகவலின் வருமே. (கரு0)

322 புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே. (கருக)

## 42—கண்படைநிலை.

323 காலைபகன் மாலை யாழ்முறை யறத்திய
லமைச்சிய லரசிய லேனை யியலிசை
[1]நாட கத்திய லோடு நான்மறை
முறையே யெய்தினை யூழி வாழி
யினிய மகளிரோ டின்பத் துயில் கொள்கென்
றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். (கருஉ)

## 43 துயிலெடைநிலை.

324 கண்படை மன்னவர் முன்னர்த் தண்பதம்
விடிய லெல்லை யியல்புறச் சொல்லித்
தந்த திறைபருந் தாராத் திறையரு
[2]மேத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டின ரித்துயி லெழுகென விளம்பி
னதுவே மன்னவர் துயிலெடை நிலையே. (கருங)

## 44—விளக்குநிலை.

325 துளக்கமின் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர். (கருச)

## 45—கடாநிலை.

326 கொற்றவை தனக்குக் கொற்றவ ரெறியுங்
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும். (கருரு)

327 வடாஅ துறை கன்னிக்கு மன்னவ ரெறிந்த
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும்: பெருங்குன்றூர்கிழார்.

---

[பி-ம்.] [1] நாடகத் தியலொடு நான்கு முறைமுறை, யெய்தினை யூழி வாழி யினிய, மகளிரொ டின்பத் துயில்கொள்கென் றின்ன, உரைப்பது கண்படை யாகு மென்ப. [2] மேற்ற; மேத்திநின் மொழிகேட் டினிதியங்க வேண்டின, ரித்துயி லெழுகென வியம்பி னதுவே, மன்னவ ரின்பத் துயி லெடை நிலையே. [ச-பி.]

46—யாண்டுநிலை.

328 வையக மன்னவன் [1]மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப தியாண்டுநிலை யாகும். (கருஎ)

[இது பெரும்பான்மை நேரிசைவெண்பாவாற் பாடப்பெறும். சிறுபான்மை எல்லாப்பாவானும் பாடப்பெறும்.]

47—பறைநிலை.

329 காவல ரினிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினுங் கதிர்முடி விழவினு
நாடு நகாமு நலம்பெற வியம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவாத் தொடுப்பது பறைநிலை யாகும். (கருஅ)

48—அந்தாதித்தொகை.

330 வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா வுரைப்பதந் தாதித் தொகையே. (கருகூ)

49—புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ.

331 புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே. (கசூ0)

50—பாதாதி.

332 அகவடி யுகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைத்தாண் முழந்தாள்
குறங்கே யல்குல் கொப்பூழ் வயிறதன்
வரையே யிடையே மயிரி னெழுக்கே
முலையுகிர் விரலே முன்கை யங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவ
நுதலென் மாறைந் துறப்புட னிரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியா மென்ப. (கசூக)

---

[பி-ம்.] [1] மன்னிய பல்யாண், டெய்துவ னென்ப.

### 51—பயோதரப்பத்து, நயனப்பத்து.

333 பணைமுலை நயனம் பாங்கா மகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (கசுஉ)

334 ஆகிய கண்முலை யகவல் விருத்தம்: பெருங்குன்றூர்கிழார். ()

### 52—உழத்திப்பாட்டு.

335 புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
ளெனவரு மீரைந் [1]துழத்திப் பாட்டே. (கசுச)

### 53—குறத்திப்பாட்டு.

336 இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது [2]குறத்திப்பாட்டே. (கசுரு)

337 குறத்திப் பாட்டு மதனோ ரற்றே. (கசுசு)

### 54—ஒருபாவொருபது.

338 வெள்ளை யாத லகவ லாத
றள்ளா வொருப தொருபா [3]வொருபது. (கசுஎ)

### 55—இருபாவிருபது.

339 வெள்ளை யகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா [4]தியல்வ திருபா விருபஃது. (கசுஅ)

340 ஒருபா [5]வொருபது மிருபா [6]விருபதுங்
கருதிய வெள்ளையு மகவலுங் காட்டினர். (கசுகூ)

### 56—கோவை.

341 கோவை யென்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
யைந்திணை திரியா வகப்பொரு டழீஇ
முந்திய கலித்துறை நானூறென்ப. (கஎ0)

---

[பி-ம்.] [1] துழத்தியர் பாட்டே. [2] குறத்தியர் பாட்டே. [3] வொருபஃது. [4] வியல திருபா விருபது. [5] வொருபஃது. [6] விருபஃதும்.

342 களவினுங் கற்பினுங் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (கஎக)

343 ஐந்திணை தழுவிய வகைநிலைக் கோவை
தந்தநா [1]னூ றங் தாங்கலித் துறையே. (கஎஉ)

57—கணக்கு. (மேற்கணக்கு—கீழ்க்கணக்கு.)

344 மேல்கீழ்க் கணக்கென [2]விருவகைக் கணக்கே. (கஎந)

345 மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே. (கஎச)

346 அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிகுத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே. (கஎரு)

347 ஐம்பது முதலா வைந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும். (கஎசு)

348 அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி [3]யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும். (கஎஎ)

58—தொடர்நிலைச்செய்யுள்.

349 வித்தெண் டொகிமொழி தலைவனொடு மேவி
யொத்த வெள்ளை விருத்த மகவல்
வைத்த [4]வொருதொடை கொச்சக வுறப்பு
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப. (கஎஅ)

---

[பி-ம்.] [1] னூற தாங்கலித் துறையே. [2] விதித்தனர் புலவர். [3] யவ்வகை. [4] வுரைதொடை.

350 [1]வித்தே யெண்டுளி விருந்தியல் கொடியென
வொத்த மூவகை யிறைவனொடு பொருந்தி
யொழுகிய வெள்ளை விருத்த மகவ
லுரையொடு மிடைந்த பாட்டுடைக் கொச்சக
நடைபெற வருவது தொடர்நிலை வகையே. (கஎகூ)

351 தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலையிடை கடையென நுவலவும் படுமே. (கஅ0)

352 அவற்றுள்,
தலையெனப் படுபவை மலைவின் றாகி
யறம்பொரு ளின்பம் வீடென [2]விவற்றின்
றிறந்தெரி மரபி னீங்கா தாகி
வென்றிகொ ளிருக்கை யென்றிவை யனைத்துஞ்
சந்தி யாகத் தந்துநிலை பெறுமே. (கஅக)

---

[பி-ம்.] [1] இதற்குமுன் சேர்த்துக்கொள்ளும்படி,
'தொடர்நிலை யென்பது தமிழியற் பெயரே' (கருஉ)
'கடவுள் வணக்க நாடூர் காவலர்
மாப்புணர்ச்சிகொண் மகளிர் முடிசூடிடல்
கற்றல் படைகுடி திறல்செல றாது
செற்றோர் ............ ......... ............
............ ............... .......... ......
........... ................. ......... .........
............ தருதிறை கற்றோர்க் குதவல்
கடல்புனல் வரவு கார்ப்பொழி லுண்டாட்டுத்
தான மகப்பெறுதல் காலை மாலையென
விருகதிர்க் கோளே யறுவகைக் காலமு
மியைந்துட னுகர்த லெழிறரு வீடெனப்
பகர்ந்தவும் பிறவுந் தொடர்நிலைப் பண்பே' (கருங)
'உரையிடை மிடைந்த பாட்டுடை ச்செய்யுள்
விரவிய மரபின் விளம்பிய நெறித்தே' (கருச)
'சருக்க நடையினு மிலம்பக முடிவினும்
விருத்த நடையது வெற்றிசை யான' (கருரு)
'வெண்பா நடையினும் பண்புற வருமே' (கருசூ)
'விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்' (கருஎ)
என ஆறு சூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன. [ச-பி.]
[2] விவற்றிற்.

59—பாட்டு. (பத்துப்பாட்டு.)

353 நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
[1]யேறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (கஅ௨)

354 அதுவே: அகவலின் வருமென வறைகுநர் புலவர். (கஅ௩)

60—கடைநிலை.

355 கடைநிலை யென்பது காணுங் காலைப்
பரிசி லுழப்புங் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்புங் காட்சித் தென்ப. (கஅச)

356 பரிசினீட் டித்த லஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை யென்ப.[2] (கஅரு)

[கடையெனினும் அங்கதமெனினும் ஒக்கும்.]

61—கையறுநிலை.

357 வலங்கெழு வேந்தர் [3]வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே. (கஅசு)

358 வெற்றி வேந்தன் விண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே. (கஅஎ)

359 [4]கலியொ டுவஞ்சியிற் கையற வுரையார். (கஅஅ)

360 [5]சொற்றன வல்ல வேறுபிற தோன்றினு
மத்தகு [6]மரபி னடக்கினர் கொளலே. (கஅகூ)

இனவியல் முற்றும்.

பன்னிருபாட்டியல் முற்றிற்று.

---

[பி-ம்.] [1] யொன்றிய.

[2] இதற்குப் பின் சேர்த்துக்கொள்ளும்படி,
'கடைநிலை யெனினும் வசைப்பாட் டெனினும்
அங்கத மெனினு மொருபொருண் மேற்றே' (கசூக)
என ஒரு சூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [ச-பி.]

[3] வாழ்வுகக். [4] கலியே. [5] மற்றவை வல்ல வினம்பெரி தொன்றினு. [6] பாவி னடங்கின வென்ப.

உ

# சூத்திரமுதற்குறிப்பகராதி.

[எண்கள் பக்கங்களைக் குறிப்பன.]


| | |
|---|---|
| அகரக்கெகர | 7 |
| அகரந்தனக்காய | 7 |
| அகரந்தானே | 8 |
| அகரமுதலாக | 8 |
| அகரமோடைங்குறி | 6 |
| அகவடியுகிரே | 49 |
| அகவல்விருத்தமுங் | 27 |
| அகவலுங்கலிப்பா | 51 |
| அகவலுமகவல் | 38 |
| அகவலுமுரித்தென | 42 |
| அடிநிமிர்பில்லாச் | 51 |
| அடிவரைநான்கும் | 46 |
| அத்திறமிறந்த | 34 |
| அதுவே, அகவலின் | 53 |
| அதுவே, குடைச் | 29 |
| அதுவே, செங்கலை | 42 |
| அதுவே, வெண்கலி | 45 |
| அந்தச்சாதிக் | 22 |
| அந்தணர்சாதி | 21 |
| அமுதெழுத்தென்ற | 5 |
| அமுதெனவிடமென | 4 |
| அரிவைக்கியாண்டே | 33 |
| அருக்கனியமன் | 8 |
| அவ்வவ்வெழுத்தே | 6 |
| அவ்விருபாற்கு | 6 |
| அவரவர்பெயர் | 8 |
| அவற்றுள், உயிர்க் | 3 |
| அவற்றுள், ஒன் | 21 |
| அவற்றுள், தலை | 52 |
| அவன்றான், காவற் | 26 |
| அவைதாம், ஆ ஈ ஊ | 3 |
| அவைதாம், தேயம் | 14 |
| அவைதாம், நேர்முத | 13 |
| அவைதாம், பிள்ளை | 27 |
| அவைதாம், பெருக் | 14 |
| அவைதாம், மிகுதரு | 15 |
| அறம்பொருள்வீடு | 36 |
| அறுசீரெண்சீ | 46 |
| ஆ ஒ யரல | 4 |
| ஆ ஒ விரண்டும் | 4 |
| ஆகியகண்முலை | 50 |
| ஆசிரியத்துறை | 46 |
| ஆடவர்திறத்து | 42 |
| ஆண்பால்பெண்பா | 6 |
| ஆணைப்பெயரே | 19 |
| ஆதிநிலையே | 33 |
| ஆதியந்தம் | 38 |
| இகரக்கொகர | 7 |
| இணைமணிமாலை | 37 |
| இதற்கேயாமெழுத் | 29 |
| இந்திரன்வெங்கதிர் | 2 |
| இந்திரனிரவி | 2 |
| இயங்குபடை | 47 |
| இயமன்படைத்த | 2 |
| இயமனிதிக்கோ | 2 |
| இரங்கவருவது | 44 |
| இரண்டீரிரண் | 10 |
| இரண்டுபொருள் | 45 |
| இராப்பொழுதிற்கு | 8 |
| இருவகைக்கூட்டத் | 4 |
| இருவகையுண்டி | 5 |
| இருவகையைங்குறி | 6 |
| இவ்வுயிர்மெய்யோ | 4 |
| இளங்கதிர்த்திங்க | 27 |
| இறப்புநிகழ்வெதிர் | 50 |
| இறைவனையேத்திய | 45 |
| ஈரசைச்சீரே | 11 |
| ஈரசைமுதலா | 15 |
| ஈரசையகவன் | 12 |
| ஈரிரண்டியாமத் | 43 |
| ஈரைந்திருநான் | 33 |
| ஈரொலியாகிய | 40 |
| ஈறுநிரையாகி | 14 |
| உகரக்ககர | 7 |
| உகரமெகர | 7 |
| உகரவெழுத்துக்கு | 7 |
| உடம்புபிரிவுயிர் | 17 |
| உணவேயமுதமும் | 4 |
| உயரமுநீளமுஞ் | 41 |
| உயிர்க்குறி | 4 |
| உயிர்முதனான்குஞ் | 9 |
| உயிர்மெய்போல | 2 |
| உயிர்மெய்வழக்க | 2 |
| உயிரீராறு | 6 |
| உயிரொடுபுணரா | 17 |
| உரைத்தகுறிலைக் | 8 |
| எகரக்கொகர | 7 |
| எகரந்தனக்கு | 7 |
| எஞ்சியவேளாண் | 22 |
| எண்ணப்பட்ட | 9 |
| எண்ணியவகையா | 43 |
| எண்வகைப்பெயரு | 19 |
| எந்தையுடைப் | 37 |
| எப்பொருளேனு | 46 |
| எல்லாக்கணமு | 14 |
| ஏத்தியவோத்திய | 1 |
| ஏழ்தலைப்பெய்த | 36 |
| ஏழுநிலையு | 33 |
| ஐந்திணைதழுவிய | 51 |
| ஐம்பதுமுதலா | 51 |
| ஐவகைக்குறி | 9 |
| ஐவகைக்குறுக்கமு | 4 |
| ஒ ஓவிரண்டும் | 3 |
| ஒகரக்குகர | 8 |
| ஒகரவெழுத்துக் | 7 |

ஒட்டியகுடைப் 29
ஒருநான்குரோகிணி 10
ஒருபாவொருபது 50
ஒருபோகம்மனை 39
ஒருபோகுடனே 39
ஒருவனைக்காக்க 45
ஒழிந்த ஐ ஒள 3
ஒழிந்தவிரண்டு 7
ஒற்றின் வருக்க 6
ஒற்றுமாய்தமு 6
ஒற்றுமைக்காலையும் 2
ஒன்பதுதேவரு 1
ஒன்பதுபதினொன் 27
ஒன்றுபலவாகிய 21
ஒன்றுமுதலையாண் 25
ஒன்றேயாகியு 21
ஓங்கியவதுதா 48
ஓதியமெய்யொடு 17
ஓரசைச்சீரு 15
ஔகரவருக்க 9
கட்டளையென்பது 29
கடவுளர்மேற்றே 36
கடைநிலையென்பது 53
கண்ணியநேர்நிரை 13
கண்ணுந்தறிருமால் 1
கண்படைமன்னவர் 48
கணமே மூவசைக் 12
கதியெனப்படுபவை 3
கலியொடுவஞ்சியிற் 53
கலைதருவண்ணமும் 45
களவினுங்கற்பினுங் 51
கர்ட்டியநேர்நேர் 13
காட்டியமுறையே 33
காப்பின்முத 26
காப்புமுதலாகிய 25
காப்பொடுசெங்கீரை 25
காலைபகன்மாலை 48
காவலர்சாதி 21
காவலரினிதுறத் 49
கிரிசரம்வனசரம் 41
குடிநெறிமரபு 32
குடிப்பெயராவன 19
குணப்பெயரேனைப் 19
குணபாற்பரிதி 8
குலமெனப்படுவது 41
குறத்திப்பாட்டு 50
குறள்சிந்தளவடி 47
குறிலைந்துட 6
கூற்றுவன்படைத்தன 2
கையுமுற்கூறுங் 41
கோச்சகத்தன்மை 30
கொற்றவைதனக்குக் 48
கோத்திரப்பெயரே 19
கோவையென்பது 50
சக்கரந்தனுவாள் 43
சகரநான்கைக் 9
சந்தமும் (சூ. 302, 304)
சாதியிலுள்ளோர் 19
சாற்றியமாரூத்த 29
சிற்றில்சிறுதேர் 25
சிற்றில்பாவை 34
சிற்றிலிழைத்தல் 25
சிறந்தசீர்த்தலைவன் 11
சிறப்புடையெழுத்தின் 1
சிறப்புப்பெயரே 19
சீர்நான்காதி 46
சுடர்கதிர்த்திங்கள் 31
சேப்பியவுடம்பொடு 17
சேலேயாமை 44
சோல்லியகலம்பகஞ் 31
சொல்லியமரபின் 18
சொல்லின்கிழத்தி 1
சொல்லெனப்படு 17
சொற்றனவல்ல 53
சொன்னகலம்பக 37
ஞகரவருக்கத் 9
தகரவருக்கத் 9
தத்தமினத்தி 40
தந்தை தாயே 25
தந்தைமகப்பெயர் 20
தலைவன்செய்த 47
தன்மைமுன்னிலை 29
தாண்டகமானிடர் 46
தாயர்சேரிய 44
தீருந்தியபெண்மக 25
திருமாலரனே 2, 26
திருமிகுநிதிக்கோன் 2
திறலோன்யாண்டே 34
துளக்கமின்மன்னர்க் 48
தெரிவைக்கியாண் 33
தேவப்பிரணம 30
தேவபாணி 31
தேவர்க்குமுனிவர்க் 32
தேவர்கதியே 3
தேவர்மக்க 3
தேவர்வாழ்த்தே 35
தொடர்நிலைச் 52
தொடுகழல்வேந்தன் 18
தொண்ணூறேனு 42
தொன்னிலவேந்தர் 25
தோற்றமுதல்யாண் 25
தோற்றியசாதகம் 24
தோன்றியவகவல் 39
நகரத்தாறு 10
நஞ்சாமொற்றொடு 5
நஞ்சுமமுதா 5
நஞ்செனவமுதென 4
நட்புப்பகையாம் 8
நட்பேயுதாசீனம் 7
நரகரும்விலங்கும் 17
நரகும்விலங்கும் 3
நல்லுயிர்ப்பகுதி 1
நலமிகுவாழ்நாள் 41
நவையறுசீர்க்கண 11
நறுமலர்த்திசைமுக 1
நன்மைசெய்கடவு 12
நன்மைபொருள்பே 10
நன்மையியற்றலுங் 41
நால்வகைப்பாவிற்கு 22
நால்வகைப்பாவு 22
நால்வகைவருணத் 2
நாலுவருணமு 34
நாளுமோரையு 22

நிரைநடுவாகி 13
நிரைநிரை 15
நிரைநிரைநேர்தாம் 13
நிரைநேர்நேர்நீண் 12
நிரைமூன்றியைந்தது 13
நிரையசைமூன்று 12
நிலனுமதியு 14
நிலைபெறுசீர்மெய்க் 47
நிற்பனதீக்கண 13
நீடியநாற்பத் 34
நீடியமானன் 12
நீணெறியுவகை 27
நீர்க்கணநேர்நிரை 12
நீரேநிலனே 13
நூறடிச்சிறுமை 53
நேடிலேழிருவகை 6
நெடுநிலைக்கவியே 22
நெடுவெண்பாட்டின் 28
நெருப்பின்கணநிரை 13
நேர்நடுவாகி 13
நேரசைமூன் 12, 13
நேரிசையின்னிசை 47
பணைமுலைநயனம் 50
பத்தியபகரத் 10
பத்தேயேழே 35
பதினுறெல்லை 34
பரிசினீட்டித்த 53
பரிசிலையானை 43
பல்வகைத்தேயங் 41
பலவொன்(சூ.160,161)
பாட்டுடைத்தலைவ 7, 32
பாதநாலுங் 41
பார்ப்பாரரசர் 19
பாலகுமார 7
பாலன்யாண்டே 33
பாவேயினமே 44
பிள்ளைப்பாட்டே 24, 27
பிறப்பேயோகை 28
பிறழவிடுவது 41
புரவலற்கூறி 50
புரவலன்பரிசில் 47
புலவராற்றுப்படை 48
புறநிலைவாயுறை 49
பேண்மகவிற்குப் 27
பெதும்பைக் 33
பெயர்முதலெழுத்துப் 7
பெருநிலவேந்தன் 37
பேதைக்கியாண்டே 33
பேதைமுதலா 32
போங்குகதி 27
பொன்பூத்திருமணி 16
மக்கட்கதியே 3
மக்கட்சாதி 2
மகரத்தாறு 10
மங்கலமமைந்த 14
மங்கலமரபின் 46
மங்கைக்கியாண்டே 33
மடந்தைக்கியாண் 33
மடன்மாப்பெண்டிர் 36
மயக்கறுகொச்சகத் 35
மலையும்யாறும் 34
மலையேயாறே 35
மறவோன்யாண்டே 33
மன்னர்கடவுளர் 43
மன்னுவதேவர் 3
மனப்பெயராவன 19
மிகுத்தவெள்ளை 38
மீளியாண்டே 33
முடியுடைவேந்தன் 19
முதற்கணெடுக்கு 27
முதனிரையாகி 13
முதனிலைபின்னெழு 32
முன்றுநிரையிணைந்து 13
மும்மூன்றொரு 39
முல்லையசோகு 44
முற்பாட்டெடுப்பின் 12
முன்பிற்செய்யுண் 6
முன்னரூன்றிய 41
முன்னிலையெழுத் 17
முன்னீரடியிலுங் 28
மூவகைநிலனு 40
மூவகையாய்ச்செய் 10
மூவசையெண்சீர் 12
மூவிரண்டேனு 46
மூன்றைந்தே 17
மெய்யாமமுதின் 5
மேதகுசாதகம் 23
மேல்கீழ்க்கணக் 51
மேற்கணக்கெனவுங் 51
மைந்தர்க்காயின் 42
மொழிக்குமுத 9, 42
மோனையுமெதுகையுங் 29
யாவர்செய்யுட்கு 14
யாவேயுத்திரட்டாதி 10
யானைசாய்த்த 36
யூயோவிரண்டு 10
வடாஅதுறை 48
வண்ணகமென்ப 40
வரன்முறைபிறழ 30
வல்லினமெல்லின 40
வலங்கெழுவேந்தர் 53
வழுவாதுடையோ 42
வானவர்மக்க 3
வித்தெண்டுளி 51
வித்தேயெண்டுளி 52
விரிசடைக்கடவுளும் 26
விருத்தவகை 47
விலங்குநரகும் 3
வினைசெயன் 20
வெண்கலியுஞ்சில 40
வெண்பாக்(சூ.253,257, 330.) பக். 38, 49.
வெண்பாமுதலாக் 38
வெள்ளடியியலாற் 42
வெள்ளைகலித்துறை 39
வெள்ளையகவல் 202350
வெள்ளையாத 50
வெள்ளையுமகவ 22, 39
வெற்றிவேந்தன் 53
வேந்தர்கடவுளர் 34
வேந்தன்வேண்டு 31
வையகமன்னவன் 49

———

உ

திருச்சிற்றம்பலம்.

# உவமானசங்கிரகம்.

## விநாயக வணக்கம்

புவனமிசை மாதர் பொருந்தவய வங்கட்
குவமான சங்கிரக மோதக்—கவுளடிக்கட்
சிந்து மதவருவிச் செங்கட் புகர்வதனத்
தைந்துகரத் தான்காவ லாம். (௧)

## நூல்.

### உள்ளங்காற்கும், விரலுக்கும் உவமானம்.

வனச மலர்மாந் தளிர்முயலின் வயிறுசெயலை யனத்தூவி
சுனக னுக்குச் செம்பஞ்சு துகடீ ரனிச்ச மிவை மடவார்
வினவுள் ளடிநேர் பெருங்காலின் விரல்க டமக்கு மஞ்சண்முளை
யனைய வென்பர் துவருமிணை யாமென் றுவந்து சொல்வாரே. (௨)

### கால்விரனகத்திற்கும், புறங்காலுக்கும், கரட்டிற்கும்.

காலின் விரல்சே ருகிர்படிகங் கண்பத்தாகக் கடைந்தமதி
சாலும் புறங்கால் கமடமும்புத் தகமுங் கமுகம் பாளையுமாம்
பாலின் பாளை யுட்குரும்பை பந்து தராசு சிப்பியிவை
நாலுங் கரட்டுக் குவமையென நவில்வ ரியனூற் கவிவலரே. (௩)

### குதிக்கும், கணைக்காற்கும்.

பாவு சிறுதூ ரிசைப்பெட்டி பந்து சங்கு வனசமுகி
ழிரச நறுமாங் கனிகுதிங்கா லேய்க்கு முவமை பெறுந்தூணி
விரவு தேன்பூ விரிபாளை வேணு காளம் வராலைந்து
முரவுக் கணைக்கா லுக்கிணங்கு முவமை யாமென் றுரைப்பாரே. (௪)

### முழங்காற்கும், தொடைக்கும்.

அலவன் பசுமூக் குற்றதிற லாலான் பணிகே டகத்தின்குமிழ்
சொலுநன்முழந்தாட் குவமையெனச் சொலுவர்தொடைக்கா னைத்துதிக்கை
சலமி லீனு விளங்கதலித் தண்டா மல்குற் றடநீந்தக்
குலவு தெப்பந் தூணெனவுங் குறிப்ப ருவமை நெறியெனவே. (௫)

## அல்குற்கும், பெண்குறிக்கும்.

பொற்றட் டனங்க னரமணைவேள் பொக்கிசங்காக்கணம்பூப்பைந்
தெற்றுந் தேன்கூ டரவபடஞ் செந்தாமரைப்பூ மதுக்குழலாம்
பற்றும் வாழைப் பூமலிபொற் பதக்கங் குதிரைச் செவிதேர்த்தட்
டெற்ற வமுத சர்க்கரைகூ ருடும்பின் வாய்நற் றேன்கிணறு. (௬)

அடருஞ் சத்தி பீடமத னாலவட்டங் குளமடைபாற்
கடறா விளக்குச் சங்கநிதி கவினா ரிளவெற் றிலைவிண்ணிற்
படரு மரசி னிலைபட்டம் பகரு மல்கு றனக்கிசையத்
தொடருமுவமைபெண்குறிக்குச்சொல்லத்தகுமான்குளம்பென்றே. (௭)

## இடைக்கும், வயிற்றுமடிப்பிற்கும், வயிற்றிற்கும்.

கொடிநூல் துரும்பு தேய்ந்தபிறைக் கொழுந்து சிங்க மதனுருவந்
துடிவிண் மின்கைப் பிடிகுலிசந் துலங்கு மரவு மிடைக்கொப்பாம்
படிநீர்த் திரைபோ லவுமடிப்புப் பயிலும் வயிற்றுக் காவிலையுங்
கடிசேம் பிலையு மதிப்பிளவுங் கதலிக் குருத்து மிணையாமே. (௮)

## உந்திக்கும், வயிற்றுரோமத்தொழுங்கிற்கும்.

வட்டச் சோகி மல்லிகைப்பூ வருநீர்ச் சுழிநந் தியாவட்ட
மொட்டென் றுவமை யுந்திக்கு மொழிவர் சலாகை வார்க்கயிறு
துட்ட மதன னானொழுக்கந் தும்பித் துதிக்கை யெறும்பொழுக்கம்
விட்ட கரிய மணிக்கோவை வேழத் திழியு மததாரை. (௯)

விரும்பா விலையி னடுநரம்பு விண்டு கிடத்த லிரதவடங்
கரும்பா மிளநீர்க் காம்புநறுங் களபத் தின்றண் டுளித்தாரை
யரும்பார் வனசப் பூம்பசுந்தா ளவிர்வான் றுறை யென்றிசைய
வரும்பே ருவமை பெறுமடிப்பின் வயிற்று ரோமத் தொழுங்கினுக்கே. (௧௦)

## தனத்திற்கு.

வல்லுச் சக்கிர வாகமதன் மகுட மெலுமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய் விளவின் கனிகோ புரத்தூவி
சொல்வெற் பிளநீர் கதலிப்பூச் சொர்ணத் தாளஞ் சிவலிங்கந்
தெல்லுக் கரகங் கோங்கரும்பு சிமிழ்ப்பம் பரம்பொற் குடங்கிண்ணம். (௧௧)

செண்டு குமிழ்வார் கூடாரஞ் சேவின் சிமிழ்பொற் கரண்டகமென்
புண்ட ரீக முகிழ்பந்து புன்னைக் காய்மா துளங்கனிமேற்
கொண்ட மொக்குள் பிடிசெம்பு கொட்டைப் பாக்குப் பருதிமதி
மிண்டு பிபமத் தகமருப்பு மெழுகி னுருண்டை பசும்பொற்றேர். (௧௨)

படர்ந்த செப்பு மாவிலிங்கம் பழமா றேழு மிணைந்திருமாந்
தடர்ந்து விம்மிச் சுணங்கரும்பி யண்ணாந் திளகிப் பணைத்தெழுந்து
தொடர்ந்து களப மொழுகநாறுந் தொய்யி லிலங்க வெண்டரள
வடங்கொள் புளக முலைக்கிசைய வழுத்து முவமைச் சிறப்பாமே. (௧௩)

## விரற்கும், நகத்திற்கும்.

அலரிக் காய்முத் திரைக்கோல்பொன் ஞாழி துலங்கும் பயற்றங்காய்
குலவப் படமாந் தளிர்பவளக் கொம்பு கெளிறு கிட்டிக்கோ
ணிலவச் சுழற்றுந் திறவுகோல் நேரு மிருகை விரற்குவமை
கலவப் பெறுமவ் விரலுகிர்க்குக் கருதுங் கிளிமூக் கொப்பாமே. (௧௪)

## அங்கைக்கும், தோளுக்கும்.

தளஞ்சேர் செந்தா மரைகாந்த டயங்கு முச்சி திலதமென
வளஞ்சே ரங்கை பெறுமுவமை மானு முன்கை யாழ்க்கோடு
விளங்கு மெழிற்பூ ரணகும்ப மிசையே தரித்த மாலிகைவேய்
கிளர்ந்த மலர்ப்பஞ் சணைமூன்றுங் கிளரு மென்றோட் கிணையாமே. (௧௫)

## கழுத்திற்கும், முகத்திற்கும், வெயர்விற்கும்.

சங்கு செம்பு பாலிகைபூ சனிப்பூச் சூல்கொ ளிளங்கமுகு
மங்க லஞ்சேர் சுருளேந்து மடலுங் கழுத்துக் குவமைபெறுந்
திங்கள் படிமக் கலங்கமலஞ் செண்டு பூத்தட் டிவைதாணி
யெங்கும் புகழுந் திருமுகத்துக் கிசையு முத்தம் வெயர்வாமே. (௧௬)

## இதழுக்கும், வாய்க்கும்.

கொண்ட பவள முருக்கிந்த்ர கோப மிலவு செம்பரத்தந்
தொண்டை வீழி யமுதகுண்டஞ் சொற்க பாட மாதுளம்பூ
வண்டு கவியுஞ் செழுங்குமுத மலர்தூ துளைசெங் கமலமொப்புக்
கண்டு மொழிந்தா ரீரிதழ்க்குங் கனிவா யினுக்கு மிணையாமே. (௧௭)

## பல்லுக்கும், நகைக்கும்.

முத்துத் தளவு புன்கரும்பு முருந்து மாது ளங்கனியின்
வித்துப் பதும ராகமுணா விரும்பு மெயிறு தகும்பரிவி
னத்துத் தரள நகைக்குவமை நகுவெண் ணிலவா மெயிறுசற்றே
யொத்துச் சிவந்தாற் பவளமுந்தா னெவ்வா தென்று முரைப்பாரே. (௧௮)

### சோற்கு.

வாகி னுறுதீம் பால்செக்தேன் வண்ணப் பசும்பூங் கிளியமுதம்
பாகு கரும்பு கற்கண்டொப் பாகும் யாழ்செங் கனிசீனி
யேகும் பூவை வரிச்சிறைவண் டிரங்கு மிசைகோ கிலங்குழலென்
ருகு மிவையீ ரேழுமினித் தருளுஞ் சொல்லுக் கிணையாமே. (க௯)

### கபோலத்திற்கும், நாசிக்கும்.

சந்தச் சாணை பரிக்கலனை சாரு மூக்கின் கண்ணுடி
யந்தக் கவுளி னுவமை சொல்ல லாமெட் பூவுங் குமிழரும்பு
முந்தக் கமழ்செண் பகவரும்பு முருகா ரிலவம் பூங்காம்பும்
பந்தக் கவினு ரெல்லோரும் பகர்வார் நாசிக் கிணையெனவே. (உ0)

### கண்ணிற்கு.

வேல்வா ளமுதங் கருங்குவளை வேலை மாவின் வடுவெகிர்மான்
கோல்பங் கயமஞ் சமர்குடங்கை கூற்று விடங்காக் கணம்வண்டு
சால்பினுறுகஞ் சனங்கயல்சேல் சகோரம் வழிபோய்க் குழையடர்ந்து
மால்வி தாதாச் சிவனுருவின் வயங்கும் விழிக்கொப்பிவையாமே. (உக)

### கண்ணினியல்பு.

நெஞ்சு கறுத்த பேதைக்கு நிகழ்த்தும் விழிசெங் குமுதமொப்பாம்
வஞ்ச முறுகோ ரமுமிகுந்த மயலும் பூட்டு மையலினுற்
றுஞ்சு மதற்பி னெடுகருமஞ் சூழ்ந்துகூர்மை நனியுடைத்தாய்
விஞ்சை மதனு கமவழியை விளக்குங் கடைக்கண் வேலாமே. (உஉ)

### காதிற்கும், புருவத்திற்கும்.

நருபூ வள்ளை பொன்னூச னவில்கத் திரிகை சுராத்தலைமான்
புகும்வாய் கதவிற் பூட்டுதொடர் புகழுங்காதுக் குவமையதாத்
தகுமே நீலாஞ் சனஞ்சலசத் தாளி னெடுசிங் காடிவில்லுஞ்
செகுவா ளுறையுங் கடற்கரையுஞ் செப்பும் புருவ மொப்பாமே. (உ௩)

### நுதலுக்கும், திலகத்திற்கும்.

அகத்தி யரும்பு வாசிகையு மணுகக் குனிக்கும் பூஞ்சிலையும்
பகுத்த பிறையுங் கொக்கிற்கும் பகருநுதலுக் கிணையாகும்
வகுத்த நுதலி லிடுந்திலக மானுந் தினக ரோதயமுஞ்
சகத்துக் கிறைவர் நுதற்கண்ணுந் தயங்கு நாக ரத்தினமே. (உச)

## கூந்தற்கு.

கொன்றைக் கனிகல் லார்மனமுங் கூந்தற் கமுகும் பொதுமாது
தன்ற னிதையஞ் சூன்மேகஞ் சவரி கருமை யடர் கங்குன்
மன்றல் கமழு மஞ்சனிப்பூ வயங்குஞ் சிறைவண் டினஞ்சோலை
துன்றல் வரும்பைம் புனல்கொழிக்குந் தூய வறலிந் திரநீலம். (உரு)

இருள்சை வலமா மூவைந்து மிணங்கு மிளைஞ ராருயிரு
முருகின் பலமென் னறும்பூவு மொக்கச் சொருகிக் கடைசுழன்று
வருமைச் சுழிவு போலுநெய்த்து வண்டுசூழ்ந்து குழைவார்ந்து
தருதேன் றுளிப்ப வழிந்தொழுகுந் தகரக் குழலுக் கிணையாமே. (உசு)

## பின்னிவிட்ட கூந்தற்கு.

கன்னிக் கமுகி னரும்பாளை கரிய பிடியா னைத்துதிக்கை
யென்னக் கூறு மதிப்பகையு மேய்க்கும் பிச்சி மருக்கொழுந்து
புன்னைப் பூச்செண் பகமுல்லைப் பூச்செவ் வந்தி பொலிந்திலங்கப்
பின்னுக் கழகாய் வகுப்பெடுத்துப் பின்னி விடும்பூங் குழற்கிணையே. (உஎ)

## மதனிரத முதலியன.

இரதம் வசந்த மதயானை யிரவாம் பூவை பசுங்கிள்ளை
புரவி படைமங் கையர்வாசம் பொலியு மிணர்மென் பூஞ்சோலை
பரவு படைவீ டாமுரசு பரந்த கடலாங் கொடிமகர
முரவா ரன்றில் காளமதா முயர்வெண் குடையிந் தனங்கனுக்கே. (உஅ)

சொன்ன குடைக்கான் மதிகிரணஞ் சுரிமென் குழலார் முகசயன
முன்னும் வதுவை யவன்பரிசை யோங்கித் தளிர்க்கும் வெருகிலையாஞ்
சின்ன மிசைபூங் குயில் விளம்புந் தேரி னுருள்சந் தனச்சாணை
மன்னு நறுமாந் தளிர்பட்டா மகிழ்கைச் சாமா துளம்பூவே. (உகூ)

வெல்லு மதவேள் மார்பினிலே விளங்கு மாலை யிலஞ்சி மஞ்சள்
புல்லுங் கமுகி னரும்பாளை பொற்ப விரட்டுஞ் சாமரையாஞ்
செல்லு மவன்கா ளாஞ்சிமலர் செண்ப கமுமல் லிகைப்பூவு
மொல்லும் வேனி லவன்றிருநா ளுடைவா ளோலைப் பூவாமே. (ஙo)

பதிக்கு மதனன் பரிக்கலனை பகரு நறும்பூ மல்லிகையாங்
கதிக்கு மிலஞ்சி கடிவாளங் கன்னச் சல்லி புன்னையம்பூ
மதிக்கு மவன்மெய் யிடுங்கவச மவிந்த விரைதோ ழன்வசந்தன்
விதிக்குப் பினவன் றேர்ப்பாகன் விரும்பு மகிண னெனலாமே. (ஙக)

* கதிர்ப்பூம் பச்சைத் தண்டும்வெறி கமழும் பசிய மாந்தண்டு
மதுக்கொண் டலா வழிந்தொழுகும் வாச முறுமல் லிகைத்தண்டுந்
துதிக்குங் கருப்பந் தண்டுமெளி சூழுங் கமலப் பூந்தண்டும்
விதுத்தண் குடையானெடுத்தபஞ்ச வில்லென் றுணர்ந்தோர்சொல்வாரே.()

பிச்சிக் கொடியு மடல்விளங்கும் பிரசநறுந்தா மரைநூலு
மெச்சப் பொலிவின் மணம் வீசும் வெட்டிவேருங் கார்வண்டும்
பச்சைப் பசுமாந் தளிருமெனப் பகர்ந்த தனுக்க ளைந்தினுக்கு
மச்சக் கொடியோன் பூட்டியநாண் வகையீ தென்பர் தகவுடையோர். (௩௩)

சொற்று நறுமுல்லைப்பூவுந் தூவ சோகின் பூவுமிகக்
கற்றோர் புகழு மாம்பூவுங் கடிசேர் தண்டா மரைப்பூவும்
பொற்பா யலர்நீ லப்பூவும் போரின் மதவேள் செங்கையினாற்
பற்றுய்த் தொடுத்து நின்றெய்யும் பஞ்ச பாணத் தடைவிதுவே. (௩௪)

சிரசின் முல்லை நேத்திரத்திற் றிகழ சோகு தனமீது
விரவு சூத மார்பினிடை விளங்கு முளரி வயங்குபொறி
யரவ படத்தி னறுநீல மனுகச் சமரிற் குறிநோக்கி
யுரவே ளைந்து கணையெய்தற் குற்ற தான மைந்தாமே. (௩௫)

ஏற்ற முல்லை கிடைகாட்டு மெதிர்ந்த சோகு சென்றுபல
தோற்றங் காட்டி யுணவகற்றுஞ் சூத மடலிற் பசலைதருந்
தேற்ற முறுசெந் தாமரைப்பூச் சிந்தை யார நினைவிக்குங்
கூற்ற மனைய நறுநீலங் கொலும்வே ளம்பின் குணமிதுவே. (௩௬.)

மனதின் மோகஞ் செனித்தவுடன் மதனும் விரவி மனோபவமாய்த்
தனது சொரூப ரூபமெனுந் தன்மை தோன்ற மெய்பொலிந்து
சினவி யெழுந்து சன்னதமாய்ச் சிலையைக் குனித்து நாண்பூட்டி
யினமென் னறும்பூங் கணைகடொடுத் தெய் து பூசல் செய்வானே. (௩எ)

---

* மதன் வில்வகை இவ்வாறேயன்றிச் "செந்தமிழ்" ௭-வது தொகுதி முதற்பகுதி யிறுதியில் வேறு வகையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

பூவில், கருப்புவில், இருப்புவில் என மூவகை வில்லுள்ளன; இம்மூன்றிலே தேவர்மேலெய்வது பூவில், மானுடர்மேலெய்வது கருப்புவில், இராக்கதர்மேலெய்வது இருப்புவில் எனக்கொள்க. இவற்றை, "கதியுடைத் தேவர்மேற் பூவின்மா நுடரின்மேற் கருப்புவி லிராக்கதரின்மேற் காமுறு மிருப்புவில்" என ஆசிரியநிகண்டு முதற்றொகுதி ௬-வது கவியிற் கூறியிருத்தல் காண்க.

உவமானசங்கிரகம் முற்றிற்று.

# அரும்பதப்பொருள்.

க. கவுள் - கதுப்பு.
உ. செயலை - அசோகந்தளிர்.
சுனகன் - நாய்.
ங. தராசு - தராசுத்தட்டு.
ச. தூரிகை - எழுதுகோல்.
தூணி - அம்புக்கூடு.
உரவு - வலிமை.
ரு. அலவன் - ஞெண்டு.
பணி - அரவபடத்தின் மேற்பக்கம்.
சு. ஆம் - நீர்.
எ. ஆலவட்டம் - விசிறி.
அ. சிங்கம் - சிங்கத்தினிடை.
கூ. சோகி - பலகறை.
க0. விண்டு - திருமால்.
கச. ஆழி - மோதிரம்.
கரு. மூச்சி - சிறுசுளகு.
வேய் - மூங்கில்.
கசு. படிமக்கலம் - கண்ணுடி.
கஎ. தொண்டை, வீழி, தூதுளை என்பன - இவற்றின் கனிகள்.
கஅ. தளவு - முல்லையரும்பு.
புன்கு - புனமுருங்கை.
முருந்து - மயிலினிறகடி.
ககூ. வார்கு - அழகு.
உக. வேலை - கடல்.
கோல் - பாணம்.
மஞ்சு - மேகம்.
கஞ்சனம் - கரிக்குருவி.
விதாதா - பிரமன்.
உங. வள்ளை - வள்ளைக்கொடி.
ஊசல் - ஊஞ்சல் வடம்.
தொடர் - சங்கிலி.
சிங்காடி - சுண்டுவில்.
உரு. அஞ்சனி - காயா.
அறல் - கருமணல்.
உசு. சைவலம் - பாசிக்கொத்து.
தகரம் - மயிர்ச்சாந்து.
உஎ. கன்னி - இளமை,
மதிப்பகை - அரவு.
உஅ. வசந்தம் - தென்றல்.
உகூ. பரிசை - கேடகம்.
வெருகிலை - வெருகென்னும் பூண்டினிலை.
ஙO. ஓலைப்பூ - தாழம்பூ.
ஙக. இலஞ்சி - மகிழம்பூ.
கன்னச்சல்வி - காதிடு தூக்கங்கள்.

இந்நூல்செய்தார் பெயர், இடம், காலம் முதலியன விளங்கவில்லை. இது மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதியிலுள்ளது. திருவேங்கடையர் செய்த உவமானசங்கிரகத்தினும் புகழேந்திப்புலவர் செய்த இரத்தினச்சுருக்கத்தினும் அதிகமாக உவமானங்களை யெடுத்துக் கூறியிருப்பதனால், இதுவும் கற்போருக்குப் பயன்படுமென்று "செந்தமிழ்" வாயிலாகவெளியிட்டிருக்கின்றது.

திரு. நாராயணையங்கார்,

"செந்தமிழ்"ப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

# அநுமானவிளக்கம்.

[இரண்டாம் பதிப்பு.]

இது,

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையுபாத்தியாயர்

## திரு. நாராயணையங்காரால்

எழுதப்பெற்றது.

"செந்தமிழ்"ப் பிரசுரம்—கூ.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1935

ஸ்ரீ:

திருக்கோட்டியூர்ஸ்வாமி

ந்யாயவேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே.

ஸௌம்ய நாராயணாசார்யர்

ஸாதித்தருளிய ஸ்தவ ஶ்லோகங்கள்.

ஸுநம்ஶோ நதீவிசேஷம் ஶமேதி ஸகலம் தமேஷாமாந்த்ரிதம் ।
விந்ம நயாஹிர்ஷ்ரஷ்டா ஹஜதிஹ்ருத்ருக்ஷ தாம் நம்ஶோ. (௧)

ஸம் நஸ்ஶிரோஹி நத்ருராஸ த்ருயஜுரயாவிதாவ்ருத்திம் ।
நாராயணேந ஸஹ ஸ்ரீளே ஜைத்வீர்யகஹ்ருளோணகஹ்வதா. (௨)

ஶோஷாநுஷ ஷேஷ ஷஸம்ஹ்ருக்ஷ்யதிவஸதாம்
வாரமுக்ஷாஹியதே
திவ்யாநுவர்ஷாதி வாயாநுத்ருத தாமவிஶாம்
ஜாஷி மஜாகரோதி ।
ஸ்ரீம்ந்நாராயணாவ்ருஹ்யிதஸாபஶஹா
நிஜிவேதாஹ்ரம்யவப
ஸ்ஸஜோஷஜஜநீதிஹ்ருநவம் மவிஜெ
ஷேவஶாஸ்த்ரஜதுஹ்ருகஸ ॥ (௩)

ஸ்ரீ:

# சிறப்புப்பாயிரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான்

## ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள்

இயற்றியது.

---

பூவின் கிழத்தி தாவின்று வதியும்
இமிழ்திரை கெழீஇய தமிழக வரைப்பில்
சான்றோர் யாஅத்த வான்ற தொடர்நிலைச்
செய்யுள் பலவினும் பொய்யில் கேள்வி
முந்தையோர் புகழ்வன வைந்தே யவற்றுட்
சொற்பொருட் செறிவொடு பற்பல வளத்தாற்
றலைபெறு மணிமே கலைதுற வதனுட்
டவத்திறம் பூண்டு தருமங் கேட்ட
பாதை முழுதுந் தகுதியி னறிதல்
எண்ணுறு தருக்க நுண்ணுணர் வில்லோர்க்
கியலா தாகலின் மயலா கதனை
வகுத்தியல் காட்டிப் பகுத்தறி யுதாரணம்
உலக வழக்கிற் பலகண்டு நிறீஇக்
கருத லளவையின் வருபல வுறுப்பையும்
விரிய வுணர்த்தித் தெரியநு மான
விளக்க மெனும்பெயர் துளக்கற விட்டுத்
தமிழுல கறிய வமிழ்தினிற் றந்தனன்
வாட்ட மிலாவெதிர்க் கோட்டைநல் லூரன்
இழுக்கறு குணனும் ஒழுக்கமு மறிவு
முந்துறப் பெற்ற வந்தணர் திலகன்
நீணிலங் கடந்த தாணிலை மரபினன்
வடமொழிப் பயிற்சி திடனுறப் பெற்றோன்
பண்டைப் புலவர் கண்டபன் னூலுந்
தீரத் தெளிந்த பாரத் துவாசி
தரைபுகழ் பாண்டித் துரையெங் கோமான்
நாட்டிய சங்கத் தூட்டுகல் லூரித்
தலைமை வகிக்கும் புலமை யாளன்
திருநா ரணனெனுந் தெய்வப்
பெருநா மங்கொள் பெருமை யோனே.

---

ஸ்ரீ:

# இரண்டாம்பதிப்பின் முன்னுரை.

இவ்வநுமானவிளக்கம் பலஆண்டுகளுக்குமுன்னம் ஒருமுறை பதிக்கப்பெற்றுச் செலவாகிச் சிலஆண்டுகளாயின.

நாளடைவில் தமிழ்மொழியிலும் பல தருக்கநூல்கள் வெளிப்பட்டுத் தருக்கநூற்பயிற்சியில் விருப்பம் தலையெடுக்கத்தொடங்கி வருதலாலும், சிலமாதங்களின்முன்பு, யாழ்ப்பாணத்து ஆரியதிராவிட பாஷாபிவிருத்திசங்கத்தாரால் ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் தமிழ்ப்பரீக்ஷைகளில் பண்டிதவகுப்பிற்குப் பரீக்ஷாபாடமாக இவ்வநுமானவிளக்கம் ஏற்பட்டிருக்கிறதென்றும், புத்தகம்கிடைப்பது அரிதாயிருப்பதால் அது கிடைக்கச்செய்யவேண்டுமென்றும் அச்சங்கத்தின் கெவுரவகாரியதரிசியவர்கள் விரும்பியபடியாலும், இப்புத்தகம் மறுபதிப்பாக இப்போது பதிப்பிக்கப்பெற்றது.

இதனுள், முதற்பதிப்பினின்றும் சில திருத்தங்கள் செய்யப்பெற்றிருப்பதுடன், கற்பவர்களுக்கு நற்பயிற்சியுண்டாதற்குரிய பரீக்ஷைவினுக்களும் ஆங்காங்குச் சேர்க்கப்பெற்றுள்ளன.

இதனை அச்சிடுதற்கு உதவியாயிருந்து ஒப்புப்பார்த்துத் திருத்தி அச்சிடுவித்த "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர் டி. கே. இராமாநுஜையங்கார் செய்த நன்றி பெரிதும் பாராட்டத்தக்கது.

திரு. நாராயணையங்கார்,
தலைமையுபாத்தியாயர்,
மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை.

மதுரை.
30—10—35

ஸ்ரீ:

# முதற்பதிப்பின் முகவுரை.

இது, பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய மணிமேகலையின் (உ௯ ஆம் பாட்டு) "தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை"யிலுள்ள கருத்தளவைவிஷயங்களையுட்கொண்டு எழுதப்பெற்றது.

இப்பாட்டினுள், மெய்யுணர்விற்குச் சிறந்த பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்னும் மூவகைப்பிரமாணங்களில் ஆகமம் எல்லார்க்கும் பொதுமையினன்றி அவரவர்மதம்பற்றி வெவ்வேறாய் மாறுபட்டுநிற்றலின் அதனைச் 'சிரத்தேயம்' என விலக்கி, எஞ்சிய பிரத்தியக்ஷாநுமானங்களையே பிரமாணமாகக்கொண்டு, பிரத்தியக்ஷம் யாவராலும் எளிதினுணரக்கிடத்தலின் அதனைத் தொகுத்தும், அநுமானம் நூலுணர்ச்சியாலன்றி எளிதினுணர்தல் கூடாமையால் அதனை வகுத்தும் விரித்தும் நூலாசிரியர் கூறியிருக்கின்றனர்.

இப்பாட்டு, பிரத்தியக்ஷத்தால் நிர்விசேடம் சவிசேடம் என்னும் இருவகை மெய்யுணர்வும் உண்டாகுமென்றும்; காரியாநுமானம், காரணாநுமானம், சாமானியாநுமானம் என்று அளவைவாதியாற் பகுக்கப்பட்ட அநுமானங்கள் பிழைபடுமென்றும்; காரியாந்நுவயவெதிரேகங்கள் சிறந்தனவாயினும் அவற்றைமாத்திரங் கொண்டுதுணிதல் தவறுறுமென்றும்; தவறாது துணிதற்கு நல்லுறுப்புக்களே வேண்டுமென்றும்; பிறர்கூறும் ஐவகையுறுப்புக்களினுள்ள உபநயமும் நிகமனமும் திட்டாந்தத்துள் அடங்குதலாற் பக்கம், ஏது, திட்டாந்தம் என்னும் மூவகையுறுப்புக்களே சாலுமென்றும்; அவை குற்றமுடையனவாயிற் போலியுறுப்புக்களாகி அநுமானத்தை ஆபாசப்படுத்துமென்றும் கூறி, அப்போலியுறுப்புக்களையறியுமாறு அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பாகுபாடுசெய்து குறியீடுதந்தும், இலக்கணங்கூறியும், உதாரணங் காட்டியும் உபபாதிக்கப்பெற்று முற்றுப்பெற்றிருக்கிறது.

இவ்விஷயங்கள் புத்தமதத்தினர்கூற்றினுள்வைத்துக் கூறப் பட்டனவாயினும், பெரும்பாலும் தருக்கமதம்பற்றியும் சிறு பான்மை பிறமதங்கள்பற்றியும் உதாரணங்காட்டப்பெற்றமையால், இவ்வநுமானவளவை எல்லோர்க்கும் ஒப்புமாறு சொல்லப்பட்ட தெனத்தோன்றுகிறது. ஆயினும் தருக்கநூலுக்கு விலக்காயுள்ள அந்நுவயாநுமானமொன்று இதனுட் கொள்ளப்பட்டிருக்கிறது.

தருக்கத்தில் ஏதுக் குற்றமடைதல்பற்றி ஏதுப்போலி யொன்று கொள்வதுபோல, மற்றை உறுப்புக்களும் குற்றமடை தல்பற்றிப் பக்கப்போலி, திட்டாந்தப்போலி என்னும் இருவகைப் போலியுறுப்புக்களும் இதனுட் கொள்ளப்படுகின்றன. தருக்கத் தில் ஏதுப்போலி ஐந்துவகையும் ஒன்பதுவிரியுமாம். இதில் மூன்று வகையும் பதினான்குவிரியுமாம். இவ்வாறே இன்னும் சிலவேறு பாடுகள் உள்ளன. அவையெல்லாம் தருக்கநூலுக்கு மாறு பாடில்லாத வேறுபாடு.

இதனுட் கூறப்படும் மூவகைப்போலிகளும் தருக்கநூல்களி னுள்ள ஏதுப்போலியுள்ளும் தோல்வித்தானமுதலியவற்றுள்ளும் அடங்குவனவாயினும், கற்போர் எளிதினுணர்தற்பொருட்டுத் 'தானெடுத்துமொழித' லாகி இதனுள் ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

இதிற் சில போலியுறுப்புக்கள் வேறுசில போலியுறுப்புக்களைப் பற்றியே வருகின்றன. விருத்தவியபிசாரி என்னும் ஏதுப்போலி அநுமானவிருத்தம் என்னும் பக்கப்போலியைப்பற்றியே வருகின் றது. இதுபோல் இன்னும் சிலவுள. இவற்றை வேறுபிரித்துப் பெயரிடுவது தருக்கமுறையன்றாயினும், சான்றோருரைத்தமை யான் அதன்காரணம் ஆராயத்தக்கது.

இதன்கண்ணுள்ள குறியீடுகளெல்லாம் வடமொழிப்பெயராய் அமைந்திருக்கின்றன. அவை தமிழிற் சிவஞானபோதத்தின் பாண் டிப்பெருமாளுரை முதலிய சில இடங்களில் வழங்கப்பட்டுள்ளன.

# முதற்பதிப்பின் முகவுரை.

இப்பாட்டிலுள்ள குறியீடுகள் வடமொழியாதலாலும், உதாரணங்கள் பெரும்பான்மை நூல்வழக்கும் மதவழக்கும்பற்றியிருத்தலாலும், இது, தமிழுடன் வடமொழியும் தருக்கமும் பிறமதவழக்குக்களும் சிறிதேனும் பயின்றூர்க்கல்லது பொருளினிதுவிளங்குதல் அரிது. இதுகருதியே இச்செய்யுள் அறிதற்கரிய விஷயங்களை உலகநடைபோலும் ஆற்றெழுக்கான தெளிவான நடையில் வெளியிடுகின்றது.

இது தன்னைக் கற்பவர்க்கு மனமகிழ்ச்சியுண்டாக அரியவிஷயங்களைவிளக்கி அறிவை வளர்க்கும் ஆற்றலுடையது. ஆதலால் இச்செய்யுள் கற்பவர்க்குப் பொருள்விளங்குமாறு என்சிற்றறிவிற்கெட்டியமட்டில் ஒருரையெழுதவிரும்பி அவ்வுரையும்படிப்பவர்க்கு இனிதுவிளங்குமாறு இப்பாட்டிலுள்ள விஷயங்களை விளக்கியும், உதாரணங்களை வரையறையிட்டுக் காட்டியும், நூல்வழக்கும் மதவழக்குமாகியுள்ள அவ்வுதாரணங்களை இயன்றவளவு உலகவழக்கில் வைத்துக்காட்டியும் 'அநுமானவிளக்கம்' எனப் பெயர்தந்து இதனைச் 'செந்தமிழ்வாயிலாக' வெளியிடுகின்றேனுதலால், கற்றகேட்ட பெரியோர்கள் இதனைக் கண்ணுற்றுச் செய்தருளும் திருத்தங்களைப்பெற்று அவற்றைப் பிழைதிருத்தத்திலும் அடுத்தபதிப்பிலும் சேர்த்துக்கொள்வதுடன், அவர்களுக்கு மிக்க நன்றிபாராட்டவும் கடப்பாடுடையனுகின்றேன்.

இங்ஙனம்,

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

திரு. நாராயணையங்கார்,
தலைமையுபாத்தியாயர்,
மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை.

ஸ்ரீ:

# விஷயசூசிகை.

[எண் - பக்க எண்.]


அகாரியாநுமானம் 5, 6 [55
அசந்நாவுள்ள உபயதன்மவிகலம் 45,
அசந்து - இல்லது 55; திட்டாந்தப்
போலியுள் உபயதன்மவிகலவகை
யினொன்று 52, 55
அசம்பந்தம் 19
அசாதாரணம் - சிறப்பு 29;—அநை
காந்திகவேதுப்போலிவகையினு
ளொன்று 27, 28, 29;—சவ்விய
பிசாரவேதுப்போலிவகையினுள்
ஒன்று 44, 45
அசித்தம் – உள்ளதாகக்கொள்ளப்ப
டாதது 23;— ஏதுப்போலிவகை
யுளொன்று 22–25; 43, 44, 46–
49
அசித்தவேதுப்போலிவரையறை 22
அந்நியதரன் - இருவரிலொருவன் 24
அந்நியதராசித்தம் 22, 23, 24
அந்நுவயசாதன்மியவியாத்திவாசகம்
அந்நுவயம் 14 [10—11
அந்நுவயவியாத்தி 5, 6
அந்நுவயவியாத்திவசனம் 9
அந்நுவயவைதன்மியவியாத்திவாசக
அந்நுவயாநுமானம் 5, 6 [ம் 10–11
அநந்நுவயசாதன்மியவியாத்தி வாச
அநந்நுவயம் 52, 56 [கம் 10—11
அநந்நுவயவைதன்மியவியாத்திவாச
அநந்நுவயாநுமானம் 5 [கம் 10–11
அநுபசங்காரம் - முடிவுபெறுமை 45
அநுபசங்காரி – முடிவுபெறுமையை
யுடையது 45; சவ்வியபிசாரவேது
ப்போலிவகையுள் ஒன்று 44, 45
அநுமானவடிவு 4
அநுமானவரையறை 6
அநுமானவிருத்தம் 13, 14, 15
அநுமானவுறுப்பு 4
அநுமிதியுணர்வு 23
அநைகாந்திகம் - ஏகாந்தமின்றியிருப்
பது - ஒருமுடிவற்றது 27; ஏதுப்
போலிவகைமூன்றினுளொன்று
27—30; அநைகாந்திகவேதுப்
போலிவரையறை 27
அப்பிரசித்தம் - அறியப்படாதது 17
அப்பிரசித்தவிசேடணம் 13, 17
அப்பிரசித்தவிசேஷ்யம் 13, 18
அப்பிரசித்தாசம்பந்தம் 13, 17, 19–
அப்பிரசித்தோபயம் 13, 18–19 [20
அருவத்திரவியம்- அரூபத்திரவியம்-
உருவமில்பொருள் 32
அவ்வியாவிருத்தி - வேறுபாடின்
அவ்வெதிரேகம் 59, 62 [மை 60
அவைதிகன் – வைதிகனல்லாதவன்
அளவை - பிரமாணம் 49 [23
ஆகமம் - சத்தப்பிரமாணம் 16
ஆகமவிருத்தம் 13, 16, 49
ஆங்கிலப்பௌதிகநூலுடையார் 53
ஆச்சிரயம் - பற்றுக்கோடு 25
ஆச்சிரயாசித்தம் 22, 25, 44, 46
இந்து - சந்திரன் 14
இன்மையினுபயாவ்வியாவிருத்தி 45,
59, 61, 62
உடுக்கள் - விண்மீன் 14 [61
உண்மையினுபயாவ்வியாவிருத்தி 59,
உதாரணம் - திட்டாந்தவுறுப்பு 4
உபசங்காரம் - முடிவுபேறு 45
உபநயம் 4
உபயதன்மவிகலம் 52, 54
உபயம் - இரண்டு 19
உபயவாதிகள் 8
உபயாசித்தம் 22—23
உபயாவ்வியாவிருத்தி 59, 61—62
உபயைகதேசவிருத்தி 27, 30—31

உபாதிநான்கு 47
உலகம் - உலகவழக்காகிய மரபு 16
உலகவிருத்தம் 13, 15—16
உற்பூதவுருவம் 48 [30
ஏகதேசம் என்ற சொல்லின்பொருள்
ஏகாந்தம் - ஒருமுடிவுடையது 27
ஏது - ஏதுப்பொருள் 2;—அநுமான வுறுப்பினுளொன்று 4, 9
ஏதுப்போலி 22—49
ஏதுவாசகம் 4
ஏதுவுறுப்பின் பரியாயப்பெயர்கள் 4
ஐயப்பாடு 25
ஐயம் 16
ஐவகையேதுப்போலி 43—49
ஐவகையேதுப்போலிவரையறை 44
ஒருதலை - ஒருபக்கம் 27
ஒருநிலைக்களம் - ஓரிடம் 2
ஒருவந்தம் - ஏகாந்தம் 27
கரி - சான்று 38
காரியாநுமானம் 5, 6
கோள்கள் - கிரகங்கள் 14
கௌசிகர் 40
சதநுமானப்பிரமாணம் 63
சந்நாவுள்ள உபயதன்மவிகலம்54,55
சந்நு - உள்ளது 55;—திட்டாந்தப் போலிவகையுள் உபயதன்மவிகல த்தினுட்பிரிவுளொன்று 52, 54
சபக்கதிட்டாந்தம் 9
சபக்கம் 2 [27, 29—30
சபக்கைகதேசவிருத்திவிபக்கவியாபி
சம்பந்தம் 19
சமணன் 16, 30
சவ்வியபிசாரம் 43, 44, 45
சற்பிரதிபக்ஷம் 44, 46
சாக்காடு - சாவு 23
சாத்தியதன்மம் - துணிபொருள் 1
சாத்தியதன்மவிகலம் 52, 54
சாத்தியம் - துணிபொருள் 1, 54
சாத்தியாவ்வியாவிருத்தி 59—60
சாதநாவ்வியாவிருத்தி 59, 60—61
சாதன்மியதிட்டாந்தப்போலி 51-57
சாதன்மியதிட்டாந்தப்போலி வரை
சாதன்மியதிட்டாந்தம் 9 [யறை 52
சாதன்மியம் 9
சாதனதன்மவிகலம் 52, 53
சாதனம் - ஏதுப்பொருள் 2, 53
சாதாரணம் - பொது 28;—அநை காந்திகவேதுப்போலிவகையுளொ ன்று 27, 28;—சவ்வியபிசாரவே துப்போலிவகையுள் ஒன்று 44,45
சாதித்தல் 37
சாருவாகன் 18, 19
சித்தம்- - உள்ளதாகக்கொள்ளப்பட்
சித்தாசித்தம் 22, 24 [டது 23
சூட்டடுக்கு 11
சுவசனம் - தன்சொல் 15
சுவசனவிருத்தம் 13, 15
சுவபக்ஷம் 27
சுவார்த்தம் 4
செம்பாதி - சரிபாதி 30
சொரூபாசித்தம் 44, 46
சோபாதிகம் - உபாதியுடன் கூடியது —வியாப்பியத்தன்மையசித்தம் 47
ஞானேந்திரியமைந்து 14
தருமம் - துணிபொருள் 1 [36, 45
தன்மச்சொரூபவிபரீதசாதனம் 35—
தன்மம் - தன்மை 53; துணிபொருள் 8; விசேடணம் 54 [37—38, 48
தன்மவிசேடவிபரீதசாதனம் 35,
தன்மி - பக்கப்பொருள் 2
தன்மிச்சொரூபவிபரீதசாதனம் 35, 38—39, 48 [39—41, 49
தன்மிவிசேடவிபரீதசாதனம் 35,
திட்டாந்தப்போலி 51—63
திட்டாந்தம் 4, 9
திட்டாந்தவசனம் 4 [4
திட்டாந்தவுறுப்பின்பரியாயப்பெயர்
திட்டாந்தவுறுப்பு 4
திரிவு 16
திருநீறு 30
தீட்டு 23
துணிதல் 1
துணிபொருள் 1
நல்லேதுவுறுப்பு 42
நற்பக்கவுறுப்பு 19
நாஸ்திகர் 23

நிகமனம் 4
நிலைக்களம் - இடம் 2
நையாயிகர் 55
பக்கதன்மம் - ஏதுப்பொருள் 2
பக்கதன்மவசனம் 4 [ள் 25
பக்கப்பொருளின் பரியாயப்பெயர்க
பக்கப்போலி 13—20
பக்கப்போலிவரையறை 13
பக்கம் - பக்கப்பொருள் 1;—அநு
மானவுறுப்பினுள் ஒன்று 4, 8
பக்கவுறுப்பின்பரியாயப்பெயர்கள் 4
பஞ்சீகரணம் 55
படம் - வஸ்திரம் 2
பரார்த்தாநுமானம் 4
பரிமாணம் - அளவு 53
பற்றுக்கோடு 25, 39
பாகசாலை - அடுக்களை 2
பாதிதம் 43, 44, 49
பாவப்பொருள் - உள்ளபொருள் 48
பிரத்தியக்கம் 14
பிரத்தியக்கவிருத்தம் 13—14, 49
பிரதிக்கினை 4
பிரதிபக்ஷம் 27
பிரமாணம் 12
புத்தன் 16
பொய்க்கரி - பொய்ச்சான்று 38
போலியுறுப்பு 12—63
மரபு 16
மூவகையேதுப்போலி 22—41
மெய்யநுபவம் 20
மெய்யுணர்வு 12
மேற்கோள் 4
விகலம் - உறுப்பற்றது 53
விசேடணம் - துணிபொருள் 1
விசேடியம் - பக்கப்பொருள் 2
விபக்கதிட்டாந்தம் 10
விபக்கப்பொருள் 10
விபக்கம் 3 [27, 30, 48
விபக்கைகதேசவிருத்திசபக்கவியாபி
விபரீதம் - மாறுபாடு 56
விபரீதவெதிரேகம் 59, 62—63
விபரீதாந்நுவயம் 52, 56, 57
வியாத்திவாசகம் 10—11
வியாப்பியத்தன்மையசித்தம் 44, 47
வியாவிருத்தி - வேறுபாடு 60 [–49
விருத்தம் - மாறுபட்டது 14, 35;
ஏதுப்போலிவகையினுள் ஒன்று
35—41, 44, 45
விருத்தவியபிசாரி 27, 31, 32—33
46 [45
விருத்தவேதுப்போலி 35—41, 44,
விருத்தவேதுப்போலிவரையறை 35
விருத்தி - இருப்பது 30
வினாவடுக்கு 11
வெதிரேகதிருட்டாந்தம் 60
வெதிரேகம் 14
வெதிரேகவியாத்திவசனம் 10 [63
வைதன்மியதிட்டாந்தப்போலி 58—
வைதன்மியதிட்டாந்தப்போலி வரை
யறை 59
வைதன்மியதிட்டாந்தம் 10
வைதன்மியம் 9
வைதிகன் 16, 23
ஸ்மிருதி 23

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 40 | 13 | பிருவித் | பிருதிவித் |

ஸ்ரீ :

# அநுமானவிளக்கம்.

இவ் வநுமானவிளக்கம் கற்கப்புகுவார்க்கு முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் பொருள்கள் ஐந்து.

அவை: (க) துணிபொருள், (உ) பக்கம், (ங) ஏது, (ச) சபக்கம், (ரு) விபக்கம் என்பனவாம்.

## க. துணிபொருள்.

துணிபொருளாவது: ஒன்றன்கண் உள்ளதாகவேனும், ஒன்றற்கு உரியதாகவேனும் [1] துணியப்படும் யாதேனும் ஒருபொருளாம். இது, அநுமானவுறுப்பின் முதல்வாக்கியத்தின் பயனிலைப் பொருளாயிருக்கும்.

உதாரணம்:—மலையிலுள்ளது நெருப்பு: என்றால் மலையின்கண் உள்ளதாகத் துணியப்படுவது நெருப்பாதலால் நெருப்பு இதில் துணிபொருள்.

குடம் அழிதற்பாலது: என்பதில் அழிவும், கொற்றன் அறிவுடையான்: என்பதில் அறிவும், சாத்தன் சுகமுடையான்: என்பதிற் சுகமும் துணிபொருளாம். இவ்வாறே மற்றும் காண்க.

இத் துணிபொருள் சாத்தியமென்றும், சாத்தியதன்மமென்றும், தருமமென்றும், விசேடணமென்றும் வழங்கப்படும்.

## உ. பக்கம்.

பக்கமாவது: துணிபொருளுடையதாகக் கருதப்படுவது. இது, அநுமானவுறுப்பின் முதல்வாக்கியத்தின் எழுவாய்ப் பொருளாயிருக்கும்.

உதாரணம்:—மலை நெருப்புடையது என்பதில் துணிபொருள் நெருப்பு; அதனை உடையதாகக் கருதப்படுவது மலையாதலால் அம்மலையே பக்கமாகும்.

---

[1] துணிதல் - ஆராய்ந்துதெளிதல்.

*

இப்பக்கப்பொருள் தன்மியென்றும், விசேடியமென்றும் வழங்கப்படும்.

குடம் அழிதற்பாலது என்பதிற் குடமும், கொற்றன் அறிவுடையான் என்பதிற் கொற்றனும், சாத்தன் சுகமுடையான் என்பதிற் சாத்தனும் பக்கமாம். இவ்வாறே மற்றும் காண்க.

### ௩. ஏது.

ஏதுவாவது: துணிபொருளில்லாதவிடங்தோறுமில்லாததாய்த் துணிபொருளோடு[1]ஒருநிலைக்களத்திருக்கும் பொருளாம்.

உதாரணம்:— மலை நெருப்புடையது; புகையுடைமையால்: என்பதனுள், துணிபொருள் நெருப்பு; அந்நெருப்பில்லாதவிடத்தில்லாததாய், அதனோடு ஒருநிலைக்களத்தில் (பாகசாலை முதலியவற்றில்) இருப்பது புகையாதலால் அப்புகை ஏதுப்பொருளாயிற்று. அப்புகையே புகையுடைமை எனவும்படும்.

குடம் அழிதற்பாலது; ஆக்கப்படுதலால்: என்பதில் துணிபொருள் அழிவுடைமை; அதனோடு ஒருநிலைக்களத்தில் (அழிந்தபடத்தில்) இருப்பது ஆக்கப்பாடாதலால் அவ்வாக்கப்பாடு ஏதுப்பொருளாயிற்று. இவ்வாறே மற்றுங் காண்க.

இவ்வேதுவைச் சாதனமென்றும் பக்கதன்மமென்றும் வழங்குவதுண்டு.

### ௪. சபக்கம்.

சபக்கமாவது: துணிவானுக்கு அத்துணிபொருள் முன்பு வெளிப்பட்டுள்ள இடம்.

உதாரணம்:— மலை நெருப்புடையது என்பதற்குச் சபக்கம் பாகசாலை முதலியவாம். எவ்வாறெனில்? மலைநெருப்புடையது: என்பதில் துணிபொருள் நெருப்பு; இது, துணிபவனுக்குப் பாகசாலைமுதலியவற்றில் முன்புவெளிப்பட்டிருத்தலால் அப்பாகசாலை சபக்கமெனப்படும்.

---

[1] ஒருநிலைக்களம் - ஓரிடம். அது: ஏகதேசமும், முழுது மாம்.

குடம் அழிதற்பாலது என்பதில் துணிபொருள் அழிவுபாடு; அது, துணிபவனுக்கு முன்பு ஆக்கப்பட்டழிந்த படமுதலியவற்றுள் வெளிப்பட்டிருத்தலால் அப் படமுதலிய அழிவுபாடுடையன சபக்கமாம். இவ்வாறே பிறவற்றுள்ளும் கண்டுகொள்க.

### ரு. விபக்கம்.

விபக்கமாவது: துணிபொருளில்லாத இடம்.

உதாரணம்:— மலை நெருப்புடையது என்பதற்கு ஆற்றுவெள்ளம் முதலியனவாம். எவ்வாறெனில்: துணிபொருளாகிய நெருப்பில்லாத இடம் ஆற்றுவெள்ளம் முதலியவாதலால் அவ்வாற்றுவெள்ளம் முதலிய நெருப்பில்லாதபொருள்களெல்லாம் விபக்கமாம்.

குடம் அழிதற்பாலது என்பதற்கு, துணிபொருளாகிய அழிவுபாடில்லாத ஆகாயம் முதலிய நித்தப்பொருள்களேல்லாம் விபக்கமாம். மற்றும் இவ்வாறே விபக்கப்பொருளறிக.

---

## பரீக்ஷைவினுக்கள்.

இந்நூல் கற்கப்புகுவார் முதலில் அறிந்துகொள்ளவேண்டும்பொருள்கள் எத்தனை? அவை எவை?

துணிபொருளாவது யாது? அஃது எவ்வெப்பெயரான் வழங்கப்படும்? அஃது அநுமானவுறுப்பினுள் எவ்வாக்கியத்தின் எப்பொருளாயிருக்கும்? அதற்கு உதாரணம் யாது?

பக்ஷப்பொருளாவது யாது? அஃது எவ்வெப்பெயரான் வழங்கப்படும்? அஃது அநுமானவுறுப்பினுள் எவ்வாக்கியத்தின் எப்பொருளாயிருக்கும்? உதாரணம் யாது?

ஏதுப்பொருளாவது யாது? அஃது எவ்வெப்பெயரான் வழங்கப்படும்? அதற்கு உதாரணம் யாது?

சபக்கப்பொருளாவது யாது? அதற்கு உதாரணம் யாது?

விபக்கப்பொருளாவது யாது? அதற்கு உதாரணம் யாது?

தருக்கநூலார் கூறும் (1) சுவார்த்தம் (2) பரார்த்தம் என்னும் இருவகை அநுமானங்களுள், பரார்த்தாநுமானமே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அது, துணிந்தோன் துணியாதானைநோக்கிக் கூறும் ஐவகையுறுப்புக்களையுடைய வாக்கியமாம்.

அவ்வுறுப்புக்கள்:—(க) பக்கம், (உ) ஏது, (ந) திட்டாந்தம், (ச) உபநயம், (ரு) நிகமனம் என்பனவாம். இவற்றின் இலக்கணங் கள் பின்பு விளக்கலாகும். இங்கு உதாரணமாக ஓர் அநுமானத் துள் அவை வருமாறு:—

## அநுமானவடிவு.

(க) இம்மலை நெருப்புடையது; (உ) புகையுடைமையால்; (ந) யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது, பாகசாலை போல; (ச) இதுவும் அங்ஙனம் (புகையுடையது); (ரு) ஆதலின் இங் ஙனம் (நெருப்புடையது) என்பது ஓர் அநுமானம்.

இவ் வநுமானத்துள் இம்மலை நெருப்புடையது: என்னும் முதற் கூற்றுப் [1]பக்கமென்னும் உறுப்பாம். இது பிரதிக்கினை எனவும், மேற்கோள் எனவும் பெயர்பெறும் வாக்கியவடிவாயுள்ளது.

புகையுடைமையால்: என்னும் இரண்டாங்கூற்று [2]ஏது வென் னும் உறுப்பாம். இது ஏதுவாசகமெனவும் பக்கதன்மவசனமெனவும் வழங்கப்படும்.

யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது, பாகசாலை போல: என்னும் மூன்றாங்கூற்றுத் திட்டாந்தமென்னும் உறுப்பாம். இது, திட்டாந்தவசனமெனவும் உதாரணமெனவும் பெயர்பெறும்.

இதுவும் அங்ஙனம்: என்னும் நான்காங்கூற்று உபநயம் என்னும் உறுப்பாம்.

ஆதலின் இங்ஙனம்: என்னும் ஐந்தாங்கூற்று நிகமனம் என்னும் உறுப்பாம்.

---

[1] இது, முன்சொன்ன பக்கப்பொருளன்று.

[2] இது முற்கூறிய ஏதுப்பொருளன்று.

இனி, அநுமானம் (க) அந்நுவயாநுமானம், (உ) அநந்நுவயாநுமானம் என இருவகைப்படும்.

(க) அந்நுவயாநுமானமாவது: [1] அந்நுவயவியாத்தியுள்ளதாம்.

(உ) அநந்நுவயாநுமானமாவது: அந்நுவயவியாத்தியில்லதாம்.

இவற்றுள், அந்நுவயாநுமானம் (க) காரியாநுமானம் (உ) அகாரியாநுமானம் என இருவகைப்படும்.

அவற்றுள், (க) காரியாநுமானமாவது: துணிபொருளின் காரியத்தை ஏதுவாக உடையது.

(உ) அகாரியாநுமானமாவது: துணிபொருளின் காரியமல்லாத உடனிகழ்வதொன்றை ஏதுவாக உடையது.

இவ்வநுமானங்களை ஐவகையுறுப்புக்களுடன் பின்வரும் அநுமானவரையறையிற் கண்டுகொள்க.

இவ்வநுமானங்கள் ஐவகையுறுப்பும்பெற்றனவாயினும், ஈற்றினுள்ள உபநயவுறுப்பும் நிகமனவுறுப்பும் திட்டாந்தவுறுப்புள் அடங்குதலால் (க) பக்கம், (உ) ஏது, (௩) திட்டாந்தம் என்னும் மூவகையுறுப்புக்களே இந்நூலுட் கொள்ளப்படுகின்றன.

---

[1] அந்நுவயவியாத்தியாவது: ஏதுவையுடைய பொருளெல்லாம் துணிபொருளையும் உடையவாதல். உதாரணம்:—இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால்—என்பதற்கு யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது என ஏதுவாகிய புகையுள்ள இடமெல்லாம் துணிபொருளாகிய நெருப்பிருத்தலாம். இவ்வாறில்லாதது அந்நுவயவியாத்தியில்லதாம். உதாரணம்:—இவ்வெளியிடத்திற் குடமில்லை, காணப்படாமையால்: என்பதற்கு யாது யாது தோன்றாதது அது அது இல்லாதது எனத் தோன்றாதனவெல்லாம் இல்லாதன ஆகாமல், ஆகாயம் முதலியன தோன்றாதனவாகியே உள்ளபொருளாதலால் அந்நுவயவியாத்தி இல்லை.

# அநுமானவரையறை.

| அநுமானத்தின் பெயர். | | அந்நுவயாநுமானம் | | | | அநந்நுவயாநுமானம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | காரியாநுமானம். | | அகாரியாநுமானம். | | அகாரியாநுமானம் | |
| உறுப்புக்களின் பெயர். | பக்கம் | மலைநெருப்புடையது | | குடம்அழிதற்பாலது | | இவ்வெளியிடத்திற் குடமில்லை | |
| | ஏது | புகையுடைமையால் | | ஆக்கப்படுதலால் | | தோன்றாமையால் | |
| | | சாதன்மியம் | வைதன்மியம் | சாதன்மியம் | வைதன்மியம் | சாதன்மியம் | வைதன்மியம் |
| | திட்டாந்தம் | யாதுயாது புகையுடையது அது அது நெருப்புடையது, பாகசாலை போல. | யாதுயாது நெருப்பில்லாதது அதுஅது புகையுமில்லாதது, ஆற்றுவெள்ளம் போல. | யாதுயாதுஆக்கப்படுவது அது அது அழிதற்பாலது, படம் போல. | யாது யாது அழிதற்பாலதன்று அது அது ஆக்கப்படாதது, ஆகாயம்போல | யாது யாது இல்லது அது அது தோன்றாதது, முயற்கொம்பு போல. | யாது யாது தோன்றுவதோ அது அது உள்ளது, உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனி போல. |
| | உபநயம் | இதுவும் அங்ஙனம் (புகையுடையது) | இதுவுமங்ஙனமன்று (புகையில்லாததன்று) | இதுவும் அங்ஙனம் (ஆக்கப்படுவது) | இதுவும் அங்ஙனமன்று (ஆக்கப்படாததன்று) | இதுவும் அங்ஙனம் (தோன்றாதது) | இதுவும் அங்ஙனமன்று (தோன்றுவதன்று) |
| | நிகமனம் | ஆதலின் இங்ஙனம் (நெருப்புடையது) | ஆதலின் இங்ஙனமன்று (நெருப்பில்லாததன்று) | ஆதலின் இங்ஙனம் (அழிதற்பாலது) | ஆதலின் இங்ஙனமன்று. அழியத்தகாததன்று) | ஆதலின் இங்ஙனம் (இல்லது) | ஆதலின் இங்ஙனமன்று (உள்ளதன்று) |
| குறிப்பு | | துணிபொருளாலாகிய காரியமான புகை ஏதுவாதலால் இது காரியாநுமானம் எனப்பட்டது. | | துணிபொருளின் காரியமாகாத உடனிகழ்வதுஏதுவாதலாலிது அகாரியாநுமானம் எனப்பட்டது. | | யாது யாது ஏதுவுடையது அது அது துணிபொருளுடையது என்னும் அந்நுவயமில்லாமையால் இஃது அநந்நுவயாநுமானமெனப்பட்டது. | |
| | | இவ்விரண்டநுமானங்களும் யாது யாது ஏதுவுடையது அது அது துணிபொருளுமுடையது; என்னும் அந்நுவயவியாத்தியுடைமையால் அந்நுவயாநுமானமெனப்பட்டன. | | | | | |

## பரீக்ஷவினாக்கள்.

தருக்கநூலார் கூறும் அநுமானம் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர் யாவை? அவற்றுள் இந்நூலிற் கூறப்படுவது எது? அதன் இலக்கணமென்னை? அதற்கு உறுப்பெத்தனை? அவையெவை? ஒருதாரணம் தந்து அதனுள் அநுமானவுறுப்பைந்தனையும் விளக்குக.

பக்கப்பொருளுக்கும் பக்கவுறுப்புக்கும் உள்ள வேறுபாடென்னை?

அநுமானம் எத்தனைவகைப்படும்? அவை யாவை?

அந்நுவயாநுமானமாவது யாது? அது எத்தனைவகைப்படும்? அவை யாவை? அதனை ஒருதாரணந்தந்து முடித்துக்காட்டுக.

அநந்நுவயாநுமானமாவது யாது? ஒருதாரணந்தந்து முடித்துக் காட்டுக.

அந்நுவயாநுமானத்துக்கும் அநந்நுவயாநுமானத்துக்கும் உள்ள வேறுபாடென்னை?

அந்நுவயவியாத்தி - எங்ஙனம்? வெதிரேகவியாத்தி எங்ஙனம்? அந்நுவய வெதிரேக வியாத்திகளைக் கூறும் முறைவேறுபாடென்னை?

காரியாநுமானமாவது யாது? அதற்கு உதாரணம் யாது?

அகாரியாநுமானமாவது யாது? அதற்கு உதாரணம் யாது?

அநுமானவுறுப்பைந்தனுள் இந்நூலுட்கொள்ளப்படும் உறுப்பு எத்தனை? ஏன்? அவை யாவை?

---

## க. பக்கம்.

பக்கமாவது: [1]உபயவாதிகளுக்கும் [2]வெளிப்படைகளான [3]தன்மியையும், [4]துணிபொருளுடைமையாகிய [5]விசேடணத்தையும் உடைய வாக்கியரூபமான முதலுறுப்பாம்.

உதாரணம்:—இம்மலை நெருப்புடையது: எனக்கூறும் முதலுறுப்பு.

இதனுள், தன்மம் (துணிபொருள்) நெருப்பு; அதனை உடையதாகக்கூறப்படுவது மலையாதலால் மலை தன்மியாயிற்று. துணிபொருளுடைமை - ஈண்டு நெருப்புடைமை; அதனால் தன்மியாகிய மலை விசேடிக்கப்பட்டு நெருப்புடையது எனக் கூறப்படுதலால் இம்மலை நெருப்புடையது: என்பது பக்கவுறுப்பாயிற்று.

மலை பூமியிலும், நெருப்புடைமை பாகசாலை முதலியவற்றிலும் உபயவாதிகளாலும் அறியக்கிடந்தமையால் அவை வெளிப்படையாயின.

எதிரிக்குத் தன்மியாகிய மலை தனித்துவெளிப்பட்டும், விசேடணமாகிய நெருப்புடைமை பாகசாலை முதலியவற்றுள் வெளிப்பட்டும் இருத்தல்வேண்டும்.

இவ்வாறன்றி அப்பொழுது மலையில் நெருப்புடைமை வெளிப்படையாயிருப்பினும், மலையும் நெருப்புடைமையும் இரண்டும் வேறிடத்தும் வெளிப்படையில்லையாயினும், இவற்றுள் யாதேனுமொன்று வெளிப்படையில்லையாயினும் பக்கப்போலியாம்.

இவ்வாறே மற்றை அநுமானங்களின் பக்கவுறுப்புக்களிலும் எதிரிக்குத் தன்மி தனியே வெளிப்பட்டும், துணிபொருளுடைமையாகிய விசேடணம் பிறிதொன்றில் வெளிப்பட்டும் இருத்தல்வேண்டும் என அறிக.

---

1 உபயவாதிகள் - மூவகையுறுப்புக்களைச் சொல்பவரும் கேட்பவரும். 2 வெளிப்படைகள் - அறியப்பட்டவை. 3 தன்மி - துணிபொருளுடைய தாகக்கூறப்படுவது. 4 துணிபொருளுடைமை - துணிபொருளையுடையதாதல். 5 விசேடணம் - சிறப்பிப்பது.

## உ. ஏது.

ஏதுவாவது: முற்கூறிய ஏதுப்பொருளின் பெயரிலாயினும், அதனை உடையதாந்தன்மையின் பெயரிலாயினும் மூன்றனுருபேனும் ஐந்தனுருபேனும் கொடுத்துப் பக்கவுறுப்பை அடுத்துக் கூறும் இரண்டாங்கூற்றும்.

உதாரணம்:—மலை நெருப்புடையது: என்பதற்குப் புகையுடைமையால்: என்பது.

இதில் ஏதுப்பொருள் புகை; அதனை யுடையதாந்தன்மையின் பெயர் புகையுடைமை. அஃது ஆல் என்னும் மூன்றனுருபு கொடுத்துப் புகையுடைமையால் எனப் பக்கவுறுப்பையடுத்துக் கூறப்படுதலால் அஃது ஏதுவுறுப்பாயிற்று.

இவ்வாறு பிற ஏதுவுறுப்புள்ளும் கண்டுகொள்க.

## ௩. திட்டாந்தம்.

திட்டாந்தமாவது: ஏதுவுறுப்புக்குப்பின் வியாத்திவசனத்தையடுத்துச் சபக்க விபக்கப் பொருட்பெயர்களிலொன்றை உவமவுருபுகொடுத்துக் கூறும் மூன்றாங்கூற்றும்.

இது (க) சாதன்மியம் எனவும், (உ)வைதன்மியம் எனவும் இருவகைப்படும்.

(க) சாதன்மியதிட்டாந்தமாவது: சபக்கப்பொருளில் ஒன்றை அந்நுவயவியாத்திவசனத்தையடுத்து உவமவுருபுகொடுத்து ஏதுவுறுப்புக்குப்பிற் கூறுவது.

உதாரணம்:— மலை நெருப்புடையது; புகையுடைமையால்: என்பதற்கு யாது யாது புகையுடையது, அது அது நெருப்புடையது; பாகசாலை போல: என்பதாம்.

இதனுள், 'யாது யாது புகையுடையது, அது அது நெருப்புடையது' என்பது அந்நுவய வியாத்திவசனம். (அதனையடுத்துப்)பாகசாலையாகிய சபக்கம், 'போல' என்னும் உவமவுருபுகொடுத்துக் கூறப்பட்டமையால் இது சாதன்மிய திட்டாந்தமாயிற்று. இது சபக்கதிட்டாந்தம் எனவும்படும்.

(உ) வைதன்மியதிட்டாந்தமாவது: விபக்கப்பொருள்களி லொன்றை வெதிரேகவியாத்திவசனத்தையடுத்து உவமவுருபு கொடுத்து ஏதுவுறுப்புக்குப்பிற் கூறுவதாம்.

உதாரணம்:—மலை நெருப்புடையது, புகையுடைமையால்: என்பதற்கு யாது யாது நெருப்பில்லாதது, அது அது புகையுமில்லாதது; ஆற்றுவெள்ளம்போல: எனக் கூறுவது.

இதனுள் 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது' என்பது வெதிரேகவியாத்திவசனம்; அதனையடுத்து விபக்கப்பொருளில் ஒன்றாகிய ஆற்றுவெள்ளம், 'போல' என்னும் உவமவுருபுகொடுத்துக் கூறப்படுதலால், இது வைதன்மிய திட்டாந்தமாயிற்று. இது விபக்கதிட்டாந்தம் எனவும்படும்.

இவ்வாறே பிற அநுமானங்களுள்ளும் திட்டாந்தவுறுப்பாமாறு கண்டுகொள்க.

இனி, வியாத்திவாசகமாவது: திட்டாந்தவுறுப்பிற் குறப்பாகி ஏதுசாத்தியங்களின் தொடர்பை உடன்பாட்டாலேனும் எதிர்மறையாலேனும் விளக்கிநிற்கும் வாக்கியமாம்.

இஃது (க) அந்நுவய சாதன்மிய வியாத்திவாசகம், (உ) அந்நுவய வைதன்மிய வியாத்திவாசகம், (ங) அநந்நுவய சாதன்மிய வியாத்திவாசகம், (ச) அநந்நுவய வைதன்மிய வியாத்திவாசகம் என நான்குவகைப்படும்.

இவற்றுள், அந்நுவய சாதன்மிய வியாத்திவாசகமும், அந்நுவய வைதன்மிய வியாத்திவாசகமும் அந்நுவயாநுமானத்துக்கே உறுப்பாகும். அநந்நுவய சாதன்மிய வியாத்திவாசகமும், அநந்நுவய வைதன்மிய வியாத்திவாசகமும் அநந்நுவயாநுமானத்துக்கே உறுப்பாகும். அவற்றுள்ளும் சாதன்மிய வாசகங்கள் சாதன்மிய திட்டாந்தங்களுக்கும், வைதன்மிய வாசகங்கள் வைதன்மியதிட்டாந்தங்களுக்கும் உறுப்பாம்.

(க) அந்நுவய சாதன்மிய வியாத்திவாசகமாவது: அவ்வவ்வேதுவுடையனவெல்லாம் அவ்வத்துணிபொருளுமுடையனவென்பது விளங்க ஏதுவுடைமையை முற்கூறித் துணிபொருளுடைமையைப் பிற்கூறுவது.

உதாரணம்:—இம்மலை நெருப்புடையது புகையுடைமையால்: என்பதற்கு யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது: என்பதாம்.

இதனுள், வினவடுக்காலும் சுட்டடுக்காலும் புகையுடையவை யெல்லாம் நெருப்புடையவை என்பது விளங்கும். யாது யாது புகையுடையது என்னும் ஏதுவுடைமை முன்னும், அது அது நெருப்புடையது என்னும் துணிபொருளுடைமை பின்னுமாகக் கூறி ஆராய்தல் காண்க.

(உ) அந்நுவய வைதன்மிய வியாத்திவாசகமாவது: அவ்வத்துணி பொருளில்லனவெல்லாம் அவ்வவ்வேதுவுமில்லன என்பது விளங் கத் துணிபொருளினின்மையை முற்கூறி, ஏதுவினின்மையைப் பிற்கூறுவதாம்.

உதாரணம்:—முற்கூறிய அநுமானத்துக்கே யாது யாது நெருப் பில்லாதது, அது அது புகையுமில்லாதது: எனக் கூறுவது.

இதன்கண்ணும் முற்கூறியவாறே இலக்கணத்தை அமைத் துக்கொள்க.

(ங) அநந்நுவய சாதன்மிய வியாத்திவாசகமாவது: அவ்வத்துணி பொருளுடையனவெல்லாம் அவ்வவ்வேதுவுமுடையன என்பது விளங்கத் துணிபொருளுடைமையை முற்கூறி ஏதுவுடைமையைப் பிற்கூறுவது.

உதாரணம்:—இவ் வெளியான இடத்திற் குடமில்லை; காணப்படா மையால்: என்பதற்கு, யாதுயாது இல்லது, அது அது காணப்படாதது: எனத் துணிபொருளுடைமை முன்னும், ஏதுவுடைமை பின்னுமாக வரும் என்பதாம்.

---

(ச) அநந்நுவய வைதன்மிய வியாத்திவாசகமாவது: அவ்வவ் வேதுவையில்லாதனவெல்லாம் அவ்வத்துணிபொருளையுமில்லா தன என்பது விளங்க ஏதுவினின்மையை முற்கூறித் துணிபொரு ளினின்மையைப் பிற்கூறுவது.

உதாரணம்:—இவ் வெளியான இடத்திற் குடமில்லை; காணப் படாமையால் என முற்கூறிய அநுமானத்தில் யாது யாது காணப் படுவது, அது அது உள்ளது: எனக் கூறுவது.

இவ்வாறு கூறிமுடித்த இலக்கணங்களையுடைய நல்லுறுப்புக்களாலமைந்த அநுமானங்கள் மெய்யுணர்விற்குக் கருவியாகிய பிரமாணமாம். இவற்றாலுண்டாகும் உணர்வும் மெய்யுணர்வாம்.

---

## பரீக்ஷைவினாக்கள்.

பக்கவுறுப்பைப்பற்றித் தெரிந்துகொண்டவை என்ன?

ஏதுவுறுப்பு எவ்வாறு கூறவேண்டும்? இதற்கும் ஏதுப்பொருளுக்கும் உள்ள வேறுபாடென்னை?.

திட்டாந்தமாவது யாது? அது எத்தனைவகைப்படும்? அவை யாவை?

சாதன்மியதிட்டாந்தமாவது யாது? அதனை ஒருதாரணத்துள் விளக்கிக் காட்டுக.

வைதன்மியதிட்டாந்தமாவது யாது? அதனை ஒருதாரணந்தந்து விளக்குக.

வியாத்திவாசகமாவது யாது? அது எத்தனைவகைப்படும்? அவை யாவை? அவற்றுள் எவையெவை எவ்வெவ்வநுமானங்களுக்கும் திட்டாந்தங்களுக்கும் உறுப்பாய்வரும்?.

அந்நுவய சாதன்மிய வியாத்தி—எப்படி? அந்நுவய வைதன்மிய வியாத்தி—எப்படி? உதாரணந்தந்து விளக்குக.

அநந்நுவய சாதன்மிய வியாத்தி—எப்படி? அநந்நுவய வைதன்மிய வியாத்தி—எப்படி? உதாரணந்தந்துவிளக்குக.

---

மேற்கூறிய மூவகையுறுப்புக்களுள் யாதேனுமொன்று குற்றமுடையதாயினும் அது போலியுறுப்பாகி அநுமானத்தை ஆபாசப்படுத்தும். அப்போலியுறுப்புக்களை அறிந்தல்லது விலக்குதல் கூடாமையால் அவையும் சிறிது ஆராயத்தக்கன.

அவை (க) பக்கப்போலி, (உ) ஏதுப்போலி, (ங) திட்டாந்தப் போலி என மூன்றுவகைப்படும்.

## க. பக்கப்போலி.

(க) பக்கப்போலி ஒன்பதுவகையாம். அவற்றின் பெயரும் உதாரணங்களும் பின்வரும் பக்கப்போலிவரையறையுட் காண்க.

### பக்கப்போலிவரையறை.

| எண் | பெயர் | உதாரணம் தன்மி (விசேடியம்) | உதாரணம் சாத்தியம் (விசேடணம்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| க | பிரத்தியக்க விருத்தம் | நெருப்புச் | சூடில்லது. | பொதுக் கூற்று. |
| உ | அநுமானவிருத்தம் | குடம் | அழிதற் பாலதன்று. | ஷை |
| ங | சுவசனவிருத்தம் | தாய் | மலடி. | ஷை |
| ச | உலகவிருத்தம் | நெருப்புத் | தீயன்று. | ஷை |
| ரு | ஆகமவிருத்தம் | வல்லினம் | ஙஞணநமன | இலக்கணம் வல்லான் கூற்று. |
| சு | அப்பிரசித்த விசேடணம் | பால் | வெண்ணிற முடையது. | பிறவிக்குருட னைநோக்கிய கூற்று. |
| எ | அப்பிரசித்த விசேடியம் | நிறம் | அறியத் தகுவது. | இதுவும் அவ னைநோக்கிய கூற்று. |
| அ | அப்பிரசித்தோபயம் | மதிநிறம் | வெண்மை. | ஷை |
| கூ | அப்பிரசித்தா சம்பந்தம் | நீ | ஆண்மகன். | ஒருவனை நோக்கிய கூற்று. |

க. பிரத்தியக்கவிருத்தம்.

பிரத்தியக்க விருத்தமாவது: பிரத்தியக்கப் பிரமாணத்துக்கு மாருகப் பக்கவுறுப்புக்கூறுவது.

உதாரணம்:—நெருப்புச் சூடில்லது: என்பதாம்.

இக்கூற்று, நெருப்பில் தீண்டுமளவிற் சூடுள்ளதாகப் புலப் படத்தெரிவிக்கும் பிரத்தியக்கப் பிரமாணத்துக்கு மாறுபடுதலால் பிரத்தியக்கவிருத்தமாயிற்று.

இன்னும் இதுபோலவே, உப்பு இனியசுவையுடையது, பால் கருநிறமுடையது, சத்தம் கட்புலமாவது என்றற்ருெடக்கத்தனவெல் லாம் பிரத்தியக்கவிருத்தமென்னும் இப்பக்கப்போலியாம்.

பிரத்தியக்கம்-ஞானேந்திரியம் ஐந்தாலும், மனத்தாலும் புலப் படக்காணுதல். விருத்தம்-மாறுபட்டது.

இதனுல் பிரத்தியக்கப்பிரமாணத்துக்கு மாறுபடாது பக்க வுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

உ. அநுமானவிருத்தம்.

அநுமானவிருத்தமாவது: அநுமானப்பிரமாணத்துக்கு மாருகப் பக்கவுறுப்புக்கூறுவது.

உதாரணம்:—குடம் அழிதற்பாலதன்று: என்பதாம்.

இக்கூற்று, 'குடம் அழிதற்பாலது; ஆக்கப்படுதலால்; யாது யாது ஆக்கப்படுவது, அது அது அழிதற்பாலது; படம்போல' என அந்நுவயத்தாலும், 'யாது யாது அழிதற்பாலதன்று அது அது ஆக்கப்படுவதன்று; ஆன்மாப்போல' என வெதிரேகத்தாலும் குடத் தின் அழிவுபாடுதுணிந்த பிரமாணமாகிய அநுமானத்துக்கு மாறு படுதலால் அநுமானவிருத்தமாயிற்று.

இன்னும் இதுபோலவே இந்து முதலிய கோள்கள் இயங்குவன வல்ல, உடுக்கள் தீப்பொறியளவுள்ளன, இரண்டு குண்டுநூல்வரை

நேர்வரை, நீர்மட்டத்தின் வரை செவ்வரை: என்றற்றொடக்கத்தன வும் இவ்வநுமானவிருத்தமாம்.

இதனால் அநுமானப்பிரமாணத்துக்கு மாறுபடாமலும் பக்க வுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

ங. சுவசனவிருத்தம்.

சுவசனவிருத்தமாவது: தன்கூற்றுக்கு மாறாகப் பக்கவுறுப்புக் கூறுவது.

உதாரணம்:—தாய் மலடி: என்பதாம்.

இக்கூற்றுள், மகப்பெற்றாள் என்னும் பொருளுள்ள தன் கூற் றாகிய 'தாய்' என்னும் எழுவாய்க்கு மாறாக, மகப்பேறற்றாளென் னும் பொருளுள்ள 'மலடி' யென்னும் பயனிலையைக் கூறுதலால் இது சுவசனவிருத்தமாயிற்று.

இதுபோலவே ஏறு பெண்விலங்கு, நிசி பகற்பொழுது, பிராணி உயிரில்லது என்றற்றொடக்கத்தனவெல்லாம் சுவசனவிருத்தமென் னும் இப் பக்கப்போலியாம். சுவசனம்-தன்சொல்.

இதனால் தன்சொல்லாகிய எழுவாய்க்கு மாறுபடாத பயனிலை யுடையதாகவும் பக்கவுறுப்புக்கூறவேண்டுமென்றதாயிற்று.

ச. உலகவிருத்தம்.

உலகவிருத்தமாவது: உலகவழக்குக்கு மாறாகப் பக்கவுறுப்புக் கூறுவது.

உதாரணம்:— நெருப்புத் தீயன்று: என்பதாம்.

இக்கூற்று' நெருப்புத் தீயெனவழங்கும் உலகவழக்குக்கு மாறு படுதலால் உலகவிருத்தமாயிற்று.

இன்னும், இதுபோலவே மாதம் பதினைந்துநாள் கொண்டது, வருடம் பத்துமாதம் கொண்டது, வெள்ளாடு வெண்மைநிறமுடையது,

பச்சரிசி பசுமைநிறமுடையது: என்றற்றொடக்கத்தனவெல்லாம் உலகவிருத்தமென்னும் இப் பக்கப்போலியாம்.

உலகம்-உலகவழக்காகிய மரபு;

இதனால் மரபு வழுவாமலும் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

மரபு - உயர்ந்தோரெல்லோராலும் எப்பொருள் எச்சொல்லால் எவ்வாறு வழங்கப்படுமோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறு வழங்குதல்.

### ரு. ஆகமவிருத்தம்.

ஆகமவிருத்தமாவது: தனக்குடம்பாடான நூலுக்கு மாறாகப் பக்கவுறுப்புக் கூறுவது.

உதாரணம்:— இலக்கணநூல்வல்லானொருவன் வல்லினம் ஙஞணநமன எனக் கூறுவதாம்.

இக்கூற்று, 'வல்லினமென்ப கசடதபற', 'மெல்லின மென்ப ஙஞணநமன' என்னும் தனக்கு உடம்பாடான இலக்கணநூலுக்கு மாறுபடுதலால் ஆகமவிருத்தமாயிற்று.

மற்றும் வைதிகன் சுவர்க்கபோகம் இல்லை: என்பதும், புத்தன் உலகம் நித்தியம்: என்பதும், சமணன் வேள்வி புண்ணிய கருமம்: என்பதும் இவைபோல்வனவும் ஆகமவிருத்தமென்னும் இப்பக்கப்போலியாம்.

ஆகமம்-சத்தப்பிரமாணம்; அது, அவரவர்க்குரிய வேதம்முதலிய நூல்கள்.

இதனால் வாதி தனக்குடம்பாடான நூலுக்கு மாறுபடாமலும் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

பிரத்தியக்கவிருத்த முதலிய இவையைந்தும் ஐயந்திரிவுகளுக்கு இடமாதல்பற்றி மெய்யுணர்விற்குத் தடையாகிப் பக்கப்போலியாயின.

சூ. அப்பிரசித்தவிசேடணம்.

அப்பிரசித்தவிசேடணமாவது: எதிரிக்குத் தன்மிமாத்திரம் அறியப்பட்டதாயிருக்க, அதனை, அவனால் அறியப்பட்டிராத துணிபொருளால் விசேடித்துப் பக்கவுறுப்புக் கூறுவதாம்.

உதாரணம்:—பிறவிக்குருடனைநோக்கிப் பால் வெண்மைநிற முடையது: என்பதாம்.

இதனுள், தன்மியாகிய பால் அவனுக்கு உணவாகி முன்பு வெளிப்பட்டுள்ளது. அதனை அவனுக்கு வெளிப்படையாகாத வெண்மைநிறமாகிய துணிபொருளால் விசேடித்துக்கூறினமையால் இஃது அவனுக்கு அப்பிரசித்தவிசேடணமாயிற்று.

இதுவே பாலை இருட்டின்கண் உண்டுணர்ந்தும் வெண்மை நிறத்தைச் சுண்ணம்பிற் கண்டுணர்ந்துமுள்ள ஒருவனுக்குக் கூறப் படிற் பக்கப்போலியாகாது.

மற்றும், பேயறியாதானை நோக்கி இக் கற்றறி பேயுடைத்து: என்பதும், மந்திரமறியாதானை நோக்கி இங்குள்ளோன் மந்திரவாதி: என்பதும், இவைபோல்வனவும் அப்பிரசித்தவிசேடணமென்னும் இப் பக்கப்போலியாம்.

இதனாற் பக்கவுறுப்பிற் கூறப்படும் விசேடணமாகிய துணி பொருள் எதிரிக்குப் பிறிதோரிடத்து அறியப்பட்டதாயிருத்தல் வேண்டுமென்றதாயிற்று. [தன்மியின்கண் அறியப்பட்டுள்ள தாயின் அப்பிரசித்தாசம்பந்தம் என்னும் பக்கப்போலியாம்.]

இது, விசேடண வுணர்ச்சியின்மைபால் வாக்கியப்பொரு ளுணர்வுண்டாகாமைபற்றி அறியாமைக்கிடமாகிப் பக்கப்போலி யாயிற்று.

### எ. அப்பிரசித்தவிசேடியம்.

அப்பிரசித்தவிசேடியமாவது: எதிரிக்கு வெளிப்படையாகாத தொன்றைத் தன்மியாகவைத்து, வெளிப்படையான துணிபொருளால் அதனை விசேடித்துப் பக்கவுறுப்புக்கூறுவது.

உதாரணம்:—பிறவிக்குருடனைநோக்கி, நிறம் அறியத்தகுவது: என்பதாம்.

இதனுள் அறியத்தகுவதாகிய விசேடணம் அவனுக்கு உண்டி முதலியவற்றுள் வெளிப்பட்டிருக்க, அதன் விசேடியமாகிய நிறம் ஒருவாற்றானும் வெளிப்படையாகாமையால் இஃது அவனுக்கு அப்பிரசித்தவிசேடியமாயிற்று.

[வெளிப்படையாயிற் பக்கப்போலியாகாது.]

மற்றும், சாருவாகனைநோக்கி ஆகூழ் ஆக்கம் தரும்: என்பதும், பேயறியாதானைநோக்கிப் பேய் அறிவுடையது: என்பதும் இவை போல்வனவும் அப்பிரசித்தவிசேடியமென்னும் இப்பக்கப்போலியாம்.

இதனால் எதிரிக்கு அறியப்பட்டுள்ளதொன்றைத் தன்மியாக வைத்துப் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

இது விசேடிய வுணர்ச்சியின்மையால் வாக்கியப்பொருளுணர்வை யுண்டாக்காது அறியாமைக்கிடமாய்ப் பக்கப்போலியாயிற்று.

### அ. அப்பிரசித்தோபயம்.

அப்பிரசித்தோபயமாவது: எதிரிக்கு வெளிப்படையில்லாத பொருள்களை விசேடிய விசேடணங்களாகிய தன்மியும் துணிபொருளுமாகவைத்துப் பக்கவுறுப்புக் கூறுவது.

உதாரணம்:—பிறவிக்குருடனைநோக்கி மதிநிறம் வெண்மை: என்பதாம்.

இதனுள் மதிநிறம் தன்மியாகிய விசேடியம்; வெண்மை துணி பொருளாகிய விசேடணம்; இவ்விரண்டும் பிறவிக்குருடனுக்கு வெளிப்படையின்மையால் இஃது அவனுக்கு அப்பிரசித்தோபய மாயிற்று.

இன்னும், அவனைநோக்கி நிறம் கட்புலமாவது: என்பதும், சாருவாகனைநோக்கிப் புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகுவான்: என்பதும், இவைபோல்வனவும் அப்பிரசித்தோபயமென்னும் இப்பக்கப் போலியாம்.

உபயம் - இரண்டு:—அஃது இங்கு விசேடண விசேடியங் களைக் குறிப்பாலுணர்த்திநின்றது.

இதனால் எதிரிக்கு வெவ்வேறிடங்களில் தனித்தனி வெளிப் படையானபொருள்களையே தன்மியும் துணிபொருளுமாகவைத்து நற்பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

இது, விசேடண விசேடியப் பொருணர்ச்சியின்மையால் வாக் கியப்பொருளுணர்ச்சியையுண்டாக்காது அறியாமைக்கிடமாகிப் பக்கப்போலியாயிற்று.

## கூ. அப்பிரசித்தாசம்பந்தம்.

அப்பிரசித்தாசம்பந்தமாவது: எதிரி விசேடிய விசேடண சப்பந்த முணர்ந்து உடம்பட்டுள்ளதனையே துணியுமாறு பக்கவுறுப்புக் கூறுவதாம்.

இங்குச் சம்பந்தமெனப்படுவது விசேடண விசேடிய சம்பந்த வுணர்வு; அஃதின்மை அசம்பந்தமெனப்படும்: அஃது எதிரியிடைப் பிரசித்தமாயிருக்கக் கூறும் வாக்கியம் பிரசித்தாசம்பந்தமெனப் படும்:—இது நற்பக்கவுறுப்பு. இவ்வாறில்லாத வாக்கியம் அப்பிர சித்தாசம்பந்தமாம். எதிரியால் உணரப்பட்ட விசேடண விசேடிய சம்பந்தப்பொருளையுடைய வாக்கியமென்றபடி.

உதாரணம்:-ஒருவனை நோக்கி நீ ஆண்மகன்: எனக் கூறுவதாம்.

இதனுட்கூறப்பட்ட நீயென்னும் முன்னிலைப்பொருள் விசேடியம்; ஆண்மகனாதல் விசேடணம். இவற்றின் சம்பந்தவுணர்வு எதிரி தான் ஆண்மகனெனவறிந்துள்ள அறிவு; அஃது அவனுக்கு முன்னமேநிகழ்ந்துள்ளதாதலாற் சம்பந்தம் பிரசித்தமாகியதேயன்றி அசம்பந்தம் பிரசித்தமாகவில்லை: ஆதலால் இஃது அப்பிரசித்தாசம்பந்தமாயிற்று.

மற்றும், இவ்வாறே யானைப்பாகனைநோக்கி உன்கையகத்துள்ளது தோட்டி என்பதுபோல எதிரி சம்பந்தம் அறிந்துள்ளவற்றைக் கூறுவதெல்லாம் அப்பிரசித்தாசம்பந்தமென்னும் இப்பக்கப்போலியாம்.

இங்ஙனங்கூறியவாற்றால் எதிரியால் அவற்றின் (விசேடண விசேடியங்களின்) சம்பந்தம் அறியப்பெற்றிராது, வெவ்வேறிடங்களில் தனித்தனி அறியப்பட்டுள்ள விசேடண விசேடியங்களையுடையதாகப் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

இவ்வாறு கூறுவது "இம்மலை நெருப்புடையது" என்னும் நற்பக்கம். இதனுள் விசேடியம் மலை, விசேடணம் நெருப்புடைமை; இவையிரண்டும் முறையே எதிரிக்கு நேரிலும் பாகசாலை முதலியவற்றிலும் தனித்தனி பிரசித்தம்: இவற்றின் சம்பந்தம் மலை நெருப்புடையதாதல். அஃது அவனுக்குப் பிரசித்தமில்லாதிருக்குங்கால், இம்மலை நெருப்புடையது என அவற்றின் சம்பந்தம் பிரசித்தமாகுமாறு கூறப்படுதல் காண்க.

அப்பிரசித்தாசம்பந்தமென்னும் இது, விசேடண விசேடிய சம்பந்தவுணர்வாகிய வாக்கியப்பொருளுணர்ச்சியை உண்டாக்குமாயினும், அவ்வுணர்ச்சி எதிரிக்கு முன்னமேயுண்டாயிருத்தலால், நினைவாதலேயன்றி அநுபவமாகாமையால் மெய்யநுபவத்துளொன்றாகிய அநுமிதியுணர்விற்குக் காரணமான அநுமானத்துக்கு உறுப்பாகாது பக்கப்போலியாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால் ஐயந்திரிவாக்காது அறியாமையை நீக்கி மெய்யநுபவத்தையுண்டாக்குமாறு பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்பது பெறப்பட்டது.

## பரீக்ஷவினுக்கள்.

போலியுறுப்புக்கள் எத்தனை? அவை எவை?

பக்கப்போலி எத்தனைவகைப்படும்? அவற்றின் பெயர்கள் எவை?

பிரத்தியக்கவிருத்தம் என்பதன் பொருள் யாது?

பிரத்தியக்கவிருத்தத்தினிலக்கணமென்னை? உதாரணங்காட்டிவிளக்குக.

அநுமானவிருத்தத்தின் இலக்கணமென்னை? உதாரணந்தந்து விளக்குக.

சுவசனவிருத்தம் எவ்வாறுவரும்? உதாரணம் யாது?

உலகவிருத்தமாவது யாது? அதனால், படிப்பவர் அறிந்துகொள்ளவேண்டியதென்னை? உதாரணந்தந்து விளக்குக.

ஆகமவிருத்தமாவது யாது? அதற்குதாரணம் யாது? 'சுவர்க்கபோகம் இல்லை' என்னும் வைதிகன்கூற்று ஆகமவிருத்தமாவதெப்படி?

பிரத்தியக்கவிருத்தமுதலிய ஐந்தாலும் தனித்தனி அறிந்துகொள்ள வேண்டிய முடிபென்ன?

பிரத்தியக்கவிருத்தமுதலிய ஐந்தும் பக்கப்போலியாமாறெங்ஙனம்?

விசேடணமாவது யாது? அது அப்பிரசித்தமாயிருப்பதெப்படி? விசேடணம் அப்பிரசித்தமாயிருந்தால் என்ன கேடு? தன்மியில் விசேடணம் பிரசித்தமாயிருந்தால் அஃது என்ன பெயர்பெறும்?

அப்பிரசித்தவிசேடியம் எவ்வாறுவரும்? விசேடியமாவது யாது?

பிரசித்தம் அப்பிரசித்தம் என்பவற்றின் பொருளென்னை?

அப்பிரசித்தவிசேடணம் அப்பிரசித்தவிசேடியம்: இரண்டையும் அறிந்து செய்யவேண்டியதென்னை?

'பேய் அறிவுடையது' என்னுங் கூற்றுப் பக்கப்போலியமாறென்னை? அது பக்கப்போலிவகையினு ளெதன்பாற்படும்?

அப்பிரசித்தோபயமாவது யாது? அது குற்றமாமா றெங்ஙனம்?

அப்பிரசித்தாசம்பந்தம் என்பதன் பொருளென்னை? இஃ தெவ்வாறு குற்றமாகிறது? உதாரணந்தந்து விளக்குக.

பக்கப்போலிவகையுணர்வாற்போந்த பயன் என்னை?

'உப்பு இனியசுவையுடையது', 'இந்து முதலியகோள்கள் இயங்குவன வல்ல', 'எறு பெண்விலங்கு', 'வெள்ளாடு வெண்மைநிறமுடையது', (குருடனைநோக்கி) 'நிறம் கட்புலமாவது', (யானைப்பாகனை நோக்கி) 'உன்கையகத்துள்ளது தோட்டி': என்பவை இன்ன இன்ன பக்கப்போலிவகைக்கு உதாரணமென விளக்குக.

## உ. ஏதுப்போலி.

இனி, ஏதுப்போலி அசித்தம், அநைகாந்திகம், விருத்தம் என மூன்றுவகைப்பட்டு, அவையொவ்வொன்றும் பலவகையாம்.

### க. அசித்தம்.

அவற்றுள், அசித்தம் நான்கு வகைப்படும். இவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட்காண்க.

அசித்தவேதுப்போலிவரையறை.

| எண் | பெயர் | உதாரணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | பக்கம் | ஏது | |
| க | உபயாசித்தம் | இது புலிவாழ் காடு | புலிக்கொம் புடைமையால் | பொதுக்கூற்று |
| உ | அந்நியதராசித்தம் | நாய் தீண்டற் பாலதன்று | தீட்டுடைய தாதலால் | அவைதிகனை நோக்கிய வைதிகன்கூற்று |
| ந | சித்தாசித்தம் | தனிவழிச்செல் வோன் பொருளிழப்பான் | ஆறலைக்கப் படுதலால் | பொதுக்கூற்று |
| ச | ஆச்சிரயாசித்தம் | எலி பறவை | இறகுடைய தாதலால் | ஷெ |

க. உபயாசித்தம்.

அசித்தம் நான்கனுள் உபயாசித்தமாவது: உபயவாதிகளாலும் உள்ளதாகக் கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'இது புலிவாழ்காடு; புலிக்கோம்புடைமையால்' என்பதாம்.

இக்கூற்றினுள் புலிக்கோம்புடைமை ஏதுப்பொருள்;—அது உபயவாதிகளாலும் உள்ளதாகக்கொள்ளப்படாததாதலால் இஃது உபயாசித்தமாயிற்று.

சித்தம்-உள்ளதாகக் கொள்ளப்பட்டது. அசித்தம்-அதனின் வேறுயது;—உள்ளதாகக்கொள்ளப்படாதது. அது, பொருளில்லாமையால் உள்ளதாகக்கொள்ளப்படாததும், பொருளிருந்தும் அறிந்துகொள்ளாமையால் உள்ளதாகக்கொள்ளப்படாததும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையதற்கு உதாரணம்:—குதிரைக்கொம்பு, மலடிமைந்தன் முதலியன. பின்னையதற்கு உதாரணம்:—(நாஸ்திகருக்கு) ஆன்மா, பழவினை முதலியன.

அவற்றுள் இங்குக் காட்டிய உதாரணம் பொருளில்லாமையால் வந்த உபயாசித்தம். பொருளிருந்தும் அறிந்துகொள்ளாமையால் வந்த உபயாசித்தத்துக்கு உதாரணம்:—ஒரு பிறவிக்குருடன் மற்றொரு பிறவிக்குருடனைநோக்கி 'இது இராப்பொழுது; நிலாத் தோன்றுகின்றமையால்' என்பதாம்.

மற்றும், இவ்வாறே 'இக்கன்று வலியுடையதாகும்; கடாப் பால் குடிக்கின்றமையால்' என்பதும், நாஸ்திகரிருவருள் ஒருவரையொருவர் நோக்கி "நாம் சுகதுக்கங்களையடைவோம்; பழவினையுடையம் ஆதலால்" என்பதும் முதலியனவெல்லாம் இவ் வேதுப்போலியாம்.

இவ்வேதுக்கூற்றுட்சொல்லப்பட்ட ஏதுப்பொருளில்லாமையால் ஏதுப்பொருளுணர்வின் வாயிலாகவரும் அநுமிதியுணர்வையுண்டாக்காமையால் அக்கூற்று ஏதுப்போலியாயிற்று.

## உ. அந்நியதராசித்தம்.

அந்நியதராசித்தமாவது: உபயவாதிகளில் ஒருவனால் (வாதியால்) உள்ளதாகக்கொள்ளப்பட்டதும், மற்றொருவனால் (எதிரியால்) உள்ளதாகக்கொள்ளப்படாததுமான பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—அவைதிகனைநோக்கி 'நாய் தீண்டற்பாலதன்று; [1]தீட்டுடையதாதலால்' என வைதிகன் கூறுவதாம்.

இதனுள் ஏதுப்பொருள் தீட்டுடைமை. அது வைதிகனாகிய வாதிக்கு ஸ்மிருதிமுதலிய நூல்களால் சாக்காடு, மகப்பேறு முதலியவற்றுள் உள்ளதாகக்கொள்ளப்பட்டு, அவைதிகனாகியஎதிரிக்கு

---

1 தீட்டு—தீண்டத்தகாததைத் தீண்டுதலால் உண்டாகும் வாலாமை.

ஒருவாற்ருனும் உள்ளதாகக் கொள்ளப்படாமையால், இஃது அந்நியதராசித்தமாயிற்று.

அந்நியதரன்—இருவரிலொருவன். அப்பெயர் இங்கு உபயவாதிகளிலொருவனுகிய எதிரியைக் குறிப்பாலுணர்த்திற்று.

மற்றும், இவ்வாறே அவைதிகனைநோக்கிப் 'புகைச்சுருட்டு நெருப்புக் கொள்ளற்பாலதன்று; எச்சிலாதலால்' என்பதும், குருடனைநோக்கி 'இம்மாணிக்கமணி விலையுயர்ந்து; ஒளிசிறந்ததாதலால்' என்பதும் முதலியனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இக்கூற்று, எதிரிக்கு ஏதுப்பொருளுணர்வின்மையால் அவ்வுணர்வின்வாயிலாகவருதற்குரிய அநுமிதியுணர்வையுண்டாக்காமையால் ஏதுப்போலியாயிற்று.

## ௩. சித்தாசித்தம்.

சித்தாசித்தமாவது: சந்தேகவிஷயமாயுள்ள பொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'தனிவழிச்செல்பவன் பொருளிழப்பான்; ஆறலைக்கப்படுதலால்' என்பதாம்.

இதனுட் கூறப்பட்ட ஏதுப்பொருள் ஆறலைக்கப்படுதல் (—வழிப்பறிகொடுத்தல்). அது தனிவழிச்சென்ற சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்பட்டுச் சித்தமாயும், சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்படாமல் அசித்தமாயும் இருத்தலால் இது சித்தாசித்தமாயிற்று.

மற்றும், இவ்வாறே 'இவன் செல்வமடைவான்; ஆகூழுடைமையால்' என்பதும் சித்தாசித்தம்.

இதில் ஆகூழுடைமை (—புண்ணியமுடைமை) ஏதுப்பொருள். அஃது, ஒருவனுக்குச் செல்வமுண்டாதற்குமுன்னமே அவனுக்கு உண்டென்ருயினும் இல்லையென்ருயினும் அறிந்துகொள்ளப்படாமையால் சந்தேகவிஷயமாதல்பற்றிச் சித்தாசித்தமாயிற்று. இவ்வாறு வருவனவெல்லாம் இவ்வேதுப்போலியென அறிக.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் சந்தேகவிஷயமாதலால், அதனாற்றுணியும் துணிபொருளுணர்வும் சந்தேகமாவதுபற்றி இஃது ஏதுப்போலியாயிற்று.

### ச. ஆச்சிரயாசித்தம்.

ஆச்சிரயாசித்தமாவது: தன்மியின்கண் உள்ளதாகக்கொள்ளப் படாத பொருளை ஏதுவாகக்கூறுவது.

**உதாரணம்**:—'எலி பறக்குமியல்புடையது; இறகுடைமையால்' என்பதாம்.

இதனுள் தன்மி-எலி; அதன்கண்ணுள்ளதாகக் கொள்ளப் படாதது இறகுடைமை: அதனை ஏதுவாகக் கூறுதலானஃது ஆச் சிரயாசித்தமாயிற்று.

ஆச்சிரயம், பற்றுக்கோடு, தன்மி, பக்கப்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள்.

மற்றும், இவ்வாறே 'குதிரை கவைக்குளம்புடையது; கோம் புடைமையால்; எருதுபோல' என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ் வேதுப்போலியாம்.

இதனுட் கூறப்படும் தன்மி சாத்திய ஏதுப்பொருள்கள் தனித் தனி வெளிப்பட்டுள்ளனவாயினும், தன்மியின்கண் ஏதுப்பொருள் உள்ளதாகக்கொள்ளப்படாமையால், தன்மியில் தன்றொடர்புணர்வு பற்றிவரும் துணிபொருளுணர்வைத் தோற்றுவிக்குமாற்றலின்றி ஏதுப்போலியாயிற்று.

[மணிமேகலையில் இவ்வாச்சிரயாசித்தத்தின் இலக்கணமும், உதாரணமும் வேறுபட்டிருக்கும்.]

இங்ஙனங்கூறியவாற்றால் உபயவாதிகளுக்கும் ஐயப்பாடின்றித் தன்மியின்கண்ணுள்ளதாகத் தெளியப்பட்டிருக்கும் பொருளை ஏது வாகக்கூறவேண்டுமென்றதாயிற்று.

---

## பரீக்ஷவினுக்கள்.

ஏதுப்போலி யென்பதன் பொருளென்னே? அஃது எத்தனைவகைப்படும்? அவை எவை?

அசித்தம் என்பதன் பொருளென்னே? அஃ தெத்தனைவகைப்படும்? உதாரணங்காட்டி விளக்குக.

அசித்தவேதுப்போலி எத்தனைவகைப்படும்? அவை யாவை?

உபயாசித்தமாவது யாது? உபயவாதிகளாவார் யாவர்? பொருளில்லாமையால் வந்த உபயாசித்தத்துக்கும், பொருளிருந்தும் அறிந்து கொள்ளாமையால் வந்த உபயாசித்தத்துக்கும் உதாரணந்தந்து விளக்குக.

அந்நியதராசித்தம் எவ்வாறுவரும்? உதாரணம் யாது? இதனுள் அந்நியதரன் என்பதன் பொருளென்னே? அஃது இங்கே யாரைக்குறிக்கும்.

சித்தாசித்தம் என்ற பெயர்ப்பொருளை உதாரணங்காட்டி விளக்குக.

ஆச்சிரயாசித்தம் எவ்வாறுவரும்? உதாரணந்தந்து விளக்கிக் காட்டுக.

உபயாசித்தம் முதலிய நான்கும் தனித்தனி ஏதுப்போலியாமாறென்னே?

நால்வகை அசித்தவேதுப்போலிகளாலும் அறிந்துகொண்டமுடிபென்ன?

'இஃது இராப்பொழுது; நிலாத்தோன்றுகின்றமையால்,' 'நாம் சுகதுக்கங்களையடைவோம்; பழவினையுடையமாதலால்' என்பவற்றுள் ஏதுவுறுப்புக்கள் போலியாமாறெங்ஙனம்?.

'புகைச்சுருட்டுநெருப்புக் கொள்ளற்பாலதன்று; எச்சிலாதலால்', 'இவன் செல்வமடைவான்; ஆகூழுடைமையால்', 'குதிரை கவைக் குளம்புடையது; கொம்புடைமையால்' என்பவை இன்ன இன்ன அசித்த ஏதுப்போலிக்கு உதாரணமாகுமென விளக்குக.

## உ. அநைகாந்திகம்.

அநைகாந்திகம்—ஏகாந்தமின்றியிருப்பது; இது, வியபிசாரமுடையது, நிச்சயமில்லாதது, ஒருமுடிவில்லாதது: என்னும் பொருளில் வழங்கப்படும். ஏகாந்தம்-ஒருமுடிவுடையது, ஒருதலைக் கேயுரியது, நிச்சயமுடையது: என்னும்பொருளில் வழங்கப்படும். ஒருவந்தம் என்பதும் இது. இங்ஙனம் ஒருதலைக்கேயுரியதாகாது சுவபக்ஷம் பிரதிபக்ஷம் என்னும் இருதலைக்கும் ஒத்த உரிமையுடையனவாயிருத்தலால், பின்வரும் சாதாரணம் முதலிய ஆறும் அநைகாந்திகம் எனப்படும்.

இவ் வநைகாந்திகம் ஆறுவகைப்படும். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

### அநைகாந்திகவேதுப்போலிவரையறை.

| எண் | பெயர் | உதாரணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | பக்கம் | ஏது | |
| க | சாதாரணம் | இம்மலை நெருப்புடையது | அறியப்படுதலால் | பொதுக்கூற்று |
| உ | அசாதாரணம் | ஆனினம் தூயதோலுடையது | அலைதாடியுடைமையால் | வைதிகனை நோக்கிய வைதிகன் கூற்று |
| ங | சபக்கைகதேசவிருத்திவிபக்கவியாபி | இம்மலை நெருப்புடையது | புகையில்லாமையால் | பொதுக்கூற்று |
| ச | விபக்கைகதேசவிருத்திசபக்க வியாபி | இம்மலை புகையுடையது | நெருப்புடைமையால் | ஷை |
| ரு | உபயைகதேசவிருத்தி | காக்கை பறவை | கருநிறமுடைமையால் | ஷை |
| சு | விருத்தவியபிசாரி | வௌவால் முட்டையிற் பிறப்பது | பறவையாதலால் | ஷை |

### க. சாதாரணம்.

சாதாரணமாவது: சபக்க விபக்கங்களிரண்டினும் பொதுவாய் நிரம்பியுள்ள பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையது; அறியப்படுதலால்' என்பதாம்.

இதனுள் அறியப்படுதல் ஏதுப்பொருள்: அது, நெருப்புடையதாகிச் சபக்கமாயுள்ள பாகசாலை முதலியவற்றுள்ளும், நெருப்பின்றி விபக்கமாகிய ஆற்றுவெள்ளமுதலியவற்றுள்ளும் நிரம்பியிருத்தலால், இரண்டுபக்கங்களுக்கும் பொதுவாதல்பற்றி இது சாதாரணமாயிற்று. [சாதாரணம்-பொது.]

மற்றும், இவ்வாறே 'மரம் அறிவுடையது; பெயருடைமையால்', 'ஊண் உண்ணத்தகும்; பொருளாதலால்' என்றற் றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இதன் ஏதுப்பொருள் சபக்கத்தில்நின்று துணிபொருளுணர்வையும், விபக்கத்தில்நின்று அதன் மறுதலைப்பொருளுணர்வையும் உடனிகழச்செய்து ஐயப்பாட்டையுண்டாக்கலால் இஃது ஏதுப்போலியாயிற்று.

அஃதாமாறு:—'மலை நெருப்புடையது, அறியப்படுதலால்; யாது யாது அறியப்படுவது, அது அது நெருப்புடையது; பாகசாலைபோல:' எனச் சபக்கத்தில் நின்று துணிபொருளை (நெருப்புடைமையை)ச் சாதித்துக்கொண்டே, 'மலை நெருப்பில்லாதது, அறியப்படுதலால்; யாது யாது அறியப்படுவது, அது அது நெருப்பில்லாதது; ஆற்றுவெள்ளம்போல' என அத் துணிபொருளின் மறுதலைப்பொருளை (நெருப்பின்மையை)ச் சாதித்தற்கும் உரியதாதல் காண்க.

### உ. அசாதாரணம்.

அசாதாரணமாவது: சபக்கவிபக்கங்களில் ஓரிடத்துமின்றிப் பக்கத்தில்மாத்திரமிருக்கும்பொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'ஆனினம் தூயதோலுடையது; அலைதாடியுடைமையால்' என்பதாம். (இது வைதிகர்கூற்று).

இதனுள் அலிதாடியுடைமை ஏதுப்பொருள்; அது, தூய தோலுடைய மான் முதலிய சபக்கத்திலும், தூயதோலில்லாத கழுதை முதலிய விபக்கத்திலும் இல்லதாகி ஆனினமாகிய பக்கத்தில்மாத்திரம் சிறப்பாயிருத்தலால் இஃது அசாதாரணமாயிற்று.

அசாதாரணம்-சிறப்பு.

மற்றும், இவ்வாறே 'நாக்கு ஓசையறியும்; சுவையறிகருவியாதலால்' என்பதும், 'எல்லாப்பொருளும் அறியப்படுவன; பெயருடையனவாதலால்' என்பதும் போல்வனவெல்லாம் இவ்வேதுப் போலியாம்.

இவ்வேதுப்பொருளுக்குச் சபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளுண்மை தெளியப்படாமலும், விபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளின்மை தெளியப்படாமலும் ஐயத்துக்கேதுவாதலால் இஃது ஏதுப்போலியாயிற்று.

ரு. சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி.

சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது: சபக்கத்தின் ஏகதேசத்திலுள்ளதாகி, விபக்கத்தில் வியாபித்திருக்கும் பொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையது; புகையின்மையால்' என்பதாம்.

இதனுள் ஏதுப்பொருள்: புகையின்மை. சபக்கப்பொருள்: பாகசாலை, சூளை, பழுக்கக்காய்ச்சிய இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறி முதலிய நெருப்புள்ளனவெல்லாம். விபக்கப்பொருள்: ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி, ஆறினசாம்பல் முதலிய நெருப்பில்லனவெல்லாம். இவற்றுள் ஏதுப்பொருளாகிய புகையின்மை சபக்கத்தில் பாகசாலை சூளை முதலிய ஏகதேசத்தை யொழித்து, ஒழிந்த ஏகதேசமாகிய சிவக்கக்காய்ச்சிய இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறிமுதலியவற்றுள் உளதாய், நெருப்பில்லாதுவிபக்கமாகிய

ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி முதலியவற்றுளெல்லாம் வியாபித்திருத்தலால் இது சபக்கைகதேசவிருத்திவிபக்கவியாபியாயிற்று.

ஏகதேசம்-சிறுபான்மை. அஃது இங்கு முற்றுப்பொருளின் மறுதலையாகிய குறைப்பொருளுணர்த்திநின்றது. இதனால் ஏகதேசமென்பதற்கு, முற்றுப்பொருளாகாத சிறுபான்மை, செம்பாதி, பெரும்பான்மைகளாகிய குறைப்பொருளெல்லாம் பொருளாகக் கொள்க. விருத்தி-இருப்பது. விபக்கவியாபி - விபக்கமுழுதுமிருப்பது.

மற்றும், இவ்வாறே 'குதிரை விலங்கு; கோம்பில்லாமையால்' என்றற்றொடக்கத்தனவும் இவ்வேதுப்போலியாமென்க.

## ச. விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபி.

விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபியாவது: விபக்கத்துள் ஏகதேசத்துள்ளதாகிச் சபக்கங்களில் வியாபித்திருக்கும் பொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'மலை புகையுடையது, நெருப்புடைமையால்' என்பதாம்.

இதனுள் நெருப்புடைமை ஏதுப்பொருள். அது புகையில்லாது விபக்கமாகிய பொருள்களில் ஏகதேசமாகிய சிவக்கக்காய்ச்சிய இரும்பு, தீப்பொறிமுதலியவற்றுள் உளதாய், புகையுடையதாகிச் சபக்கமாகிய பாகசாலை சூளை முதலியவற்றிலெல்லாம் வியாபித்து நிற்றலால், இது விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபியாயிற்று.

மற்றும், இவ்வாறே 'இப்பறவை காக்கை; கருநிறமுடைமையால்', 'இவன் சமணன்; திருநீறணியாமையால்' என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாமென்க.

## ரு. உபயைகதேசவிருத்தி.

உபயைகதேசவிருத்தியாவது: சபக்கவிபக்கங்களிரண்டிலும் ஏகதேசத்துள்ளதொருபொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:– 'காக்கை பறவை, கருநிறமுடைமையால்' என்பது.

இதனுள், கருநிறமுடைமை ஏதுப்பொருள். அது, பறக்குந் தன்மையுடைமையால் சபக்கமாகிய கொக்கு முதலிய பலவகைப் புள்ளினங்களுள் ஏகதேசமாயுள்ள கரிக்குருவி முதலியவற்றுள்ளும், பறக்குந்தன்மையின்மையால் விபக்கமாகிய விலங்கினங்களுள் ஏகதேசமாகிய யானை முதலியவற்றுள்ளும் இருத்தலால் இஃது உபயைகதேசவிருத்தியாயிற்று.

உபயம்-இரண்டு. அஃது இங்குச் சபக்க விபக்கங்களைக் குறிப்பாலுணர்த்திற்று.

மற்றும், இவ்வாறே 'இவன் பார்ப்பான்: திருநீறணிதலால்', 'முயல் வாலுடையது: காலுடையதாதலால்' என்றற்றொடக்கத்தன வெல்லாம் இவ்வேதுப்போலியாமென்க.

சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி முதலிய மூன்றினும் ஏதுப்பொருள் துணிபொருளோடு சபக்கத்தினின்று துணிபொருளுணர்வையும், அத்துணிபொருளின்மறுதலைப்பொருளோடு விபக்கத்தினின்று மறுதலைப்பொருளுணர்வையும் நிகழச்செய்து, துணிபொருளில் ஐயப்பாட்டையுண்டாக்கலால் அவை ஏதுப்போலியாயின.

### சூ. விருத்தவியபிசாரி.

விருத்தவியபிசாரியாவது: தன் துணிபொருளின் மறுதலைப்பட்டபொருளைத்துணியும் விருத்தவேதுவுக்கும் இடங்கொடுக்கின்றதன்மியிலுள்ளபொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—'வெளவால் முட்டையிற் பிறப்பது: பறவையாதலால்: யாது யாது பறவை, அது அது முட்டையிற்பிறப்பது; கிளிபோல' என்பதாம்.

இதனுள், பறவையாதல் ஏதுப்பொருள். அது, தன்றுணிபொருளின் மறுதலைப்பொருளைத் துணியும் விருத்தவேதுவாகிய தோற்செவியுடைமைக்கும் இடங்கொடுக்கின்றதன்மியாகிய வெளவாலில் இருத்தலால், இது விருத்தவியபிசாரியாயிற்று.

இதனுள், தோற்செவியுடைமை விருத்தவேதுவாமாறு:— 'வெளவால் முட்டையிற் பிறப்பதன்று; தோற்செவியுடைமையால்; யாது யாது தோற்செவியுடையது, அது அது முட்டையிற்பிறப்ப தன்று; எலிபோல' என வரும். இங்கு எடுத்துக்கொண்ட விருத்த வியபிசாரியின் துணிபொருள் முட்டையிற் பிறத்தல்; அதற்கு மறு தலை முட்டையிற் பிறவாமை; அதனைத் துணியும் ஏது, தோற்செவி யுடைமை; ஆதலால், அத்தோற்செவியுடைமை விருத்தவேது வாயிற்று. அது பறவையாகிய வெளவாலிலிருத்தல் விருத்தவியபி சாரம்; அதனைப் பறவையாதலால் என்ற ஏதுப்பொருள் தன்றன்மி யின்வாயிலாக உடைத்தாதலால், இது விருத்தவியபிசாரியெனப் பட்டது.

மற்றும், இவ்வாறே 'காற்று அழிவில்லது; அருவத்திரவியமாத லால்; யாது யாது அருவத்திரவியம், அது அது அழிவில்லது: ஆன்மாப்போல' என்பதில் அருவத்திரவியமாதலால் என்னும் ஏது விருத்தவியபிசாரியாம்.

இதற்கு விருத்தவேது வருமாறு:—'காற்று அழிவுடையது; பரிசமுடைமையால்; யாது யாது பரிசமுடையது, அது அது அழிவுடையது; குடம்போல' என வரும்.

இதனுள் பரிசமுடைமை, அழிவின்மையின் மறுதலையாகிய அழிவுடைமையைத் துணிதலால் விருத்தமாயிற்று. அப்பரிச முடைமை அழிவுடைய உருவப்பொருளின்கண்ணிற்றலேயன்றி அருவப்பொருளாகிய வாயுவினும் நிற்றல் வியபிசாரம். அதனை, அருவமாதல் என்னும் ஏதுப்பொருள் தன்றன்மியின்வாயிலாகப் பெற்றிருத்தல் கண்டுகொள்க.

இனி இவ்வாறன்றி, விருத்த ஏதுவின் நிலைக்களத்திருக்கும் ஏது, விருத்தவியபிசாரி என்றிலக்கணங்கூறி, ஏதுவின் நிலைக்களமே விருத்தவேதுவின் நிலைக்களமாயும் அமையுமிடத்து அதன்கண்

இருத்தல் விருத்தவியபிசாரம் எனக்கொண்டு அதனையுடைய ஏது விருத்தவியபிசாரியாயிற்று என்பதும் ஒன்று.

இதனால் துணிபொருளுணர்வும், விருத்தஏதுவால் துணிபொருளின் மறுதலையுணர்வும் நிகழ்தலால் ஐயப்பாட்டிற்கு ஏதுவாதல்பற்றி இஃது ஏதுப்போலியாயிற்று.

இவ்வறுவகையநைகாந்திகங்களும் கூறியவாற்றால், விபக்கத்தில்லாது விருத்தவேதுப்பகையின்றிப் பக்க சபக்கங்களிரண்டினுமுள்ள பொருளே யேதுவாகக்கூறவேண்டு மென்றதாயிற்று.

---

## பரீக்ஷைவினாக்கள்.

அநைகாந்திகம் என்பதன் பொருளை விளக்குக.

அநைகாந்திகவேதுப்போலி எத்தனைவகைப்படும்? அவை யாவை?

சாதாரணம் அசாதாரணம் என்னுஞ் சொற்களுக்குப் பொருள் யாது?

சாதாரணம் எவ்வாறுவரும்? அஃது ஏதுப்போலியாமாறெங்ஙனம்?

'ஊன் உண்ணத்தகும்; பொருளாதலால்', 'மரம் அறிவுடையது; பெயருடைமையால்' என்பவை சாதாரண ஏதுப்போலியாமாறு பொருத்திக்காட்டுக.

அசாதாரணத்தின் இலக்கணம் யாது? உதாரணம் யாது? அஃது ஏதுப்போலியாமா றெங்ஙனம்?

'நாக்கு ஓசையறியும்; சுவையறிகருவியாதலால்', 'எல்லாப்பொருளும் அறியப்படுவன; பெயருடையனவாதலால்' என்பவை அசாதாரணவேதுப்போலியாமாறு பொருத்திக்காட்டுக.

ஏகதேசம், விருத்தி, வியாபி: என்பவற்றின் பொருளை விளக்குக.

சபக்ஷைகதேசவிருத்திவிபக்ஷவியாபி எவ்வாறு வரும்? உதாரணங் காட்டிவிளக்குக.

'குதிரை விலங்கு; கொம்பில்லாமையால்' என்பது சபக்ஷைகதேச விருத்தி விபக்ஷவியாபியாமாறு காட்டுக.

விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷவியாபியை உதாரணத்தான் விளக்குக.

'இப்பறவை காக்கை; கருநிறமுடைமையால்,' 'இவன் சமணன்; திரு நீறணியாமையால்' என்பவை விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷ வியாபியாமாறு காட்டுக.

உபயைகதேசவிருத்தி எவ்வாறு வரும்?

'காக்கை பறவை; கருநிறமுடைமையால்,' 'முயல் வாலுடையது; கா லுடையதாதலால்' என்பவை உபயைகதேசவிருத்தியாமாறெங் ஙனம்?

சபக்ஷைகதேசவிருத்திவிபக்ஷவியாபி முதலிய மூன்றும் ஏதுப்போலி யாயது எவ்வாறு?

விருத்தவியபிசாரி யென்னும் பெயர்ப்பொருளை விளக்குக. அதன் இலக் கணம் யாது? அஃது ஏதுப்போலியாவதெப்படி?

'காற்று அழிவில்லது; அருவத்திரவியமாதலால்,' 'வௌவால் முட்டை யிற்பிறப்பது; பறவையாதலால்' என்பவற்றுள் எது விருத்த வியபிசாரியாமாறு காட்டுக.

அநைகாந்திக வேதுப்போலிகளால் அறிந்துகொண்ட முடிபென்ன?

## ங. விருத்தம்.

இனி விருத்தவேதுப்போலி வருமாறு:—

விருத்தவேதுவாவது: வாதி கூறும் ஏதுவே வாதிக்குதவாது, வாதிகூறும் துணிபொருளின் விருத்தமான மறுதலைப்பொருள் துணிதற் குரியதாகி எதிரிக்குதவுவதாம். [விருத்தம்—மாறு பட்டது.]

அது, நான்குவகைப்படும். அவற்றின் பெயரும் உதாரண மும் பின்வரும் விருத்தவேதுப்போலிவரையறையுட் காண்க.

### விருத்தவேதுப்போலிவரையறை.

| எண். | பெயர். | உதாரணம். | | குறிப்பு. |
|---|---|---|---|---|
| | | பக்கம். | ஏது. | |
| க | தன்மச் சொரூப விபரீத சாதனம். | இப்பறவை காக்கை | வெண்ணிற முடைமையால். | ஒரு வெண்புறு வைப் பக்கப்பொரு ளாகச் சுட்டிக் கூறிய கூற்று |
| உ | தன்மவிசேட விபரீத சாதனம். | காற்று பூதப் பொருள் | பரிசமுடைமை யால். | வெளிப்படை யான பொதுக் கூற்று. |
| ங | தன்மிச் சொரூபவிபரீத சாதனம். | அஃறிணை ஒன்றன்பா லன்று | பலவின் பாலின் வேறுதலால். | ஷ |
| ச | தன்மிவிசேட விபரீத சாதனம். | மக்கள் பிரா மணரல்லர் | பிராமணத் தன்மை யின்மையால். | ஷ |

### க. தன்மச்சொரூபவிபரீதசாதனம்.

தன்மச்சொரூப விபரீதசாதனமாவது: எடுத்துக்கொண்ட துணி பொருளை விபரீதமாகத்துணிதற்குரியபொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—ஒரு வெண்புறுவைச்சுட்டி 'இப்பறவை காக் கை; வெண்ணிறமுடைமையால்:' என்பது.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் வெண்ணிறமுடைமை; அது, இங்கு எடுத்துக்கொண்ட துணிபொருளின் எதிர்மறைப் பொருளாகிய காக்கையின்மையைத் துணியத்தகுவதாதலால், இது தன்மச்சொரூப விபரீதசாதனமாயிற்று.

இவ்வேது அவ்வெதிர்மறைப்பொருளைத் துணியுமாறு:—'இப் பறவை காக்கையன்று; வெண்ணிறமுடைமையால்; யாது யாது வெண்ணிறமுடையது, அது அது காக்கையன்று; கொக்குப் போல' என அந்நுவயவியாத்தியும், 'யாது யாது காக்கை, அது அது வெண்ணிறமுடையதன்று; சகுனக்காக்கைபோல' என வெதிரேகவியாத்தியும் உடையதாகி வரும்.

தன்மச்சொரூபம் - துணிபொருளின் வடிவு. விபரீதம்-மாறுபாடு. ஆகவே, துணிபொருள்வடிவின் மாறுபாடு தன்மச்சொரூப விபரீதமென்றவாறாயிற்று. துணிபொருள்வடிவின்மாறுபாடாவது: அத்துணிபொருளிலதாதலேனும், அத்துணிபொருளின்றன்மை கெடுதலேனுமாம்.

ஆகவே, துணிபொருளிலதாதலையேனும், துணிபொருளின் றன்மைகெடுதலையேனும் துணிதற்குரிய ஏது தன்மச்சொரூப விபரீதசாதனமெனப்படும் என்பதாம்.

எடுத்துக்கொண்ட உதாரணத்துள் தன்மச்சொரூபம் காக்கையாதல்; அதன் விபரீதம்-காக்கையிலதாதல்; அதனைத் துணிதற்குரிய ஏது வெண்ணிறமுடைமை. ஆதலால் இது தன்மச் சொரூப விபரீதசாதனமெனப்பட்டது.

மற்றும், இவ்வாறே புகையைச்சுட்டி 'இஃது ஆகாயம்; நிற முடைமையால்' என்பதும், பனிக்கட்டியைச் சுட்டி 'இது நெருப்பு; தட்பமுடைமையால்' என்பதும், இவைபோல்வனவும் இவ்வேதுப் போலியாம்.

இது, சபக்கத்திலில்லாது பக்கத்திலும் விபக்கத்திலும் நின்று எடுத்துக்கொண்ட துணிபொருளின் மாறுபாட்டைத் துணிந்து துணிபொருளுணர்வை யொழித்தலால் ஏதுப்போலியாயிற்று.

இதனால், எடுத்துக்கொண்ட துணிபொருளின் மறுதலைப்பட்ட பொருளைப் பக்கப்பொருளிற் றுணிதற்குச் சாதனமாயுள்ளதொன்றை ஏதுவாகக் கூறலாகாதென்பது பெறப்பட்டது.

## உ. தன்மவிசேடவிபரீதசாதனம்.

தன்மவிசேடவிபரீதசாதனமாவது: எடுத்துக்கொண்ட துணிபொருட்பொதுமையைப் பக்கத்திற் றுணிதற்குரியதாயிருந்துகொண்டே, அத்துணிபொருள்விசேடத்தின் எதிர்மறைப்பொருளையும் அப்பக்கத்திற் றுணிதற்குரியபொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—'காற்று பூதப்பொருள்; பரிசமுடைமையால்:' என்பது.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் பரிசமுடைமை; அது, 'யாது யாது பரிசமுடையது, அது அது பூதப்பொருள்; பிருதிவி முதலியனபோல' என அந்நுவயவியாத்தியுடையதாகியும், 'யாது யாது பூதப்பொருளன்று; அது அது பரிசமுடையதன்று; கால முதலியனபோல' என வெதிரேகவியாத்தியுடையதாகியும் எடுத்துக்கொண்ட துணிபொருட்பொதுமையாகிய பூதப்பொருளாதலைத் தன்மியாகிய வாயுவின்கட் டுணிதற்குரியதாயினும், அதன் தன்ம விசேடமாயுள்ள உருவமில்பூதமாதலைக் கெடுத்து அவ்வாயுவை உருவமுடையபூதமாகத் துணிதற்கும் உரியதாதலால் இது தன்ம விசேட விபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் தன்மவிசேடவிபரீதம் துணியுமாறு:—'பூதவிசேடமாகிய வாயு உருவமில்பூதமன்று (உருவமுடைய பூதம்): பரிசமுடைமையால்; யாது யாது பரிசமுடையது, அது அது உருவமில்பூதமன்று (உருவமுடைய பூதம்); பிருதிவிபோல' என அந்நுவயவியாத்தியும், 'யாது யாது உருவமில்பூதம், அது அது பரிசமுடையதன்று: ஆகாயம்போல' என வெதிரேகவியாத்தியும் உடையதாகிவரும்.

இவ்வாறு இது தன் றன்மவிசேடமாகிய உருவமில்பூதத்தை உருவமுடையபூதமாகத் துணிந்து விபரீதப்படுத்தலால் தன்ம விசேடவிபரீதசாதனமெனப்பட்டது.

மற்றும், இவ்வாறே 'ஆனினம் மிருகம், கொம்புடைமையால்' என்பதும் இவ்வேதுப்போலியாம். இதனுள் ஏதுப்பொருள்-கொம்புடைமை: அது, ஆனினத்தை மிருகமாகத் துணிதற்குரியதாயினும், தன்ம (மிருக) விசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை அலைதாடியில்லதெனச் சாதித்து விபரீதப்படுத்தல் காண்க.

அங்ஙனமாமாறு;—'ஆனினம் மிருகம்; கோம்புடைமையால்; யாது யாது கொம்புடையது, அது அது மிருகம்: எருமைபோல' என அந்நுவயமும், 'யாது யாது மிருகமன்று, அது அது கொம்புடையதன்று: பறவைபோல' என வெதிரேகமும் உடையதாகித் துணிபொருளைச் சாதித்துத் தன்மவிசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை, 'ஆனினம் அலைதாடியுடையதன்று: கோம்புடைமையால்: யாது யாது கொம்புடையது, அது அது அலைதாடியுடையதன்று; எருமைபோல' என விபரீதப்படுத்தல் காண்க.

இன்னும் இவைபோலுள்ளனவெல்லாம் நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்துகொள்க.

இவ்வேதுப்போலி தன்மவிசேடம் மாறுபாடடையப் பொய்க்கரியானமையால் தன்மச்சொரூபத்துணிபொருட்பேற்றினும் பிரமாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனால், தன் றுணிபொருள்விசேடத்தை யுள்ளவாறன்றி மாறுபாடாகத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்துணிபொருளின் பொதுமையினையும் துணிதல்கூடாதென்பது பெறப்பட்டது.

## ௩. தன்மிச்சோரூபவிபரீதசாதனம்.

தன்மிச்சோரூபவிபரீதசாதனமாவது: எடுத்துக்கொண்ட அநுமானத்துள் தன்மி (பக்கப்பொருள்) விபரீதமடையத் துணிதற்குரியபொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—'அஃறிணை ஒன்றன்பாலன்று: பலவின்பாலின்வேறுதலால்' என்பது.

இதனுள், அஃறிணை என்பது தன்மி. அதனது சொரூபம் ஒன்றன்பாலும் பலவின்பாலுமாகியிருத்தல் (அஃறிணையாதல்). அதனை 'ஒன்றன்பாலன்று' என்னும் பக்கவிசேடணத்துடன் கூடியுள்ள 'பலவின்பாலின் வேறுதல்' என்னும் ஏதுப்பொருள் பலர்பாலில் நின்று உயர்திணையாக்கி விபரீதப்படுத்தலால் இது தன்மிச்சொரூப விபரீதசாதனமாயிற்று.

இது தன்றன்மியை உயர்திணையாக்கி விபரீதப்படுத்துமாறு:— 'எடுத்துக்கொண்ட இத்தன்மி அஃறிணையன்று (உயர்திணை);

ஒன்றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேருதலால்; யாது யாது ஒன்றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேறு, அது அது அஃறிணையன்று (உயர்திணை). கொற்றன்போல' என அந்நுவயவியாத்தியுடையதாகியும், 'யாது யாது உயர்திணையன்று (அஃறிணை), அது அது ஒன்றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேருதல் இன்று (ஒன்றன்பாலேனும் பலவின்பாலேனு மாம்); வான் பிறையும் உடுக்களும்போல' என வெதிரேகவியாத்தியுடையதாகியும் வரும்.

மற்றும் இவ்வாறே 'மக்கள் ஆணல்லர், பெண்ணின் வேருதலால், அலிபோல' என்றற்ருெடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப் போலியாம்.

இது துணிபொருளுக்கிடனுகிய தன்மியை இல்லதாக்கிநிற்றலால், துணிபொருளுக்கு இடமில்லாமையால், துணிபொருளுணர்வையுண்டாக்காத ஏதுப்போலியாயிற்று.

இதனுல் ஒருதன்மியை மாறுபடத்துணிதற்குரியபொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மியிற் பிறிதொருபொருளையும் துணிதல்கூடாதென்பது பெறப்பட்டது.

## ச. தன்மிவிசேடவிபரீதசாதனம்.

தன்மிவிசேட விபரீதசாதனமாவது: எடுத்துக்கொண்ட துணிபொருளைத் துணிதற்குரியதாயினும், தன்றுணிபொருளின்பற்றுக்கோடாகிய தன்மியின் விசேடத்தை மாறுபாடாகத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கூறுவது.

**உதாரணம்:**— 'மக்கட்டொகுதி பிராமணரன்று; பிராமணத் தன்மையின்மையால்' என்பது.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருளாகிய பிராமணத்தன்மையின்மையானது பக்கசபக்கங்களில் நின்று மக்களைப் பிராமணரல்லரெனத் துணியப்புகுந்து மக்கள்விசேடமாகிய பிராமணர் முதலானுரையும் அவ்வவ்வருணத்தரல்லரெனச் சாதித்தலால் இது தன்மிவிசேடவிபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் துணியுமாறு:— 'மக்கட்டொகுதி பிராமணரன்று: பிராமணத்தன்மையின்மையால்: யாது யாது பிராமணத்தன்மையில்லது, அது அது பிராமணரன்று; விலங்குபோல' என அந்நுவயவியாத்தியும், 'யார்யார் பிராமணர், அவரவர் பிராமணத்தன்மையுடையர்: கௌசிகர்போல' என வெதிரேகவியாத்தியும் உடையதாகி மக்களைப் பிராமணரல்லரெனத் துணியும்; இவ்வாறு துணியவே மக்கள்விசேடமாகிய பிராமணரும் பிராமணரல்லரென்பது பெறப்படுவதுமன்றி, வைசியர் முதலாயினோரையும் தனித்தனி அவ்வவ் வருணத்தரல்லரெனத் துணிதற்குரியதாகின்றது.

அஃதாமாறு:— 'நான்காம்வருணத்தர் சூத்திரரல்லர்: பிராமணத்தன்மையின்மையால்; யார் யார் பிராமணத்தன்மையில்லாதவர், அவர் அவர் சூத்திரரல்லர்; க்ஷத்திரியர்போல' என வரும்.

மற்றும், இவ்வாறே 'பூதப்பொருள் பிருதிவியன்று; பிருவித்தன்மையின்மையால்; யாது யாது பிருதிவித்தன்மையில்லது, அது அது பிருதிவியன்று; அப்புப்போல' என்பதும், 'மிருகம் குதிரையன்று: குதிரைத்தன்மையின்மையால்: யாது யாது குதிரைத்தன்மையில்லது, அது அது குதிரையன்று; ஆடுபோல' என்பதும், இன்னும் இவைபோல் வருவனவும் இவ்வேதுப்போலியாம்.

சிறப்புப்பொருளிற் பொதுத்தன்மையுண்டு; பொதுப்பொருளிற் சிறப்புத்தன்மையில்லை என்பது தருக்கநூல்வழக்கு. இதனால் மக்களிடத்துப் பிராமணத்தன்மையில்லை; பிராமணரிடத்து மக்கட்டன்மை உண்டு என்பது கருத்து. மக்களெல்லாம் பிராமணரல்லர், பிராமணரெல்லாம் மக்களே என்னும் உலகவழக்கும் நோக்குக.

இவ்வேது, தன்மிவிசேடம் மாறுபாட்டையப் பொய்க்கரியானமையால், தன்மச்சொரூபத் துணிபொருட்பேற்றினும் பிரமாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனால் ஒரு தன்மிவிசேடத்தை யுள்ளவாறன்றி மாறுபடத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மிப்பொதுமையிற் பிறிதொருபொருளும் துணிதல்கூடாதென்பது பெறப்பட்டது.

இந் நால்வகை விருத்தங்களும் கூறியவாற்ருல் துணிபொருள் வடிவையேனும், துணிபொருள்விசேடத்தின் வடிவையேனும், பக்கப்பொருள்வடிவையேனும், பக்கப்பொருள்விசேடத்தின் வடிவையேனும் விபரீதப்படத் துணிதற்குரியதல்லாதபொருளை ஏதுவாகக் கூறவேண்டுமென்றதாயிற்று.

---

## பரீக்ஷைவினுக்கள்.

விருத்தம், தன்மம், தன்மி, சொரூபம், விசேடம், விபரீதம், சாதனம், சாத்தியம்: என்னுஞ் சொற்களுக்குப் பொருளை விளக்குக.

விருத்தவேது எவ்வாறு வரும்? அதன் வகை எத்தனை? அவை யெவை?

தன்மச்சொரூபவிபரீதசாதனம் என்பது ஏதுப்போலியாவதெங்ஙனம்? அதன் இலக்கணமென்னை?

புகையைச் சுட்டி 'இஃது ஆகாயம், நிறமுடைமையால்' என்பது தன்மச்சொரூபவிபரீதசாதனமாமாறு அதன் இலக்கணத்தோடு பொருத்திக்காட்டுக.

தன்மவிசேடவிபரீதசாதனத்தின் இலக்கணமென்னை? இஃ தேதுப்போலியாமா றெங்ஙனம்? இதனுற் பெறப்பட்டதென்னை?

'காற்று பூதப்பொருள், பரிசமுடைமையால்;' என்பதும், 'ஆனினம் மிருகம், கோம்புடைமையால்;' என்பதும் தன்மவிசேடவிபரீதசாதனமாமாறு விளக்குக.

தன்மிச்சொரூபவிபரீதசாதனம் எவ்வாறுவரும்? இஃ தேதுப்போலியாமாறெங்ஙனம்? இதனுற் பெறப்பட்டதென்னை? இவ்விருத்த ஏதுப்போலிக்கு ஓருதாரணந்தந்து அது அதன் இலக்கணத்தொடு பொருத்திக்காட்டுக.

'மக்கட்டொகுதிபிராமணரன்று, பிராமணத்தன்மையின்மையால்' என்பது விருத்த ஏதுப்போலிவகையுள் எதற்குதாரணமாகும்? அதன் இலக்கணமென்னை? அது போலியாமாறெங்ஙனம்? அதனுற் பெறப்பட்டதென்னை?

பின்வரும் இலக்கணம், விருத்தவேதுப்போலிவகையுள் எவ்வெப்பிரிவுக்குரியதாம்?

(1) எடுத்துக்கொண்ட துணிபொருளை விபரீதமாகத்துணிதற்குரிய பொருளை ஏதுவாகக் கூறுவது.

(2) எடுத்துக்கொண்ட துணிபொருளைத் துணிதற்குரியதாயினும், தன் றுணிபொருளின் பற்றுக்கோடாகிய தன்மியின்விசேடத்தை மாறுபடத்துணிதற்குரிய பொருளை ஏதுவாகக் கூறுவது.

(3) எடுத்துக்கொண்ட துணிபொருட்பொதுமையைப் பக்கத்திற் றுணிதற்குரியதாயினும், அத்துணிபொருள்விசேடத்தின் எதிர் மறைப்பொருளையும் அப்பக்கத்திற்றுணிதற்குரிய பொருளை ஏதுவாகக் கூறுவது.

விருத்தவேதுப்போலிவகையுணர்வாற் போந்த முடிபென்னை?

---

## ஏதுப்போலியுணர்வாலுண்டாம் பயன்.

இங்ஙனம் கூறிமுடித்த மூவகை ஏதுப்போலிகளுள் அசித்த வகையால், ஏதுப்பொருளும் அதற்குப் பக்கப்பொருள் பற்றுக் கோடாதலும் நல்லநுமானத்தில் உபயவாதிகளுக்கும் வெளிப்பட் டிருக்கவேண்டுமென்பது பெறப்பட்டது.

அநைகாந்திகத்தால், ஏதுப்பொருள் சபக்கத்தில் உள்ளதாகி யும் விபக்கங்களொன்றிலும் இல்லதாகியும் தன் றுணிபொருளின் இன்மையைத் துணிதற்குரிய பிறிதோரேதுவின் நிலைக்களமொன் றினுமில்லதாகியும் இருத்தல்வேண்டுமென்பது பெறப்பட்டது.

விருத்தத்தால், ஏதுப்பொருள் தன்றுணிபொருளின் பொதுச் சிறப்புக்களிலொன்றையாயினும் தன்மியின் பொதுச்சிறப்புக்களி லொன்றையாயினும் விபரீதமாகத்துணிதற் குரியதல்லதாயிருத் தல்வேண்டுமென்பது பெறப்பட்டது.

இவற்றால் இம்மூவகையிலக்கணங்களையுடைய பொருளை மூன்றனுருபுகொடுத்து நற்பக்கக்கூற்றையடுத்துக் கூறுவதே நல்லேதுவுறுப்பாமென்பது பெறப்பட்டது.

---

## பரீக்ஷவினுக்கள்.

மூவகை யேதுப்போலிகளுள் அசித்தவகையாற் பெறப்பட்டதென்னே?

அநைகாந்திகவகையாற் பெறப்பட்டதென்னே?

விருத்தவகையாற் பெறப்பட்டதென்னே?

நல்லேதுவுறுப்பு எவ்வாறு கூறப்படவேண்டும்?

---

# ஐவகையேதுப்போலி.

முன்புகூறிய ஏதுவிலக்கணநெறிபிறழ்ந்துகூறப்பட்ட அசித்தம் முதலிய ஏதுப்போலிகளெல்லாம் தருக்கநூலார்கூறும் ஐவகை ஏதுப்போலிகளுள் அடங்கும்.

அவ்வைவகையேதுப்போலிகளும் பெரும்பான்மை முற்கூறிய அசித்தமுதலிய மூவகையேதுப்போலிகளாகவும், சிறுபான்மை பக்கப்போலியை உறுப்பாயுடையனவாகவும், திட்டாந்தப்போலிக்கு உறுப்பாயுள்ளனவாகவும் வரும்.

அங்ஙனம் வருமாறு:—இனி அவற்றிற்குத் தனித்தனி எடுத்துக்காட்டும் உதாரணங்களைக்கொண்டு கண்டுகொள்க.

ஐவகையேதுப்போலிகளாவன:— (க) சவ்வியபிசாரம், (உ) விருத்தம், (ங) சற்பிரதிபக்ஷம், (ச) அசித்தம், (ரு) பாதிதம் என்பனவாம்.

இவற்றுள், சவ்வியபிசாரம் மூன்றுவகைப்படும். அசித்தம் மூன்றுவகைப்படும்: அவற்றுள் வியாப்பியத்தன்மையசித்தம் நான்கு வகைப்படும். ஏனையவை ஒவ்வொன்றே.

அவ்வைவகை ஏதுப்போலிகளின்பெயரும் வகையும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

## ஐவகை ஏதுப்போலிவரையறை.

| எண் | பிரிவு | உட்பிரிவு | பெயர் | பிரதிக்கினை | ஏது |
|---|---|---|---|---|---|
| க | சவ்வியபிசாரம். | | (1) சாதாரணம். | இம்மலை நெருப்புடையது, | அறியப்படுதலால்; |
| | | | (2) அசாதாரணம். | சத்தம் அழிவில்லது, | சத்தத்தன்மையுடைமையால்; |
| | | | (3) அநுபசங்காரி. | எல்லாப்பொருளும் அழியத்தகும், | அறியப்படுதலால்; |
| உ | | | விருத்தம். | சத்தம் அழிவில்லாதது, | காரியமாகையால்; |
| ங | | | சற்பிரதிபக்ஷம். | சத்தம் அழிவில்லது, | செவிப்புலனுதலால்; |
| ச | அசித்தம். | | (1) ஆச்சிரயாசித்தம். | ஆகாயத்தாமரை மணமுடையது, | தாமரைத்தன்மையுடைமையால்; |
| | | | (2) சொரூபாசித்தம். | சத்தம் குணம், | கட்புலனுதலால்; |
| | | (3) வியாப்பியத்தன்மையசித்தம். | (க) துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. | இம்மலை புகையுடையது, | நெருப்புடைமையால்; |
| | | | (உ) பக்கத்தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. | வாயு காட்சிப்பொருள், | காட்சிப்பரிசமுடைமையால்; |
| | | | (ங) ஏதுவால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. | அழிவுபாட்டபாவம் நாசமுடையது, | உண்டாகற்பாலதாதலால்; |
| | | | (ச) யாதாயினுமொரு தன்மையால் வரைந்து கொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. | முன்னின்மை நாசமில்லாதது, | உண்டாகற்பாலதன்றுகலால்; |
| ரு | | | பாதிதம். | நெருப்பு சூடில்லது, | திரவியமாதலால்; |

## க. சவ்வியபிசாரம்.

சவ்வியபிசாரவகை மூன்றனுள் 1 சாதாரணமும் 2 அசாதாரணமும் முன்னம் அநைகாந்திகவேதுப்போலியுட்கூறப்பட்டனவேயாம்.

### 3. அநுபசங்காரி.

அநுபசங்காரியாவது: அந்நுவயதிட்டாந்தமும் வெதிரேகதிட்டாந்தமும் இல்லாதது.

உதாரணம்:—'எல்லாப்பொருளும் அநித்தம்; அறியப்படுதலால்' என்பது.

இதன்கண் உலகிலுள்ள பொருள்களெல்லாம், ஐயுற்றுத் துணியும்பொருளுக்கிடமாகிய பக்கமாகக்கூறப்பட்டமையால், அவ்வெல்லாப்பொருளினும் வேறான துணிந்தபொருளுக்கிடமாகிய திட்டாந்தப்பொருள் கூறிமுடித்தற் கிடமின்மையால், இஃது அநுபசங்காரியாயிற்று.

உபசங்காரம்-முடிவுபேறு. அநுபசங்காரம்-முடிவுபெறாமை; அதனையுடையது அநுபசங்காரியெனப்பட்டது.

இவ்வேதுப்போலி, பின்புகூறப்படும் அசன்னுவுள்ள வுபயதன்மவிகலம், இன்மையினுபயாவ்வியாவிருத்தி யென்னும் திட்டாந்தப்போலிகளுக்கு உறுப்பாயிருக்கும்.

## உ. விருத்தம்.

விருத்தமாவது: துணிபொருளுள்ளவிடங்களொன்றினு மில்லதாகித் துணிபொருளில்லாதவிடங்களில் இருப்பது.

உதாரணம்:—'சத்தம்அழிவில்லாதது, காரியமாகையால்' என்பது.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருளாகிய காரியப்பாடு அழிவில்பொருளொன்றினுமின்றி அழிவுடைப்பொருள்களில் வியாபித்திருத்தல் கண்டுகொள்க.

இது, முன்புகூறப்பட்ட விருத்தவேதுப்போலியுள், தன்மச்சொருப விபரீதசாதனமெனப் பெயர்பெற்றுள்ளது.

### ௩. சற்பிரதிபக்ஷம்.

சற்பிரதிபக்ஷமாவது: துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்த பொருளைச் சாதிக்கும் பிறிதோ ரேதுவையுடைய ஏதுவாம்.

உதாரணம்:—'சத்தம் நித்தியம், செவிக்குப்புலனாகலின்:' என்பது.

இது, 'யாது யாது செவிக்குப்புலனாவது, அது அது நித்தியம்; சத்தத்தன்மைபோல' எனச் சத்தத்தை நித்தமெனத் துணிதற்கேதுவாம்.

இதனுள், துணிபொருள்: சத்தம் நித்தியமாதல். அதற்கு மறுதலையாகிய துணிந்தபொருள்: சத்தம் அநித்தியமாதல். அதனைச் சாதிக்கும் வேறோரேது: சத்தம் காரியமாதல். அதனைச் செவிப்புலனாதலென்னும் ஏது, தன் நிலைக்களமாகிய சத்தத்தின் கண்ணுடைத்தாயிருத்தலால் சற்பிரதிபக்ஷமாயிற்று.

காரியமாதல் சத்தத்தின்கண் அநித்தியஞ்சாதிக்குமாறு:—'சத்தம் அநித்தியம்; காரியமாதலால், யாது யாது காரியம், அது அது அநித்தியம்; குடம்போல' என அந்நுவயமும், 'யாது யாது அநித்தியமன்று (நித்தியம்), அது அது காரியமன்று; ஆன்மாப்போல' என வெதிரேகமும் உடையதாகி வரும்.

இவ்வேதுப்போலி முன்புகூறப்பட்ட அநைகாந்திகவகையுள் விருத்தவியபிசாரி எனப் பெயர்பெற்றிருக்கிறது.

### ௪. அசித்தம்.

#### 1. ஆச்சிரயாசித்தம்.

இது, முன்புகாட்டப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுட் கூறப்பட்டதேயாம்.

#### 2. சொரூபாசித்தம்.

இது, முற்கூறப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுள் உபயாசித்தம், அந்நியதராசித்தம், சித்தாசித்தம் என மூன்றுவகையாகப் பிரித்துரைக்கப்பட்டிருக்கிறது:

## 3. வியாப்பியத்தன்மையசித்தம்.

இது, சோபாதிகமெனப்படும். சோபாதிகமாவது: உபாதியுடன் கூடிய ஏது. உபாதி நான்குவகைப்படும். அவையாவன:—

(க) துணிபொருளுள்ளவிடங்களிற் றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தல்.

(உ) பக்கத்தன்மையால்வரைந்துகொள்ளப்பட்டதுணிபொருளுள்ள இடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தல்.

(ங) ஏதுவால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள விடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தல்.

(ச) யாதாயினுமொருதன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள இடங்களிற் றப்பாதிருப்பதொன்றைப்பிரிந்துமிருத்தல்.

என்பனவாம்.

இந்நால்வகையுபாதிகளுள் ஏதேனு மொன்றையுடைய ஏது, சோபாதிகம் (வியாப்பியத்தன்மைச்சித்தம்) என்னும் ஏதுப்போலியாம்.

இந்நால்வகையான சோபாதிக ஏதுப்போலிகளுக்கும் முறையே உதாரணம் வருமாறு.

முதலாவதற்கு உதாரணம்:—'இம்மலை புகையுடையது, நெருப்புடைமையால்' என்பது.

இதனுட்கூறப்படும் துணிபொருள் புகையுடைமை. அஃதுள்ளவிடங்களிற் றப்பாதிருப்பதொன்று, நெருப்புக்குண்டாகிய ஈரவிறகின்கூட்டம்; அதனைப்பிரிந்தும், ஏதுப்பொருளாகிய நெருப்

புடைமை பழுக்கக்காய்ச்சிய இரும்பில் இருத்தலால் இது, துணி பொருளுள்ளவிடத்துத் தப்பாதிருப்பதோன்றைப் பிரிந்துமிருப்பதேன் னும் சோபாதிகமாயிற்று.

இது, முன்கூறப்பட்ட அநைகாந்திகவகையில் விபக்கைகதேச விருத்திசபக்கவியாபியாயுள்ளது.

இரண்டாவதற்கு உதாரணம்:—'வாயு காட்சிப்பொருள்; காட்சிப் பரிசமுடைமையால்' என்பது.

இதனுட் பக்கப்பொருள் வாயு; அதன்றன்மை புறப்பொரு ளாதல்; அதனுல் வரைந்துகொள்ளப்படும் துணிபொருள் புறக்காட் சிப்பொருள் (பிருதிவி, அப்பு, தேயுக்கள்). அவற்றுள், தப்பா திருப்பது உற்பூதவுருவம் அதனைப் பிரிந்தும், காட்சிப்பரிசமாகிய ஏதுப்பொருள் வாயுவின்கண் இருத்தலால், இது பக்கத்தன்மை யால் வரைந்துகோள்ளப்படும் துணிபொருளுள்ளவிடங்களில் தப்பா திருப்பதோன்றைப் பிரிந்துமிருப்பதாகிய சோபாதிகமாயிற்று:

இது, முற்கூறப்பட்ட தன்மவிசேடவிபரீதசாதனமாயுள்ளது.

மூன்ருவதற்கு உதாரணம்:—'அழிவுபாட்டபாவம் நாசமுடை யது, உண்டாகற்பாலதாதலான்' என்பது.

இதனுள், ஏதுப்பொருள் உண்டாகற்பாலதாதல். அதனுல் வரைந்துகொள்ளப்படும் துணிபொருள்: உண்டாகற்பாலதாகி நாச மடைதல். அஃதுள்ள இடங்களில் (உண்டாகி நாசமடைவனவற் றுள்) தப்பாதிருப்பதொன்று [1]பாவப்பொருளாதல். அதனைப் பிரிந்தும் இவ்வேதுப்பொருள் அழிவுபாட்டபாவத்திலிருத்தலால் இஃது, ஏதுவால் வரைந்துகோள்ளப்பட்ட துணிபொருளுள்ளவிடங்க ளில் தப்பாதிருப்பதோன்றைப் பிரிந்துமிருப்பதேன்னும் சோபாதிக மாயிற்று.

இது, முற்கூறப்பட்ட தன்மிச்சொரூபவிபரீதசாதனமாயுள் ளது.

---

[1] பாவப்பொருளாதல்—உள்ளபொருளாயிருத்தல்.

நான்காவதற்கு உதாரணம்:—'முன்னின்மை (பிராகபாவம்) நாச மில்லாதது; உண்டாகற்பாலதன்றாகலான்' என்பது.

இதற்கு, யாதானுமொருதன்மை நித்தியத்தன்மை; அதனல் வரைந்துகொள்ளப்பட்டதுணிபொருள் ஆகாய முதலிய நித்தியப் பொருள்களிலுள்ள நாசமின்மை; அஃதுள்ள இடங்களில் (நாச முள்ளபொருள்களில்) தப்பாதிருப்பது பாவத்தன்மை (உள்ள பொருளாதல்); அதனைவிட்டுப் பிரிந்தும் முன்னின்மையிலிருப்பது உண்டாகற்பாலதன்றாந்தன்மையாகிய இவ்வேதுப்பொருளாதலால் இது, யாதாயினு மொருதன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணி பொருளுள்ள இடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருப்ப தென்னும் சோபாதிகமாயிற்று.

இது, முற்கூறப்பட்ட தன்மிவிசேடவிபரீதசாதனமாயுள்ளது.

## ரு. பாதிதம்.

பாதிதமாவது: ஒருதன்மியில் தன்றுணிபொருளின் மறுதலைப் பொருளைப் பிறிதோரளவையாற்றுணிதற்கும் இடங்கொடுத்திருப் பது.

உதாரணம்:—'நெருப்பு சூடில்லது; திரவியமாதலால்' என்பது.

இதனுள், திரவியமாதல் ஏது. அதன் றுணிபொருள் சூடின்மை. அதன் எதிர்மறைப்பொருள் சூடு. அதனை ஒரு தன்மியாகிய நெருப்பில் நெருப்புச் சூடுள்ளதெனத் துவக்கிந்திரியக் காட்சியளவையாற் றுணிதற் கிடங்கொடுத்துநிற்றலால் இவ்வேது பாதிதமாயிற்று.

இவ்வேதுப்போலி, முன் கூறப்பட்டபிரத்தியக்கவிருத்தம், ஆகம விருத்தம் என்னும் பக்கப்போலிகளை உறுப்பாக உடையது.

---

## பரீக்ஷவினுக்கள்.

தருக்கநூலார்கூறும் ஏதுப்போலிகள் எத்தனை? அவை எவை? அவை சிறுபான்மை எதனை உறுப்பாகக்கொண்டுவரும்? எதற்கு உறுப்பாயிருக்கும்?

ஐவகையேதுப்போலிகளுள், சவ்வியபிசாரம் எத்தனைவகைப்படும்? அவை எவை? சாதாரணம் அசாதாரணம் என்பவை எவ்வாறு வரும்? உதாரணம் தந்து விளக்குக.

அநுபசங்காரி என்பதன் பொருள் யாது? அஃதெவ்வாறு வரும்? இவ்வேதுப்போலி எவ்வெவற்றுக்கு உறுப்பாயிருக்கும்?

'எல்லாப்பொருளும் அநித்தம், அறியத்தகுவதாதலால்' என்பது அநுபசங்காரியாமாறு விளக்குக.

விருத்தம் எவ்வாறு வரும்? இது, முற்கூறிய ஏதுப்போலிவகையுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது? உதாரணம் யாது?

சற்பிரதிபக்ஷம் என்பதன் பொருள் என்னை? அதன் இலக்கணம் யாது? அது, முற்கூறிய ஏதுப்போலிவகையுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது.

'சத்தம் நித்தியம், செவிக்குப்புலனுகலின்' என்பது சற்பிரதிபக்ஷமாமாறு விளக்குக.

அசித்தம் எத்தனைவகைப்படும்? அவை எவை?

சொருபாசித்தம், முற்கூறிய அசித்தவேதுப்போலியுள் எத்தனை வகையாகப் பகுக்கப்பட்டது? அவற்றின் பெயரென்னை?

சோபாதிகம் என்பதன் பொருள் யாது? இவ்வேதுப்போலிக்குரிய மற்றொருபெயரென்னை?

உபாதி எத்தனைவகைப்படும்? அவை யாவை?

உபாதிவகையுள் முதலதற்கு உதாரணம் யாது? அதனுள் ஏது சோபாதிகமாமாறென்னை? இம்முதற்பிரிவு மூவகையேதுப்போலிகளுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது?

'வாயு காட்சிப்பொருள், காட்சிப்பரிசமுடைமையால்' என்பது உபாதி வகையுள் எப்பிரிவிற்கு உதாரணமாகும்? இதனுள் எது சோபாதிகமாவ தெங்ஙனம்? இப்பிரிவு மூவகையேதுப்போலிகளுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது?

உபாதிவகையுள் மூன்றுவதன் இலக்கணமென்னை? அதற்கு உதாரணம் யாது? அதனுள் எது சோபாதிகமாவ தெப்படி? இம் மூன்றும் உபாதி மூவகையேதுப்போலிகளுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது?

'முன்னின்மை (-பிராகபாவம்) நாசமில்லாதது, உண்டாகற்பாலதன்றாகலால்' என்பது உபாதிவகையுள் எப்பிரிவிற்கு உதாரணமாகும்? இதனுள் எது சோபாதிகமாவ தெங்ஙனம்? உபாதிவகையின் இப்பிரிவு மூவகையேதுப்போலிகளுள் எதன் உட்பிரிவாய் என்ன பெயர்பெற்றுள்ளது?

பாதிதம் என்பதன் பொருளென்னை? இவ்வேதுப்போலியின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து பொருத்திக்காட்டுக. இது, பக்கப்போலிவகையுள் எவ்வெவற்றை உறுப்பாகவுடையது?

---

# திட்டாந்தப்போலி.

இனித் திட்டாந்தப்போலி, சாதன்மியதிட்டாந்தப்போலியும் வைதன்மியதிட்டாந்தப்போலியும் என இருவகைப்படும்.

## க. சாதன்மியதிட்டாந்தப்போலி.

சாதன்மியதிட்டாந்தப்போலி, சாதனதன்மவிகலம் முதலிய ஐவகையாம். அவற்றின் பெயரும் உதாரணங்களும் பின்வரும் வரையறையுட் காண்க.

## சாதன்மியதிட்டாந்தப்போலி வரையறை.

| எண். | பெயர். | பக்கம். | ஏது. | திட்டாந்தம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|
| க | சாதனதன்ம விகலம். | காற்று பரிமாண முடையது, | திரவியமாதலால்; | யாது யாது திரவியம், அது அது பரிமாணமுடையது; நெருப்புப்போல: | ஆங்கிலப்பௌதிக நூலுடையாரை நோக்கியகூற்று. |
| உ | சாத்தியதன்ம விகலம். | புகை திரவியம், | இயக்கமுடைமை யால்; | யாது யாது இயக்கமுடையது, அது அது திரவியம்; நெருப்புப்போல: | ஷ |
| ங | உபயதன்ம விகலம். சந்நு. | புகை திட்ப முடையது, | உருவமுடைமை யால்; | யாது யாது உருவமுடையது, அது அது திட்பமுடையது; காற்றுப்போல: | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| | உபயதன்ம விகலம். அசந்நு. | காலம் திரவியம், | பரிமாணமுடைமை யால்: | யாதுயாது பரிமாணமுடையைது, அது அது திரவியம்; ஆகாயம்போல: | ஆங்கிலப்பௌதிக நூலுடையாரை நோக்கியகூற்று. |
| ச | அநந்நுவயம். | இம்மலை நெருப் புடையது, | புகையுடைமை யால்; | பாகசாலைபோல: | பொதுக்கூற்று. |
| ரு | விபரீதாந்நுவயம். | இம்மலை நெருப் புடையது; | புகையுடைமை யால்; | யாது யாது நெருப்புடையது, அது அது புகையுடையது; பாகசாலைபோல: | ஷ |

## க. சாதனதன்மவிகலம்.

**சாதனதன்மவிகலமாவது:**—சாதனதன்மம் தன்கண்ணுள்ளதாக வெளிப்படையில்லாதபொருளைத் திட்டாந்தமாகக் கூறுவது.

**உதாரணம்:**—ஆங்கிலப் பௌதிகநூலுடையாரை நோக்கி, 'காற்று பரிமாணமுடையது, திரவியமாதலால்; யாது யாது திரவியம், அது அது பரிமாணமுடையது: நெருப்புப்போல' என்பது.

இதனுள், சாதனதன்மம் திரவியமாதல் (முதற்பொருளாதல்). அஃது ஆங்கிலப் பௌதிகநூலுடையார்க்கு நெருப்பின்கண் வெளிப்படையின்மையால் (அவர் நெருப்பைத் திரவியமென்று கொள்ளாமையால்) அவரைநோக்கி நெருப்பைத் திரவியமெனக் கொண்டு திட்டாந்தமாகக்கூறுமிடத்து அது சாதனதன்மவிகலம்.

மற்று மிவ்வாறுகூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியே.

சாதனம்—ஏதுப்பொருள்; அது பக்கப்பொருளைப்பற்றித் தன்மமாய்நிற்றலால், அவ்வேதுப்பொருளே இங்குச் சாதனதன்மமென வழங்கப்பட்டது. சாதனமாகிய தன்மம் என விரியும். தன்மம் - தன்மை.

'இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால்' என்பதிலும் புகையுடைமையாகிய ஏதுப்பொருள் புகையுடையதெனப்படும் மலையாகிய பக்கப்பொருளின்றன்மையாயமைதல் கண்டுகொள்க.

இவ்வாறே பின்வரும் சாத்தியதன்மமென்பதற்கும் பொருள் உரைத்துக்கொள்க.

விகலம்-உறுப்பற்றது (குறைவுடையதென்றபடி). சாதனதன்மத்தாற்குறைவுடையது சாதனதன்மவிகலமெனப்பெயர்பெற்றது.

பின்வரும் சாத்தியதன்மவிகலம் என்பதற்கும், உபயதன்மவிகலம் என்பதற்கும் இவ்வாறே பொருளுரைத்துக்கொள்க.

சாத்திய சாதனங்க ளிரண்டும் திட்டாந்தப்பொருளுக்குறுப்பாகியமைதலால், அவ்வவ்வுறுப்பில்லாத திட்டாந்தப்பொருள்கள் அவ்வவ்வுறுப்பாற்குறைவுடையவாகிச் சாதனதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், உபயதன்மவிகலம் எனப் பெயர்பெற்றனவாதலின், அவ்வப்பொருளை வழங்கும் கூற்றுகிய திட்டாந்தவுறுப்பும் சொற்பொருளொற்றுமைபற்றி அவ்வப்பெயரால் வழங்கப்படும்.

## உ. சாத்தியதன்மவிகலம்.

சாத்தியதன்மவிகலமாவது: சாத்தியதன்மம் தன்கணுள்ளதாகக் கொள்ளப்படாதபொருளை அந்நுவயதிட்டாந்தமாகக்கூறுவதாம்.

உதாரணம்:—ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரைநோக்கி, 'புகை திரவியம், இயக்கமுடைமையால்; யாது யாது இயக்கமுடையது, அது அது திரவியம்; நெருப்புப்போல' என்பது.

இதனுள், சாத்தியதன்மம் திரவியமாதல். அஃது ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரால் நெருப்பின்கண் உள்ளதாகக் கொள்ளப் படாமையால் இக்கூற்று அவருக்குச் சாத்தியதன்மவிகலமாம்.

இவ்வாறு சாத்தியப்பொருள் குறையக்கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

சாத்தியம் - துணிபொருள். அது பக்கப்பொருளுக்குத் தன்மமாய்நிற்றலாற் சாத்தியதன்மம் எனப்பட்டது. சாத்திய மாகிய தன்மமென விரியும். தன்மம் - விசேடணம். எடுத்துக் காட்டிய 'புகை திரவியம்' என்னும் பக்கவுறுப்பில் பக்கப்பொருள் புகை. துணிபொருள் திரவியமாதல். அதனை விசேடணமாக வுடையது (புகைதிரவியமாதலையுடையது) என்பதற்கீடாகப் புகை திரவியமெனப் பக்கவுறுப்புக் கூறப்பட்டது.

இவ்வாறே 'மலை நெருப்புடையது' என்பதனுள், பக்கப்பொருள் மலை; துணிபொருள் நெருப்பு; அல்லது நெருப்புடைமை. அது வும் முன்போலப் பக்கப்பொருளை விசேடித்துநின்றது.

புகையும் புகையுடைமையும் ஒன்றாதல்போல நெருப்பும் நெருப்புடைமையும் ஒன்றாகும்.

## ௩. உபயதன்மவிகலம்.

உபயதன்மவிகலமாவது: சாதன சாத்தியங்களிரண்டும் உள்ள தாகக் கொள்ளப்படாதபொருளை அந்நுவயதிட்டாந்தமாகக் கூறு வது. அது, சந்நு அசந்நு என இருவகைப்படும்.

### (1) சந்நு.

சந்நாவுள்ள உபயதன்மவிகலமாவது: திட்டாந்தப்பொருள் உள்ளதாக அதன்கண் சாதன சாத்தியங்கள் இல்லனவாயிருக்கச் செய்தே அதனைத் திட்டாந்தமாகக் கூறுவது.

உதாரணம்:—நையாயிகரைநோக்கி, 'புகை திட்பமுடையது, உருவமுடைமையால்; யாது யாது உருவமுடையது, அது அது திட்பமுடையது; காற்றுப்போல' என்பது.

இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் காற்று. அது நையாயிகரால் உள்ளதாகக்கொள்ளப்படுவது. எடுத்துக்கொண்ட சாதனசாத்தியங்களாகிய உருவமுடைமையும் திட்பமுடைமையும் அவரால் அக்காற்றின்கண் உள்ளனவாகக்கொள்ளப்படாமையால் அவர்க்கு அக்காற்றின்கண் அவை யில்லனவாதலின் இஃது அவர்க்குச் சந்நாவுள்ள வுபயதன்மவிகலமாயிற்று.

காற்றின்கண் உள்ளதாக ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாராற் கொள்ளப்பட்ட திட்பமுடைமையை, நையாயிகர் படைப்புக்காலத்திற் காற்றின்கண் கடவுளால் பஞ்சீகரணத்தாற் கூட்டப்பட்டதும் அணுவாகிக்கலப்புற்றதுமாகிய பிருதிவி யப்புக்களின் கூறதாகக் கொள்ளுவதன்றிக் காற்றின்கண் திட்பமுடைமையுள்ளதாகக் கொள்ளார்.

(2) அசந்நு.

அசந்நாவுள்ளவுபயதன்மவிகலமாவது: உள்ளதாகக்கொள்ளப் படாதபொருளைத் திட்டாந்தமாகக்கூறுவது.

உதாரணம்:—ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரைநோக்கி, 'காலம் திரவியம்; பரிமாணமுடைமையால்; யாது யாது பரிமாணமுடையது, அது அது திரவியம்; ஆகாயம்போல' என்பது.

இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் ஆகாயம். அஃது அவரால் ஒருபொருளெனக் கொள்ளப்படாமையால், அஃது அவருக்கு இல்லதாயிற்று. ஆகவே, அதன்கணுள்ளதாகக்கூறப்பட்ட சாதன சாத்தியங்களாகிய பரிமாணமுடைமையும் திரவியமாதலும் அவர்க்குப் பிறிதோரிடத்து வெளிப்பட்டுள்ளனவாயினும், எடுத்துக்கொண்ட திட்டாந்தப்பொருளில் வெளிப்படாமையால் இஃது அவருக்கு அசந்நாவுள்ள வுபயதன்மவிகலமாயிற்று.

சந்நு-உள்ளது. அசந்நு-இல்லது.

மற்றும், இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யென அறிக.

சாதனதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், சந்நு, அசந்நு: என்னும் நான்கும் வியாத்தியுணர்வையுண்டாக்கும்வலியின்றி அநுமிதியுணர்வைப்பயவாது திட்டாந்தப்போலியாயின.

ச. அநந்நுவயம்.

அநந்நுவயமாவது: ஏது சாத்தியங்களின் றொடர்பையுணர்த்தும் அந்நுவயவியாத்திவசனமின்றித் திட்டாந்தவுறுப்புக் கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால்; ......................................................பாகசாலைபோல' என்பது.

இதனுள், 'யாது யாது புகையுடையது, அது அது நெருப்புடையது' என்னும் அந்நுவயவியாத்திவசனம் கூறப்படாமையால் இஃது அநந்நுவயமாயிற்று.

மற்றும், இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

ஏதுப்பொருளுடையனவெல்லாம் துணிபொருளையுமுடையனவென்னும் வியாத்தியுணர்வு எளிதிற்றோன்றாமையால் அநுமிதியுணர்வுக்குத்தடையாய் இது திட்டாந்தப்போலியாயிற்று.

ரு. விபரீதாந்நுவயம்.

விபரீதாந்நுவயமாவது: திட்டாந்தவுறுப்பாகிய அந்நுவயவாக்கியத்தை முறைபிறழக் கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையது; புகையுடைமையால்; யாது யாது நெருப்புடையது அது அது புகையுடையது; பாகசாலைபோல' என்பது.

இதனுள் 'யாது யாது புகையுடையது, அது அது நெருப்புடையது' எனக் கூறக்கடவதாயுள்ள அந்நுவயவாக்கியத்தை, 'யாது யாது நெருப்புடையது, அது அது புகையுடையது' என விபரீதமாகக் கூறுதலால் இது விபரீதாந்நுவயமாயிற்று. [விபரீதம்-மாறுபாடு.]

மற்றும், இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

இங்ஙனம் அந்நுவயத்தை விபரீதமாகக்கூறுதலால் ஏதுவின் வியாபகம் துணிபொருள் என்னும் வியாத்தியுணர்வு தோன்ருது அநுமிதிக்குத்தடையாதலால் இது திட்டாந்தப்போலியாயிற்று.

இங்ஙனங்கூறியவாற்ருற் சாதன்மியதிட்டாந்தப்பொருள் எதிரிக்கு வெளிப்பட்டிருக்கவேண்டுமென்பதூஉம், அதன்கண் சாதந சாத்தியங்க ளிரண்டும் பிரசித்தமாயிருக்கவேண்டுமென்பதூஉம், அந்நுவயவியாத்திவசனம் முறைபிறழாமற் சொல்லப்படவேண்டு மென்பதூஉம் சாதன்மியதிட்டாந்தவுறுப்பிற் கிலக்கணமாம் என்பது பெறப்பட்டது.

---

## பரீக்ஷைவினுக்கள்.

திட்டாந்தப்போலி எத்தனைவகைப்படும்? அவை யெவை?

சாதன்மியதிட்டாந்தப்போலி எத்தனைவகைப்படும்? அவை எவை?

சாதன்மியம், வைதன்மியம், விகலம், சந்து, அசந்து, அந்நுவயம், அநந்நுவயம், வியாப்தி, அநுமிதி என்பவற்றின் பொருள் என்னே?

திட்டாந்தப்பொருள்களுக்கு உறுப்பாயமைவன எவை? அவ்வுறுப்பில்லாத திட்டாந்தப்பொருள்கள் எவ்வெப்பெயர்பெறும்? அப்பெயர்கள் திட்டாந்தவுறுப்பினே யுணர்த்துவ தெப்படி?

சாதனதன்மவிகலம் எவ்வாறு வரும்? அதற்கு உதாரணம் யாது? அது திட்டாந்தப்போலியாவ தெப்படி?

சாத்தியதன்மவிகலம் எவ்வாறு வரும்?

ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரைநோக்கி, 'புகை திரவியம், இயக்கமுடைமையால்; யாது யாது இயக்கமுடையது, அது அது திரவியம்; நெருப்புப்போல' என்பது சாத்தியதன்மவிகலமாமாறு விளக்குக.

உபயதன்மவிகலம் என்பதன் பொருளென்னே? அஃதெவ்வாறுவரும்? எத்தனேவகைப்படும்? அவை யாவை?

'திட்டாந்தப்பொருள் உள்ளதாக அதன்கண் சாதனசாத்தியங்கள் இல்லனவாயிருக்கச்செய்தே அதனைத் திட்டாந்தமாகக் கூறுவது'—இவ்விலக்கணம் திட்டாந்தப்போலிவகையுள் எதற்குரியது? அதற்கு உதாரணம் யாது?

நெருப்பும் ஆகாயமும் திரவியமில்லை யென்றுரைப்பவர் யார்? இருள் திரவியமன்றென்பவர் யாவர்?

ஆங்கிலப் பௌதிகநூல்வல்லார்கொள்கையொடு மாறுபட்டுக் காற்றின்கண் திட்பமுடைமை யின்றென்பா ரார்? அதற்கு அவர்கூறும் காரணம் என்னை?

அசந்நாவுள்ள உபயதன்மவிகலம் எவ்வாறு வரும்?

ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரைநோக்கிக் 'காலம் திரவியம், பரிமாணமுடைமையால்; யாது யாது பரிமாணமுடையது, அது அது திரவியம்; ஆகர்யம்போல' என்பதும், நையாயிகரைநோக்கி, 'புகை திட்பமுடையது, உருவமுடைமையால்; யாது யாது உருவமுடையது; அது அது திட்பமுடையது; காற்றுப்போல' என்பதும் திட்டாந்தப்போலிவகையுள் எவ்வெப்போலிக்கு உதாரணமாகும்?

சாதனதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், சந்நு, அசந்நு: என்னும் நான்கும் திட்டாந்தப்போலியாவதெங்ஙனம்?

எது சாத்தியங்களின் தொடர்பையுணர்த்தும் அந்நுவயவியாத்திவசனமின்றிக் கூறப்படும் திட்டாந்தப்போலியின்பெயர் யாது? அதற்கு உதாரணம் யாது? அது திட்டாந்தப்போலியாவ தெப்படி?

விபரீதாந்நுவயம் எவ்வாறு வரும்? அது திட்டாந்தப்போலியாமாறென்னை?

'இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால்; யாது யாது நெருப்புடையது, அது அது புகையுடையது; பாகசாலைபோல' என்பது திட்டாந்தப்போலிவகையுள் எதற்கு உதாரணமாகும்? காரணங் காட்டி விளக்குக.

திட்டாந்தவுறுப்பாகிய அந்நுவயவாக்கியத்தை விபரீதமாகக் கூறினல் வரும் இழுக்கென்னை?

---

## உ. வைதன்மியதிட்டாந்தப்போலி.

இனி, வைதன்மியதிட்டாந்தப்போலியும் ஐவகையாம். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

## வைதன்மியதிட்டாந்தப்போலி வரையறை.

| எண் | பெயர். | | பக்ஷம். | ஏது. | திட்டாந்தம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| க | சாத்தியாவ்வியாவிருத்தி. | | காற்று திரவியம், | பரிசமுடைமையால்; | யாது யாது திரவியமன்று, அது அது பரிசமுடையதன்று; காலம்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| உ | சாதநாவ்வியாவிருத்தி. | | தண்ணீர் ஒளியில்லது, | நிறமின்மையால்; | யாது யாது ஒளியுள்ளது, அது அது நிறமுள்ளது; நெருப்புப்போல. | ஆங்கிலப்பௌதிக நூல்வல்லாரை நோக்கிய கூற்று. |
| ந | உபயாவ்வியாவிருத்தி. | உண்மையினுபயாவ்வியாவிருத்தி. | நெருப்பு உருவமில்லது, | சுவையில்லாமையால்; | யாது யாது உருவமுள்ளது, அது அது சுவையுள்ளது; தண்ணீர்போல. | ஷை |
| | | இன்மையினுபயாவ்வியாவிருத்தி. | காற்று உருவமில்லது, | வடிவமில்லாததலால்; | யாது யாது உருவமுள்ளது, அது அது வடிவமுள்ளது; இருள்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| ச | அவ்வெதிரேகம். | | இம்மலை நெருப்புடையது, | புகையுடைமையால்; | ஆற்றுவெள்ளம்போல. | பொதுக்கூற்று. |
| ரு | விபரீதவெதிரேகம். | | இம்மலை நெருப்புடையது, | புகையுடைமையால்; | யாது யாது புகையில்லாதது, அது அது நெருப்பில்லாதது; ஆற்றுவெள்ளம்போல. | ஷை |

## க. சாத்தியாவ்வியாவிருத்தி.

சாத்தியாவ்வியாவிருத்தியாவது: சாத்தியாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாததொன்றை (சாத்தியப்பொருளுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதை) வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது.

உதாரணம்:—நையாயிகரைநோக்கி, 'காற்று திரவியம், பரிசமுடைமையால்; யாது யாது திரவியமன்று, அது அது பரிசமுடையதன்று; காலம்போல' என்பது.

இங்கு எடுத்துக்கொண்ட சாத்தியப்பொருள் திரவியமாதல்; அதனது அபாவம் திரவியமின்மை; அதற்கிடமாகப் பிரசித்தமில்லாதது (திரவியமாகப்பிரசித்தமாவது) நையாயிகருக்குக் காலப்பொருளாதலால் அவருக்கு இது சாத்தியாவ்வியாவிருத்தியாயிற்று.

மற்றும், இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

வியாவிருத்தி-வேறுபாடு. அவ்வியாவிருத்தி-வேறுபாடின்மை (ஒற்றுமையுடைமை).

வேற்றுமையுடையதாயிருக்கவேண்டிய வெதிரேகதிட்டாந்தப் பொருள் சாத்தியத்தால் ஒற்றுமையுடையதாயிருத்தலால் இது சாத்தியாவ்வியாவிருத்தி யெனப்பட்டது.

## உ. சாதநாவ்வியாவிருத்தி.

சாதநாவ்வியாவிருத்தியாவது: சாதநாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாததொன்றை (சாதநப்பொருளுக்கு நிலைக்களமாகியிருப்பதை) வெதிரேகதிட்டாந்தமாகக்கூறுவது.

உதாரணம்:—ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரை நோக்கி, 'தண்ணீர் ஒளியில்லது; நிறமின்மையால்; யாது யாது ஒளியுள்ளது, அது அது நிறமுள்ளது; நெருப்புப்போல' என்பது.

இதனுட் கூறப்பட்ட சாதநப்பொருள் நிறமின்மை; அதன் அபாவம் நிறமுடைமை; அதற்கிடமாக அவர்க்குப் பிரசித்தமில்

லாதது (நிறமுடையதாகக் கொள்ளப்படாதது) நெருப்பு; அதனை அவர்க்கு வெதிரேக திட்டாந்தமாகக்கூறுதலால் இது சாதநாவ்வியாவிருத்தியாயிற்று.

மற்றும், இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாகும்.

## ௩. உபயாவ்வியாவிருத்தி.

உபயாவ்வியாவிருத்தியாவது: சாத்திய சாதநங்களின் அபாவத்துக்கு நிலைக்களமாகாததொன்றை, (சாத்திய சாதநங்களினிலைக்களமாயிருப்பதை) வெதிரேகதிட்டாந்தமாகக்கூறுவது.

அஃது (1) உண்மையினுபயாவ்வியாவிருத்தி (2) இன்மையினுபயாவ்வியாவிருத்தி யென இருவகைப்படும்.

### (1) உண்மையினுபயாவ்வியாவிருத்தி.

உண்மையினுபயாவ்வியாவிருத்தியாவது: சாத்திய சாதநங்களுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதொன்றை வெதிரேக திட்டாந்தமாகக் கூறுவது.

உதாரணம்:—ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரைநோக்கி, 'நெருப்பு உருவமில்லது, சுவையின்மையால்; யாது யாது உருவமுள்ளது, அது அது சுவையுள்ளது; தண்ணீர்போல' என்பது.

இங்கு எடுத்துக்கொண்ட சாத்திய சாதநங்கள் முறையே உருவமின்மையும், சுவையின்மையும்; இவ்விரண்டும், ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாருக்குப் பிரசித்தமாயுள்ள தண்ணீரின்கண் இன்மையால் இஃது அவருக்கு உண்மையினுபயாவ்வியாவிருத்தியாயிற்று.

மற்றும், இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

### (2) இன்மையினுபயாவ்வியாவிருத்தி.

இன்மையினுபயாவ்வியாவிருத்தியாவது: உள்ளதாகக் கொள்ளப்படாதபொருளைத் திட்டாந்தமாகக் கூறுவது.

உதாரணம்:—நையாயிகரைநோக்கி, 'காற்று உருவமில்லது, வடிவமின்மையால்; யாது யாது உருவமுள்ளது, அது அது வடிவமுள்ளது; இருள்போல' என்பது.

இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் இருள். அதனை நையாயிகர் ஒரு பொருளெனக்கொள்ளாமையால், சாத்திய சாதநாபாவங்களாகிய உருவ வடிவங்களுக்கு நிலைக்களமாகிய திட்டாந்தப் பொருளில் சாத்திய சாதநங்களின் வியாவிருத்தி தோன்றுதாகையால் இஃது அவர்க்கு இன்மையினுபயாவ்வியாவிருத்தியாயிற்று.

மற்றும், இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாகும்.

சாத்தியாவ்வியாவிருத்தி சாதநாவ்வியாவிருத்தி, உண்மையினுபயாவ்வியாவிருத்தி, இன்மையினுபயாவ்வியாவிருத்தி என்னும் நான்கும், வியாத்தியுணர்விற்குக்கருவியாகாமையால் திட்டாந்தப் போலியாயின.

## ச. அவ்வெதிரேகம்.

அவ்வெதிரேகமாவது: தனது உறுப்பாகிய வெதிரேகவாக்கியமின்றிக்கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையபது, புகையுடைமையால்; ..................................ஆற்றுவெள்ளம் போல' என்பது.

இதனுள், 'யாது யாது நெருப்பில்லாதது, அது அது புகையுமில்லாதது' என்னும் வெதிரேகவாக்கியங் கூறப்படாமையால் இஃது அவ்வெதிரேகமாயிற்று.

மற்றும், இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம்.

வெதிரேகவாக்கியமின்மையால் வெதிரேகவியாத்தி யெளிதினுணரப்படாது அநுமிதியுணர்விற்குத் தடையாதல்பற்றி இது திட்டாந்தப்போலியாயிற்று.

## ரு. விபரீதவெதிரேகம்.

விபரீதவெதிரேகமாவது: தன்னுறுப்பாகிய வெதிரேகவாக்கியத்தை மாறுபடக்கூறுவது.

உதாரணம்:—'இம்மலை நெருப்புடையது; புகையுடைமையால்; யாது யாது புகையில்லாதது, அது அது நெருப்புமில்லாதது; ஆற்று வெள்ளம்போல' என்பது.

இதனுள், 'யாது யாது நெருப்பில்லாதது, அது அது புகையு மில்லாதது' எனத் துணிபொருளினின்மையை முற்கூறி ஏதுவினின் மையைப் பிற்கூறக்கடவதாகிய வெதிரேகவாக்கியத்தை, 'யாது யாது புகையில்லாதது, அது அது நெருப்புமில்லாதது' என ஏதுவின் இன்மை முன்னும் துணிபொருளின் இன்மை பின்னுமாகவைத்து முறைபிறழக் கூறுதலால் இது விபரீதவெதிரேகமாயிற்று.

மற்றும், இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யாகும்.

வெதிரேகம் மாறுபடக்கூறுதலால், ஏதுவின் இன்மையுள்ள விடத்தும் துணிபொருளுளதாயிருத்தல்பற்றி வியாத்தியுணர்வின் ரும். அதனால் அநுமிதியுணர்வும் உண்டாகாமையால் இது திட் டாந்தப்போலியாயிற்று.

இங்ஙனங்கூறியவாற்றால் வைதன்மியதிட்டாந்தப்பொருள் எதிரிக்கு வெளிப்பட்டிருக்கவேண்டுமென்பதூஉம், அதன்கண் சாதநசாத்தியங்களிரண்டுமில்லாதிருக்கவேண்டுமென்பதூஉம், விய திரேகவியாத்திவசனம் முறைபிறழாமற் சொல்லப்படவேண்டு மென்பதூஉம் வெதிரேகதிட்டாந்தவுறுப்பிற்கு இலக்கணமாம் என்பது பெறப்பட்டது.

இங்ஙனங்கூறிமுடித்த பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப் போலி என்னும் மூவகைப்போலியுறுப்புக்களுள் ஒன்றுமில்லாத நல்லுறுப்புக்களாலமைந்த வாக்கியங்களே சதநுமானப் பிரமாண மாகுமென இந்நூலாலறியத்தக்கதாயிற்று.

அநுமானவிளக்கம் முற்றும்.

## பரீக்ஷவினுக்கள்.

வைதன்மியதிட்டாந்தப்போலி எத்தனைவகைப்படும்? அவை எவை?

வியாவிருத்தி, அவ்வியாவிருத்தி, வெதிரேகம், அபாவம், சதநுமானம்: என்பவற்றின் பொருளை விளக்குக.

சாத்தியாவ்வியாவிருத்தி எவ்வாறு வரும்?

நையாயிகரைநோக்கி, 'காற்று திரவியம், பரிசமுடைமையால்; யாது யாது திரவியமன்று, அது அது பரிசமுடையதன்று; காலம்போல:' என்பது சாத்தியாவ்வியாவிருத்தியாமாறு விளக்குக.

சாதநாவ்வியாவிருத்தியின் இலக்கணமென்னை? ஓருதாரணங்காட்டுக.

உபயாவ்வியாவிருத்தி: எவ்வாறு வரும்? எத்தனைவகைப்படும்? அவை எவை?

சாத்திய சாதநங்களுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதொன்றை வெதிரேகதிட்டாந்தத்தாற் கூறுவதற்கு ஓருதாரணந்தந்து விளக்குக. அவ்வாறு கூறுவது திட்டாந்தப்போலிவகையுள் எதற்கிலக்கணமாகும்?

இன்மையினுபயாவ்வியாவிருத்தி எவ்வாறுவரும்?

ஆங்கிலப் பௌதிகநூல்வல்லாரை நோக்கி, 'நெருப்பு உருவமில்லது, சுவையின்மையால்; யாது யாது உருவமுள்ளது, அது அது சுவையுள்ளது; தண்ணீர்போல' என்பதும், நையாயிகரைநோக்கி, 'காற்று உருவமில்லது, வடிவமின்மையால்; யாது யாது உருவமுள்ளது, அது அது வடிவமுள்ளது; இருள்போல' என்பதும் திட்டாந்தப்போலிவகையுள் எதெதற்கு உதாரணமாகும்? ஆதாரத்தோடு விளக்குக.

சாத்தியாவ்வியாவிருத்தி, சாதநாவ்வியாவிருத்தி, உண்மையினுபயாவ்வியாவிருத்தி, இன்மையினுபயாவ்வியாவிருத்தி: என்னும் நான்கும் திட்டாந்தப்போலியாவ தெங்ஙனம்?

அவ்வெதிரேகம் எவ்வாறு வரும்? அது திட்டாந்தப்போலியாமா றென்னை? உதாரணந்தந்து விளக்குக.

விபரீதவெதிரேகம் எவ்வாறு வரும்? அது திட்டாந்தப்போலியாவ தெங்ஙனம்? உதாரணம் தருக.

எவ்வாறு கூறப்படுவது சதநுமானமாம்?

MADURAI UNIVERSITY LIBRARY
35060
26 AUG 1968